1133
2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1351 ஸபர் 1932 ஜூன்மீ | இதழ் 6

19 JUN 1932

உள்ளடக்கம் பக்கம்

1. ஸூரத்துல் பலத் ... 249
2. நாயக வாக்கியம் ... 251
3. காதியானிக் கொள்கை ... 253
4. இஸ்லாமிய சரித்திரம் ... 255
5. சாத்தான் குளம் முஸ்லிம் மகாநாடு ... 261
6. காயல்பட்டணம் மகாநாடு ... 266
7. சாத்தான் குளம் முஸ்லிம் ஜமாஅத்தார்களின் தீர்மானம் ... 267
8. சம்பம் இஷாஅத்துல் இஸ்லாம் மாகாண மகாநாடு 269
9. "யான் என் இஸ்லாத்தைத் தழுவினேன்?" ... 279
10. தா. இ. சாத்தான்குளம் மகாநாட்டைத் திரித்துக் கூறுவனேன்? ... 282
11. ஸன்னது ரத்துச் செய்யப்பட்டது உண்மையே... 284

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

பிரஞ்சு மெயில் கப்பல் பிரயாணம்

மத்ராஸிலிருந்து 28 நாட்களுக்கொரு முறை பிரயாணமாகி 5 நாளில் சிங்கப்பூ போய்ச் சேரும் "பிரஞ்சு மெயில்" கம்பனியார் எங்களை பாஸன்ஜர் ஏஜண்டாக நியமித்திருப்பதால் எங்கள் மூலமாகவே "டிக்கட்" பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோருகின்றோம். 16-6-32-ல் "அம்பாய்ஸ்" என்னும் கப்பல் பிரயாணமாகி சிங்கப்பூர், சைகோன் துரூன், ஐபோன், ஜப்பான் முதலிய ஊர்களுக்குச் செல்லுகின்றது.

இக்கம்பனிக் கப்பலில் செல்லும் பிரயாணிகளுக்கு அம்மைக் குத்திக்கொள்ள வேண்டிய அவஸ்தையும் புறமலையிலிறங்கவேண்டிய கஷ்டமுமில்லை. டிக்கட்டும், ஷிப்பிங் ஆர்டரும் தேவையுள்ளோர் கப்பல் பிரயாணத் தேதிக்கு நான்கு நாள் முன்னதாகவே டிக்கட் தொகை அல்லது அட்வான்ஸ் ரூ. 10, எங்களுக்கனுப்பிப் பதிவுசெய்துகொண்டு ஒரு நாள் முன்பாகவே மத்ராஸுக்கு வந்துவிடவேண்டியது.

எங்கள் மூலம் டிக்கட் வாங்குவோருக்கு சென்னையில் தங்க இடவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

சென்னையிலிருந்து சாப்பாடு உள்பட கட்டணம்

வகுப்பு	1	2	3	4
சிங்கப்பூர்	213	173	120	32
செய்கோன்	440	235	185	62
துரூன் & ஐபோன்	510	305	220	82

மற்ற விபரங்களுக்கு கீழ்கண்ட அட்ரசுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

அ. மு. க. முஹம்மது ஷரீப் மரைக்காயர் & பிரதர்,
பிரஞ்சு மெயில் பாஸஞ்சர் ஏஜண்டு,
46, அங்கப்பநாய்க்கன் தெருவு, மதராஸ்.

இவர்களிடமிருந்து சாம்பில் "டீ" பாக்கட்கள் வரப்பெற்று உபயோகித்துப் பார்த்ததில் நன்கு திவ்வியமாகவும் வாசனையுள்ளதாகவும் மனோ உல்லாசத்தைக் கொடுக்கக்கூடியதாகவு மிருக்கின்றது. வேண்டுவோர் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும்படி கோருகிறோம். (ப—ர்.)

கேஸ் 1-க்கு 50 ராத்தல் நயம் டீ ஹோல்சேல் ரேட்

T. மார்க் டஸ்டு ராத்தல் 1-க்கு	0 8 0
D. ,, ,, ,,	0 7 6
B. O. P. புரோக்கன் ஆரஞ்சு பெக்கோ ராத்தல் 1-க்கு	0 10 6

E. S. ஹமீது,
ஹமீதிய்யா பாக்டரி,
கம்பம், மதுரை ஜில்லா.

حفاظة الاسلام مدراس

9 JUN 1932

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 3	ஹிஜ்ரி 1351 ஸபர்௴ 1932௵ ஜூன்௴	இதழ் 6

ஸூரத்துல்பலத்

(நிகரற்ற) அருளாளனும் (அளவற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு (இதனை ஆரம்பிக்கின்றோம்)

1. இந்நகரத்தின்மீது பிரமாணம் செய்கின்றேன்.

2. மேலும் (முஹம்மதே) உங்களுக்கு இந்நகரத்தில் யாதொரு கட்டுப்பாடுங் கிடையாது.

3. பிதாவைக் கொண்டும், அவர் பெற்றவரைக்கொண்டும் (பிரமாணஞ்செய்கின்றேன்).

4. நிக்ஷ்யமாக நாம் மானிடனை கஷ்டத்தில் படைத்திருக்கின்றோம்.

5. மானிடன் தம்மீது யாருக்கும் சக்தியில்லை என்பதாக நினைக்கின்றானோ?

6. (தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக) மிகுதமான ஐஸ்வரியங்களைச் செலவிட்டிருப்பதாகச் சொல்வான்.

7. தன்னை ஒருவரும் பார்க்கவில்லை என்பதாக எண்ணுகின்றானோ?

8. அவனுக்கு நாம் இரு நேத்திரங்களை உண்டாக்கவில்லையா?

9. இன்னும் நாவையும் இரு உதடுகளையும் (உண்டாக்கவில்லையா?)

10. இன்னும் அவனுக்கு (நன்மை, தீமை) இரண்டு பாதைகளையும் காண்பித்துக் கொடுக்கவில்லையா?

11. ஆனால் அவன் நலவின் பாதையில் ஏன் செல்வதில்லை.

12. அப்பாதை யாதாயிருக்குமென்று உமக்கு எதுவஸ்த்து அறிவித்துக் கொடுத்தது?

13. (அது) பிடரியை உரிமை விடுவது.

14. அல்லது பசியாயிருக்கும் நாளில் ஆகாரம் அளிப்பதாயிருக்கும்.

15. நெருங்கிய எதீம் (அகதி) களுக்கு

16. அல்லது மண்ணோடு மண்ணாக யிருக்கும் ஏழைக்கு.

17. பிறகு ஈமான் (நம்பிக்கை) கொண்டு பொருமையை ஒருவருக்கொருவர் ஏவிக் கொண்டும், கிருபை, அன்பு முதலியவைகளைக் கொண்டு உபதேசம் புரிந்துகொண்டும் இருப்பவர்களுள் ஆய்விட்டான்.

18. இவர்கள் தான் அதிர்ஷ்டசாலிகளாகும்.

19. மேலும் நம்முடைய அத்தாட்சிகளை மறுக்கக்கூடியவர்கள் தான் துரதிருஷ்டசாலிகளாகயிருக்கும்.

20. அவர்கள்மீது மூடப்பட்ட நெருப்பானது இருக்கும்.

[அதாவது மக்கமா நகரின்மீது பிரமாணஞ் செய்கின்றேன்; இன்னும் இந்நகரில் உங்களுக்கு யாதொரு தடையுங் கிடையாது. இதில் குப்பார்களுடன் யுத்தம் புரிவது உங்களுக்கு ஆகுமாக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் பிதாவைக்கொண்டும் அவர் பெற்றவரைக்கொண்டும் பிரமாணஞ் செய்கின்றேன் நிஷ்யமாக நாம் மானிடனை துக்கத்தை சகித்துக்கொண்டு கஷ்ட மனுவிப்பதற்காகவே படைத்திருக்கின்றோம். இந்நிலைமையில் தாம் நாடியதைச்செய்யலாம்; நன்மை தீமைகளுக்குக் கூலி கொடுப்பதற்கு யாருக்கும் தம்மீது சக்தியில்லை என்பதாக எண்ணிக்கொண்டிருக்கின்றானோ? தம்மீது யாருக்கும் சக்தியில்லை என்பதை எண்பிப்பதற்காகத் தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்கு பெரும் பெரும் வேலைகளில் அளவற்ற திரவியங்களைச் செலவிட்டிருப்பதாக பெருமை பாராட்டி தற்புகட்சி செய்துகொள்வான் அவன் தன் தாயின் வயற்றிலிருந்து அம்மணமாகவும் பசித்தவனாகவும் தன்னிடத்தில் யாதொன்றுமில்லாதவனாகவும் வரும்போது அவனை யாரும் பார்க்கவில்லை என்பதாக எண்ணுகின்றானோ? அவன் வஸ்த்துக்களைப் பார்ப்பதற்காக நாம் அவனுக்கு இரு நேத்திரங்களை உண்டாக்கவில்லையா? இன்னும் ஒரு நாவையும் இரண்டு உதடுகளையும் உண்டாக்கவில்லையா? இன்னும் அவனுக்கு நன்மை தீமை இவ்விரண்டின் பாதையைக் காண்பித்து கெடுதி, நலவு இவைகளை அறிந்துகொள்ளக் கூடிய சக்தியை அழிக்கவில்லையா? பிறகு அவன் நலவின் பாதையில் ஏன் செல்வதில்லை? ஏ மானிடனே! நலவின் பாதை யாதாயிருக்குமென உமக்கு ஏதுவஸ்த்து அறிவித்துக் கொடுத்தது? அதுவாகிறது பிடரியை உரிமை விடுவதாகும்; அல்லது பசியுடைய நாளில் நெருங்கிய (எதீம்) அகதிகளுக்கு அல்லது மண்ணோடு மண்ணாயிருக்கும் ஏழைக்கு சாப்பாடு கொடுக்கிறதாயிருக்கும். இத்தியாதி நற்கருமங்கள் புரிந்துவந்ததோடு ஆண்டவன்மீது (ஈமான்) நன்நம்பிக்கை கொண்டும், ஒருவருக்கொருவர் பொறுமையைக் கொண்டும் தயை அன்புபூண்டொழுகவேண்டுமென்றும் உபதேசம்புரிந்துகொண்டிருக்கின்றார்களோ அன்னோர் ஜெயம்பெற்றவர்களாகும். எவர்கள் நம்முடைய திருஷ்டாந்தங்களைப் பொய்யாக்கிவைத்து நம்முடைய கட்டளைக்குக்கீழ்படிந்து நடக்கவில்லையோ அவர்கள் பெரும் மூதேவிகளான துரதிருஷ்டசாலிகளாகும். அவர்கள் மீது சூழ்ந்தெரியும்படியான-அவர்களை மூடிக்கொண்டிருக்கும்படியான நெருப்பைச் சாட்டப்படுமென்பதாகும்.]

இத்திரு அத்தியாயம் மக்கியாம். இதின் ஆரம்பத்தில் "பலத்" அதாவது நகரத்தின் மீது பிரமாணஞ் செய்யப்பட்டிருப்பதால் இஃது "ஸூரத்துல் பலத்" என்னும் திருப்பெயருடன் வழங்கப் பெருகிறது. நகரமெனக் குறிப்பிடப்பட்டிருப்பது "மக்கமுஅல்லமா" வைக்குறிக்கும்.

மக்காவிலுள்ள குப்பார்கள், தாங்கள் ஆண்டவனுக்கு வழிப்படாதிருக்கும் காரணமாக "ஆத்" "தமூத்" கூட்டத்தினர்க்கு வேதனை ஏற்பட்டதுபோல் தங்களுக்கும் ஏற்படுவதற்கு அடையாளமாக மக்கமா நகரம் அழிந்து நாசமாகப் போய்விட வேண்டுமென்று நாயகம் (ஸல்.) அவர்களிடம் வினவினர்கள் அதற்கு விடையாக அந்நகரத்தின் கியாதியையும், நாயகம் (ஸல்.) அவ்வூரின் கண் யிருக்கும் நிலைமையில் அதை அழித்துவிட முடியாதென்பதையும் தெரிவிப்பான் வேண்டி இந்நகரத்தைக்கொண்டு பிரமாணஞ் செய்திருக்கின்றான். மக்கமா நகரானது பல வகையிலும் சிறப்புற்றிருப்பது காணலாம். அதாவது அதில் கார்மான மாக்கப்பெற்ற ஹரம் ஷரீபிருக்கின்றது; அங்கிருக்கும்படியான "கஃபத்துல்லாஹ்"வை ஒவ்வொரு ஆண்டிலும் தேசத்தின் பற்பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான மானிடர் வந்து தெரிசித்துச் செல்கின்றனர்; ஆங்கு மேன்மையான வணக்கமாகிய ஹஜ்ஜு "உம்ரா" முதலிய புண்ணிய வணக்கங்களை நிறைவேற்றுகின்றனர்; உலகின் கண்ணுள்ள மானிடர் யாவரும் அதையே முன்னோக்கித் தொழும்படியான ஸ்தலமொன்று ஆங்கிருக்கின்றது; இப்றாஹீம் (அலை.) அவர்களின் ஸ்தலமும் ஆங்கிருக்கின்றது. இவை யாவற்

றைப் பார்க்கினும் மிக விசேஷம் பொருந்திய தனிச் சிறப்பொன்று அதற்கு ஏற்பட்டிருக்கின்றது. அதாவது அஃது நமது உலக ரெட்சகர் சர்குணசீலர் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் பிறந்த இடமாகவும், அந்நாயகம் (ஸல்.) அவர்கள்மீது "வஹீ" என்னும் தெய்வ வெளிப்பாடு வெளியான இடமாகவு மிருப்பதாகும்.

இவ்வத்தியாயம் அருளப்பட்டதின் காரணமாவது :—"குரைஷ்"களில் "கல்தாபின் உஸைத்" என்னு மொரு பராக்கிரமசாலியான காபிரிருந்தான்; அவனுக்கு அபுல் அஸத் (புலியின் தகப்பன்) என்னும் காரணப்பெயரும் ஏற்பட்டிருந்தது அவன் காளைமாட்டின் தொலியை பாதத்தில் மிதித்துக் கொண்டு யாவரும்கூடி இதை இழுத்துவிடுங்கள் பார்ப்போமென சபதங் கூறுவான்; யாவரும் ஒன்றுகூடி யிழுத்தால் அத்தொலி துண்டு துண்டாகக் கிழிந்து விடுவதல்லாது அவன் காலைவிட்டு சற்றும் நகர்ந்து விடுவதில்லை. அன்னோனை எம்பிரான் நபிகள்திலகம் (ஸல்.) அவர்கள் இஸ்லாத்தின் பக்கல் அழைத்தபோது, அவன் ஈமான் கொள்ளாதிருந்ததுடன், 19 வேலையாட்க ளிருக்கக்கூடிய ஒரு சிறைச்சாலையைக்கொண்டு பயங் காட்டுகின்றார்; அப் பத்தொன்பது நபர்களும் எனது இடது கைக்குக்கூட நிற்கமாட்டார்கள்; என்னுடன் எதிர்ப்பதற்கு யாரால் முடியும். தவிர எனக்கும் ஒரு (சுவர்க்கம்) தோட்டத்தின்மீது நல்லாசை காண்பிக்கின்றார்; நானோ விவாக சடங்குகளிலும், தாக்ஷிணியமான காரியங்களிலும் எத்தனையோ ஐஸ்வரியங்களை செலவிட்டிருக்கின்றேன்; அவை அடங்கலையும் சேர்த்துப் பார்ப்பின் அவர் கூறும் தோட்டத்தைப் பார்க்கினும் எத்தனையோ மடங்கு மேலானதா யிருக்கும் அதற்குமுன் இவர் கூறும் தோட்டம் ஒன்றுமில்லாத்ததுபோலாக யிருக்கும் என அகப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்தான். இவன் கொள்ளும் மமதை தவறென்பதை வெளியாக்குவான் வேண்டி, மானிடன் தன் பலத்தின்மீதும், தான் கியாதி பெற்று விளங்குவதின் மீதும் தான் தலைவனாகயிருப்பதின்மீதும் ஏமார்ந்து போகாது தான் ஜனித்ததின் ஆரம்பந் தொடுத்து மரணிப்பது வரையிலுள்ள சம்பவங்கள் யாவற்றையும் ஆலோசித்துப்பார்த்து அவைகளை நிவர்த்திப்பதற்கு ஆண்டவனது உதவியில்லாது யாதாகிலும் செய்ய முடியுமா வென்பதை யுண்ணிப்பார்த்து தன்னுடைய பலமும், ஐஸ்வரியங்களும் மறுமையில் ஏதாகிலும் பிரயோசன மளிக்குமா வென்பதை ஆராய்ந்து பார்ப்பானாகில், தன் ஐஸ்வரியங்கள் யாவற்றும் மறுமைக்கு எவ்வித பிரயோசனத்தையும் அளிக்காதென்பதையும், தனக்கு உலகில் கிடைத்திருக்கும் மரியாதைகள் யாவற்றும் தண்ணீரின்மீது வரையப்பெற்ற சித்திரமே யாகுமென்பதையும் நன்கு தெரிந்து கொள்வான் என்பதை அன்னோனுக்கு அறிவுறுத்துவான் வேண்டி, இவ்வத்தியாயத்தை இறக்கிவைத்தான்.

(தொடரும்.)

நாயக வாக்கியம்

இஸ்லாம் ஏழ்மைத்தனத்திலே ஆரம்பமாயிற்று; கூடியசீக்கிரம் அது தனது பழைய நிலைமைக்கே வந்துவிடும். அதுபோழுது ஏழை முஸ்லிம்கட்டே நல்மாராயம்.

சோதரீர்! ஒவ்வொருகாலத்திலும் அநேகமாக ஏழ்மைத்தனத்திலுள்ள முஸ்லிம்களே நேர்வழி பெற்றவர்களாகத்திகழ்கின்றனர். "ஹிர்கல்" அரசரிடம் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் தூது அனுப்பியபொழுதும் அவர்கள் உண்மையான நபிதானுவென்பதை பரீக்ஷிப்பதற்காக முஹம்மத் (ஸல்) அவர்களைத் துயர்ந்திருப்போர் ஏழைகளாகயிருக்கின்றனரா அன்றி சீமான்களாகயிருக்கின்றனரா என வினவியமை நன்கு தெரிந்தவையே. நமதுஉலகரெட்சகர் காத்தமுந் நபியீன் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பின்படியே இப்பதினன்காம் நூற்றாண்டில் இஸ்லாம் மார்க்கமானது மிகவும் ஏழ்மைத்தனத்திலிருக்கின்றது; அநேகர் இஸ்லாத்தின் உண்மைத்தத்துவத்தை தெரிந்துகொள்வதற்குங்

கூட முயற்சியாதிருந்துகொண்டு அவர்களது மூளையில் உதிப்பதையே இஸ்லாத்தின் சிறந்தவை என்று கருத முற்படுகின்றனர். இந்நிலைமையில் எம்பெருமானுர் (ஸல்) அவர்களினுடையவும் அருமை சஹாபாக்களினுடையவும் உண்மை நடப்புகளை எடுத்துக் காண்பித்து மானிடர் அவைகளைப் பின்பற்றி நடக்கவேண்டுமென வற்புறுத்திக் கூறுபவர்களை பிற்போக்காளரென கூறத் துணிவுகொண்டு இன்னேரால் பரிசுத்த இஸ்லாத்திற்கு ஹானீ ஏற்பட்டுவிடுவதாகவும் பறை சாற்ற முற்பட்டுவிடுகின்றனர். ஆதலின் எம்பிரான் (ஸல்) அவர்கள் திருவாய்மலர்ந்தருளியிருப்பதின் உண்மையைக் கண்டு கொள்வதற்கு நாம் இதுசமயம் நமது பள்ளிவாசல்களில் தொழுவோர்களிலனேகர் ஏழைகளாகயிருப்பதைக் காண்பதே போதிய சான்ருகும்.

மானிடன் தனது நப்ஸை எனது பாதையில் திருப்பி எனக்கு முழுதும் வழிப்படச் செய்யாதவரை அவன் உண்மையான முமினுக மாட்டான்.

அதாவது மானிடனது அபிலாஷை விருப்பம் முதலியவைகளை மார்க்கத்திற்குக் கீழ்ப்படிந்ததாகச் செய்வது ஈமானுடைய அடையாளங்களிலுள்ளதாகும். ஆதலின் உண்பது குடிப்பது உட்காருவது படுப்பது அணிவது முதலியவைகளில் மார்க்கத்தையே அனுசரித்து நடப்பது ஈமானுடையவர்களின் முக்கியக்கடமையாகும். இவ்வாரான ஈமானுடையவர்களைப் பார்க்க நாடுவோமாகில் மேன்மைவாய்ந்த சஹாபாக்களின் நடைவுடை பாவனை முதலியவைகளை நோட்டமிடுவதுகொண்டு அவை நன்கு புலனுகும். அம்மகான்கள் தங்களது முழுவிருப்பங்களையும் எம்பிரான் நபிகட் திலகம் (ஸல்). அவர்கட்காகவே அற்பணஞ் செய்திருக்கின்றனர்; அவர்கள் தங்களது ஊண் தீன் உறக்கம் முதலியவைகளையும் பெண்சாதி பிள்ளைகளையும் கூட்டம் குடும்பம் முதலியயாவற்றையும் நாயகம் (ஸல்) அவர்கட்காகவும் மார்க்கத்திற்காகவுமே அற்பணஞ்செய்திருக்கின்ருர்களென்பது நன்கு புலனுகும். இவர்களல்லவோ உண்மையான மார்க்க பக்தர்கள்? இவர்களது ஈமானின் உறுதிதானென்னே? இவர்களது மார்க்கபக்தியின் பான்மை எவ்வாறிருக்கின்றதென்பதை உற்றுணர்வது மிக மிக அவசியமானதாகும். இக்காலத்திலோ நாம் ஈமானுடையவர்களென வாயளவில் சொல்லிக்கொண்டு நமது மனம் நாடுகிறபடி செய்வதற்கு முற்படுகின்ருேம். நம் வாழ்நாளின் அநேக சம்பவங்களில் மார்க்கத்தை மூலையில் ஒதுக்கி வைத்துவிட்டு மனவிருப்பப்படி நடக்க முற்படுகின்ருேம்; இந்நிலைமையில் நாம் தான் உண்மையான மூமின்களென்றும் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்மீது மெய்யன்பு பூண்டவர்களெனவுஞ் சொல்லிக் கொள்கின்ருேம். இது எம்மட்டில் பொருத்தமுடையதாக யிருக்குமென்பதை நேயர்களே உற்றுணர்ந்து பார்ப்பார்களாக.

புறங் கூறுதல்

புறம் இன்னதென நீங்கள் அறிவீர்களா? என நபி பெருமானுர் (ஸல்.) அவர்கள் வினவ அதுபொழுது அங்குவீற்றிருந்த சஹாபாக்கள் "அல்லாவும் அவனுடைய ரசூலும் நன்கறிவார்கள்" என்று சொன்னுர்கள். அதுபொழுது நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் "உங்கள் சகோதரனைப்பற்றி அவன் பிரியப்படாத ஒரு விஷயத்தை உங்களில் யாராவது (அவனில்லாத) சமயம் சொல்வதானுல் அதுவே (புறமாகும்)" என்று சொன்னுர்கள். அப்போது ஒருவர் நான் சொல்லிய விஷயம் என் சகோதரனிடம் காணப்பட்டால் (அது புறமாகுமா?) என்று கேட்க நபி பெருமானுர் (ஸல்) அவர்கள் "நீர் சொல்லிய விஷயம் உம்முடைய சகோதரனிடமிருந்தால் நீர் புறம் கூறியவராவீர். நீர் சொல்லிய விஷயம் அவரிடமில்லாதுபோனுல் நீர் கட்டுப்பாடான பொய் சொன்னவராவீர் என்று சொன்னுர்கள்.

பொறுமை

துன்பம் எவ்வளவு பெரிதாகயிருக்குமோ அந்த அளவிற்குக் கூலியும்பெரிதாயிருக்கும். ஆண்டவன் எக்கூட்டத்தார் மீது பிரியம் வைக்கின்ருனே அக்கூட்டத்தாரை துன்பத்திலாக்குகின்ருன். அவர்களில் எவன் அதற்குப்பொருந்திக் கொள்வானே ஆண்டவனும் அவனைப் பொருந்திக்கொள்வான். எவன் அதை வெறுப்பானே அவனை ஆண்டவனும் வெறுப்பான்.

ثقافة الإسلام مدراس

காதியானிக் கொள்கை

பாஞ்சாலத்தில் தன்னை நபி என்று வாதாடிச் சென்ற குலாம் அஹ்மத் காதியானீ காலஞ் சென்றுபோய் இற்றைக்குச் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இவரை தன் தாவாவில் புழுகரென்றும் தஜ்ஜாலென்றும் மானிடர்களிடையே பித்னு பஸாதுகளைச் செய்யக் கிளம்பிய ஷைத்தானென்றும் உலமாக்கள் தீர்மானித்து விட்டார்கள். அவர் செய்த தாவாக்கள் எண்ணிறந்தவையாயும் ஏட்டி லடங்காதனவாயுமிருக்கின்றன. அவர் தன்னை ஓர் நபி என்றும் அல்லாஹ்வின் தூதரென்றும் வாதாடியதோடு கடாசியாகத் தானே ஆண்டவனென்றுங்கூட உளறிப்போந்தார். உலக சிரேஷ்டரும் உத்தமகுண சீலருமாகிய எம்பெருமானார் நபிகட் திலகம் (ஸல்.) அவர்களை விடவும் தன்னை மேலானவனென்று கைகூசாது எழுதினார். இதர நபிமார்களைக் குறித்து அவர் எழுதியிருக்கும் அபாண்டங்களை எழுத நாடின் எழுதுகோல் துடிக்கின்றது; ஹிருதயம் பதருகின்றது. அத்துணை அபாண்டமான வார்த்தைகளைக் கூறிச்சென்றார். ஈஸா (அலை) அவர்களை விபசாரப் புத்திரரென்றும் அவர்களின் தாயாரும், பரிசுத்த உத்தமியுமான ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களை விபசாரி யென்றும் கைகூசாது அச்சமின்றி வரைந்திருக்கின்றார். தமக்கு வஹீ வருகிறதெனவும், ஞான வெளிப்பாடுகள் (இல்ஹாமாத்) ஏற்படுகிறதெனவும் செப்பினார். தாம் நபியாகயிருப்பதால் தம்மை ஒப்புக்கொள்ளாதவர்களடங்கலும்காபிர்களென்று தீர்மானித்தார். இந்த ஷைத்தானுடைய புறட்டும் ஏமாற்றமும் வட இந்தியாவின் கண் அநேகக் கெடுதிகளை விளைவித்தது; ஒரு சிலர் இவரின் மாயவலையில் சிக்குண்டனர்; இற்றைக்கும் அக்கெட்ட கொள்கையாகிய பிணியானது வட இந்தியாவில் சிலரை பிடித்தே நிற்கின்றது. தென் இந்தியாவைப் பொருத்த மட்டில் இக்கொள்கை அநேக காலம் வரை இவண் தலைகாட்டாமலே யிருந்தது. ஆங்கிலம் உர்து கற்றோரில் சன்மார்க்கமறியா ஒரு சிலர் இக்கொள்கையை அபிநயித்து வந்தனர். இதரர்கள் இதன் வாடையைக்கூட எத்தாதிருந்தனர். துர்அதிர்ஷ்ட வசமாக தாருல் இஸ்லாம் (தாவுல் இஸ்லாம்) ஆசிரியர் லண்டன், லாகூர் சென்று இச்சனியனை இங்கு கொணர்ந்து கூலிக்கு மாவிடிக்க ஆரம்பித்தார். அதனால் தென்னாட்டின் நாலு திசைகளிலும் இக்கொள்கை அத்தி பூத்ததே போன்று பரவ ஆரம்பித்தது.

கொளும்பு அஞ்சுமனே அஹ்மதிய்யா சங்கமும் காதியான் பார்ட்டியைச் சார்ந்ததேயாகும். அச்சங்கத்தினர் மிர்ஸாவை மஹ்தி என்றும் மஸீஹென்றும் ஆண்டவனால் அனுப்பப்பெற்ற (ரஸூல்) தூதரென்றும் பஹிரங்கமாகச் சொல்லக் கூடியவர்கள் அவர்களும் சிலோன் பகுதிகளில் பிரசாரஞ்செய்து வந்ததின் காரணமாக ஆங்காங்குள்ள ஒரு சிலர் இக்கொள்கையில் சிக்குண்டனர். இந்தியாவிலிருந்து வியாபார நிமித்தம் சிலோன் சென்று வருபவர்களில் ஒரு சிலரை இவ்வியாதிபற்றிக்கொண்டது. உதாரணமாக சாத்தான்குளம் வாசிகளில் மூன்று நான்கு பெயர் இத்தொத்து வியாதியிலகப்பட்டு ஆங்கு தங்களுக்கென ஒரு தனி ஜமாஅத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். அவர்களது பிணியை நீக்குவதற்கு எத்தனையோ உபாதைகள் செய்து பார்த்தும் யாதொரு பிரயோசனமு மேற்படவில்லை. அவர்களுடன் விவாதித்து அவர்களது வழி கேடான கொள்கைகளை அகற்றுவதற்காக உலமாக்களும் அறிஞர்களும் ஆங்கு சென்று அவர்களுடன் விவாதித்து அவர்களை ஒழுங்குபடுத்தக்கருதியும் அவர்கள் அதற்கிணங்கினார்களில்லை. அந்தோ? பரிதாபம். முடிவாக சாத்தான்குளத்திலுள்ள முஸ்லிம்கள் காதியானிகளுடன் இஸ்லாமிய எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென முடிவு செய்திருக்கின்றனர்.

குலாம் அஹ்மத் காதியானீ செய்த தாவாக்களைச் சுருக்கமாக மேலே குறிப்பிட்டுள்ளோம் தவிர "காதியானீமதசம்ஹாரம்" என்னும் நூலிலும்அதன்விபரம் நன்கு குறிப்பிடப்பட்டிருப்பதை நேயர்கள் படித்துத் தெரிந்திருக்கலாம். எம்பெருமானார் (ஸல்). அவர்கள் இறுதியும் முத்திராங்கமான நபியுமாகுமென்று அல்லாஹுத் தஆலா அருள் செய்திருக்கின்றான். எனக்குப்பின் எவ்வித மான நபியுங் கிடையாதென்று எம்பெருமானார் (ஸல்). அவர்களும் திருவாய்மலர்ந்தருளினார்கள். ஸஹாபாக்களும் முஹத்திதீன்களும் இமாம்களும் எம்பெருமானார் சர்குண சீலர் (ஸல்) அவர்களோடு நுபுவ்வத்தின் வாயல் முத்திரை யிடப்பட்டுப்போய்விட்டதென்று தீர்மானித்து விட்டனர். இஃதோர் இஜ்மாஆன மஸ்அலாவாகும் இதனை எவரும் மறுக்க முடியாது "முஸைலமதுல் கத்தாப்" என்னும் புழுகன் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் காலத்திலேயே தன்னை நபி என்று தாவாச்செய்ததின் காரணமாய் பெருமானார் அவர்கள் அவன் முர்தத்தாய் விட்டானெனத் திருவாய்மலர்ந்தருளினார்கள் பின்னும் அவன் அதைவிட்டு தவ்பாச்செய்து மீளாதிருந்ததின் காரணமாக முதல் கலீபாவான அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் காலத்தில் அவனையும் அவனைப் பின்பற்றியோர்களையும் கொன்றுவிடும்படி கட்டளையிட்டதற்கேற்ப அவர்கள் அவனைக்கொன்று விட்டார்கள் பாஞ்சால ஷைத்தானான குலாம் அஹ்மத் காதியானியும் தன்னை நபீ என்று தாவாச் செய்துவிட்டதால் அவன் காபிராய் விட்டான் என்பதில் ஐயமில்லை. அதுபோலவே அவனைப் பின்பற்றியோர்களும் காபிராய் விடுவரென்பது திண்ணம். விஷய மிவ்வாறிருக்க ஆருல் இஸ்லாம் வ தாருல் ஈமான் ஆசிரியர்கள், மிர்ஜாவும் அவனைப்பின்பற்றியோர்களும் முஸ்லிமென்றும் சுன்னத்வல் ஜமா அத்திலுள்ள ஒரு பிரிவினரென்றும் எழுதிவருகின்றனர். இவர்களது அறியாமைதானென்னே? திருக்குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் முற்ற முற்ற விகற்பமாகக்கூறும் ஒருவனை முஸ்லிமென்று கூற முற்பட்டிருக்கின்றனர். இஸ்லாமென்பது இன்னதென இவர்கள் அறியார் போலும்? காபிர்களும் சுவர்க்கம் புகுவர் என்று கூறும் இவர்கள், காதியானிகளை முஸ்லிம்களென்றுகூறுவதுஆச்சரியமன்று. இவர்கள் பற்பல சமயங்களிலும் காதியானிப் பார்ட்டியைக் கண்டித்து வருகிறோமென்று எழுதியும் கூறியும் வந்திருக்கின்றனர் இது பொழுதோவெனின் காதியானிகளோடு சேர்ந்துகொண்டு அவர்களை (எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்குப்பின் ஒருபொய்யனை நபி எனக் கூறுபவர்களை) காபிரென்று கூறுவது கூடாதகாரியமென்றும் அவர்களும் பக்கா முஸ்லிம்கள்தானென்றும் உலமாக்களுக்கு குபிர்பத்வாக் கொடுப்பதுதான் தொழிலாக யிருக்கின்றது எடுத்ததற்கெல்லாம் அவன் காபிர் இவன் காபிர் உவன்காபிரென்றுகூற முற்பட்டு விடுகின்றனர் என்றும் கூறி மார்க்கத்தையே ஏளனஞ்செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவர்கள் மனதில் காதியானிக் கொள்கை மறைந்திருந்தவாறுதானென்னே?

சாத்தான்குளத்தில், காதியானிகள் முஸ்லிம்களுடன் விவாதம்புரிந்து ஒருமுடிவிற்கு வருவதாக வாய்வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தனர் இதற்காகமுஸ்லிம்கள் ஆங்கு மகாநாடொன்றைக் கூட்டினர். அதில் மார்க்க அபிமானமுள்ள முஸ்லிம்களும் உலமாக்களும் கூடினர். அதற்காக நடைபெற்றுள்ள விஷயாலோசனைக் கமிட்டியில் காதியானிகள் குதர்க்கவாதஞ்செய்து விவாதம் நடைபெறாது செய்துவிட்டு தமதிருப்பிடஞ் சென்று பதுங்கிக்கொண்டனர். இது விஷயத்தில் காதியானிகள் தப்புந் தவறுமாய்ப் பொய்க் கூற்றுக்களைப் பரப்பி வருகின்றனர். அவைகளை பா.தா. அப்படியே ஒப்புக்கொண்டு காதியானிகள் கூறுவதுதான் உண்மை; முஸ்லிம்களும் ஸை. இ. வும் கூறுவது உண்மைக்கு மாற்றமானதாகும் என்று பொய்பிரசாரம் செய்து வருகின்றார். உண்மை முஸ்லிம்களின் சாக்ஷியம் இவருக்குப் பொய்யாய் விட்டதாம் காதியானிகளான முர்தத்துகளின் பொய்க்கூற்று மெய்யாகத் தெரிகின்றதாம்? ஆதலின் திருக் குர்ஆனையும் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் பரிசுத்த வாக்கியங்களையும் பொய்யாக்கு பவர்களை காபிராக்கக்கூடாதென தா. இ. ஆசிரியர்கள் கூறுகின்றனரென்பது நன்கு புலனாகின்றது. அப்படியாயின் இஸ்லாம் என்பது என்ன? எக்காரணங்களினால் குப்ர் ஏற்படுகிறது என்பதையுங்கூட இவர்கள் உணர்ந்திருக்கவில்லை போலும். அதனால்தான் குர்ஆனையும் ஹதீது

களையும் மறுப்பவர்களையுங்கூட லெஜ்ஜை யில்லாது முஸ்லிம்களென்று கூற முற்பட்டு விட்டனர். ஆனால் "இஸ்லாம்" என்னும் பதத்திற்கு ஏற்கனவே ஓர் நவீனக் கருத் தெழுதி யிருந்தனர். அதாவது இஸ்லாமென் பது கலிமாவுமன்று, தொழுகையுமன்று, ஹஜ்ஜுமன்று, ஜகாத்துமன்று வேறென் னென்னவோ அவைகளுமன்று அஃது ஓர் கௌரவமும் கெம்பீரமுமான வாழ்க்கை யாகுமென தா. இ. ஆசிரியர்கள் வரைந் திருக்கின்றனர். இக்கருத்துப்படியே தான் காதியானிகளை முஸ்லிம்களென்று கூறுகின் றனர் போலும். கௌரவமாயும் அழகாயும் காதியானிகள் உடுத்திக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு அவர்களை முஸ்லிமென்று பா. தா. கூறுகின்றாரென நினைக்கவேண்டி யிருக்கின்றது. இவருடைய இக் கொள்கைக் குத்தக்க வாயாப்புக்கொடுத்துத் தள்ளப்பட் டுப்போயிருக்கும் நிலையில் மீண்டும் மீண்டும் சமயம் பார்த்து அதே கொள்கையை பரத்தி வருவது அறிவின்மையே யன்றி வேறென்ன வென்று சொல்வது. நுபுவ்வத்தென்னும் விஷயம் இஸ்லாத்திலுள்ள மாபெரும் மகத் தான காரியமாகும். அதனை ஒப்புக்கொள் வது கொண்டும் மறுப்பது கொண்டும் அநேகவித்தியாச மேற்படுமென்பதில் ஐய மில்லை. காதியானிகள் மிர்ஸாவை நபீ என்று ஒப்புக்கொள்கின்றனராம்; தா. இ. ஆசிரி யர்கள் அவரை (மிர்ஸாவை) நபீ என்று ஒப் புக்கொள்ளவில்லையாம் இந்நிலைமையில் இவ் விருவர்களும் ஒற்றுமையாகவும் முஸ்லிம் களாகவு மிருக்கின்றனராம். இஃதென்ன ஆச்சரியம்? இவர்கட்கு இஸ்லாத்தின் பூர் வாங்கமான விஷயங்கள் கூட தெரியாது போலும். இதனால் தாறுமாறாகவும் சமயோ சிதமாகவும் உளறிக்கொட்ட ஆரம்பித்து விடுகின்றனர். இப்புல்லுருவிகளான மார்க்கப் புரட்டர்களின் ஆதாரமற்ற இக்கூற்றுக்களைக் கொண்டு ஏமார்ந்துபோகாமல் நேரான பாதையில் சீராகச்செல்ல நம் முஸ்லிம் நேயர் கட்கு ஆண்டவன் அருள்புரிவானாகவும்.

இஸ்லாமிய சரித்திரம்

நெப்போலியனின் தோல்வி

நெப்போலியன் எகிப்து நாட்டிற்கு படை யெடுத்து வந்தபோது அவனை எதிர்ப்பதற் காக உலகத்திலேயே மிகக் கீர்த்தி வாய்ந்த எகிப்து பாதுகாப்புப் படையானது முன் வந்தது. அச்சேனையானது நெப்போலிய னின் படை எழுச்சிக்கு முன்னம் $2\frac{1}{2}$ நூற்றாண்டு காலமாக உலகத்திலுள்ள பெரிய பெரிய சேனாதிபதிகளுக்கெல்லாம் தன் அதி சயமானதும் ஆடம்பர மற்றதுமாகிய இரா ணுவ முறையினையும் பலத்தையும் காட்டி வந்தது. இத்தகைய சிறந்த வெற்றி உலகில் எந்தப் படையினுக்கும் கைகூடவில்லை. இனி மேல் எந்தப் படைக்கும் கைகூடாது. அப் படை புஜபல பராக்கிரமசாலிகளின் ஈரலை நீருக்காதிருந்தால் எகிப்து தோற்றே போ யிருக்கும். சற்று கவனியுங்கள்.

துர்க்கித் தேச மன்னராக இருந்த சுல் தான் சலீம் என்பவர் தம்முடைய பெயர் பெற்ற 'எங்கச்ரீ' என்னும் பட்டாளத் துடன் எகிப்திற்குப்படை எடுத்தார். அவரு டைய பட்டாளம் ஐரோப்பாவை காலின்கீழ் மிதிக்கக்கூடிய அத்துணை வன்மை பொருந் தியதாக இருந்தது. அவரை எதிர்த்து யுத் தஞ் செய்ய எகிப்து பாதுகாப்புப் படை யானது முன்னேறி வந்தது. தூரத்தில் வரும் போதே இப்படையின் தலைவர், துர்க்கிகளின் தலைவரும் துர்க்கி சேனாதிபதிகளின் தலைவரு மாகிய சுல்தான் சலீம் எங்கு நிற்கின்றார் என்று அவருடைய சைன்யங்களின் மத்தி யில் கவனித்தார். சுல்தான் சலீம் என் பவரின் அடையாளங்களை அறிந்து தம்மு டைய ஆள்களுக்கு சைக்கினையால் தெரிவித் தார். உடனே 60 ஆயிரம் எகிப்திய வீரர்கள் இமை கொட்டி விழிப்பதற்குள் இருளில் மின்னல் பளீரெனத் தோன்றுவதுபோல் மள மளவென துர்க்கி சைன்யங்களுள் மிக

வேகமாகத் தாவிப் பாய்ந்தார்கள். மின்னல் மின்னி மறைந்ததும் இருள் மயமாயிற்று. சற்று நேரத்திற்குள் எகிப்திய சேனைகள் பருந்துகள் வட்டமிட்டுத் தாவி விழுவது போன்று துர்க்கி சைன்யங்களின் நடுவில் வந்துவிட்டனர். பிறகு எகிப்திய இராணுவத்திலுள்ள ஒரு சிறிய சேனதிபதியானவர் துர்க்கி ஜனரல் "சனன் பாஷா" என்பவரை ஈட்டி முனையில் கோர்த்துக்கொண்டு வெளியில் வந்தார். அந்த சனன் பாஷாவையே எகிப்திய படைகளின் கமாண்டர், 'சுல்தான்' என்று அறிந்தார். எகிப்திய படைத் தலைவர் முதல்பாய்ச்சலில் எதிரிகளின் சேனதிபதியைத்தான் ஈட்டி முனையால் தாக்கி தூக்கிக்கொண்டு போவார் என்று துர்க்கி சைன்யங்கள் நன்கு அறிந்துதான் இருந்தனர். துர்க்கி ஜனரலும் "நாம் அவசியத்திற்குமேல் அதிக எச்சரிக்கையுடன் தக்க பாதுகாப்புகள் செய்யாதவரை எதிரிகள் நம்மை பருந்துகள் தாவி விழுந்து பற்றிக்கொள்வதே போன்று பிடித்துக்கொண்டு செல்வர்' என்று முன்னமேயே அறிந்திருந்தார். ஆனல் தூரத்தில் வரும்போதே துர்க்கி சேனதிபதி இவர்தான் என்று எகிப்திய படையினர் அறிந்துகொள்வர் என்னும் விஷயம் துர்க்கி சைன்யங்களில் ஒருவருக்கும் விளங்கவில்லை.

நெப்போலியனும் எதிர்கட்சிகளும்

எகிப்திலுள்ள ஒரு மைதானத்தில் ஒரு புறம் எகிப்திய பாதுகாப்புப் படை அணி வகுத்து நின்றது. மற்றோர்புறம் அக்காலத்தில் வீராதி வீரனக விளங்கிய பெரிய நெப்போலியன் தனது சேனைகளை அணிவகுத்து 2½-நூற்றாண்டுகளாக சகல படையினையும் முதுகாட்டி ஓடும்படி செய்த எகிப்திய படையின் பயங்கரத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டு நின்றான். அப்படை கையாண்டு வந்த யுத்த முறைகளை அதுவரை எந்த சிப்பாஹியாலும் விளங்கிக்கொள்வதற்கும் முடியாதிருந்தது. நெப்போலியன் தன்னை எதிர்க்க வந்த சேனை எதுவென்றும் எப்படிப்பட்டதென்றும் நன்கு அறிந்திருந்தான். எனவே அவன் தன் சைன்யங்களை நன்ருக நிர்வகித்து எச்சரித்ததாவது—" இந்த அபாய கரமான படையானது உங்களை சிதறி அடித்துவிடும்; அதற்குமுன்னல் நீங்கள் உஷாராக இருக்கவேண்டும்; மின்னலைப்போன்று பளீரென்று உங்கள்மீது பாய்வார்கள். 70 ஆயிரம் வீரர்கள் மின்னல் வெட்டுவதைப் போன்று உங்கள் கூட்டத்தில் விழுவார்கள். உஷார்.

சண்டையைத் துவக்குவதற்கு முன்னதாகவே நெப்போலியன் தன் பகைவர்களின் நடைமுறைகளை நன்கு கவனித்து ஒரு அதிசயத்தைச் கண்டுபிடித்தான். அது பிறகு அப்போரின் போக்கையே ஒரே அடியாக மாற்றிவிட்டது. அவன் மிக்க கோபாவேசமாகத் தன் எதிரிகளின் பீரங்கிப்படைகளின் மீது தன் கூரிய பார்வையினை தூரத்திலிருந்தே செலுத்தினன். அவன்முடிவில் எகிப்திய படையினர் தங்கள் பீரங்கிகளை தரையில் செங்கற்களாலும் சாந்துக்களாலும் அசையாதபடி உரப்பித்திருப்பதையும் ஆயிரம் தடவை வெடித்தபோதிலும் அப்பீரங்கிகள் இருந்த இடத்திலிருந்து நகராதென்பதையும் விளக்கிக்கொண்டான். அவன் தனதுபடைத் தலைவர்களுக்கும் அந்த உண்மையினைத்தெரிவித்தான். பீரங்கிகளின் வாய்கள்நெப்போலியனது சைன்யங்களை நோக்கி இருந்தன. எனவே அந்த அபாயகரமான பீரங்கிகளின் வாயிலிருந்து தப்பிக்கொள்ளத் தகுந்த மார்க்கம் அவைகளின் முன்னல் நின்று எதிர்த்தோடாமல், வடக்கிலிருந்து திரும்பி யுத்தஞ் செய்வதுதான் என்று தீர்மானித்தான். அவ்வாறே தன் படைகள் அனைத்தையும் பீரங்கிகள் நோக்கியிருக்கும் திசையிலிருந்து மறுபக்கம் திருப்பி அவைகளுக்கு சரியாக பின்புறத்தில் கொண்டுவந்துநிறுத்தி அணிவகுத்தான். அதனல் எகிப்தியர்களுக்கு நேரே முகத்தைத் திருப்ப வேண்டியதாயிற்று. ஆனல் பீரங்கிகளையும் திருப்பிக்கொள்ள முடியாது போனதால் அவர்கள் அவைகளின் உதவி அற்றவர்களாகப் போர் செய்யும்படி நேரிட்டது.

நெப்போலியன் தனது அபூர்வமான யுத்த முறைகளால் எகிப்திய படைகளை எதிர்க்கத் துணிந்தான். சிறந்த வீரர்களில் ஒரு நூறு பேரைத் தெரிந்தெடுத்து தோளோடு தோள் சேர்ந்திருக்கும்படியாக வரிசையாக நிறுத்தி அவர்கள் கையில் முனையுள்ள ஈட்டிகள் மாட்டியுள்ள துப்பாக்கிகளைக் கொடுத்து கீழே ஊன்றிப் பலமாகப் பிடித்துக்கொள்ளவும் வலது முழந்தாளை வளைக்காமல் துப்

பாக்கிகளின் அடிப்பாகத்தின்மேல் நேராக வைத்து ஊன்றிக்கொள்ளவும் ஏற்பாடு செய்தான். இவ்வரிசைக்குப் பின்னுல் மற்றெரு வரிசையினை அதே முறையில் அமைத்தான். ஆனல் இப்பின்னணியில் நின்ற சிப்பாஹிகள் பிடித்திருந்த துப்பாக்கி முனைகள் முன்னணியில் நின்ற இரு சிப்பாஹிகளின் தோளுக்குப் பின்னே இருந்தன. பின்னணியில் நின்றவர்களும் அசையாதபடி தோள்கள் ஒட்டிய வண்ணம் பலமாக நிலைத்து நின்றனர். இவ்வணிக்குப் பின்னர் மற்றோர் வரிசையும் அதேமாதிரி அமைக்கப்பட்டது. இம்மூன்று வரிசைகளின் வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் அதே விதமாகத் துப்பாக்கிகள் பிடித்த வீரர்கள் வரிசைக்குப் பின் வரிசையாக நிறுத்தப்பட்டனர். ஆகவே வீட்டுத் திண்ணையைபோன்று அப்படையின் வீதியும் நீளமும் ஒன்றுப்போலவே இருந்தன. ஒரு வரிசைக்கு 400 அல்லது 500 பேர் அடங்கி இருந்தனர். இதை நெப்போலியனுடைய இஸ்குவாயிர் (சதுரங்க சேனை) என்று அழைக்கப்பட்டது. எதிரிகள் எந்த வழியாக அச் சதுரங்க சேனைக்குள் பிரவேசித்தபோதிலும் துப்பாக்கி முனைகளிலிருந்து தப்பமுடியாது. அச்சேனைக்குள் எங்கு பார்த்தபோதிலும் அடர்ந்த காடுகள் போன்று ஈட்டிமுனைகள் மயமாகவே தோற்றியது. நூறுபேர் அடங்கியுள்ள நூறு வரிசைகள் தயாரிக்கப் பட்டிருந்தன. முன்னணியில் யாராவது மரித்து விழுந்துவிடின் எதிரிகள் உள்ளே பிரவேசிக்காதபடி பின்னணியிலுள்ளவன் அவன் நின்ற இடத்தில் உடனே வந்து நின்று விடுவான்.

எதிரிகள் ‘அல்லாஹ அக்பர்’ என்னும் சப்தத்தை மலையைப் பிளக்கும்படியாக முழக்கிக்கொண்டு சண்டை செய்ய ஆரம்பித்தனர். படைகள் யெல்லாம் கிடுகலங்கியது. பூமி அதிர்ந்து எண்ணுயிரம் எகிப்திய சேனைகள் நெப்போலியனின் ஐரோப்பிய படையினரின்மீது பீரங்கிக் குண்டுகளைப் போன்று ஒரே பாய்ச்சலாகத் தாவி வீழ்ந்தனர். அவர்கள் துப்பாக்கி முனைகளையும் துப்பாக்கி வேட்டுக்களையும் பொருட்படுத்தவில்லை. என்கிலும், நெப்போலியனது படை மத்தியில் பிரவேசிக்க முடியாது தடைபடுத்தப்பட்டனர். மிக்க கோபாவேஷங்கொண்ட எகிப்திய பாதுகாப்புப் படையினர் ஈட்டிகளை கையில் தாங்கினவர்களாக குதிரை மேல் இருந்துக்கொண்டு நெப்போலியனது சதுரங்க சேனைக்குள் பாய்ந்தனர். படைகளில் அதிர்ச்சியும் அமளியும் உண்டாயிற்று. ஆனுலும் நெப்போலியனது சதுரங்க சேனை கலையவே இல்லை. எதிரிகள் வெகு தொலையிலிருந்து குதிரைகளை வெகு வேகமாக ஒட்டிவந்தனர். அவர்களைத் தடுப்பது மிக அபாயகரமாக இருந்தது. ஆனல் ஈட்டி முனைகளின் வரிசையானது சுவர்களைப் போன்று அன்னேரின் பிரவேசத்தைத் தடுத்து விட்டது. குதிரைகள் மிக்க வேகமாக வந்து வந்து நின்று விட்டன. அநேகம் காயமடைந்தன. பல குதிரைகள் கீழே விழுந்து மாண்டன. எதிரிகளின் முயற்சி எல்லாம் வீணுயிற்று. அவர்கள்மீது அளவில்லாமல் வேட்டுக்கள் பாய்ந்தன. அவர்கள் அடர்ந்தேறிச் செல்வதை தடைசெய்யப்பட்டதால் அவர்களின் தந்திரம் பலிக்கவில்லை. இரண்டரை நூற்றுண்டு களுக்குப் பிறகு அப்போதுதான் அவர்களின் யுத்த முறைக்குப் பங்கம் நேர்ந்தது. எதிரிகள் ஒன்றுஞ்செய்ய வகையறியாது திரும்பிச் சென்றனர். எதற்காக? மறுபடியும் தூரத்திலிருந்து குதிரையை வேகமாக ஒட்டி வந்து பாய்வதற்காகவே சென்றனர். அவ்வாறு திரும்பிச் செல்லும்போது பின்னுல் பீரங்கிக்குண்டுகளும் துப்பாக்கி வேட்டுக்களும் மழைமாரியாக சொரிந்தன; விழுந்தவர்கள் விழுந்தனர். இறந்தவர்கள் இறந்தனர். மீதியாக இருந்தவர்களுக்கு அதிகக் கோபமும் ரோஷமும் உண்டாயிற்று. அவர்கள் அனைவரும் ஒரிடத்தில் ஒருங்குகூடி முன்னையவிட அதிக தைரியமாகவும் கட்டுப்பாடாகவும் எதிர்த்தேறினர் எனினும் நெப்போலியனின் சதுரங்க சேனை நகரவேவில்லை. துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே இருந்தனர். துப்பாக்கி முனைகள் குதிரைகளின் நெஞ்சில் ஊடுருவிப்பாய்ந்தன. குதிரைகள் அப்படியே பின்னங்கால்களால் நின்று கீழே சாய்ந்தன. சவாரிகள் பாதசாரியாகி விட்டனர். பிறகு அவர்கள் பின் திரும்பிச் சென்றனர். அதிகதூரம் அவர்களுக்குச் செல்லமுடியவில்லை. ஏனெனில் அவர்கள் திரும்பியவுடன் பீரங்கிகளைக் கொளுத்த ஆரம்பித்துவிட்டனர். ஆகவே எகிப்திய படைகளுள் சிலர் சிதறுண்டு நெப்போலியனது

துப்பாக்கிவேட்டுக்களுக்கு இரையாகினர். சிலர் வெட்கத்தால் தங்கள்கையிலுள்ள ஆயுதங்களைக்கொண்டு தங்கள் தலையை வெட்டிக்கொண்டு சாய்ந்து வீழ்ந்தனர். எகிப்தியர்கள் தைரியத்தைக் கைவிடவில்லை. ஆபத்தில் அகப்படாது தப்பி மீண்டவர்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்து எதிர்த்தனர். ஆனுலும் எல்லாம் வீணுயிற்று. நெப்போலியனது சேனை நெளியவே இல்லை. எதிரிகளின் கைதளர்ந்துவிட்டதை அறிந்து நெப்போலியனின் சதுரங்க சேனையானது நகர்ந்தது. பிறகு மிக்க ஆரவாரமாக எகிப்திய பாதுகாவல் படையினைத் தாக்கியது. தாக்கியதும் அப்படை அந்த அந்த இடத்திலேயே மாய்ந்தது. தப்பியோடியவர்களை நெப்போலியன் விடுகிறதில்லை. அவர்களுக்குப் பின்னல் பீரங்கியினைக் கொளுத்திவிடுவான். முடிவாக அப்பீரங்கி படைகளின் அபரிமிதமான நெருப்புப் பிரயோகமே பிரக்யாதிபெற்ற எகிப்திய பாதுகாப்புப் படையினை அபஜெயமடையச்செய்தது. "எகிப்திய பாதுகாவல் படையினரைப்போன்று 10 ஆயிரம் சேனைகள் என்வசம் வந்து சேர்கிறதாயிருந்தால் ஐரோப்பாவை மாத்திரமன்றி உலகத்தையே என் சிம்மாதனத்தின்கீழ் அடக்கி ஆள்வேன்" என்று நெப்போலியன் கூறியதுண்டாம்.

நெப்போலியனும் துர்க்கிகளும்

எகிப்தியர்களை முறியடித்தபின்னர் சீனுயி என்னும் பெரிய கருங்கல் பாறையினைத் தாண்டி ஷாம்தேசத்திற்கு வந்தான். அங்கு நெப்போலியனை துர்க்கிகள் பயமுறுத்தினர். எனினும்நெப்போலியன் தைரியமாக 5 ஆயிரம் காலாட்படையினை நடத்திக்கொண்டு துர்க்கிகளை எதிர்த்து வந்தான். அவனை எதிர்ப்பதற்காக 40 ஆயிரம் துர்க்கிகள் திரட்டப்பட்டனர். நெப்போலியன் துர்க்கிகளின் நிலைமையினை நன்கு அறிந்திருந்தான். இரு தரப்பு பட்டாளங்களும் சந்தித்தபோது துர்க்கிகள் தங்கள் எதிரிகள் குறைந்த அளவாக இருப்பதைக் கண்ணுற்று மிக்க இறுமாப்புடன் பல்லைக் கடித்துக்கொண்டு பயங்கரமான கோஷம் செய்தவர்களாக நெப்போலியன்மீது அடர்ந்தேறினர். இந்த சண்டையின் ஒவ்வோர் பகுதியினையும் குறித்து 'அல்பட்' என்னும் சரித்திராசிரியர் நன்கு விஸ்தரித்துள்ளார். துர்க்கி சைன்யங்கள் தங்கள் வீரம், தைரியம், ஆண்மை முதலியவைகளால் ஒரு லக்ஷம் எதிரிகளுடன் சண்டை செய்ய பலம் வாய்ந்தவர்களாகவே விளங்கினர். எனினும் நெப்போலியன் நெப்போலியனுகவே விளங்கினுன். அவன் எகிப்தியர்களுடன் கையாண்ட யுத்த முறைகளையே இங்கும் கையாண்டான். அவனது சைன்யங்கள் ஈட்டி முனைகளை சுவர் போன்று அமைத்தவர்களாக நின்று யுத்தஞ் செய்தனர். துர்க்கி சேனைகள், இத்தகைய முட்சுவர்களின்மீது மோதுண்டு தலையை இழந்தனர். நெப்போலியன் வெகு இலகுவாக முழுச் சைன்யங்களையும் கொன்று மாய்த்தான். இதுதான் நெப்போலியன் துர்க்கிகளுடன் செய்த பலமான முதல் யுத்தமாகும். இந்த யுத்தத்தில் நெப்போலியனது வீரத்தினும் யுக்தியினும் காரணமாக துர்க்கிகளுக்கு பெரிய பலாத்காரமான தோல்வி நேரிட்டது.

நெப்போலியனின் தோல்வி

உண்மையில் துர்க்கிகள் மிக அவசரமாகவும் ஆத்திரமாகவும் சண்டையை ஆரம்பித்ததால் ஏமாற்றத்திற் குள்ளாகினர். அப்பால் நெப்போலியனின் படை எழுச்சியைஅறிந்து வரும் பொருட்டு குஸ்தந்தனியாவிலிருந்து அஞ்சாத ஒரு திடசித்தரை அனுப்பப்பட்டது. அவருடைய பெயர் ஹிஷ்மத். நெப்போலியன் அவருக்கு 'ஹஷ்மத் கஷ்ஷாப்' என்று பெயர் வைத்தான். ஹஷ்மத் கஷ்ஷாப் என்பவர் நெப்போலியனுடன் போர் செய்வதற்குத் தயாரானுர். எகிப்தில் எஞ்சியிருந்த நெப்போலியனது சேனைகள் எல்லாம் அவனுடன் வந்துசேர்ந்தன. அதனுல் நெப்போலியன் உக்கா என்னும் ஊரிலுள்ள பெயர்பெற்ற கோட்டையினைக் கைப்பற்றுதற்கு எண்ணங் கொண்டான். அக்கோட்டையானது கீழ்திசைத் திறவுகோல் போல் விளங்கியது. இக்கோட்டை விஷயமாக எத்தனையோ பெரியசண்டைகள் நிகழ்ந்துள்ளன. கீழ்த்திசை நாடுகளுக்கு வருவதற்கு அக்கோட்டையே பிரதானமான வாசலாகும். சரித்திர சம்பந்தமாக அது பிரக்யாதி பெற்றுள்ள இடமாகும். அந்த உக்காவைக் கைபற்றிய பின்னர் நேரே ஈஜுன் தேசத்தைத் தாண்டி 'மைசூர் சிங்கமாகிய'

திப்புசுல்தானுடன் சேர்ந்து இங்கிலீஷ்காரரை துரத்திவிட நாடினன். உக்காவின் வெற்றியானது ஹிந்துஸ்தான் மாத்திரமன்றி நெப்போலியன் கூறியதுபோல் உலக வெற்றிக்கே காரணமாகுமெனக்கருதினர். "உக்கா மட்டும் என் கையில் வந்திருக்குமானல் சிக்கந்தரின் வெற்றி முழுவதும் வெகு அற்பம் என்று உலகத்தாருக்கு காட்டியிருப்பேன்" என்று நெப்போலியன் அடிக்கடி பரிதாபமாகக் கூறுவானும். ஒரு சிறிய படையை வைத்துக்கொண்டு உலகத்தை வெல்வது அருமையான காரியமன்றோ!

நெப்போலியன் தனது சைன்யங்களை உக்காவை நோக்கி அழைத்துச் சென்ருன். துர்க்கி ஜெனரலாகிய ஹஷ்மத் என்பவர் தம்முடைய குறைந்த அளவான படையானது நெப்போலியனை எதிர்ப்பதற்கு சக்தி பெருது என்பதை அறிந்து கோட்டைக்குள் சென்று பந்தோபஸ்தாக இருந்துக்கொண்டார். நெப்போலியன் வந்து கோட்டையினை வளைந்து முற்றுகையிட்டான். ஆசியாவின் திறவுகோல் இல்லை உலகத்தின் திறவுகோலாகிய உக்காவைப் பிடிப்பதற்காக சகலவித சூழ்ச்சிகளையும் யுத்தமுறைகளையும் கையாளுவதற்கு யோசனைசெய்தான். கீழ்த்திசைகளையும் பிடித்தடக்கவேண்டும் என்ற பேராசையால் தன்து மிதமிஞ்சிய வீரத்தையும் ஆண்மையினையும் யுக்தியினையும் உபயோகித்து அக்கோட்டையினை வெல்வதற்காக முற்றுகை போட்டான். இடைவிடாது கோட்டையைகாவல்புரிந்தசிப்பாஹிகளை எதிர்த்து அடர்ந்தேறினன். ஒவ்வொரு தடவையும் வேகத்துடன் தாவிப்பாய்ந்தான். இருகட்சிகளுக்கும் சண்டை பலமாக நடந்தது. நெப்போலியன் தனது ஆட்களுக்கு ஒவ்வொரு சமயமும் உறுதிமொழிகளாலும் வீரமொழிகளாலும் ஆறுதலும் உற்சாகமும் அளித்து போர் வெற்றிகரமாக முடிவதற்கு எதிர்பார்த்து நின்ருன். அவனது சைன்யங்கள் கோட்டைக்குள்ளே பிரவேசிக்க ஆரம்பித்தனர். அந்தசமயத்தில் கோட்டைவாசலில் துர்க்கி சிப்பாஹிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த பாதுகாவல் பீடங்களும் இடிந்து சிதறுண்டன. அவர்களுக்கு நம்பிக்கை சிறிதும் இல்லாமல்போயிற்று. அன்னோர் உதவிக்காக குஸ்தன் தனியாவுக்கு ஒற்றகரை அனுப்பி இருந்தும் அதுவரை எவ்வித உதவியும் வந்து சேரவில்லை. துர்க்கிகளுக்கு உதவிப்படைவந்து சேர்வதற்குள் நெப்போலியன் கோட்டையினை ஜெயிக்க மிக்க தீவரமாக நடைமுறைகளை அனுசரித்தான். வெற்றிக்குரிய அறிகுறி ஒன்றும் இல்லாதிருப்பதைக் கண்டு தன் சைன்யங்களைக் கண்டித்து பயமுறுத்தினன். அதனல் நாலாபக்கங்களிலிருந்தும் அவனது சைன்யங்கள் கோட்டையின் மத்தியில் பிரவேசிக்கலாயினர். ஆனல் ஹஷ்மத் என்பவர் தமது மாளிகையில் இருந்துக்கொண்டு நெப்போலியனுடைய ஆட்களில் எவருடைய தலையையாவது கொண்டு வருகின்றவர்களுக்கு சன்மானம் அளிப்பதாகக் கூறிக்கொண்டிருந்தார்.

நெப்போலியன் தன் படைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துப் போரைப் பலமாக நடத்தும்படி தூண்டிக்கொண்டிருந்தான். நெப்போலியனுக்கு வெற்றியும் ஹஷ்மத்துக்கு அபஜெயமும் நேரிடக்கூடிய சமயமாக இருந்தது. அச்சந்தர்ப்பத்தில் உக்கா கோட்டைக்கு முன்னல் வெகுதூரத்தில் கடலின் மத்தியில் ஏதோ பொருட்கள் காணப்பட்டன. அவை உண்மையில் கப்பல்களாயிருந்தன. அவை யாருடையதென்று எந்தக் கட்சிக்கும் புலப்படவில்லை. பிரான்ஸிலிருந்து உதவிப்படைவருகிறதோ அல்லது துர்க்கிகளுக்காக உதவிப்படை வருகிறதோ என்று ஒருவராலும் நிச்சயிக்கமுடியாமலிருந்தது. ஆகையால் அக்கப்பல்கள் கரையை நோக்கி வந்துகொண்டிருக்கும்போதெல்லாம் இரு தரப்பாருக்கும் ஒருவாறு ஆறுதலைக் கொடுத்தது. எனினும் நெப்போலியன் நெப்போலியனகை இருந்ததால் அக்கப்பல் படை துறை முகத்தில் வந்து சேர்வதற்குள்ளாக உக்காவை ஜெயித்துவிட நாடினன். அவன் மிக்க ஆரவாரத்துடன் உலகத்தின் திறவுகோலைக் கைப்பற்றும் விஷயத்தில் பிற்போக்காக இருந்து விடுவது மதியீனம் என தனது சைன்யத்திற்கு தைரியமூட்டினன். கப்பல்கள் மிக விரைவாக துறைமுகத்திற்குச் சமீபம் வந்துகொண்டிருந்தன. துர்க்கிகளின் நிலைமை மிக்க அபாயகரமாக இருந்தது. கொஞ்ச நேரத்திற்குள் கப்பல்கள் எல்லாம் தண்ணீரில் மூழ்கிவிட்டதுபோல் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்து விட்டது. ஏனெனில் கப்பல்கள் துறைமுகத்திற்கு வரவேண்டிய பாதை மலையடிவாரமாக இருந்ததால் அவை

இருபக்கத்து சைன்யங்களின் கண்களுக்கும் தெரியாமல் போய்விட்டன. அவை எப்போது வந்து சேருமென்றும் யாருடையதென்றும் ஒருவருக்கும் புலப்படவில்லை. நெப்போலியன் தன் படைகளை மிகத்தீவிரமாக முன்னேற்றிச் சென்றான். அவனது சைன்யங்கள் ஹஷ்மத் என்பவர் இருந்த தோட்டத்தின் சமீபம் வரை பாய்ந்தேறி வந்து விட்டன. வந்து மிக்க கடூரமாக சமர் செய்தன. அச்சமயத்தில் மலை அடிவாரத்தைச் சுற்றி துர்க்கிய கப்பல் படைகள் வருவது காணப்பட்டன. உடனே கோட்டைக்குள் சந்தோஷத் தொனி கிளம்பியது. இதற்குபதிலாககப்பல்படையிலிருந்த துர்க்கிகளால் பெரிய கரகோஷம் செய்விக்கப்பட்டது. எனினும் அவைகள் இன்னும் கரையிலிருந்து வெகு தொலையிலேயே வந்துக் கொண்டிருந்தன.

ஆகவே நெப்போலியன் கப்பலில் துர்க்கி சிபாஹிகள் வருவதை அறிந்து மிக தீவரமாக கோட்டைக்குள் ளிருந்தவர்கள்மீது அடர்ந்து போர்புரிந்தான். இதை அறிந்த கப்பல் படையினர் மிக தீவரமாக கரையில் சேர்ந்து கோட்டையை பாதுகாக்கும் பொருட்டுத் தண்ணீரில் குதித்து விரைந்து வந்துக்கொண்டிருந்தனர். ஆனதால் நெப்போலியனுக்கு உடனே திரும்புவதைத் தவிர வேறு வழியொன்றும் தோன்றவில்லை. அவன் ஒருவகை கெதியும் இல்லாது தன் சைன்யங்களுடன் முதுகுகாட்டி ஓடினான். துர்க்கிகள் அவர்களைப் பின் றொடர்ந்து விரட்டியடித்தனர். நெப்போலியன் தன் குதிரையையும் இழந்துபாதசாரியாகத் தப்பியோடிப் பிழைத்தான். அவ்வாறாக நெப்போலியனுக்குப் பெரிய அபஜெயம் நேரிட்டது. அப்பால் எகிப்து மட்டுமன்றி, ஸிபியா, யூடோபியா முதலிய நாடுகளும் நெப்போலியனை இனி ஒருபொழுதும் கீழ்த்திசை நாடுகளில் கால் எடுத்து வைக்காதபடி துரத்தியடித்தன.

நெப்போலியனுக்கு நேர்ந்த தோல்விகளில் இதுவே முதற்தடவையாகும். ஆனால் உண்மையில் இதே இறுதித் தோல்வி என்றும் கூறலாம். உக்கா வென்னும் கோட்டை நெப்போலியனது கைவசம் சிக்கி இருந்தால் "வாட்டர்லூ" என்னு மிடத்தில் ஒருவேளை யுத்தம் நேரிட்டிராது. வாட்டர்லூவில் நேர்ந்த இரண்டாவது தோல்வியில் நெப்போலியன் கைது செய்யப்பட்டான். இத்தோல்வியினை அவ்வளவு பிரமாதமான தோல்வி என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் நெப்போலியன் வாட்டர்லூவில் தன்னிடமிருந்த குறைந்த அளவான சைன்யங்களைக் கொண்டே அளவற்ற எதிரிகளுடன் சண்டைசெய்ய வேண்டியதாயிற்று. அவனுக்கு சிற்சில அசந்தர்ப்பங்கள் நேரிடாமலும், அவனது சேனாதிபதி வாட்டர்லூவிற்கு செல்லும் ரஸ்தாவை மறந்திராமலும், வாட்டர்லூவிற்கு எப்படியாவது வந்து சேர்ந்திருந்தால் இங்கிலீஷ் ஜனரலையும் ஜர்மன் ஜனலரையும் ஒரு கை பார்த்திருப்பான்.

வாட்டர்லூவில் கிடைத்த தோல்வி நெப்போலியனை அவ்வளவாக துன்புறுத்தவில்லை. ஆனால் உக்காவில் நோர்ந்த தோல்வியே அவனது ஆயுள் காலம் வரை துன்புறுத்திக் கொண்டிருந்தது. "அந்தோ உக்காவில் நான் தோற்றிராவிடின் இன்று உலக சக்கிராதிபதியாக ஆகியிருப்பேன்" என்று நெப்போலியன் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தான். அதனால் உக்காவிலேயே நெப்போலியன் முதல் தடவையான தோல்வியும் இறுதித் தோல்வியும் பெற்றுளான் என்பது பொருத்தமாகும்.

நமது ஏஜண்டு

திருநெல்வேலிப் பேட்டையிலுள்ள ஜனாப் S. K. ஷாஹுல் ஹமீது ருவுத்தர் அவர்களை, நமது அரும் மாசிகையாகிய ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் ஏஜண்டாக ஏற்படுத்தியிருப்பதால், அன்பர்கள் அன்னார் மூலம் சந்தாதார்களாகச் சேர்ந்து பத்திரிகையை அபிவிர்த்திக்குக் கொண்டு வருவீர்களென எதிர்பார்க்கின்றோம்.

சாத்தான் குளம் முஸ்லிம் மகாநாடு

சாத்தான் குளம் திருநெல்வேலி ஜில்லா நாஸிரத்திற்குச் சமீபத்திலுள்ள புராதன ஊராகும். அதில் முஸ்லிம்களின் வீடு சுமார் 300-ம் அநேக ஹிந்துக்களின் வீடுகளுமிருக்கின்றன. அவ்வூர் வாசிகளிலனேகர்கொளும்பு சென்னை முதலிய நகரங்களில் வியாபாரஞ்செய்பவர்களாகும். இவர்கள்யாவரும் ஷாபிஈ மத்ஹபைப்பின்பற்றுபவர்கள். சிலகாலமுன் இவர்களில் 4, 5 நபர்கள் கொளும்பு அஹ்மதிய சங்கத்தாருடன் தொடர்பு வைத்துக் கொண்டு காதியானி மதத்தில் சேர்ந்து அஞ்சுமனெ அஹ்மதிய்யா வென்னும் ஒரு சங்கத்தையும் நிறவினர். தங்களின் இக் கொள்கையைப் பல நாட்கள் வரை மறைத்து வைத்திருந்தனர் சமீபத்தில் அக் கொள்கையை வெளியிட்டு அங்குள்ள பலரையும் வழிகேடான கெட்ட கொள்கையில் சிக்கவைக்க வேண்டுமென்னும் அவா அவர்கட்கு ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் காஹிர்மா நகரில் ஒருவன் குலாம் அஹ்மத் காதியானியை நபி என்றும் வாக்குச் சொல்லப்பட்ட மஸீஹ் மஹ்தி என்றும் கூறியதோடு தன் உதிரத்தை ஒரு கடிதத்தில் வைத்தபோதிலும் அதுவும் குலாம் அஹ்மதை நபி என்று நிக்ஷ்யமாக எழுதுமென்றும் பலர் முன்னிலையில் கூறினன். அது கேட்டு அங்குள்ள உலமாக்களும் மகாஜனங்களும் அவனை அழைத்துவரச் செய்து மகாசபையில் விசாரித்ததினிமித்தம் மேற்கூறிய அவனது கூற்றுக்கள் உண்மையென வெளியாகவே, அவன் காபிராய் விட்டான்; அவனுடைய விவாகம் தானே ரத்தாய் விட்டது ; அவன் பெண்சாதியுடன் எவ்வகையான சம்மந்தமும் வைத்துக் கொள்ளக்கூடா தென்று முடிவு செய்து விட்டனர். அன்னோன் ஆதரவற்று கொளும்பு சென்று அஹ்மதியசங்கத்தாரிடம் தனக்கேற்பட்ட ஆபத்தையும் அவமானத்தையும் தெரிவித்தான் தங்கள் மதத்தைத் தழுவிய இன்னோனுக்குப் பேராபத்து வந்து விட்டதே என்று அவனுக்கு உதவி செய்வதற்காக அஹ்மதிய சங்கத்தினர் கங்கணங் கட்டி முன் வந்து காஹிர்மா நகரிலுள்ள உலமாக்களுக்கும் தலைவர்கட்கும் தந்தி கொடுத்து மிரட்டிப் பார்த்தனர். பிறகு சாத்தான் குளம் அஹ்மதிய சங்கத்தலைவரான செய்யித் அஹ்மத் என்பார் பெண்ணை இழந்த காயல் வாசியையும் கொளும்பிலுள்ள காதியானிப் பிரசாரகர்களும், மலையாளவாசிகளுமான அப்துல்லா, இப்ருஹீம் இருவர்களையும் அனுப்பி வைத்தார். இவர்கள் சாத்தான்குளம் வந்து தங்களாலான பிரயாசை எல்லாம் எடுத்துப் பெண்ணை இழந்து தவிக்கும் காயல்வாசிக்குப் பெண்ணைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் காதியானிப் பிரசாரத்தை எங்கும் பரத்துவதற்கும் முயற்சித்தனர். எவ்வித சூக்ஷியினுலும் அப்பெண் அவனுக்குக் கிடைக்கவில்லை. பின்னர் மலையாளவாசிகள் காதியானிக்கொள்கைதான் சரியானதெனவும் சன்மார்க்கத்திற்கேற்ற தெனவும் பிரசாரஞ் செய்ய முற்பட்டனர். சாத்தான் குளத்தின் பற்பல தெருக்களிலும் கமாலிய்யாப் பாடசாலையிலும் அநேகப் பிரசங்கங்கள் நிகழ்த்தினர்; குர்ஆன் ஹதீதுகளுக்கு அர்த்தங் கூறுவது போலும், ஜனங்களிடையே பரவி வரும் அனுச்சாரங்களைத் திரித்துக்கூறி அவைகளைக் கண்டிப்பதுபோலும் நடித்துத் தங்களின் தீயப்பிரசாரத்தைப் பரத்த ஆரம்பித்தனர். குலாம் அஹ்மத் காதியானீ தற்கால உண்மை நபியாகும் ; அவருடைய வார்தைகளும் தாவாக்களும் பரிசுத்தமானதாக இருக்கின்றது; இந்த உண்மையைப்பலகோடி முஸ்லிம்களும் அறியாதிருக்கின்றனர்; கோடிக் காம்புகளான உலமாக்கள் இதனை அனுவிஷயமாய் மறுத்து வருகின்றனர் ; எச் சந்தர்ப்பத்திலும் எச்சபையிலும் நாங்கள் மிர்ஸாவின் நபித்துவத்தை நிரூபிக்கத் தயாராக யிருக்கின்றோம்; குர்ஆனும் ஹதீதுகளும் அவர் நபி என்றே கூறுகின்றது என வாய் கூசாது பிரசங்கித்தனர். அதுபார்த்து அங்குள்ள பொதுஜனங்களிற் சிலர் காதியானிக்கொள்கை கெட்டதென ஒருவாறு கேள்விப்பட்டிருந்தபோதிலும் இவர்கள் கூறுவதைப் பார்த்து இஃது உண்மைதானோவென சந்தேகித்தனர். மற்றுஞ்சிலர் காதியானிக்

கொள்கை கெட்டதென்பது நிக்ஷயம்; இவர்கள் சாங்கோபாங்கமாய்த் தெருக்களில் பிரசங்கித்து சாதாரண பொதுமக்களை எல்லாம் ஏமாற்ற முற்பட்டிருக்கின்றனரே இதனை ஊர்த்தலைவர்கள் கவனித்து உலமாக்களைக் கொண்டல்லவோ இவர்கட்குத்தக்க வாயாப்புக் கொடுத்து இத்துற் பிரசாரத்தை அடக்க வேண்டும் எனக்கவலை கொண்டனர். இதனிறுதியில் சாத்தான்குளத்திலுள்ள 4, 5 காதியானிகள் நம் சுன்னத் வல் ஜமாஅத்தார்களுடன் தொழுகையை நிறைவேற்றுவது கூடாதெனக் கருதி தாங்கள் தொழுவதற்கென்றே ஒரு தனி இடத்தை ஏற்படுத்திக்கொண்டு ஒரு இமாமையும் நியமித்துக் கொண்டனர். இதுசம்மந்தமாக ஊர் ஜமாஅத்தார்கட்கும் அஹ்மதிய சங்கப் பிரசிடெண்டான சையத் அஹ்மதுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து கடாசியாகத் தாங்கள் 10 வருடங்களாக காதியானீ மதத்தில் சேர்ந்திருப்பதாகவும், ஜமாஅத் முதலியவைகளைத் தனியே நடத்திக்கொள்ளப்போவதாகவும் தெரிவித்ததுடன் தங்களின்கொள்கை, நடத்தை முதலியவைகள் தப்பெனத் தெரிந்தால் தக்க அறிஞர்களைக்கொண்டு உபதேசஞ் செய்யலாம் எனவும் எழுதியிருந்தார். இதுபார்த்து ஊர் ஜமாஅத்தார்கள், காதியானிகள் ஜமாஅத்தைவிட்டுப் பிரிந்துகொள்வதில் ஆக்ஷேபனை இல்லை என்பதாகத் தெரிவித்துவிட்டு நடைபெற்ற சகலவிபரங்களையும் சென்னையம்பதியின்கண் வதியும் சாத்தான்குளம் வாசிகளும் பிரபல வர்த்தகர்களும் மார்க்க பக்தர்களுமான மெஸர்ஸ் அ. பி. மு. செய்யித் இப்ருஹீம் மரைக்காயர் அண்டு பிரதர்ஸ், ஜனப் மு. மீ. ஷேக்முஹம்மது மரைக்காயர் வகேருக்களுக்குத் தெரிவித்து அதற்குத்தக்கன செய்யவேண்டுமெனவுங் கோறிக்கொண்டனர். அதன்மீது அக்கனவான்கள் தீர்க்காலோசனைபுரிந்து உலமாக்களையும் அறிஞர்களையும் சாத்தான்குளத்திற்கு அழைத்துவருவதாகத் தெரிவித்தனர். இவ்விஷயத்தை 10-4-32-ல் நடைபெற்ற ஜும்ஆக் கூட்டத்தில் ஜமாஅத்தார், சையத் அஹ்மதுக்கு அறிவித்து உலமாக்களைக்கொண்டு விஷயங்களை விவாதித்து சத்தியமான முடிவெடுத்து அதனை ஏகதேசத்தில் யாவரும் பின்பற்றுகிறதென்று முடிவு செய்தார்கள். அதுசமயம் சையத் அஹ்மத் 25-4-32க்கு சிலோன் செல்லவேண்டியதிருப்பதால் அதற்கு முன்பே விவாதத் தேதியை குறிப்பிட்டுக்கொள்ளவேண்டுமென்று கோரிகொண்டதற்கு, இதுவிஷயமாக சென்னைக்குத் தெரிவித்து பதில்சொல்வதாக ஜமாஅத்தார்கள் தெரிவித்துவிட்டார்கள். சென்னைப் பிரமுகர்கள் 25-ம் தேதிக்கு ஒருநாள் முன்னதாகவே 24-ம் தேதியைத் குறிப்பிட்டு ஜமாஅத்தார்கட்கு தெரிவித்ததுடன் அஹ்மதிய சங்கப் பிரசிடெண்டான சையத் அஹ்மதுக்கும் தந்திமூலம் அறிவித்தார்கள். அதனை சையத் அஹ்மத் ஒப்புக்கொண்டு தயாராயிருப்பதாக பதில் தந்தியும் கொடுத்தார்.

மகாநாடு.

சையத் அஹ்மத் ஒப்புக்கொண்டபிரகாரம் 24-4-32ல் மகாநாடு நடைபெருமென்று துண்டுப் பிரசுரங்கள் பத்திரிகைகள் வாயிலாய் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க உலமாக்களும் அறிஞர்களும் பொதுஜனங்களும் சாத்தான்குளம் வந்துசேர்ந்தார்கள். மகாநாட்டில் விவாதிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி யோசித்து முடிவுசெய்ய 24-4-32 காலை 9 மணிக்கு விஷயாலோசனைக்கமிட்டி கூடுவதென அன்றிரவே முடிவுசெய்யப்பட்டது. அதற்காக இருதரப்பிலும் மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். குறிப்பிட்டபடி 24-ந்தேதி காலை 9-மணிக்கு சப்ஜக்ட் கமிட்டி, போர்டு ஸ்கூலில் ஜனப் மௌலானா சையத் முர்தஜா சாஹிப் பஹதூர் M. L. A. அவர்கள் தலைமையின்கீழ்கூடிற்று. முதலாவதாக பொதுசபைக்கு ஜனப் மௌலானா சையத் முர்தஜா சாஹிப்பஹதூர் M. L. A. அவர்களை அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்டது. இரண்டாவதாகநபித்துவம்எம்பெருமானார் (ஸல்.) அவர்களுடன் முடிந்துவிட்டதா? இல்லையா? என்பதைப்பற்றியும், ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் மரணமாய்விட்டார்களா இல்லையா? என்பதைப்பற்றியும், மிர்ஸா குலாம் அஹ்மத்காதியானீசெய்த தாவாக்கள் மெய்யானதா பொய்யானதா? என்பதைப் பற்றியும் மகாநாட்டில் விவாதிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. மூன்றாவதாக ஒரு விஷயத்தை ஒருவர்தான் பேசவேண்டும் இரண்டு அல்லது மூன்று விஷயங்களை ஒருவரோ அன்றி இருவரோ மூவ்வரோ பேசலாமென்றும் மற்றவர்கள் பேசுபவர்கட்கு உத

வியாக ஆதாரங்கள் எடுத்துக்கொடுக்கலா மென்றும் முடிவு செய்யப்பட்டது. நான்காவதாக தாவர்க்களுக்கு குர்ஆன், ஹதீது, இஜ்மாஉ, கியாஸ் இந்நான்கு அத்தாக்ஷிகளையும் ஆதாரமாகக் கொள்ளவேண்டு மென்னும் விஷயத்தில், குர்ஆனையும் ஹதீதுகளையும் தான் அத்தாக்ஷியாக எடுத்துக்கொள்வோம் சஹாபாக்களுடைய இஜ்மாஐயும் இமாம்களின் கியாஸையும் ஒப்புக்கொள்ள மாட்டோமென காதியானிகள் குதர்க்க வாதம் புரிந்தனர். அவர்கட்குத் தக்க வாய்ப்புக்கொடுக்கப்பட்டபின் இவ்விவாதத்திற்கு மட்டில் இந்நான்கு அத்தாக்ஷிகளையும் ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டனர். இந்நிலைமையில் ஒரு மத்தியஸ்தரை நியமித்து உபய வாதிகளின் அத்தாக்ஷிகளையும் கவனித்து உண்மை எது வென்பதை முடிவு செய்து அதனை யாவரும் பின்பற்றவேண்டு மென்னும் விஷயத்தில் பலத்த விவாதம் நடந்தது. இரு தரபார்களில் யாரையாகிலும் மத்தியஸ்தராக நியமித்தால் மற்ற தரபார் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்; பொதுச் சபைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கும் தலைவர் மகாநாட்டை அமைதியாக நடைபெறச் செய்யட்டும்; இருகக்ஷியாரும் அவரவர்களின் அத்தாக்ஷிகளையும் மறுப்புக்களையும் எடுத்துக் கூறிவிடுவோம் பொது ஜனங்கள் தங்கள் மனதில் தோன்றுவதைத் தெரிந்துகொண்டு போகட்டும் என்று காதியானிகள் கூறினர். இது ஒழுங்கான முறையல்ல யாதொரு விஷயத்தில் விவாத மேற்படின், அதற்காக ஒரு மத்தியஸ்தரை நியமித்து ஒரு முடிவெடுத்து அதனையாவரும் பின்பற்றி நடக்கவேண்டியதுதான் சரியான முறையாகும். இதற்குத்தான் முபாஹிஸா, முனாஜராவென்று சொல்லப்படும்; இதுவன்றி அவரவர்களின் சாமர்த்தியங்களைப்பேசி விட்டுப் போவதென்பதற்கு முஜாதலாவென்று சொல்லப்படும் இஃது சன்மார்க்கத்திற்கு முற்றும் விரோதமாகும் என முஸ்லிம்கள் கூறிவிட்டனர். மேலும்மகாநாட்டிலேயேமுடிவெடுக்காவிடின் காதியானிக் குழாத்தினர் நாங்களும் சபையில் பேசி வந்துவிட்டோமென்று தங்கள் வழக்கம்போல் பொய்யும் புரட்டும் பேச முற்பட்டு விடுவர் ஆகையால் சபையிலேயே ஒரு முடிவெடுத்து அதைப் பொது ஜனங்களுக்கு அறிவித்து விடவேண்டியதுதான் அவசியமாகும். இது சமயம் ஏகோபித்த மத்தியஸ்தரொருவரை நியமிக்க முடியாதிருப்பதால் விவாதம் நடைபெறுவதில் சபையில் வீற்றிருக்கும் பொது மக்கள் எதை உண்மை என உணர்கின்றார்களோ அதைக்கொண்டு முடிவெடுத்துவிடலாமென முஸ்லிம்கள் கூறினர். அதற்கும் காதியானிகள் இணங்கினரில்லை.

மத்தியஸ்தரை நியமிக்கும் விஷயத்தில் காதியானிகள் ஒருவித முடிவுக்கும் வராத்ததால் விவாதஞ் செய்தபின் முபாஹிலாச் செய்து விடுவோம் என முஸ்லிம்கள் கூறினர். முபாஹிலாவென்பது ஒவ்வொரு தரபாரும் தாங்கள் கூறுவதுதான் சத்தியமானது; பொய்யர்கள்மீது ஆண்டவனின் சாபம் உண்டாவதாக என்று கூறுவதாகும். இதில் யார் பொய்யர்களாயிருக்கின்றனரோ அப்பொழுதே ஆண்டவனது முனிவு அவர்கள்மீது ஏற்பட்டுவிடும். இந்த முபாஹிலாவின் விபரம் அஹ்மதிய அஞ்சுமன் பிரசிடெண்டான செய்யத் அஹ்மதுக்குத் தெரியாதாகையால் முபாஹிலாவுக்கு ஒற்றுக்கொள்ளும்படி மலபார் அப்துல்லாவுக்கு அறிவித்தார். அவர் முபாஹிலாவின் விஷயத்தை நன்கு தெரிந்தவராகையால் அதை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். அன்னிய மதஸ்தரிலுள்ள படித்த மேதாவிகளில் யாரையேனும் மத்தியஸ்தராக நியமித்துக் கொள்ளலாமா வென்னும் பிரச்சினை எழுந்தபொழுதும் காதியானிகள் சம்மதிக்கவில்லை. 10-4-32-ல் சாத்தான் குளத்தில் நடந்த ஜமாஅத்தார்களின் மகா சபையில் செய்யத் அஹ்மத் பலவாராய் உளறினதால் ஜமாஅத்தார்கள் அவருக்குத் தக்க வாயாப்புக் கொடுத்து அவர் வகேலுக்கள் சில காலமாய் குலாம் அஹ்மதை நபி என்று வாதாடி வருவதால் உலமாக்களினது சபையில் குலாம் அஹ்மதை நபி என்று அவர்கள் நிரூபிக்க வேண்டும்; உலமாக்கள் தக்க ஆதாரங்களைக் கொண்டு இந்த தஅவாவை மறுப்பார்கள்; இதுவிஷயமாய் சத்தியமான ஒரு முடிவெடுத்து அதனை யாவரும் பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மாற்றமாய் காதியானிகள் விஷயாலோசனைக் கமிட்டியில் முடிவெடுக்கக் கூடாதென்று மழுப்பி பலவாறுன சூக்ஷிகளைச் செய்து பின்னடைய ஆரம்பித்து முடிவெடுப்பதானல் விவா

தத்திற்கு வரத்தயாராகவில்லை என்று தீர்மானமாய்ச் சொல்லிவிட்டார்கள். சபையில் விவாதித்து முடிவெடுக்காவிடின், காதியானிகள் நாங்களும் சபையில் பேசி வந்துவிட்டோமென்று பொய்யும் புறட்டும் சொல்லி பொது மக்களை ஏமாற்றத் துணிவார்கள்; சபையிலேயே அவசியம் முடிவெடுத்து யாவருக்கும் தெரிவித்துவிட வேண்டுமென்று ஜமாஅத்தார்கள் முடிவாகக் கூறிவிட்டார்கள். இது விஷயமாய் காதியானிகளுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் யாதொரு பயனும் ஏற்படவில்லை. காதியானிகள் முடிவெடுக்கவோ அன்றி முபாஹிலாச் செய்யவோ ஒற்றுவராத்ததால் விஷயாலோசனைக் கமிட்டி முறிந்துவிட்டதென தலைவர் அறிவித்துவிடவே, காதியானிகள் தங்கள் இருப்பிடஞ் சென்று விட்டனர்

காதியானிகளின் விஷமம்

விஷயாலோசனைக் கமிட்டியிலிருந்து காதியானிகள் ஜாக்கிரதையாய்த் தங்கள் இருப்பிடஞ் சென்றுவிட்ட பின்னர் பிரவூர்களிலிருந்து வந்திருந்தோரில் சிலர், காதியானிகள் தங்கியிருக்கும் விடுதியைப் பார்ப்பதற்காகச் சென்றனர். அவ்விடுதியின் தலைவாயலில் ஒருவர் நின்றுகொண்டு உள்ளே வாருங்களென அழைத்தார். சுமார் 10, 15 நபர்கள் உட்சென்றனர். அவர்களில் ஹாபிஸ்களும் ஆலிம்களுமிருந்தனர். இவர்கள் உட்சென்றவுடன் எல்லோரையும் உட்காரும்படி செய்து மலபார் அப்துல்லா பேசுவதற்கு ஆரம்பித்து குர்ஆன்ஷரீபிலிருந்து ஒரு வசனத்தைத் தப்பாக ஓதினார். இதைக்கேட்டு அங்கிருந்த ஹாபிஸ் ஒருவர் நீர் ஓதுவது தப்பாகயிருக்கின்றது மறுமுறையும் ஓதும் எனக் கூறினார். மறுமுறையும் தப்பாகவே ஓதினார். இப்பொழுதும் தப்பாகவே ஓதுகின்றீர் என்பதை எடுத்துக் காட்டப்பட்டபொழுது நான் குர்ஆனை மனனஞ்செய்த ஹாபிஸல்ல; அருத்தம் சரியாகச் சொல்கின்றேன் எனக் கூறினார். (சரிவர வாசிக்கத் தெரியாதவர் எவ்வாறு அருத்தம் சொல்லப்போகிறாரென்பது வெள்ளிடை) ஹாபிஸல்லாதுபோயினும் அரபிப்பாஷையில் ஒரு சிறிது அனுபோகமுள்ளவரும் இவ்வாறு வாசிக்கமாட்டார் இந்த லக்ஷணத்திலுள்ள நீர்தானா உலமாக்களிடம் விவாதஞ் செய்யப் புறப்பட்டுவிட்டீர் என அங்கிருந்தோர் கூறினர். அக்கூட்டத்திலுள்ள காதியானீ ஒருவன் எழுந்து சொல்வதைக் கேட்டுப் போகலாமேயன்றி எதிர்த்துப் பேசக்கூடாதென்று கூறினான். அதனால் சச்சரவு ஏற்படும்போல் தோன்றியவுடன் வந்திருந்தோர் வெளியில் செல்லப்புறப்படும் தருவாயில் இவ்வாறு பேடித்தனமாக நடந்துகொள்வதற்குத்தானா எங்களை இங்கழைத்தீர்கள் எனக் கூறிப் புறப்பட்டனர். 5, 6 நபர்கள் தலைவாயலை விட்டு வெளியேறியும் மற்றும் 10 பெயர்வரை உள்ளேயிருக்கும் நிலைமையில்கேட்டைச்சாற்றிவிட்டனர். உள்ளாலிருந்தோர் உடனே வெளியில் வரவேண்டிய அவசியமேற்பட்டதால் கேட்டைத் தள்ளிக் கொண்டு வெளியேறுஞ் சமயம் வெளியிலிருந்தவர்கட்கு, உள்ளால் கலவரம் நடப்பதாகத் தோன்றிற்று அதனால் எல்லோரும் அங்கு வந்து குழும்பினர். காதியானிகள் உள்ளிருந்து கொண்டு கற்களை எறிந்தனர் கலவரம் முற்றும்போலிருக்கிறதென்று எல்லோரும் வாயலண்டை நெருங்கிச் சென்றனர். அது சமயம் சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த இருவாலிபர்கள் உள்ளே செல்ல வேண்டா மென்று ஜனங்களைத் தடுத்தபொழுது சிறு துச்சசரவுயேற்பட்டது அதனாலோ அன்றி காதியானிகள் உள்ளிருந்து கல்லெறிந்ததினாலோ இருவாலிபர்கட்குத் தலையில் சிறிதுகாயமேற்பட்டு விட்டது உடனே சில முக்கியஸ்தர்கள் அங்கு சென்று சமாதானப்படுத்தி அழைத்து வந்து விட்டனர். காதியானிகள் விவாதித்து முடிவெடிப்பதற்குக் தயாராகயிருப்பதாக ஒப்புக்கொண்டிருந்தும் விஷயாலோசனைக் கமிட்டியில் குதர்க்க வாதம் புரிந்து ஞாயத்திற்குக் கட்டுப்படாமல் மகாநாடு நடைபெறாது செய்துவிட்டதால், மகாநாடு நடைபெறுமென்று பற்பல ஊர்களிலுமிருந்து வந்த மகா ஜனங்கள் ஆத்திரமடைந்திருப்பதைப் பார்த்து பயந்து காதியானிகள் போலீசுக்குத் தெரிவித்து போலீஸ் அதிகாரிகளை அங்கு வரும்படி செய்து நடைபெற்ற விஷயங்களைத் திரித்து அவர்களிடம் கூறியிருந்தனர். அவ்வதிகாரிகள் பல இடங்களையும் சுற்றிப்பார்த்துக் கொண்டு உலமாக்களிருப்பிடம் வந்து விஷயங்களை விசாரித்தனர். தலைவர்கள் சகல விவரங்களையும் தெரிவித்ததோடு குலாம் அஹ்மத் காதி

யானியின் மாறுன கொள்கைகளையும் அவனைப் பின்பற்றியோரின் மனோரதங்களையும் அறிவித்தார்கள். இதனை போலீஸ் அதிகாரிகள் கேட்டு, காதியானிகள் இவ்வளவு மூட பக்தியுடையவர்களாவென ஆச்சரியத்துடன் சொல்லிச் சென்றனர்.

மகாநாடு ஆரம்பம்

பகல் $2\frac{1}{2}$-மணிக்கு ஜும்ஆ மஸ்ஜிதுக்குப் பின்புறத்தில் கைரிய்யா சங்கமுன் அமைக்கப் பெற்றிருந்த பந்தலில் ஜனுப் மௌலானு மௌலவீ சையத் முர்தஜா சாஹிப் பஹதூர் M. L. A. அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று உள்ளூர் வெளியூர் மகாஜனங்கள் ஏராளமாகக் குழும்பியிருந்தனர் ஆரம்பத்தில் கனம் அக்கிராசனர் அவர்கள், விஷயாலோசனைக் கமிட்டியில் நடைபெற்ற விஷயங்களையும் காதியானிகள் விவாதத்திற்கு இணங்காது மறுத்துச் சென்று விட்டதையும் எடுத்துக்கூறி, காதியானிகள் இவ்வாறுதான் பல சந்தர்ப்பங்களில் விவாதத்திற்கு வராமல் ஏமாற்றிக் கொண்டே சமயத்திற்குத் தக்கவாறு மழும்பிப் பின்னடைந்து விடுவது வழக்கமாகயிருந்து வருகிறது என்பதையும், மிர்ஸாவின் மகனுரான மிர்ஜா பஷீருத்தீன் மஹ்மூத் என்பவர் பாஞ்சாலத்தில் செய்து வரும் அட்டகாசங்களையும், மிர்ஜாவின் தவறுன கொள்கைகளையும் எடுத்துக் கூறினர்கள்.

பின்னர் மௌலவிகள், காதியானிகளின் பிரதானக்கொள்கைகளான (1) எம்பெருமானர் (ஸல்) அவர்களோடு நபிப்பட்டம் முடிவடைந்து விடவில்லை என்பதும் (2) ஈஸா (அலை.) அவர்கள் சிலுவையிலறைபட்டு மரணித்துப்போய்காஷ்மீரில் அடக்கப்பட்டிருக்கின்றுர்கள் என்பதும் (3) மிர்ஸா வென்பான் உண்மையான நபி என்று கூறுவதுமான கெட்ட கொள்கைகளை தக்க ஆதாரத்தோடு கேட்போர் மனதில் படியும்படி சாங்கோபாங்கமாய் எடுத்துக் கூறியதுடன் இத்தாவாவினுல் அவ்வழி கேடன் காபிராய் விட்டான் என்பதையும் விளக்கினர்கள் அதன் பயனுய் காதியானிகளின் கெட்ட கொள்கைகளையும் மிர்ஸா வென்பான் பாஞ்சாலத்தில் பித்னு பஸாதுகளை உண்டுபண்ணிச் சென்ற ஷைத்தான் என்பதையும் மகா ஜனங்கள் நன்கு தெரிந்து கொண்டனர். அஸர் தொழுகைக்காக மகாநாடு கலைந்து மீண்டும் மக்ரிபுக்குப் பின் ஆரம்பமாயிற்று அது பொழுதும் உலமாக்கள் மிர்ஸாவின் புரட்டுகளையும் வழிகேடுகளையும் எம்பெருமானுர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கடாசி நபியாகும், அவர்களைக் கொண்டே நபிப்பட்டத்தின் வாயல் முத்திரை வைக்கப்பட்டுப் போயிற்று, அவர்களை கடாசி நபி என்று ஒப்புக்கொள்ளாதவனும் அவர்கட்குப் பின் நபிப்பட்டத்தை தாவாச் செய்தவனும் நிக்ஷயமாய்க் காபிராய் விடிவான் என்றும் குர்ஆன் ஹதீதுகளின் தக்க ஆதாரங்களைக் கொண்டு பேசியபின் இரவு 10-30-க்கு மகாநாடு முடிவு பெற்றது. மறுநாள் காலை 9 மணிக்கு மீண்டும் மகாநாடு ஆரம்பமாயிற்று மௌலானு மௌலவீ அல்ஹாஜ் முப்தீ முஹம்மத்தமீம் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்து, காதியானிகள் ஈஸா (அலை) அவர்கள் விஷயமாய்ப் பிதற்றித் திரியும் கூற்றுக்களுக்கு குர்ஆன் ஹதீதுகளின் ஆதாரங்களைக்கொண்டு தக்க வாயாப்புக்கொடுத்து சவிஸ்தாரமாய்ப் பேசினுர்கள். பின்னர் உலமாக்கள் காதியானிக் கொள்கையை மறுத்துப்பேசியதோடு குலாம் அஹ்மத் காதியானியும் அவனைப் பின்பற்றியோரும் காபிராய்விட்டதால் அவர்களுடன் இஸ்லாமிய சம்மந்த மெதுவும் முஸ்லிம்கள் வைத்துக்கொள்ள கூடாதென்று கூறினுர்கள் அக்கிராசனர் அவர்களின் முடிவுரைக்குப் பின் ஜனுப் S. M. மொய்தீன் அவர்கள், உலமாக்கள் சிரமத்தோடு இவ்விடம் விஜயஞ்செய்து வழிகேடர்களான காதியானிகளின் கெட்ட கொள்கைகளை மகாஜனங்கள்பால் எடுத்துக் காட்டி, யாரும் அக்கொள்கையில் சிக்கிக்கொள்ளா திருக்கும் பொருட்டு தக்க உபதேசம் புரிந்ததற்காக நாம் எல்லோரும் அம்மகான் களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கின்றேம். தவிர துர்அதிர்ஷ்ட வசத்தால் நமதூரில் ஏற்பட்டிருக்கும் இக் கெட்ட கொள்கையை அகற்றுவதற்காக இம்மகா நாட்டைத் தக்க முறையில் கூட்ட அரும்பெரும் முயற்சி எடுத்துள்ள சென்னை வியாபாரிகளும் நமதூர் வாசிகளுமான ஜனுப்களான அ. பி. மு. செய்யித் இப்றுஹீம் மரைக்காயர் அண்டு பிரதர்ஸ் ஷாஹுல் ஹமீது மரைக்காயர் அவர்களுக்கும் மு. மீ. ஷேக் முஹம்மது மரைக்காயர் அவர்கட்கும் நாம் நன்றிபாராட்டக்கடமைப்

பட்டிருக்கின்றோம். இது விஷயத்தில் ஊர் ஜமாஅத்தார்கள் காட்டிய ஊக்கமானது மிக மிகப் பாராட்டத் தக்கதாகும் எனப் பேசி முடித்தார். அத்துடன் பகல் $1\frac{1}{2}$ மணிக்கு மகாநாட்டின் நடவடிக்கைகள் முடிவடைந்தது.

காயல்பட்டணம் மகாநாடு

25-4-32 மாலையில் தலைவர்கள் சாத்தான்குளத்திலிருந்து காயல்பட்டணம் வந்து சேர்ந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனுக்கு உலமாக்களும் முக்கியஸ்தர்களும் சென்று தலைவர்களை ஊர்வலமாக தக்பீர், பைத் முழக்கத்துடன் சிறுநைனார் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். அதற்கு முன்புறமுள்ள மைதானத்திலும் கட்டிடத்திலும் 3000 ஜனங்களுக்குமேல் குழும்பியிருந்தார்கள். பின்புறமாக ஏற்படுத்தப்பட்டிருந்த திரை மறைவில் சுமார் 1000 பெண்மணிகள் வீற்றிருந்தார்கள். அம்மகாநாட்டிற்கு ஜனாப் ஹாபிஸ் அ. ச. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் தலைமைவகித்து தலைவர்களை அறிமுகம் செய்துவைத்தார்கள். பின்னர் தலைவர்கட்கு புஷ்பஹாரஞ்சூட்டி "சுன்னத்வல் ஜமாஅத் பிரசாரசபை" சார்பாகவும் "மஃறூப் சுப்ஹானீ" சங்க சார்பாகவும்இருஉபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தலைவர்கள் உபசாரப்பத்திரங்களுக்கு தக்க மறுமொழி கூறியபின் உலமாக்கள் சாத்தான்குளத்தில் நடைபெற்றசகலவிபரங்களையும் எடுத்துக்கூறி காதியானிக்கொள்கை நம் சன்மார்க்கத்திற்கு முற்றும் விரோதமானதென்பதையும் அதில் முஸ்லிம்கள் சேர்வதுகொண்டு அவர்களது ஈமான் பரிபட்டுப் போகிறதென்பதையும் தக்கவிதமாக எடுத்துக் காண்பித்தார்கள். இரவு மணி 12-க்கு மகாநாடு முடிவுபெற்றது.

மீண்டும் மகாநாடு.

26-4-32 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு மகாநாடு நடைபெறுமென்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்ததால் ஏராளமானோர் அங்குவந்துகூடிவிட்டனர். அம்மகாசபைக்கு ஜனாப் ஹாபிஸ் அ. ச. முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் சாஹிப் அவர்கள் தலைமைவகித்தார்கள். மௌலானாக்கள் எம்பெருமானார் (ஸல்.) அவர்களின் குணதிசயங்களையும் அவர்கள் இறுதி நபி என்பதையும் மிர்ஸா குலாம் அஹ்மத் என்பான் தன் தஅவாவில் புழுகனாகயிருப்பதையும் சவிஸ்தாரமாகப் பேசினார்கள். பின்னர் அடியிற் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

(1) மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ தன்னை நபீ என்றும் வாக்குச்சொல்லப்பட்ட மஸீஹூம் மஹ்தியும் தாம்தான் என்றும் தாவாச்செய்திருப்பதால்அவன்காபிராய்விட்டான். அவனை நபி என்றுஉறுதிகொள்பவர்களும்காபிராய் விடுகின்றனர். அவ்வாறு மிர்ஸாவை நபி என்று ஒப்புக்கொள்பவன் காபிராய்விட்டதால் அவனது பெண்சாதி அவனை விட்டு நீங்கிவிடுகிறாளென இவ்வூர் உலமாக்கள் ஏற்கனவே செய்துள்ள தீர்மானத்தையும் இதுசம்பந்தமாக 23-3-32-ல் வெளியான ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையில் காயல்வாசி வினவிய வினாவுக்கு அளிக்கப்பட்ட விடை சரியானதெனவும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(2) இக்கெட்ட கொள்கை நமது தேசத்தில் பரவுவதற்கு தாருல் இஸ்லாம் பத்திரிகையும், பா. தா. வால் இயற்றப்பெற்ற நூற்களும் முக்கிய காரணமாகயிருப்பதால் அப்பத்திரிகையையும் பா. தா. வால் இயற்றப்பெற்ற நூற்களையும் பஹிஷ்கரிக்க வேண்டுமாய் முஸ்லிம்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(3) தாருல் இஸ்லாம் பத்திரிகையின் இரண்டாவது ஆசிரியரான ஹாபிஸ்.......... என்பார் பா. தா வுடன் சேர்ந்துகொண்டு சன்மார்க்கத்திற்கு விரோதமாக மார்க்க முரண்பட்ட பற்பல வியாசங்கள் வரைந்து

தர். இ. பத்திரிகை வாயிலாய் வெளியிட்டு வருவதால் பொதுஜனங்கள் அவர் ஒரு மௌலவீ பாக்கவீ என்றிருப்பதை (இப்பொழுதில்லை) முன்னிட்டு அவர் கூறுவது உண்மையாக யிருக்குமென்று நம்பி வழி கெட்டுப்போகக் காரணமாக யிருப்பதால் அவருக்களிக்கப்பட்டுள்ள "சன்னதை" வாபஸ் வாங்கிவிடும்படி வேலூர் மத்ரஸெ பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தின் உலமாக்களை இம்மகா நாடு வேண்டிக்கொள்கின்றது.

வந்தனோபசாரத்திற்குப் பின் இரவு 11-மணிக்கு சபை முடிவடைந்தது. மறுநாள் இரவும் மகாநாடு நடைபெற்றது. உலமாக்கள் தக்க உபதேசம் புரிந்தார்கள்.

சாத்தான்குளம் முஸ்லிம் ஜமா அத்தார்களின் தீர்மானம்.

காதியானிக் கொள்கையைப் பரத்திவந்தோர் அது விஷயமாய் விவாதித்து முடிவெடுத்து அதற்குக்கட்டுப்பட மறுத்து விட்டதால், இனி அவர்களுடன் முஸ்லிம்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென்பதை யோசிப்பதற்காக 29-4-32-ல் ஜும்ஆத் தொழுகைப் பின் ஜும்ஆ மஸ்ஜிதில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு ஜனாப் நா. மு. ஷேக் முஹம்மது மரைக்காயர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

காயல்பட்டணம் காதியானியான செய்யித் ஷாஹுல்ஹமீது தமக்கு "வஹீ" வருவதாக எழுதி வைத்திருந்த நோட்புக்கின் சிலபாகம் சபையோருக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. இதுபார்த்து மிர்ஸாவைப் பின்பற்றும் ஒவ்வொருவர்களும் தமக்கு வஹீ வருகிறதென்று கூற முற்படுகின்றனரென்று யாவரும் ஆச்சரியமுற்று மிர்ஸாயிக் கொள்கையின் கெடுதியை நன்குணர்ந்து கொண்டனர்.

காதியானிக் கொள்கை குப்ரை உண்டாக்கக்கூடியதாக யிருப்பதால் முஸ்லிம்கள் அக் கொள்கை யுடையோர்களுடன் இஸ்லாமிய எவ்வித சம்மந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்னும் விஷயத்தை முடிவு செய்ய ஆலோசிக்கப்பட்டது. இது ஓர் முக்கியமானவும் மகத்தானவுமான பிரச்சினையாகுமாதலால், அவ்வூர் வாசிகளிலநேகர் வெளியூர்களிலிருப்பதால் அவர்களுக்கும் தெரிவித்து அவர்களுடைய மறுமொழி கிடைப்பதற்காக ஒரு காலத்தைக் குறிப்பிட்டு அந்நேரத்தில் ஏகோபித்த தீர்மானஞ் செய்யவேண்டுமென சிலர் அபிப்பிராயப்பட்டதால், அதற்கேற்ப 1-7-32-க்கு டைம் குறிப்பிடப்பட்டு அன்று தீர்மானஞ் செய்துவிடுகிறதென்றும் அதுசம்மந்தமாகத் துண்டு நோட்டீஸ்ஒன்றைப்பிரசுரித்து வெளியூர்களிலுள்ளவர்களுக்கு அனுப்பி வைப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. அத்தீர்மானத்திற்கேற்ப கீழ்குறிப்பிடும் நோட்டீஸொன்றை அச்சிட்டு வெளியூர்களிலுள்ள சாத்தான்குளம் வாசிகளுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அது வருமாறு:—

சாத்தான்குளம் முஸ்லிம் வாசிகளுக்கு அறிவிப்பு.

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக்கொண்டு இதனை ஆரம்பிக்கின்றோம்.

நமதூரில் சில நாட்களாக காதியானீ, அஹ்மதியக் கொள்கை பரவிவருகிற தென்பது யாவருமறிந்ததே. அக்கொள்கைகளைப் பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று அஹ்மதியசங்கத்தாரும் 10-4-32-ல் ஒற்றுக்கொண்டதற்கிணங்க நமது தேயத்தின் பல பாகங்களிலிருந்து பிரபல்ய உலமாக்களும் கனவான்களும் 24-4-32-ல் நமதூரில் விஜயஞ்செய்து காதியானீஉலமாக்களை விவாதத்திற்கு அழைத்ததற்கு, அன்னோர் சப்ஜக்ட் கமிட்டியில் குதர்க்க வாதஞ்செய்து ஞாயத்திற்குக் கட்டுப்பட மறுத்து விட்டார்கள். மேலும் அஹ்மதியர்கள் தொழுகை முதலியமார்க்கக்கிருகைகளை தனியேபிரிந்துநடத்திக்கொள்வதாகவும் நம் ஜமா அத்தார்கட்கு

தெரிவித்துவிட்டதோடு அவ்வாறே நடத்தியும் வருகின்றார்கள். ஆதலால் பிரபல்ய உலமாக்களைக்கொண்டு பல அறிய உபன்னியாசம் நடத்தி வைத்ததின் பயனாக, காதியானீ அஹ்மதிய மதத்தின் பல கெடுதிகளும் யாவர்களுக்கும் நன்கு வெளியாய் விட்டதுடன் முஸ்லிம்கள் காதியானிகளுடன் எவ்வித இஸ்லாமிய சம்மந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதெனவும் நன்கு தெரிந்துகொண்டுள்ளார்கள். ஆதலால் 29-4-32 வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்குப்பின் குத்பாப் பள்ளியில் கூடிய பொதுஜனக் கூட்டத்தில், காதியானிகள் விஷயத்தில் சுன்னத் வல்ஜமாஅத்தார்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்னும் பிரச்சினை ஏற்பட்டு, அதில் நமதூர் வாசிகள் பற்பல ஊர்களிலுமிருப்பதால், அவரவர்களின் அபிப்பிராயத்தையும் தெரிந்துகொண்டு 1-7-32 வெள்ளிக்கிழமை ஜும்ஆவில் முடிவுசெய்துகொள்வதென தீர்மானிக்கப்பட்டது. ஆதலின் வெளியூர்களிலிருக்கும் நமதூர் வாசிகளான கனவான்கள் மகாசபை நடக்கும் ஷை 1-7-32வுக்கு ஒரு வாரத்திற்குமுன்பே நேரிலோ, தபால் மூலமோ தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஊர் ஜமாஅத்தார்கட்கு தெரிவிக்கும்படிக்கும் இன்றேல் ஷை தேதியில் ஜமாஅத்தார்களால் தீர்மானிக்கப்படும் முடிவை தாங்களும் ஒப்புக்கொண்டதாகவே முடிவு செய்யப்படுமென்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

இப்படிக்கி,

அஹ்ல சுன்னத் வல்ஜமா அத்தார்கள்,

சாத்தான்குளம்.

சாத்தான்குளம் வாசிகாள்! மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானீ, எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களுக்கு எதிரிடையாகத் தன்னை நபி என்று தாவாச்செய்து போந்துள்ளான் அவனுடைய கெட்ட கொள்கைகள் யாவும் நடுப்பகல் சூரியனேபோன்று யாவரும் நன்கறிந்துகொள்ளத் தக்கனவாய்த் துலாம்பரமாய்விட்டது. இக்கெட்ட கொள்கையை உங்களூரில் ஒருசிலர் நிலைநாட்டி யாவரிடையும் பரத்தநாடுகின்றனர். உலமாக்களையும் அறிஞர்களையும் அங்குகொணர்ந்து அவர்கட்கு தக்க அறிவுபுகட்டி அவர்களை நேரான வழிக்குக்கொண்டுவருவதற்காக வேண்டி மெஸர்ஸ் அ. பி. மு. செய்யித் இப்ராஹீம் மரைக்காயர் & பிரதர்ஸ், ஜனாப் மு. மீ. ஷேக்முஹம்மது மரைக்காயர் முதலிய கனவான்களும் மற்றும் ஊர் ஜமாஅத்தார்களும் எடுத்துக்கொண்ட பிரயாசை அளவிடப்பாலதன்று. அவ்வரும் பிரயாசை காதியானிகளுக்குஎவ்விதப் பிரயோசனத்தையும்கொடுக்வில்லை. ஆனால் ஜமாஅத்தார்களும் உலமாக்களும் செய்யவேண்டிய கடமை முடிந்துவிட்டது. சத்தியம் யாவருக்கும் நன்கு புலனாய் விட்டது. அசத்தியம் மறைந்துவிட்டது. காதியானிகள் எஹூதீ நஸாராக்களை விட கொடிய காபிர்களாததால் அவர்களுடன் முஸ்லிம்கள் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்பது திண்ணம். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதரென்று அறிவிக்கப்பட்ட திருவசனத்திலேயே அவர்கள் கடாசி நபி என்பதையும் அல்லாஹுதஆலா அறிவித்துவிட்டான். எம்பெருமானார் (ஸல்) அவர்களும் எனக்குப்பின் எவ்வித நபியுமில்லை என்று அருள் செய்துவிட்டார்கள். அல்லாஹ்வினுடையவும், அவனது ரசூல்(ஸல்)அவர்களுடையவும் சொல்லுக்கு மாற்றமாய் காதியானிகள் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கடாசிநபியல்ல; குலாம் அஹ்மத் என்ற பொய்யனும் ஒரு நபியாகுமென்று கூறித்திரிகின்றனர். ஆதலால் காதியானிக்கொள்கை குர்ஆனுக்கும் ஹதீதிற்கும் முற்றமுற்ற விரோதமானதாகுமென நன்கு புலனாய்விட்டதால், அக்கொள்கையுடைய வழிகேடர்களுடன் முஸ்லிம்கள் எவ்வித இஸ்லாமிய சம்பந்தமும் வைத்துக்கொள்வது கூடாதகாரியமாகும். அவர்களுடைய சூக்ஷிகளையும் கெடுதிகளையும் விட்டு முஸ்லிம்களை இது சமயம் காப்பாற்ற ஒவ்வொருவரும் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். சாத்தான்குளம் முஸ்லிம்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து சன்மார்க்கத்தையும் ஊரின் நற்பெயரையும்காப்பாற்றுவதற்கு முன்வரல் வேண்டும். காதியானிக்கொள்கையை அதோகதியாக்குவதற்கு உங்களூர் ஜமா அத்தார்கள் எடுத்துக்கொண்ட அரும்பெரும் முயற்சியை உலகம் பாராட்டுகின்றது, உங்களிற் சிலர் காதியானிகளுக்கு உபகாரம் செய்வதாயின் அதைவிட யிழிவொன்றுமில்லை. எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் முத்

திர்ரங்கமான நபிப் பட்டமானது உலகப் பிரசித்தமானது; அதனை மறுத்து ஒரு பொய்யனை நபி என்று ஏற்றுக்கொண்டு நம்முடன்சேர்ந்து தொழுவதுங் கூடாதென்று தனிஜமாஅத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் வழிகெட்ட கூட்டத்தார்மீது பரிந்து இறங்குவதும் அவர்களின் தாக்ஷிணியத்திற்காக அன்னோரை வெறுக்காமலிருப்பதும் ஈமானின்பலக்குறைவை எண்பிப்பதாகுமென்பதை நேயர்கள் உணரவேண்டும். வழிகேடர்கள் விஷயமாய் 1-7-32 ஜும்ஆவில் முடிவெடுக்கவேண்டியிருப்பதால் அது சமயம் உங்கள் ஈமானின் ஒளிவீசி ஜொலிக்கும்படி செய்வீர்களாக. இதுவோர் சோதனை காலமாயிருப்பதால் இதில் நீங்கள் வெற்றி பெருவீர்களென்று எதிர்பார்க்கின்றோம்.

காதியானி — அஹ்மதியப் பத்திரிகைகள் காதியானிகளுக்கு உபகாரம் புரிவதற்காக சாத்தான்குளத்தில் நடந்த விஷயங்களைத் திரித்தும் உண்மைக்கு விரோதமாகவும் பற்பல சூக்ஷிகளையும் செய்துவருகின்றன. இது அவைகளின் ஜென்மகுணமென்பதை யாவரும் உணர்ந்து தக்கபடி நடந்துகொள்வீர்களாக. தவிர சாத்தான்குளத்தில் காதியானீ ஜமாஅத்தார் ஒடுக்கப்பட்டுப் போய்விடுவார்களாயின் தம்கோஷ்டிக்கும் ஆபத்துவருவதுடன் அக்கொள்கைபரவுவதற்கே மூலகாரணமாகயிருக்கும் தமக்கும் ஏதாகிலும் ஆபத்து ஏற்பட்டு உலகமுழுதும் தம்மை ஒடுக்க முற்பட்டுவிடுமென்றுதா. இ. பயந்து காதியானிக் கொள்கையைச் சிலாகித்து எழுதிவருவது கொண்டு சாத்தான்குளம் வாசிகள் மருண்டு போகாதிருக்க வேண்டுவது அத்தியாஅவசியமாகும். ஏற்கனவே காதியானிக்கொள்கை கெட்டது அதனைத் தாம் நீண்ட நாளாகக் கண்டித்து வருவதாக எழுதிய தா. இ. இது பொழுதுஅக் கொள்கையை ஆதரித்து அதுவும் சரியானதுதான் என்பதாக சிலாகித்துக்கூறும் இரகசியம் இதுதான் என்பதை நேயர்கள் உணர்ந்து சத்தியத்தைக் கடைபிடித்துத் திகழ்வார்களாக.

கம்பம் இஷாஅத்துல் இஸ்லாம் மாகாண மகாநாடு

கம்பத்தில் 21, 22-5-32ல் நடைபெற்ற சென்னை மாகாண இஷா அத்துல் இஸ்லாம் முதலாவது மகாநாட்டின் தலைவரானசௌக்கார் ஜனுப் வி. அப்துல் ஹகீம் சாஹிப் அவர்களும், சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி மௌலானா மௌலவி அல்ஹாஜ் எஸ். ஏ. முஹம்மது அலீ சாஹிப், ஹிபாஜத்துல் இஸ்லாம் பத்திராதிபர் மௌலானா மௌலவி ஏ. ஆர். அப்துர் ரஹீம் சாஹிப் அவர்களும் மௌலவி எஸ். எஸ். முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் முதலியவர்களும் சென்னை நகரிலிருந்து 20-ந்தேதி மாலை 6-45 மணிக்கு திருவனந்தபுரம்எக்ஸ்பிரஸில் கம்பத்திற்குப் புறப்பட்டனர். இவர்களை வழியனுப்புவதற்காக சென்னை பிரபல வர்த்தகர்களான மெஸ்ஸர்ஸ் அ. பி. மு. & பிரதர்ஸ், ஷாஹுல் ஹமீதுமரைக்காயர்,மு.மீ.ஷெய்குமுஹம்மது மரைக்காயர், அப்துல்காதர் மரைக்காயர், ஸைபுல் இஸ்லாம் உதவி ஆசிரியர் எல். எம். குலாம் அஹ்மதுசாஹிப், நைலு முஹம்மது சாஹிப் முதலிய பல பிரபலஸ்தர்கள் எழும்பூர் ஸ்டேஷன் வந்து தலைவர்களுக்கு புஷ்பஹாரஞ் சூட்டி வழியனுப்பி வைத்தார்கள்.

மேற்படி டிரைன் விழுப்புரம் வரவும் வேலூரிலிருந்து மௌலானா மௌலவி எஸ். கே. முஹம்மத்ஷர்புத்தீன்சாஹிப் அவர்கள் வந்து சேர்ந்தனர். திருச்சியில் தொண்டர் மகாநாட்டின் தலைவரான ஜனுப் மௌலானா மௌலவி செய்யிது முர்தஜா சாஹிப் பஹதூர் எம். எல். ஏ. அவர்களும் மௌலானா மௌலவிநூ.அப்துல்வஹ்ஹாப்சாஹிப்அவர்களும், திண்டுக்கல்லில் மௌலானா மௌல்வி முஹம்மது புகாரீ சாஹிப்பாக்கவீ, அகில உலக முஸ்லிம் மகாநாட்டுக் காரியதரிசி மௌலானா ரவூப்பாஷா பி. ஏ., கீரனூர் பிரபல வர்த்தகர் ஜனுப் காதர்கனி ராவுத்தர் வேடசந்தூர் எஸ். பி. சையித் முஹம்மது ராவுத்தர் மௌலானா மௌலவி ந. சே. அப்துர் ரஹ்மான் சாஹிப், கோயம்புத்தூர்

மௌலானா யாகூப் சாஹிப் முதலிய பிரபலஸ்தர்களும், தலைவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டனர்.

மதுரையில் வரவேற்பு

தலைவர்களையும் பிரதிநிதிகளையும் அழைப்பதற்காக கம்பம் இ. ஷாஹுல் ஹமீது இருவுத்தர் அவர்களும் மற்றவர்களும் மதுரை ஜங்ஷனுக்கு வந்திருந்தனர். ஷையார்களால் தலைவர்களும் மற்றும் பிரதிநிதிகளும் ஜங்ஷனில்வரவேற்கப்பட்டு 'தேனீ' செல்லும் ரயில் வண்டித்தொடரில் பிரயாணமானார்கள். ஷை ஜங்ஷனிலேயே தலைவர்களுக்கு காலைநாஷ்தா முதலியவைகள் அளிக்கப்பட்டன. தலைவர்களுக்கு ரயிலில் வழிநெடுக பல ஊர்களிலும் புஷ்பஹாரஞ் சூட்டி உபசரித்தனர்.

தேனீ ஸ்டேஷனில் இஷாஅத்துல் இஸ்லாம் சங்கப் பொக்கிஷதாரும் பிரபலவர்த்தகருமான ஹாஜி இ. அல்லாப்பிச்சை இருவுத்தர், சென்னை ஹைக்கோர்ட்டு வக்கீல், ஜனப் எஸ்.கே. அஹ்மதுமீரான் சாஹிப், எம்.ஏ., பி.எல்., வக்கீல், வி.ஏ. இப்ராஹீம் சாஹிப், எம்.ஏ., பி.எல்., முதலிய பல பிரபலஸ்தர்கள் தலைவர்களுக்கும் பிரபலஸ்தர்களுக்கும் புஷ்பஹாரங்கள் சூட்டி, தலைவர்களை வரவேற்பதற்காக தேனி மஸ்ஜிதில் அமைக்கப்பட்டிருந்த சிங்காரக் கொட்டகைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

அவ்விடத்தில் தேனி, அல்லி நகரம் முஸ்லிம் ஜமாஅத்தார்களால் ஆலாஹஜ்ரத் கான் பகதூர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மது சாஹிப், சௌக்கார் ஜனப் கி. அப்துல் ஹக்கீம் சாஹிப் பகதூர், மௌலானா ஸெய்யிது முர்த்தஜா சாஹிப், எம். எல். ஏ. ஆகிய தலைவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டது. வேலூர் ஆலா ஹஜ்ரத் கான் பகதூர், அல்ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மது சாஹிப் கிப்லா அவர்கள் தங்கள் திரேக அசௌக்கியத்தால் வரமுடியாது போனமையால்மேற்படி பத்திரத்திற்கு வேலூர் சின்ன ஹஜ்ரத் அவர்கள் குமாரரான மௌலானா மௌலவி எஸ். கே. முஹம்மத் ஷர்புத்தீன் சாஹிப் அவர்களும், மற்ற தலைவர்களும் பதிலளித்தனர். பின்னர் மகாநாட்டுத் தலைவர்களுக்கும் பிரதிநிதி முதலியவர்களுக்கும் அங்கு சிற்றுண்டி அளிக்கப்பட்டபின் அங்கிருந்து பிரயாணமானார்கள்.

நவ் முஸ்லிம் கிராமங்களுக்கு தலைவர்கள் விஜயம்

தலைவர்கள் கம்பம் வருகிற வழியில் நவ் முஸ்லிம் கிராமமாகிய சீலயம்பட்டி மஸ்ஜிதில் அமைக்கப்பட்டிருந்த சிங்காரப் பந்தலில் நவ் முஸ்லிம் சகோதரர்கள், தலைவர்களை வரவேற்று உபசாரப் பத்திரம் வாசித்தளித்தனர். ஷை பத்திரத்திற்கு ஜனப் ஸவுக்கார் அவர்கள் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நீங்கள் எங்களுக்களித்த உபசாரத்திற்காகநான்நன்றி செலுத்துகிறேன். நீங்கள்சில நவ் முஸ்லிம்களைப்போல் வெளியில் சென்று பலரிடமும் யாசகம் கேட்காமல் உங்கள் ஊரிலேயே இருந்துகொண்டு சுயமாகப் பிரயாசை எடுத்து உங்கள் வாழ்க்கையை நடத்தி வருவதற்காக உங்களைப் பாராட்டுகின்றேன். உங்கள் பத்திரத்தில் நவ் முஸ்லிமென்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இந்தப் பெயர்எப்பொழுதுமிருக்கமுடியாது.கொஞ்ச காலத்திற்குப்பின் பழைய முஸ்லிம்களென்றே அழைக்கப்படுவீர்கள். நீங்கள் அந்தரங்க சுத்தியுடன் இஸ்லாத்தில் சேர்ந்து மார்க்கச் சட்ட திட்டங்களைப் பக்தியுடன் பின்பற்றி நடந்து வருவதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். உங்கள் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்யுமாறு நான் இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தார் மூலமாக ஏற்பாடு செய்கிறேன்" எனக்குறிப்பிட்டார்கள்.

பின்னர் தலைவர்கள் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வரும் வழியில் சின்னமனூர் & கருந்தட்டாங்குளம் முஸ்லிம் ஜமாஅத்தார்கள் தலைவர்களை சந்தைக்கு முன்னுலிருந்தே கூட்டமாக வந்து வரவேற்று "தக்பீர் பைத்து" முதலியவைகளுடன் ஊர்வலமாக அழைத்துத் தலைவர்களை வரவேற்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த ஜும்ஆ மஸ்ஜிதுக்கு அழைத்துச் சென்றனர். அவ்விடத்தில் தலைவர்களுக்கு உபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மேற்படி பத்திரத்திற்கு சௌக்கார் சாஹிப் அவர்கள் பதிலளிக்கையில் தன்னுடைய சுயநன்மைகளை மாத்திரம் கவனித்து வாழ்பவர்களுக்கும் மிருகங்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை

யென்றும், பிறருக்காகவும் பிறருடைய நன்மைக்காகவும் வாழ்ந்து பொது நன்மைக்காக உழைப்பவர்களேமனிதராவார்கள் என்னும் விஷயத்தை வற்புறுத்திக் கூறி உபசாரத்திற்காக நன்றி செலுத்தினார்கள்.

உத்தமபாளையத்தில் உபசாரம்

பின்னர் தலைவர்கள் சரியாக 1 மணிக்கு உத்தமபாளையத்தில் உபசரணைக் கமிட்டித் தலைவர் அவர்களின் விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தலைவர்கட்கும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் விஸிட்டர்கள் முதலியவர்களில் முக்கியஸ்தர்கட்கும் இடைவேளை போஜனம் அளிக்கப்பட்டபின் அங்கிருந்து கம்பத்திற்கு சுமார் 3 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

கம்பத்தில் ஜனாப் மீ.நா. முஹம்மது நைனார் இராவுத்தர் அவர்களுககுச் சொந்தமான 'டீ, ஸ்டோரில் கம்பம் ஜனாப் எம். சையதுக் காளை ராவுத்தர் அவர்களால் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தொண்டர் படையினருக்கும் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டு அங்கிருந்து இரண்டு அலங்கரிக்கப்பட்ட யானைகள் கொடி முதலியவைகளுடன் தொண்டர்கள் அணிவகுத்து நின்று தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். தலைவர்களின் ஊர்வலத்திற்கு சுமார் 4 ஆயிரம் பேர்கள் வரை வந்திருந்தனர். தலைவர்கள் நேராக கம்பம் ஜாமிஃமஸ்ஜிதுக்கு அழைத்து வரப்பட்டு ஊர் ஜமா அத்தார் சார்பாகத் தனித்தனியே உபசாரப் பத்திரங்கள் வாசித்து கொடுக்கப்பட்டனர். தலைவர்களால் உபசாரப் பத்திரத்திற்கு பதில் அளிக்கப் பட்டபின் "அஸர்" தொழுகை நிறைவேற்றப்பட்டு அங்கிருந்து மகாநாட்டுக் கொட்டகைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர் அத்துடன் ஊர்வலம் பூர்த்தி யடைந்தது.

மற்றோர் உபசாரம்

பின்னர் கம்பம் வாசியும் சென்னை ஹைகோர்ட்டு வக்கீலுமான ஜனாப் எஸ். கே. அஹ்மதுமீரான் சாஹிப், எம். ஏ., பி. எல். அவர்களால் மகா நாட்டுத் தலைவர்கள் பிரதிநிதிகள், விஸிட்டர்கள், வரவேற்புக் கமிட்டியினர், தொண்டர்கள், ஹிந்துக்கள் முதலியவர்களுக்கு கம்பம் போர்டு ஸ்கூலில் டீ பார்ட்டி நடத்தப்பட்டது.

அதுபொழுது ஜனாப் எஸ். கே. அஹ்மது மீரான் சாஹிப் எம். ஏ. பி. எல்., அவர்கள் தலைவர் செளக்கார் அவர்களைச் சபையினருக்கு அறிமுகம் செய்து வைக்கையில்:— "செளக்கார் அவர்களுடன் பலபொதுக்காரியங்களில் தாம்சம்மந்தப்பட்டிருப்பதால் தலைவர்செளக்காருடன்நெருங்கிப் பழகச்சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது என்றும், செளக்கார் அவர்கள் முஸ்லிம்களுக்கு மாத்திரமின்றி ஹிந்துக்களுக்கும் அத்யந்த நண்பராக இருப்பவர் என்றும், "இஷா அத்துல் இஸ்லாம்" மகாநாடு முஸ்லிம் மகாநாடாக இருப்பதால் அதில் ஹிந்துக்கள் ஏராளமாகக் கலந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பதை உத்தேசித்து இவ்விருந்தை ஏற்படுத்தி ஹிந்து நண்பர்கள், தலைவர் அவர்களைச் சந்திக்கவும், சம்பாஷிக்கவும் சந்தர்ப்பம் அளித்திருப்பதாகவும் கூறினார்.

பின்னர் தலைவர் அவர்கள் பதில் கூறுகையில்:—" தாம் எப்பொழுதும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையை அதிகம் விரும்பிவருவதாகவும், தாம் முஸ்லிம்களுக்கு மாத்திரம் தர்மஞ்செய்யாமல் ஹிந்துக்களுடைய கல்விஸ்தாபனங்களுக்கும் பல தர்மங்கள் செய்திருப்பதாகவும் பல ஹிந்துக்கள் தமக்கு நண்பர்களாக இருப்பதாகவும், வட இந்தியாவில் ஹிந்து-முஸ்லிம் பிணக்கு இருப்பது போல் நந்தென்னிந்தியாவில் பிணக்கு இல்லாமல் இரு சமூகத்தினரும் சகோதரர்களைப் போல் சேர்ந்து வாழ்வதற்குத் தாம் சந்தோஷப்படுவதாகவும், இவ்விடத்தில் ஹிந்து நண்பர்களைக் காணவும் அவர்களுடன் கூடி இருக்கவும் தமக்கு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு சந்தோஷப்படுவதாகவும்" கூறி விருந்தளித்தவருக்கு நன்றி செலுத்திப் பேசினார்கள்.

ஹாஜீ. இ. அல்லாபிச்சை ரவுத்தர் அவர்கள் ஸ்டோருக்குமுன்பாக உள்ள மைதானத்தில் மகாநாட்டுக் கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி கொட்டகை கண்களைக் கவரத்தக்க விதமாய் மிக்க அழகாயும் அலங்காரமாயும், சுமார் 5000 பேர்கள் தாராளமாக இருப்பதற்குத் தகுந்த அவ்வளவு விசாலமாகவும் காற்றோட்டம் வெளிச்சம் முதலியவைகள் போதியளவாகவும் இருந்தது.

மகாநாடு ஆரம்பம்

அதன்பின் மாலை 6-மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. மகாநாட்டிற்கு சென்னை, வடஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி, தென்னாற்காடு, சேலம் முதலிய தமிழ் ஜில்லாக்களிலிருந்து அநேகப் பிரதிநிதிகளும், மௌலவிகளும் லாயர்களும், ஆங்கில பட்டதாரிகளும் விஜயம்செய்திருந்தனர். இம்மகாநாடு கூட்டுவதற்குப் போதிய பிரசாரம்செய்ய சாவகாசம் குறைவாக இருந்தும் முக்கியமான நகரங்களிலிருந்தும்,முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பிரதேசங்களிலிருந்தும் பொறுப்பு வாய்ந்த அநேக கனவான்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆதலால் இம்மகாநாடு தக்க பிரதிநிதித்துவம் வாய்ந்த மாகாண மகாநாடாக வெற்றியுடன் நிறைவேறிற்று.

ஆரம்பத்தில் சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக்காரியதரிசி மௌலானா மௌலவி அல்ஹாஜ் எஸ் ஏ. முஹம்மது அலீசாஹிப் பாக்கவீ அவர்கள் கடவுள் வணக்கமாக திருக் குர்ஆனிலிருந்து சில ஆயத்துகள் இனிய குரலில் ஓதினார்கள். பின்னர் மகாநாட்டுத் திறப்பு விழாத் தலைவர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் ஆலா ஹஜ்ரத் கான்பஹதூர் ஜியாவுத்தீன் முஹம்மதுசாஹிப் கிப்லா அவர்கள் தங்களது திரேக அசௌக்கியத்தால் மகாநாட்டிற்கு விஜயம்செய்யமுடியாது போனதால் மகாநாடு திறந்து வைக்கப்பட்டதாகப் பாவித்துக் கொள்ளவேண்டும் என்பதாக கம்பம் ஜனாப் எம். பீர் முஹம்மது பாவலர் அவர்கள் கூறினார்கள்.

பின்னர் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜனாப் செ. முஹம்மது மீரு ருவுத்தர் அவர்கள் தங்களது வரவேற்புப் பிரசங்கத்தைப் படித்தார்கள். பின்னர், அப்துல் ஹக்கு, ஷாஹுல் ஹமீது, முதலியவர்கள், மகாநாட்டுத் தலைவர், தொண்டர் மகாநாட்டுத் தலைவர் ஆகியவர்களின் மீது கம்பம் பீர் முஹம்மதுபாவலர் அவர்கள் இயற்றியபாடல்களை அபிநயத்துடன் வெகு அழகாகப்படித்தனர். பின்னர் இஷா அத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி ஜனாப் பொ. நாகூர் மீரா ருவுத்தர், அவர்கள் சங்க அறிக்கையைப் படித்தார். பின்னர் அக்கிராசனர் தமது முகவுரைப் பிரசங்கத்தைக் கூறும்போது சொன்னதாவது:—

ஹம்து ஸலவாத்து ஓதிய பின் தம்மைத் தலைவராகத் தெரிந்தெடுத்ததற்கு வழக்கம் போல் நன்றி செலுத்திவிட்டு தலைவரான சௌக்கார் அவர்கள் கூறியதாவது:—

அக்கிராசனர் முகவுரைப் பிரசங்கம்

சகோதரர்களே! கனவான்களே!! நான் ஆரம்பத்தில் இது 'இஷா அத்துல் இஸ்லாம் சங்கத்தின்' வருடாந்தரக் கூட்டம் எனச் சாமான்யமாக மதித்திருந்தேன். இங்கு வந்து பார்த்தபின் இது ஒரு பெரிய கான்பரன்ஸாக இருப்பது தெரியவந்தது. இவ்வளவு பெரிய கான்பரன்ஸாக இருக்கும் என முன்னதாகவே தெரிந்திருந்தால் நான் என் பிரசங்கத்தை அச்சிட்டுக் கொண்டு வந்திருப்பேன். அது உங்களுக்கு மிகப் பிரயோஜனமாக இருந்திருக்கும். இத்தகைய மகாநாட்டிற்கு என் போன்றவர் அக்கிராசனம் வகிப்பதைப் பார்க்கினும் லோர் ஆலா ஹஜ்ரத், மௌலவி சையத்முர்த்ஜா ஹஜ்ரத் போன்றவர்கள் அக்கிராசனராக இருந்திருந்தால் மிகவும் நலமாக இருக்கும். நம் நாட்டிலே சங்கங்கள் தோன்றிச் சிறிது காலத்திற்குப் பின் உத்தியோகப் பதவியிலும் அதிகாரத்திலும் ஆசைப்பட்டு அபிப்பிராய பேதங்கொண்டு அதை மென்மேலும் விருத்தியாக நடைபெறச் செய்யாமல் விட்டு விடுவது வழக்கமாக இருந்து வருகிறது. அவ்வாறில்லாமல் இச்சங்கம் கடந்த இரண்டரை வருஷமாக ஒற்றுமையுடன் நடந்து வந்ததும், அவை ஆற்றி வந்ததொண்டும் போற்றத் தக்கதாகும். சாதாரணமாக நம் நாட்டில் பலரை இஸ்லாத்தில் சேர்த்து அவர்களுக்கு உடை உண்டி முதலியவைகள் அளித்து ஊர் ஊராக அலையும்படி செய்வது வழக்கமாக இருந்து வருகிறது. சற்று நாட்களுக்கு முன் நான் பொன்னானி மகாநாட்டில் அக்கிராசனம் வகித்தேன். அங்குள்ள சங்கத்தில் 10 ஆயிரம் பேர் வரை இஸ்லாத்தில் சேர்ந்ததாக கணக்கிருக்கிறது. புதிதாக இஸ்லாத்தில் சேர விரும்புபவரைஇஸ்லாத்தைத் தழுவச்செய்து ஒருமாதகாலம்வரை வைத்திருந்து அனுப்பி விடுவது வழக்கமாம். பின்னர் அவர்கள் எந்நிலைமையில் ஆனார்கள்? இஸ்லாத்தில்

தான் ஸ்திரமாக இருக்கின்றார்களா? அல்லது முர்தத்தாக மாறி விடுகிறார்களா? என்ற விபரம் தெரிகிறதில்லை. அவ்விதமாகவேலை செய்யாமல் இந்தச் சங்கத்தார் குடும்பம், குடும்பமாக இஸ்லாத்தில் சேர்த்து அவர்களை ஆதரித்து கண்காணித்து வருவது பொன்னேபோல் போற்றத்தக்கதாகும். தவிர நவ் முஸ்லிம்களுக்கு பேஷ் இமாம் உஸ்தாது முதலியவர்களை ஏற்பாடுசெய்து கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். இன்னும் அவர்களைப் போஷித்துக் காப்பாற்றும் முறை மிக ஒழுங்காக இருக்கிறது. இத்தகைய சங்கங்களுக்குப் போதிய உதவி செய்ய வேண்டுவது அத்தியா வசியமாகும்.

தனவந்தர்கள் தாங்கள் பொருள்களைச் சேகரித்துத் தங்கள் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்கின்றனர். அவர்கள் நல்லவர்களாக இருந்தால் அந்தப் பொருட்களை அதிகமாக அபிவிருத்திசெய்து காப்பாற்றுகின்றனர். இன்றேல் பிதுரார்ஜிதமாகக்கிடைத்த சொத்தையும் தோற்றுவிடுகின்றனர். ஆதலால், பிள்ளைகள் துர் நடத்தையுடையவர்களாக இருந்தால் அவர்களுக்குப் பெற்றோர்கள் சொத்துக்கொடுத்தாலும் பிரயோஜனப்படுவதில்லை. பிள்ளைகள் நல்லவர்களாக இருந்தால் அவர்களுக்குப் பெற்றோர்களின் சொத்துத் தேவையே இல்லை. ஆதலால்தான் நான் என் பிள்ளைகளுக்கும் சகோதரிகளுக்கும் வேண்டிய அளவு கொடுத்துவிட்டு எனக்காக வைத்திருப்பதில் கிடைக்கும் லாபத்தையும் இனிமேல் எனக்கு வியாபாரத்தில் கிடைப்பவைகளிலும் என் குடும்பத்திற்குள்ள செலவுகளும் அரசாங்க வரிகளும் போக வுள்ள வருவாயையும் தர்மத்திற்குச் செலவு செய்துவருவதென முடிவுசெய்து அவ்வாறே செய்துவருகின்றேன். இதுவரை நான் பல பொது ஸ்தாபனங்களுக்குக் கொடுப்பதாக உறுதிகொண்ட ஸ்தாபனங்களில் இன்னும் 14 ஸ்தாபனங்கள் பாக்கி இருக்கின்றன. அவைகளுக்கு என் திட்டப்படி ஒருலக்ஷத்து இருபத்து எட்டாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதில் கடந்த ஏப்ரல்மாதக் கடைசியில் 20 ஆயிரம் ரூபாய் அனுப்பி விட்டேன். இன்னும் 108000 ரூபாய் கொடுக்க வேண்டிய திருக்கிறது. இந்தச் சங்கத்தாரின் முயற்சியும் உழைப்பும் என்னைக் கவர்ந்துவிட்டது. இதற்கு பெருந்தொகை கொடுக்க வேண்டுமென்று முடிவு கொண்டேன். ஆயினும் தற்காலமுள்ள வியாபார நிலைமையில் முன்னர் நிய்யத்துச் செய்துள்ள ரூபாய்களைக் கொடுக்க முடியாம லிருப்பது பற்றி வருந்துகின்றேன். "இன்ஷா அல்லாஹ்" றஹ்மான் கிருபைசெய்தால் இதற்குப் பெருந்தொகை கொடுப்பேன். எனக்கு அவ்வாறு கொடுப்பதற்கான நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும்படி தாங்கள் எல்லோரும் துஆச் செய்யவேண்டுகிறேன். நேரம் அதிகமாகிவிட்டதால் இத்துடன் இம் மகாநாட்டை முடிவு செய்கிறேன். "இன்ஷா அல்லாஹ்" நாளைக் காலை என்னுடைய பாக்கிப் பிரசங்கத்தையும் கூறுவேன். இங்கு விஜயம் செய்திருக்கும் உலமாக்கள் உங்களுக்கு இரவில் உபதேசம் செய்வார்கள். ஆதலால் 10 மணிக்கு யாவரும் வருமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தங்களது பிரசங்கத்தை முடித்தார்கள்.

பின்னர் சென்னை மாகாணங்களிலுள்ள பல ஜில்லாக்களிலுமிருந்து வந்திருந்தவர்களில் விஷயாலோசனைக் கமிட்டிக்காக மெம்பர்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

வந்திருந்த உலமாக்களில் மௌலானா மௌலவி நூ. அப்துல் வஹ்ஹாப் சாஹிப், மௌலானா மௌலவீ எஸ். கே. முஹம்மத் ஷர்புத்தீன் சாஹிப், கோயம்புத்தூர் யாகூப் சாஹிப் ஆகியவர்கள் இஷாஅத்துல்இஸ்லாத்திற்கு உதவி செய்யும்படி வஅஜ் (உபன்னியாசம்) செய்தபின் இரவு 2 மணிக்கு முதல்நாள் நடவடிக்கை முடிவடைந்தது. அன்றிரவு தலைவர்கட்கும் முக்கியஸ்தர்கட்கும் ஜனாப் ஏ. எம். ஆங்கூர் மீரா ராவுத்தர் விருந்தளித்தார்கள்.

இரண்டாம் நாள் நடவடிக்கை.

ரூ. 26000 நன்கொடை.

சப்ஜக்ட் கமிட்டிக்குப் புறப்படும் சமயம் ஒருவர் குடும்பத்துடன் இஸ்லாத்தைத் தழுவுவதற்கு வந்திருந்தார். அவருக்கு ஹகீம்ஜீ அவர்களே 'கலி'மாச் சொல்லிக் கொடுத்து தங்கள் ஞாபகார்த்தமாக அப்துல் ஹகீம் என்று தங்கள் திரு நாமத்தையே சூட்டினார்கள்.

காலை 9 மணிக்கு விஷயாலோசனை கமிட்டியின் கூட்டம் கான்பரன்ஸ் பந்தலுக்கு சமீபத்திலுள்ள 'டீ ஸ்டோரில்' கனம் பிரஸி

டெண்டு ஸவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் சாஹிப் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. தெரிந்தெடுக்கப்பட்டிருந்த எல்லாப் பிரதிநிதிகளும் சமூகங் கொடுத்திருந்தனர். பலராலும் அனுப்பப்பட்டிருந்த பிரேரணைகள் வாசிக்கப்பட்டு "இஷா அத்துல் இஸ்லாம்" சம்மந்தமாகவுள்ள பிரேரணைகள் மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டன. கான்பரன்ஸில் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி விவாதித்து முடிவுசெய்துகொண்டு விஷயாலோசனைக் கமிட்டி முடிவடைந்தது.

மகாநாடு ஆரம்பம்.

மீண்டும் சுமார் 10-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. அதுபொழுது மௌலா இஸ்லாம்களிலுள்ள இரண்டு சிறுவர்கள் குர்ஆன்ஷரீபிலிருந்து சில ஆயத்துக்களை ஓதியதானது, சபையோர்களின் மனதை உருகச் செய்ததுடன் தன்னிலையற்று யாவருடைய கண்களிலிருந்தும் தாரை தாரையாகக் கண்ணீர் வடிய ஆரம்பித்தது. பின்னர் ஹகீம்ஜீ அவர்கள் முகவுரையாகப் பேசியதாவது:—

"இஷா அத்துல் இஸ்லாம்" சங்கம் நல்ல முறையில் பிரசாரஞ் செய்து வருகிறது; இஸ்லாத்தின்மீது அவாக்கொண்டு வருபவர்களை மட்டும் சேர்த்து அவர்கட்கு சகல துறைகளிலும் உதவிசெய்துவருகிறது; இஷாஅத்திற்கு இக்கம்பமாநகர் மிகமிகப் பொருத்தமான தாகவேயிருக்கின்றது; பிரசாரத்திற்கு வேண்டிய சகல அம்ஸங்களும் இங்கு பொருந்தியிருக்கின்றது; இதற்கு சாஸ்வதமான பண்டு சேர்ப்பது அவசியமானதாகும்; வியாபாரம் க்ஷீணித்திருப்பதால் நான் இதுபொழுதே நன்கொடை அளிக்க முடியாமலிருப்பதற்கு வருந்துகின்றேன். தற்சமயம் இஸ்லாத்தில் சேர்ந்துவரும் நவ் முஸ்லிம்களின் செலவுக்காகப் பணம் மிகவும் அவசியமானதாகயிருக்கின்றது. அதுவகையில் செலவிடுவதற்காக ரூ. 1000 நன்கொடை அளிக்கின்றேன். சாஸ்வத பண்டு நியமிப்பதற்காக வேண்டி சமீபத்தில் பெருந்தொகை நன்கொடை அளிப்பேன். மற்றவர்களிடம் சென்று கேட்டு வாங்கியும் பண்டு திரட்ட முயற்சிப்பேன். இங்குள்ளவர்கள் தக்க அந்தஸ்துள்ளவர்களாகவும் மிராசுதார்களாகவுமிருப்பதைக்கண்டு சந்தோஷப்படுகின்றேன். நீங்கள் யாவரும் தக்க உதவிசெய்யுங்கள்! தாவரச் சொத்துக்களையும் இதற்கு வக்புசெய்யுங்கள்! அந்தந்த ஸ்தலத்திலிருப்பவர்கள் பொது ஸ்தாபனங்களுக்கு உபகாரம் செய்வதை அனுசரித்துத்தான் நான் உபகாரஞ் செய்வது வழக்கம். டிரஸ்டி போர்டு ஒன்றை நியமித்து அவர்கள் பெயரால் வக்பு பத்திரங்களை எழுதிவைத்து சொத்துக்களை சங்கத்தின் பராமரிப்புக்கு விட்டுவிடுங்கள்! அதுதான் சாலச் சிறந்ததாகும். சென்னையில் ராஜா ஸர். ராமசாமி முதலியார், மூர்மார்க்கட்டிற்கு எதிரில் ஒரு சத்திரத்தைக் கட்டிவைத்தார். அவர் முஸ்லிம்களிடத்திலிருந்தே பெரும்பணத்தை சம்பாதித்திருந்தும் அச்சத்திரத்தில் முஸ்லிம்களுக்காகவும் பஞ்சமர்களுக்காகவும் ஒருபக்கத்தில் தனியே ஒதுக்கி சிறிய கட்டிடமொன்றை அமைத்திருந்தார். இது முஸ்லிம்களை அவமதித்ததாக யிருந்தது அவர் காலஞ் சென்றபின் அவருக்கு உருவச் சிலை நாட்டுவதைப்பற்றி யோசிப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டத்தில், அவர் முஸ்லிம்களிடமிருந்தே பெரும் பணத்தை சாமர்த்தியம் செய்திருந்தும் சத்திரத்தில் முஸ்லிம்கட்கு தனி இடம் ஒதுக்கி வைத்ததானது முஸ்லிம் சமூகத்தையே அவமதிப்பதாக யிருக்கின்றது. ஆகையால் இதுபொழுது சேமிக்கும் பணத்தைக் கொண்டு முஸ்லிம்கட்காக தனியே ஒருகட்டிடத்தைக் கட்டி வைத்து அவர்மீதிருந்து வரும் இக்குறையை நிவர்த்தி செய்துவிடலாமென்று நான் கூறினேன். விஷயத்தை யாவரும் ஒற்றுக்கொண்டபோதிலும் அவ்வாறு பண்டு திரட்ட ஒருவரும் முன்வரவில்லை. அதனால் அச்சத்திரத்திற்குப் பக்கத்தில் கார்ப்பொரேஷன் கட்டிடத்திற்கெதிரில் என் தகப்பனார் பெயரால் ஒரு கட்டிடம் கட்டி வைத்திருப்பதை யாவருமறிவீர்கள். அதன் கீழ் பூமி கவர்ன்மெண்டுக்குச் சொந்தமானதாகயிருந்து அது ஏலத்திற்கு வந்த சமயத்தில் சத்திரத்திற்காக வென்று நான் ஏலமெடுத்தேன். ஏலம் சொற்பத் தொகையாகயிருக்கிறதென பலரும் ஆக்ஷேபனை செய்தார்கள். முஸ்லிம்கட்குள்ள குறையை நீக்குவான் வேண்டி சத்திரம் கட்டப்போவதாக அறிவித்ததின்பேரில் யாவரும் விட்டுவிலகிவிட்டனர். சத்திரத்தின் பராமரிப்புக்காக அதன் முற்பக்கத்திலும் மேற்கு பக்கத்திலும் வாடகை வரும் கடைகள் கட்டி அவை

யாவற்றின்மேற் பார்வையை பெரியமெட்டுப் பள்ளிமுத்தவல்லிகள் பெயருக்கு 'வக்பு நாமா' எழுதி வைத்திருக்கிறேன். என்னுடைய வாரீஸ்களினால் இத்தர்மத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படாமலிருப்பதற்காக இவ்வாறு செய்திருக்கின்றேன். அதுபோலவே நீங்களும் "இஷா அத்துல் இஸ்லாம்" சங்கத்தின் வக்பு போர்டுக்கு வக்பு நாமா எழுதி வைப்பீர்களென்று எதிர்பார்க்கின்றேன்" என்று பேசிமுடித்தார்கள்.

டிரஸ்டி போர்டு

உடனே அடியிற்கண்ட ஏழு கனவான்கள் டிரஸ்டிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். (1) உத்தமபாளையம் செ. முஹம்மது மீரு ரூவுத்தர், (2) கோம்பை மு. ம. சே. முஹைதீன் பிள்ளை ரூவுத்தர், (3) கம்பம் ஹாஜீ இ. அல்லாப்பிச்சை ரூவுத்தர், (4) கம்பம் எம். சையத்காஸீ ரூவுத்தர், (5) இடையக்கோட்டை கே. பி. வி. எஸ். முஹம்மது மீரான் ரூவுத்தர், எம். எல். ஸி., (6) வத்தலக்குண்டு கா. சிக்கந்தர் ரூவுத்தர், (7) போடிநாய்க்கனூர் சுல்தான் அஹ்மத் பத்ருத்தீன் ரூவுத்தர் ஆகிய ஏழு கனவான்களாவர்.

பின்னர் சையத் முர்தஜா சாஹிப் பஹதூர் அவர்கள் எழுந்து:—"சற்றுமுன் உங்கள் முன் இரு பிள்ளைகள் குர்ஆன் ஷரீப் திலாவத் செய்ததை நீங்கள் பார்த்தீர்கள். குப்ர் கலிமா வெளியாய்க்கொண்டிருந்த நாவிலிருந்து அல்லாஹ்வின் திருவசனம் வெளியாகச்செய்ததானது இஸ்லாத்தின் தெய்வீக சக்தியேயாகும். இவ்வாறு இஸ்லாத்தைத் தழுவுவதற்கு உதவி புரிந்துவரும் உங்களுக்கு அளவற்ற நற்பயன் இறைவன் அளிப்பானாக! ஆதலின் தாங்கள் யாவரும் தக்க முயற்சி செய்து இஷா அத்துல் இஸ்லாத்திற்கு தக்க உதவிபுரிய வேண்டுமெனக்" கேட்டுக்கொண்டார்கள்.

பின்னர் மகாநாட்டைத் திறந்து வைப்பதற்காக விஜயஞ் செய்யவிருந்த வேலூர் மௌலானா மௌலவீ அல்ஹாஜ் கான்பகதூர் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட சுகக் குறைவால் மகாநாட்டுக்கு வரமுடியாது போய்விட்டது பற்றித் தெரிவித்து அவர்களால் தயாரிக்கப்பெற்று அச்சிடப் பெற்றிருந்த பிரசங்கம் சபையோர்கட்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. பின்கண்ட கனவான்கள் தயாள மனதோடு நன்கொடை அளிக்க முன்வந்தார்கள். அன்னவர்களின் திருநாமங்கள் :

(1) இம்மகாநாட்டுத் தலைவரும் சென்னை பிரபல வியாபாரியும் மாஜீ ஷரீபுமான ஜனாப் சவுக்கார் வி. அப்துல் ஹக்கீம் சாஹிப் ரூபாய் 1000.

(2) மகாநாட்டு வரவேற்புக் கழகத்தலைவரும் பிரபல தனவானுமாகிய ஜனாப் செ. முஹம்மது மீரா ராவுத்தர் ரூபாய் 5000 பெருமான நஞ்சை நிலம்.

(3) கம்பம் ஜனாப் ஹாஜீ இ. அல்லாப்பிச்சை ராவுத்தர்-ரூபாய் 500.

(4) வத்தலைக்குண்டு பிரபல வியாபாரியும் கண்ராக்டருமாகிய ஜனாப் கே. சிக்கந்தர் ராவுத்தர் சுமார்-2500 பெறுமான நஞ்சை நிலம்.

(5) கம்பம் ஜனாப் எம். சையது காஸீ ராவுத்தர்-ரூபாய் 500.

(6) கோம்பை மிராசுதாரும் டி. வி. பி. ஏ. ஏலச்சரக்கு கம்பெனியைச் சேர்ந்தவருமான ஜனாப் உ. ம. சே. முஹய்பத்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள் சுமார் 10,000 பெறுமானதும், திருவாங்கூர் ஏலமலையில் ஆட்டுப்பாரை தாவனத்தில் மரைக்கான் தோட்டமென்று பெயருள்ளதுமான 22 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஏலக்கிருஷிநிலத்தை எழுதிக்கொடுக்கச் சம்மதித்திருக்கிறார்கள்.

(7) கம்பம் ஜனாப் வி. ஏ. ஏ. அப்துற் ரஹீம் சாஹிப்-ரூபாய் 500.

(8) போடிநாயக்கனூர் எஸ். ஏ. சுல்தான் அஹ்மது பத்ருத்தீன் ராவுத்தர்-ரூ. 500.

(9) எம். கோலார் ராவுத்தர்-ரூ. 350.

(10) ஏ. எம். ஆங்கூர் மீரா ராவுத்தர்-ரூ. 150.

(11) இடையகோட்டை கே. பி. வி. எஸ். முஹம்மது மீரான் ராவுத்தர் எம். எல். சி. ரூ. 500.

(12) மதுரை கொல்லம்பட்டரைத் தெரு ஜமாஅத்தார்கள் சார்பாக மௌல்வி முஹம்மது கனி ஆலிம்சாஹிப்-ரூ. 100.

(13) அ. பாப்பு ராவுத்தர்-ரூ. 250.

(14) கோவை, ஜம்பை ஜ. கா. கைப்பீர் சாஹிப் ரூ. 25.

(15) உத்தமபாளையம் கொ. கா. முஹம்மது அப்துல் ஹமீது ராவுத்தர் வகைராக்கள்

கீழகூடலூரிலுள்ள ரூ. 4000 பெறுமான முள்ள நஞ்சைநிலம்.

(16) இஷாஅத்துல் இஸ்லாம் செக்ரிடரி கம்பம் பொ. நாகூர் மீரா ராவுத்தர்-ரூ. 100.

(17) கம்பம் மீ. கா. முஹம்மது நைனுர் ராவுத்தர்-ரூ. 50.

(18) உப்புக்கோட்டை மௌலா இஸ்லாம் ஷம்ஸுத்தீன் ராவுத்தர்-ரூ. 25.

(19) கம்பம் பெ. வ. அப்பாலெப்பை சாஹிப் ரூ. 25, மற்றும் 10, 5 ஆக சில்லரை ரூ. 200 இதுவன்றி இன்னும் நன்கொடைக்குக் கையெழுத்துச் செய்யப்பட்டுவருகிறது. கூடியசீக்கிரம் முழு விபரமும் பிரசுரிக்கப்படும்.

கனம் ஹகீம்ஜீ அவர்கள் முடிவுரையாகக் கூறியதாவது:—"நான் இங்கு புறப்படுவதற்கு முன் எனக்கேற்பட்டிருந்த திரேக அசௌக்கியத்தால் இங்குவருவதுகூட சந்தேகமாக யிருந்தது. ஆனால் நான் இங்கு வந்து மௌலா இஸ்லாம்களையும் உங்களது ஊக்கங்களையும் பார்க்க, எனக்கு உடம்பு சற்று சௌகரியமாகத் தெரிகிறது. என்றாலும் என் உடம்பின் நிலைமையையும் எனக்கு சென்னையில் ஏற்பட்டிருக்கும் அவசிய காரியத்தையும் கருதி நான் 2 மணிக்குப் புறப்பட உத்தேசித்திருக்கின்றேன். பிற்பகலில் மகாநாட்டிற்குள்ள அநேக முக்கிய தீர்மானங்கள் உங்களினது ஆலோசனைக்குவர யிருக்கின்றது. அதுபொழுது மௌலானா மௌலவி சையத் முர்த்தஜா ஹஸ்ரத் எம். எல். ஏ. தலைமை வகித்து காரியாதிகளை நடத்துவார்கள். தாங்களெல்லோரும் விஜயஞ்செய்து மகா நாட்டை சிறப்பாய் நடத்தி வைக்குமாறு கோரி நான் விடை பெற்றுக்கொள்கின்றேன்" என்று கூறி முடித்தார்கள். பின்னர் வரவேற்புக் கழகத் தலைவர் ஜனாப் செ. முஹம்மது மீரா ருவுத்தர் அவர்களால் புஷ்பஹாரஞ் சூட்டப்பெற்று பாவலர் பீர் முஹம்மது ருவுத்தர் அவர்களால் வந்தனங்கூறப்பெற்று முற்பகல் நடவடிக்கை முடிவடைந்தது. அன்று பகல் ஜனாப் சி. ஏ. ஏ. அப்துர்ரஹீம் ருவுத்தர் அவர்கள் இல்லத்தில் யாவருக்கும் 'தஅவத்' நடத்தப்பட்டது.

பிற்பகல் நடவடிக்கை

மீண்டும் மகாநாடு பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாயிற்று. பெரியகுளம் மௌலவீ முஹம்மது யூசுப் சாஹிப் கிராஅத் ஓதிய பின்னர் அடியில்கண்ட பிரேரணை ஏகமனதாய் நிறைவேறியது.

(1) தற்கால நிலைமையில் பம்பாயில் நடைபெறும் ஹிந்து-முஸ்லிம் கலவரத்தைக் கேட்டு இம் மகாநாடு வருந்துகிறது. கலக நிலைமையை ஒடுக்க இரு வகுப்புத் தலைவர்களும் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியத்தை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

(2) "இஷா அத்துல் இஸ்லாம்" என்ற அராபிப் பெயருக்குப் பின்னால் இஸ்லாம் பிரசார சபை என்பதைச் சேர்த்துக்கொள்ளும்படி இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

இத் தீர்மானத்தை கோம்பை டி. வி. பி. ஏ. ஏலச் சரக்கு விற்பனைக்கம்பெனி மானேஜரும் பிரபல ஏல விவசாயியுமான ஜனாப் மொய்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள் பிரேரபித்தார். பின்னர் தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது.

(3) இஷா அத்துல் இஸ்லாம் ஒழுங்காகவும் தீவரமாகவும் நடைபெறவேண்டி யிருப்பதை முன்னிட்டும், இஸ்லாத்தில் சேர்ந்திருக்கும் நவ் முஸ்லிம்களுக்கு அத்தியாவசியமான உதவி செய்யவேண்டி யிருப்பதை முன்னிட்டும் சகல முஸ்லிம்களும், சங்கங்களும், பொது நிதிகளிருந்தும் தங்களாலான பண உதவிகளை கூடிய சீக்கிரம் செய்யும்படி இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை சென்னை ஹாஜீ மௌலவி முஹம்மத்அலீ சாஹிப் பிரரேபித்துப் பேசுகையில்இஸ்லாத்தைநிலைநாட்ட நபிமார்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் தியாகங்களையும் நன்கு விரிவாகக் கூறி இம்மதத்தைப் பரப்புவதற்கு மேற்படி இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் எடுத்துக்கொண்டு வரும் முயற்சி நன்மை பயக்க, பண உதவி அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு செய்ய வேண்டு மென்றும் பேசினார்கள். வேலூர் ஜனாப் மௌல்வி கு. ஷர்புத்தீன் சாஹிப் அவர்கள் ஆமோதிக்க தீர்மானம் நிறைவேறியது.

(4) கோயம்புத்தூர் அத்தார் ஜமாஅத் மஸ்ஜிது நிர்வாக சபைக்கு, இந்த இஷா அத்துல் இஸ்லாத்திற்குப் பண உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ள சங்கத்திலிருந்துஒரு தூது அனுப்புவதென்று தீர்மானிக்கிறது.

(5) (1) முஸ்லிம்களுக்கு ஆரம்பக்கல்வியைக் கட்டாயப்படுத்தும்படியும் உருது பாஷையையும் சேர்த்துச் சொல்லிக் கொடுக்கும்படிக்கும் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(2) இம்மாகாணத்தின் எல்லாப் பாடசாலைகளிலுமுள்ள முஸ்லிம் மாணவர்களுக்குக் கட்டாயமாய் மதக்கல்வி கற்றுக் கொடுக்கும்படி திட்டஞ் செய்ய சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) சுமாரான முஸ்லிம் ஜனத்தொகையுள்ள சகல இடங்களிலும் ஆரம்ப இராப் பாடசாலைகளைப் புதிதாய் ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

(4) முஸ்லிம்களால் ஏற்படுத்தப்பட்ட சொத்துக்களைச் சரியாய் பராமரிக்கும் பொருட்டு தக்க யோசனைகள் சொல்லுவதற்கு உத்தியோகப் பற்றற்ற ஒரு கமிட்டியை நியமிக்கும்படி கவர்ன்மெண்டாரை கேட்டுக் கொள்ளுகிறது.

(5) இந்த மாகாணத்திலுள்ள சகல அராபிப் பாடசாலைகளுக்கும் கிராண்டு கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறது.

(6) சென்னை மாகாணத்தில் பொதுவாக முஸ்லிம்களின் பொதுஜன சேவைக்காகவும் சிறப்பாக இஷா அத்துல் இஸ்லாம் பூரணமாக நடைபெறுவதற்காகவும் அத்தியாவசியமாக சென்னை நகரில் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையும் ஒரு பொதுப் பிரசுர சங்கத்தையும் ஜில்லாக்களில் கிளைப் பிரசுராலயத்தையும் தாமதமின்றி ஏற்படுத்துவதற்கு முஸ்லிம் தலைவர்கள் எல்லோரும் பொறுப்போடு ஆதரவளிப்பது முதன்மையான கடமையாகுமென இம் மகாநாடு வற்புறுத்துகிறது.

இத்தீர்மானத்தை ஜனப் பீர் முகம்மது பாவலர் அவர்கள் பிரரேபித்துப் பேசினர். அதை ஆமோதித்து கோம்பை டி. சி. பி. ஏ. ஏலச்சரக்குவிற்பனைச்சங்கம்மானேஜர் ஜனப் யு. எம். எஸ். முஹையத்தீன்பிள்ளை ருவுத்தர் பேசுகையில் மதப்பிரசாரத்திற்கு பத்திரிகை அவசியமென்றும் என்றாலும் தற்சமய மிருந்துவரும் "ஸைபுல் இஸ்லாம்" என்ற பத்திரிகையே தினசரியாய் நடத்திவரலா மென்றும் எப்படியாயினும் எதற்கும் பணம் அவசியமென்றும், முதலில் யாவரும் பண உதவி செய்தால்பின்னர் பணச்செழிப்புக்குத் தக்கவாறு காரியாதிகளைச் செய்து கொள்ளலாமென்றும் வற்புறுத்திக் கூறி தீர்மானத்தை ஆதரித்தார்.

(7) இந்த இஷா அத்துல் இஸ்லாம் மகாநாடானது, புண்ணிய ஸ்தலமான பைத்துல் முகத்தஸிலுள்ளமஸ்ஜிதெ அக்ஸாவின் பாதுகாப்பையும் அராபியர்களின் உரிமைகளையும், கோரிக்கைகளையும் ஆதரிப்பதுடன் அகில உலகமுஸ்லிம் மகாநாட்டின் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு நம்அரசாங்கத்தார் முஸ்லிம்களின் மார்க்க உணர்ச்சியை முன்னிட்டு சர்வதேசச் சங்கத்தின் பேரில் பூரண பலத்தைச் செலுத்தி முஸ்லிம்களின் வேண்டுகோளை அங்கிகரிக்கச் செய்ய வேண்டுமாய் கவர்ன்மெண்டாரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

என்னும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத் தலைவர் முடிவுரையில் யாவரும் சங்கத்திற்கு பெரும் தொகைகளையும் தங்களாலான நன்கொடைகளையும் கொடுத்து சங்கத்தைப் பலப்படுத்தி இஸ்லாத்தின் தத்துவங்களைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்றும் இன்று சுமார் 11 பேர்கள் வரை இஸ்லாத்தில் சேர்த்துள்ள விஷயம் தமக்கு அதிக சந்தோஷத்தைத் தருகிறதென்றும் இதே மாதிரி ஒவ்வொருவரும் வேலை செய்து வர வேண்டுமென்றுங் கூறினர்கள்.

வந்தனோபசாரத்திற்குப் பின் தலைவருக்கும் மற்றும் முக்கியஸ்தர்கட்கும் இனிது மாலையிடப் பெற்று, அல்லாஹு அக்பர்" என்ற கோஷத்துடன் 5 20-க்கு மகாநாடு இனிது கலைவுற்றது.

அஸர் தொழுகைக்குப்பின் ஜனப்கோலார் ராவுத்தர் அவர்களது ரைஸ்மில்லில் சுமார் 250 பெயர்களுக்கு சிற்றுண்டி நடத்தப்பெற்றது. இஷாஅத்துல் இஸ்லாம் விஷயத்தில் ஜனப்களான உத்தமபாளையம் செ. முஹம்மதுமீரு ருவுத்தர், கம்பம் பொ. நாகூர் மீரு ருவுத்தர் ஹாஜீ இ. அல்லாப்பிச்சை ருவுத்தர் இ. ஷாஹுல் ஹமீது ருவுத்தர் இவர்களின் சேவை மிகமிகப் போற்றத்தக்கதாகும்.

தொண்டர் மகா நாடு.

மக்ரிப் தொழுகைக்குப் பின் தொண்டர் மகா நாடு நடைபெறுமென அறிவிக்கப் பட்டிருந்ததால் சுமார் 2000 ஜனங்கள் வரை

மகாநாட்டுப்பந்தலில் வந்து குழுமி விட்டனர். அது சமயம் பீர் முஹம்மது பாவலர் அவர்கள் ஜனப் சையத் முர்தஜா சாஹிப் பகதூர் எம். எல். ஏ. அவர்களை அக்கிராசனம் வசிக்கும்படிகேட்டுக் கொள்கையில் ஹஸ்ரத் அவர்கள் நீண்டநாளாய் நம் சமூகத்தொண்டில் ஈடுபட்டு ஆற்றிவரும் சேவைகளை விவரமாய் எடுத்துக் கூறினார்கள். இதை சையத் காலை ராவுத்தர் அவர்கள் ஆமோதிக்க அல்லாஹ்அக்பர் என்ற கோஷத்தினிடையே ஹஸ்ரத் அவர்கள் அக்கிராசனத்திலமர புஷ்ப ஹாரஞ் சூட்டப்பெற்றது. பின்னர் அக்கிராசனரவர்கள் தொண்டர் படை, அமைக்கப்பட வேண்டியதின் அவசியத்தையும் அவைகள் செய்துவரவேண்டிய சேவைகளைப்பற்றியும் விஸ்தாரமாகப் பேசி தொண்டர்கள் எக்காரியங்களிலும் தைரியமாகயிருந்து மார்க்க சமூகத் தொண்டாற்றி வர வேண்டிய அவசியத்தை எடுத்துக்கூறினார்கள். மௌலவீ நா. அப்துல்வஹாப் சாஹிப் அவர்கள் தொண்டர்கள், மகாநாட்டில்செய்த சேவைகளைப் போற்றியும், "இஸ்லாத்திற்கு தொழுகை கம்பமாக யிருக்குமென்று" எம்பெருமானார் (ஸல்.) அருளியுள்ளார்கள். "இஷா அத்துல் இஸ்லாத்திற்கு இக்கம்பமா நகர் உரைவிடமாக ஏற்பட்டிருக்கின்ற" தென்றும் இதற்கு தொண்டர்கள் தக்க முறையில் பாடுபட்டு அத்துணை நல்ல முறையில் ஸ்தாபிக்க முயற்சிக்கும் படி கோருகின்றேன் எனக் கூறினார்கள்.

பின்னர் நவ் முஸ்லிம் மாணவரான முஹம்மத் ஹுசேன் என்பவர் யான் "ஏன் இஸ்லாத்தைத் தழுவினேன்" என்னும் பொருள்கொண்ட சொற்பெருக்காற்றினர். அதில் பல மதங்களையும் தாம் ஆராய்ச்சி செய்து பார்த்து கடைசியாக இஸ்லாம் மதம்தான் உண்மை மதமெனத் தெரிந்து அதைப் பின்பற்றியதாய் தெளிவாகக் கூறினர். அப்பிரசங்கமானது சபையினர்களது மனதை உருகச் செய்துவிட்டது. பின்னர் நவ் முஸ்லிம் ஷம்ஸுத்தீன் சாஹிப், முஹம்மது மூசா சாஹிப் முதலியவர்கள் இஸ்லாத்தின் மேன்மைகளை எடுத்துக் கூறினர்கள். பின்னர் ஜெருஸலத்தில் நடைபெற்ற அகில உலக முஸ்லிம் மகாநாட்டிற்குச் சென்றிருந்த ஜனப் சையத் ரவூப் பாஷா B. A. அவர்கள் ஜெருஸலத்தில் நடைபெற்ற மகாநாட்டின் விவரங்களையும் அங்கு முஸ்லிம்கட்கு ஏற்படும் கஷ்டசங்கடங்களையும் எடுத்து சவிஸ்தாரமாகப் பேசியதுடன் தொண்டர்கள் மார்க்க சமூகத் தொண்டாற்ற முன்னணிக்கு வந்து தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினார்கள். அவர்களது பிரசங்கம் ஆங்கிலத்தில் நடைபெற்றதால் அதை பீர் முஹம்மது பாவலர் தமிழில் மொழிபெயர்த்துக் கூறியது மிக மன உல்லாசத்தை அளிக்கக் கூடியதாக யிருந்தது குறிப்பிடத்தக்கது. பின்னர், அக்கிராசனர் அவர்களது முடிவுரைக்குப் பின் இரவு 12 மணிக்கு மகாநாடு முடிவடைந்தது. பின்னர் தலைவர்களுக்கும் மகாநாட்டின் முக்கியஸ்தர்கட்கும் வாலண்டியர், கேப்டன் கமாண்டர் முதலியவர்கட்கும் புஷ்ப ஹாரஞ் சூட்டப்பட்டு சபை கலைந்தது.

வரவு சேலவு ஜாப்தா

நன்கொடை, ஜகாத் முதலியவை	9282	13	0
சந்தா வசூல்	414	12	0
நிக்காஹ் இதர வரவு	15	2	0
ரூ.	9712	11	0

சேலவு

பள்ளிவாசல் கிணறு வகைரா	2100	0	0
மௌலா இஸ்லாம், இதர பிரசார செலவு	4411	14	6
ஆக சிலவு	6511	14	6
மீதி இருப்பு ரூ.	3200	12	6
பலருக்கும் சங்கம் கொடுக்க வேண்டிய வகையில்வரவு ரூ.	1340	12	4
ஆக கூடிய இருப்பு ரூ.	4541	8	10

இருப்புக்கு விபரம்

கவலைத் தோட்டம் வகையில் இருப்பு ரூ.	3217	5	0
ஆசாமிகளிடம் வரவேண்டியது	1324	2	4
காரியதரிசி வசம் இருப்பு ரூ.	0	1	6
ஆக ரூ.	4541	8	10

"யான் ஏன் இஸ்லாத்தைத் தழுவினேன்?"

கம்பத்தில் நடைபெற்ற இஷாஅத்துல் இஸ்லாம் மகாநாட்டில் நவ்முஸ்லிம் முஹம்மத் ஹுசைன் ஆற்றிய சொற்பெருக்கு

அல்லாஹுதஆலாவின் கிருபையினால் எல்லா மேன்மையும் கிடைக்கப்பெற்ற உலமாக்களே! சகோதர முஸ்லிம் கனவான்களே!! இச்சமயத்தில் அற்ப அறிவுள்ளவனும், வயதில் குறைந்தவனுமாகிய எனக்கு இம்மாகாண மஹாநாட்டில், "யான் ஏன் இஸ்லாத்தைத் தழுவினேன்?" என்னும் பொருள்பற்றி சில வார்த்தைகளைச்சொல்ல அனுமதியளித்துள்ள இஷாஅத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி ஜனாப் பொ. நாகூர்மீரா ராவுத்தர் அவர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனுக்கும் என்றும் மறவாத நன்றியறிதலுள்ளவனாக யிருக்கின்றேன்.

இக்கம்பமா நகருக்கு நேர்கிழக்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்திலிருக்கின்ற நாராயணத் தேவன் பட்டி என்றழைக்கப்படும் சிற்றூரிலே யான் பிறந்து வளர்ந்தேன். எனது எட்டாவது பிராயத்திலேயே என் தந்தையார் காலகதியடைந்து விட்டார். அவர் இந்துமதத்தில் பிறந்தவராயிருந்தும், சற்று பகுத்தறிவுள்ளவராதலால், ஏது காரணத்தாலோ அவரது யௌவன பிராயத்திலேயே, என் அன்னையுடன் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிட்டார். அதன்பின் என் அன்னையார் மதுரைக்கு மேற்கே சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள பசுமலை உயர்தரக் கலாசாலையில் கல்வி பயின்றுவர ஏற்பாடு செய்தார். அருளாளனும், ஒப்புயர்வற்றவனுமாகிய அல்லாஹுதஆலாவின் கிருபையால் யான் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறினேன். எஸ். !எஸ். யல். ஸி. சர்ட்டிபிக்கட்டைக் கொண்டு யான் 1929-ம் வருடத்தில் (Cloudlands) எனப்படும் தேயிலை எஸ்டேட்டில் ஒரு ஆபீஸ் ரைட்டராக நாற்பத்தேழு ரூபாய் சம்பளத்தில் நியமிக்கப்பட்டு சுமார் பதினான்கு மாதம் சென்றபின் எனக்கேற்பட்ட சுகக் குறைவினால் என் உத்தியோகத்தை ராஜினாமாச் செய்துவிட்டு, என் ஊரிலிருந்த காலத்தில் மார்க்க சம்பந்தமான ஆராய்ச்சி செய்யஎனக்கு சமயங்கிடைத்தது.

முதலாவதாக என்னைச் சுற்றியுலுமிருந்த இந்துக்கள் ஆதரித்துத் தழுவியிருக்கும் இந்து மதத்தைப்பற்றி யோசிக்க ஆரம்பித்து என்னுடன் கல்வி கற்றுவந்த இந்து மாணவர்களிடம் "இந்து மதம் என்றால் என்ன?" என வினவிய சமயம், அவர்களில் ஒருவரேனும் எனக்கு சரியான பதில் சொல்ல முடியவில்லை. அம்மதத்தில் என்னுடைய அனுபவத்தில் நான் கவனித்த அநேகங்குறைகளில் சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் கூறுகின்றேன். அம்மதத்திலுள்ள விக்கிரகாராதனை, ஜாதி வித்தியாசம் பாராட்டும் நாகரீகக் கேடு, பெண்களுக்கு உரிமை அளிக்காதிருக்கும் பான்மை முதலிய அநேகக் குறைகளை குழந்தைகளும் ஒற்றுக்கொள்வார்களென்பது திண்ணம். பெண்கள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை அரசாங்கத்தார் தடை செய்திருக்கின்றார்கள். விதவா விவாகம், பெண்களுக்குப் பாகமளிப்பது முதலிய சுதந்தரங்கள் அம்மதத்தில் அறவே கிடையாது. இவ்விதமான கொடியதீய சட்ட திட்டங்களினால் ஹிந்துக்களிலநேகர் கிறிஸ்தவர்களாகவும், புத்த மதஸ்தர்களாகவும், பாக்கியம் பெற்ற முஸ்லிம்களாகவும் ஆய்விடுகின்றனர். இது காரணம் பற்றியே ஹிந்துமதம் நாளுக்கு நாள் க்ஷீணதிசையடைந்து வருவதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காண்கின்றோம். மேற்கூறிய காரணங்களைக் கொண்டும் இன்னும் எண்ணிறந்த குறைகளைக் கொண்டும் இந்துமதம் ஆண்டவனால் அருளப்பட்டதல்லவென்றும், இந்து மதம் ஒரு மதமாகயிருக்க முடியாதெனவும் நான் தீர்மானித்துக்கொண்டேன்.

இரண்டாவதாக நான் பிறந்தது முதல் அனுசரித்து வந்த கிறிஸ்தவ மதத்தைப் பற்றி யோசிக்கலானேன். கிறிஸ்தவர் கைக்

கொள்ளும் வேதமாகிய பைபிளின் புதிய ஏற்பாட்டி லிருப்பவைகளெல்லாம் ஈஸா நபி (அலை.) அவர்களைப்பற்றி, அவருடைய சிஷ்ர் களாகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நால்வரால் எழுதப்பட்ட சரித்திரங்களே யன்றி, ஈஸா நபி (அலை) அவர்களுக்கு இறைவனால் அருளப்பட்ட வேதமென்பதற்கு, கிஞ்சிற்றேனும் முகாந் தரமில்லாதிருக்கிறது. அந்நால்வர் எழுதி யிருக்கும் (கிறிஸ்தவர்களால் அழைக்கப் படும்) சுவிசேஷங்களிலும் ஒருவருக்கொருவர் பற்பலவிதமான வேறுபாடுகளுடன் எழுதி நிறைத்திருக்கின்றனர். அச்சுவிசேஷங்களுக்குள்ள அஸல் பிரதிகளும் தற்போதில்லை. அவைகளின் மொழிபெயர்ப்பென்று சொல்லப்படுவதுதான் தற்காலம் கிடைத்திருக்கின்றது. தவிர அதை பற்பல பாஷையிலும் மொழி பெயர்த்துள்ளார்கள். அம்மொழி பெயர்ப்புகளிலும் பல்வேறு வித்தியாசங்களைக் கண்ணுற்றேன். மேலும் ஒரே பாஷைமொழி பெயர்ப்புகளில் பிராட்டெஸ்டாருடைய பைபிளுக்கும் ரோமன்கத்தோலிக்கருடைய பைபிளுக்கும் கணக்கிலடங்கா வித்தியாசங்களுள. பிராட்டெஸ்டாரோ அடிக்கடி மொழி பெயர்ப்புகளை மாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஒருமுறை அச்சிட்ட பிரதி ஒருவாறும், மறுதடவை அச்சிட்ட பிரதி மற்றொருவாறுமாக விருக்கின்றன. இவ்விதமாகப் பற்பல வித்தியாசங்களுளன.

மேலும் அவற்றுள் இயற்கைக்குப் பொருந்தாத ஏராளமான முரண்பாடுகளுள்ளன. உதாரணமாக கிறிஸ்தவர்களால் ஆதரிக்கப்பட்டுவரும் பைபிளில் மத்தேயு 5:39-41-ல் "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு; உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணுபவனுக்கு உன் அங்கியைக் கொடுத்துவிடு, ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரை நடக்க பலவந்தம் பண்ணினால், இரண்டுமைல் தூரம்போ," என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தற்காலத்திலும், எக்காலத்திலும் அநுசரிக்க முடியாத சட்டமே யொழிய வேறல்ல. தற்காலத்தில் மேற்கூறியவைகளுக்குப் பதிலாக ஒருவன் நம்மை ஒரு கன்னத்தில் அறைந்தால், மறுகன்னத்திலும் ஒருவேளை அவனுடைய இரு கன்னத்திலும் திருப்பி அறை கொடுப்போம் என்பதிலும், ஒருவன் நம்மோடு வழக்காடி நம்முடைய வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றெண்ணினாலும், நம்மை ஒரு மைல்தூரம் செல்ல பலவந்தம் பண்ணினாலும் அவனுக்குத்தகுந்த சிகிட்சை செய்து விடுவோ மென்பதிலும் கிஞ்சிற்றேனும் ஐயமில்லை. ஆனால் மாற்கு 1:14, 15 லும் மத்தேயு 4:23-லும், இயேசுக்கிறிஸ்துவுக்கு ஒரு வேதம் அருளப்பட்டதென்றும், அதைக் கலிலேயா நாட்டிலே பிரசங்கித்து வந்தாரென்றும் அப் 24:6 லும் கலா. 1: 6-9-லு மிருந்து, அப்போஸ்தலர்களுக்கும் கலாத்தியருக்கும் அவ்வேதம் இருந்ததாகவும், அவ்வேதத்தைப் பலர் அவரவரிஷ்டப்படி புரட்டி வந்ததாகவும், கலாத்தியர் மிகவும் வருந்தி, இயேசுவின் சுவிசேஷத்தைத் தவிர மற்றவரால் கூறப்படும் எந்த சுவிசேஷத்தையும், அது வானத்திலிருந்து வருகிற தேவதூதனால் கூறப்பெற்றதாயினும் அதை அங்கீகரிக்க வேண்டாம் என்று கெஞ்சி மீறினவர்களைச் சபித்தனர். எனினும் அவைகளில் பல பரவிவிட்டன வென்பதை நாம் கண்டறியலாம். இயேசுவால் கலாத்தியருக்கு அளித்த வேதமே, ஈஸா நபி (அலை.) அவர்கள்மூலம் இறைவனா லருளப்பெற்ற இன்ஜில் வேதமென நாமும் சொல்கின்றோம். ஆனால் மேற்கூறிய கலாத்தியருக்குக் கிடைத்த வேதமானது தற்காலம் இவ்வுலகிலில்லை என்பதை யறிந்தேன். மேலும் கிறிஸ்தவர்கள் ஏக தெய்வக் கொள்கைக்கு விரோதமாக ஈஸா நபி (அலை.) அவர்களை ஆண்டவனாகக்கருதி வணங்குகின்றனர். அதற்கு அவர்கள் மறுமொழியாக பிதா குமாரன், பரிசுத்த ஆவி என்று பற்பலமான திருத்துவப் (Trinity) போதனைகளைக்கொண்டு உளருகின்றனர். மிஷனரி பாதிரிமார்களுங்கூட இதைப்பற்றி ஒரு மனிதனுக்கு விஸ்தரித்து விளக்கிக் காட்ட முடிவதில்லை. மேலும் ஆண்டவனை நாம் (முஸ்லிம்கள்) வணக்கத்துக்குத் தகுந்தவன், தனித்தவன், இணையற்றவன், ஒப்பற்றவன் என்று கூறுவதுபோல், கிறிஸ்தவர்களும் ஒரு தீர்க்கதரிசியான ஈஸா நபி (அலை.) அவர்களை ஆண்டவன் எனக் கூறுகின்றனர். இவ்வாறுள்ள குற்றங் குறைகளை ஆராய்ந்து பார்க்

கப்பார்க்க இதுசமயமுள்ள நிலைமையில் அதுவும் ஆண்டவனால் அருளப் பட்டதல்லவென்பதை நிச்சயித்துக் கொண்டேன்.

கடைசியாக ஆண்டவனால் நமது நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபாரஸூல் (ஸல்.) அவர்கள் மூலம் அருளப்பெற்ற திரு வேதத்தைப் பார்க்கவேணுமென்னும் அவா எனக்கேற்பட்டது அது எனக்கு கிடைப்பதற்கு சந்தர்ப்பமில்லாது போயிற்று சுமார் 2 வருடங்களுக்குமுன் நம் மார்க்கத்தைப் பற்றி மகம்மதியர், துலுக்கர் என்ற இரு பதங்களைத் தவிர "இஸ்லாம்" என்னும் வார்த்தையைக்கூட என்காதில் கேட்டிலேன்; யாதொரு இஸ்லாமிய நூலையுங்கூட நான் பார்த்ததேயில்லை. எனக்கு இஸ்லாம் மதத்தை யறிய அவா உண்டான காரணமென்னவெனில், என் தந்தையார் தம்முடைய வாழ்நாளின் கடைசியாண்டில், இஸ்லாம் மதமே உண்மை மதமென்றும், நேரான மதமென்றும், அதைத்தழுவின், மேன்மையும் முக்தியுமடைய முடியுமென்றும் பற்பல தடவைகளில் தம் குடும்பத்தாருக்கும், இன பந்துக்களுக்கும் போதித்து வந்தார். ஆனால் திடீரென அல்லாஹுதஆலா என் அருமைத் தந்தையாரைத் தன்பக்கல் சேர்த்துக்கொண்டான். என் அன்னையும் பிதாவும் இஸ்லாத்தின் இனிய போதனைகளை அறிய யாதொரு நூற்களும் அவர்களுக்குக் கிடைக்காத காரணம் பற்றியே பரிசுத்த தீனுல் இஸ்லாத்தை அடையும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்காமற் போயிற்றென நான் கருதுகிறேன். அதிர்ஷ்டசாலியாகிய இச் சிற்றடியேனுக்கு இஸ்லாம் மதத்தைப் பற்றியறிவதற்கேதுவாக ஜனாப், மௌலா இஸ்லாம் ஹபீபுல்லா ராவுத்தர் அவர்கள் தங்களிடமிருந்த நவீஹத்துல் இஸ்லாம், கலிமா விபரம், நபிகள் திலகம், சமத்துவத் தூதர், இயற்கை மதம் முதலிய அரும் பெரும் புத்தகங்களை எனக்கு அளித்து உதவி புரிந்தார். அன்னவருக்கு என் வாழ்நாளெல்லாம் நன்றியறிதலுள்ளவனா யிருப்பேன். அப் புஸ்தகங்களை நான் கண்ணுங் கருத்துமாய் ஆராய்ச்சி செய்ததில், இஸ்லாமின் இனிய அரிய விசேஷங்களை யறிந்தேன் அதாவது, குவலயத்தின் காரிருளை நீக்கிய மெஞ்ஞானச் சுடராகிய உத்தம குணசீலர் கஸ்தூரிவாடையர் நமது நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் மூலம், அன்புடையவனால், ஆதியந்த மில்லாதவனால், அளவில்லாத வல்லபனாலருளப்பட்ட வேதமே சுத்த சத்திய வேதமென உறுதி கொண்டேன். அஃதெப்படி யெனில் நமது நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்.) அவர்கள் யாதொரு உஸ்தாதிடமும் கல்விபயிலாதிருந்தும், அவர்கள்மூலமாய் வெளியாக்கப்பட்ட வேதமானது அருளுடையோனால்தான் அளிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது நன்குபுலனாய்விட்டது நம் திருநபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் சுப்ஹானஹு தஆலாவின் கிருபையைக் கொண்டு 1350 வருஷங்களுக்கு முன் வெளியாக்கப்பட்டிருந்த இவ்வேதமானது, தற்காலநாகரீகத்தில் யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடிய விதமாய் இயற்கைக்குப் பொருந்திய விதமாய் அமையப்பட்டிருக்கிறதென்பதை நானறிந்தேன். இஸ்லாமிய மதச்சட்டங்கள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமானவை; அனுபவ சாத்தியமானவை; ராஜன் முதல் நீசன்வரையிலும், தோட்டி முதல் தொண்டமான்வரையிலும் யாவரும் எளிதில் அநுசரிக்கக் கூடியவையாக அமைந்திருப்பதைத்தெரிந்தேன் தவிர. தற்காலசமூக சீர்திருத்த வாதிகள் விரும்பும் சீர்திருத்தங்கள் யாவும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதைக்காணலாம். இதன்றி மனிதர்களுள் தீண்டாமையை யொழித்து, சமபந்தி போஜனத்தைஅளித்து மெய்யான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும், பெண்களுக்கு உரிமைகளையும் பூரணமாக அளிப்பதுடன், பல தெய்வ வணக்கம், மதுபானம், சூதாட்டம், விபசாரம் முதலிய மானிட வர்க்கத்திற்கே தீங்கிழைக்கும் தீய காரியங்களை முற்றிலும் ஒழித்து மெய்யான ஜீவகாருண்யமென்னும் நீதியையும் நியாயத்தையும் உண்மையில் போதிப்பது இஸ்லாம் தான் என்று கண்டு கொண்டேன். தவிர இஸ்லாத்தில் வேற்றுமையில்லை, கள்ளமில்லை, வஞ்சகமில்லை, ஏமாற்றமில்லை, தாழ்ந்தோரில்லை என்றும், சத்தியம், தயை, சீலம், ஒழுக்கம், அன்பு, பக்தி, ஞானம் முதலியயாவும்முற்றுமுளவென் பதையும் கண்டேன். இவ்வுலகின் கண் மானிட வர்க்கத்தினரில், தேசிய ராஜீயவாதிகள், ஆசார சீர்திருத்தக்காரர்கள் தற்கால நாகரீகத்தையும் மானிடரின் நன்மையையும் முன்னேற்றத்தையும் கருதி அவர்கள் விரும்

பும் சீர்திருத்தங்கள் யாவும் நமது பரிசுத்த தீனுல் இஸ்லாத்தில் அமைந்திருப்பதையறிந்தேன். ஆதலால் இஸ்லாம் மார்க்கமே மெய்யான—நேரான முக்தியளிக்கக்கூடியமார்க்கமெனத் தீர்மானித்து என் குடும்பத்தார் யாவருக்கும் இஸ்லாத்தின் ஞான பானத்தை புகட்ட ஆரம்பித்தேன்.

அதன்பின் அதாவது இற்றைக்கு ஒரு மாதத்திற்குமுன் (24-4-32ல்) நானும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகிய மற்றும் ஒன்பது பேருமாக உத்தமபாளையம் ஜனாப் செ. முஹம்மதுமீராராவுத்தர் அவர்களால் கலிமா சொல்லிக் கொடுக்கப்பட்டு தீனுல் இஸ்லாம் என்னும் சன்மார்க்கத்தைத் தழுவினேம். சாமுவேல்ராஜ் என்றழைக்கப்பட்ட எனக்கு முஹம்மது ஹுஸைன் என்னும் அழகிய நாமம் சூட்டப்பட்டது. நான் "லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர்ரசூலுல்லாஹி" என்னும்கலிமயெ தைய்யிபாவைச் சொன்னவுடனே என்னுடைய மனதிற்கே ஒருவிதமான குதூகலம் ஏற்பட்டது. நான்முகக்கண்ணாடியைக் கொண்டு என்பிரதிபிம்பத்தை பார்த்ததில் என்முகத்தில் என்றுமில்லாத தேஜஸ் காணப்பட்டது. நான் கிறிஸ்தவனாயிருந்தபோது செய்த பாவங்களெல்லாம் முதலாவது கலிமாவைச் சொல்ல நாவெடுக்கத் துணிந்தபோதே இறைவனால் மன்னிக்கப்பட்டது என்று அறிந்தேன்.

நான் இவ்வாறான தூய்மைவாய்ந்த சன்மார்க்கத்தைப் பின்பற்றக் காரணஸ்தர்களாயிருந்த கனவான்களே! சகோதரர்களே!! தங்களுடைய பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் வளர்பிறைபோல் ஒவ்வொரு நாளும் வளர்ந்துகொண்டு போகவும், தாங்கள் நீடூழி வாழ்கவும் எல்லாம் வல்ல நாயன் அருள் புரிவானாகவும்.

ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

தா. இ. சாத்தான்குளம் மகாநாட்டைத் திரித்துக் கூறுவதேன்?

(ஜனாப் அபுல்ஹஸன் மத்ராஸீ)

அன்புற்ற சோதரீர்!

காதியானிக் கொள்கை நம் திருமறைக்குக் கிஞ்சிற்றும் ஒவ்வாதவை என்பதை பன்முறையும் விளக்கிக் காட்டியிருக்கின்றேன். அக்கொள்கை சாத்தான் குளத்தில் ஏற்பட்டுப் பரவி வருவதுபற்றி தமிழ்நாட்டு முஸ்லிம்கள் யாவரும் கவலையுற்றிருக்கின்றனர். ஆதலின் அங்குள்ள காதியானிகளுக்கு அறிவுறுத்தி ஒழுங்குபடுத்துவான் வேண்டி அவ்வூர் முஸ்லிம்கள் மாபெரும் மகாநாடொன்றை நடத்திவைத்தனர். அம்மகா நாட்டில் விவாதித்து சத்தியமான முடிவை யாவரும் ஏற்றுக்கொள்கிறதென்று ஏற்கனவே காதியானிகள் ஒப்புக்கொண்டிருந்தும் இறுதியில் நடந்த சப்ஜக்ட் கமிட்டியில் முடிவுக்குக்கட்டுப்பட மறுத்துவிட்டனர். இது அவர்களால் ஏற்பட்ட திடும்பிரவேசமான புதுச் சம்பவமென்று நினைத்துவிட வேண்டாம். அவர்கட்கு இது பழம்பாடந்தான். விவாதித்து முடிவெடுத்துக் கொள்வோமென்று கூறுவர்; அவ்வாறு செய்ய வாருங்களென அழைத்தால் குதர்க்க வாதங்கள் செய்துகொண்டு பின்வாங்கி விடுவர். இவர்களின் குருவான மிர்ஸா குலாம் அஹ்மத் காலந்தொடுத்தே இவ்வாறுதான் நடைபெற்று வருகிறதென்பது உலகப் பிரசித்தம். அவ்வழக்கம்போல் சாத்தான்குளத்திலும் செய்துவிட்டு தப்புந்தவறுமாய் தங்கள் பழம் பாடல்களையே பாடிக்கொண்டிருக்கின்றனர்.

இச்சமயத்தில் தா. இ. ஆசிரியர்கள் காதியானிகளின் கூற்றுக்களை தலைமேல் தூக்கிப் போட்டுக்கொண்டு தங்கள் உள்ளக்கிடக்கில் மறைந்து கிடந்த காதியானிக் கொள்கையை வெளியிட முன்வந்து, காதியானிகள் இஸ்லாத்தில் ஒரு பிரிவினராகயிருக்கின்றனர்; அதிலும் சுன்னத் வல் ஜமாஅத்தைச்சேர்ந்தவர்கள்; அவர்களை காபிராக்குவதற்காக முல்லாக்கள் 500 மைல் தென்னாட்டில்

புகுந்து வீண் குழப்பங்களை விளைவித்து வருகின்றனர் என கைகூசாது வரைய முற்பட்டு விட்டனர். சாத்தான் குளத்துப் பிரச்சினை எழுந்தகாலத்து தென்னாட்டில் இக்கெட்ட கொள்கை தா. இ. ஆசிரியர்களாலேயே பரவுகிறதென அறிவிக்கப்பட்டிருந்ததைக் கண்டு சீறி விழுந்து இக்கெட்ட காதியானிக் கொள்கைக்கும் தா. இ. க்கும் எவ்வித சம்பந்தமுமில்லை; இக்கொள்கையை தா. இ. வெகு நாளாய்க் கண்டித்தெழுதி வருகிறது என அறுதி இட்டு உறுதி கூறினர். பிறகு சாத்தான் குளத்தில் காதியானிகள் விவாதிப்பதற்கு முன்வராது பின்னடைந்து போகவே, இனி தமது கொள்கை நசுக்குண்டு போய்விடுமென்பதைக் கருதியும், காதியானிகளுக்கு ஆபத்து வந்த காலத்து அவர்களுக்கு உதவி புரியவேண்டும் என்னும்ஒப்பந்தத்திற்கு அடிபணிய வேண்டுமென்பதை உத்தேசித்தும் ஆங்கு நடைபெற்ற காரியாதிகளைத்திரித்துக்கூறமுற்பட்டு "காதியானிகள் விஷயத்தில் உலமாக்கள் தீர்ப்பளித்து விடுவார்கள்; அதனை யாவரும் கேட்டுக்கொண்டு போக வேண்டுமென்று" சப்ஜக்ட் கமிட்டியில்கூறப்பட்டதாக பறை சாற்றுகின்றனர். முடிவெடுக்கும் விஷயத்தில் காதியானிகளுக்கு பற்பல வழிகள் செய்துகொடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் யாதொன்றுக்கும் கட்டுப்படாமல் நழுகிவிட்டது இன்னோருக்குத் தெரியாது போய்விட்டதேனோ?

கடாசியாக "முஹாஹிபா" என்னும் சத்தியம் செய்வதற்காக அழைக்கப்பட்டதற்கும் வழிகேடர்களான காதியானிகள் ஒப்பினார்களில்லை. விஷயமிவ்வாறு நடைபெற்றிருக்க, இதைத்திரித்து தூ. ப. தப்புந் தவறுமாய் எழுதியிருப்பதை அப்படியே தா. இ. தமது அங்கத்தில் தாங்கிநிற்பதின் இரகசியம் தானென்னே! இதுவெல்லாம் காதியானிக் கொள்கையைப் பரத்தவேண்டுமென்னும் நோக்கமேயன்றி வேரில்லை.

காதியானிகள் எம்பெருமானார் நபிகட்திலகம் (ஸல்.) அவர்களுக்குப்பின் பலருக்கும் "வஹீ" வருமென்று கூறிவருகின்றனரென்பது வெளிப்படை. தா. இ. ஆசிரியர்களும் காதியானி மதத்தைப் பிரசாரம் செய்துவருவதால் தங்களுக்கும் சாத்தான் குளத்தில் நடைபெற்ற விஷயங்களை ஜிப்ரயீல் எழுதி அனுப்பியதாக ஒரு கட்டுரை பிரசுரித்திருக்கின்றனர். ஆனால் யாருக்கும் இதுபொழுது 'வஹீ" வருவதில்லை என்பது திண்ணம். என்கிலும் சாத்தான் குளத்தில் நடைபெற்ற விஷயத்தை "ஷைத்தான்" திரித்து உண்மைக்கு மாறாக இவர்களுக்குத் தெரிவித்துவிட்டான் போலும். இவர்களும் காதியானிக் கொள்கையைத் பரத்தவேண்டுமென்னும் நோக்கங் கொண்டவர்களாதலின் ஷைத்தான் திரித்துக்கூறியது தங்கள் நோக்கத்திற் கொத்திருப்பதால் அதுதான் உண்மை எனக்கண்டு பத்திரிகையில் வரைய முற்பட்டு விட்டனர்போலும். காதியானிகள் குலாம் அஹ்மதை நபி என்று கூறி அவனுடைய சகல கூற்றுக்களையும் அப்படியே ஒப்புக்கொள்கின்றனர். இது குர்ஆனின் பஹிரங்க போதனைக்கும் ஸஹீஹான ஹதீதுகளுக்கும் முரணானதென்பது வெளிப்படை. இவ்வாறு முரண்பட கூறுவதுகொண்டு அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவரது ரசூலுக்கும் விரோதியான காபிராய் விடுகின்றனர். இவைகளை எடுத்துக்கூறி முஸ்லிம்கள் குப்ரியத்தில் போய்ச் சேர்ந்துவிடாமல் காப்பாற்றுவதற்காக முன்வரும் உலமாக்கள்மீது வசைமொழிகளைப் பிரயோகித்து 500 மைல் சென்று முஸ்லிம்களை காபிராக்கத் துணிந்துவிட்டனரென்றும்இவ்வாசிரியர்கள் குறைகூறமுற்பட்டுவிட்டனர். இவர்களது அறியாமை தானென்னே! இவர்களது பிரசாரத்தின் போக்குச்சென்றவாருதானென்னே!! பாவம் இவர்களுக்குச் சன்மார்க்கத்தின் சட்டதிட்டம் எவ்வாறு தெரியும்? இஸ்லாமென்பதென்ன? முஸ்லிமென்று யாருக்குச் சொல்வதென்பதையுங் கூடத் தெரியாது ராப்ஜீகளும் முஸ்லிம்கள் தான் என்று சமீபத்தில் கூறியிருக்கின்றனர் பாவம்? இவர்களுக்கு காதியானிகளால் இயற்றப்பெற்ற புத்தகங்களைத்தவிர வேறு ஒன்றும் தெரியாது. அப்புத்தகத்தில் காதியானிகள், முஸ்லிம்களென்று எழுதப்பட்டிருப்பதால் அதிலுள்ளவைகளைத்தானே இவர்கள் சொல்லுவார்கள். அதனால் இவர்களது அறியாமைக்கு வருந்த வேண்டியதாக யிருக்கின்றது. ஆனால் இவர்களில் ஹாபீஸ் என்பாரோ கொஞ்சம் தெரிந்தவராயிற்றே அவராகிலும் அவைகளைக் கவனித்து காதியானிக் கொள்கையை விடுத்து சன்மார்க்கத்தை எடுத்

துறைக்க லாகாதா வென கேழ்க்கப் படின், அவரால் ஒன்றும் செய்ய முடியாது; அவர் பா. தா. வின் கருவியாக அமைந்து விட்டதால் அவர் சொல்லுக்குத் தலை சாய்க்கும் தம்பிரானுகை ஆய்விட்டார். அதனால் பா. தா. வின் நோக்கத்திற்குமாருக இவரால் ஒன்றும் செய்துவிட முடியாது என்றுதான் பதில் கூறமுடியும். பாவம்! என்ன செய்வார்?. தவிர உலமாக்கள் காதியானிகள்மீது குப்ர் பத்வா கொடுக்க முற்பட்டுவிட்டனர்; நபிகள் திலகம் (ஸல்.) அவர்களும் அவர்களது சஹாபாக்களும் இவ்வாறெல்லாம் செய்யவில்லை என்று இவ்வாசிரியர்கள் அறியாத்தனமாக எழுதிக் கூக்குரல் போட்டு வருகின்றனர். உண்மை அவ்வாறன்று எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் காலத்திலேயே முஸைலமத்துல்கத்தாப்'' என்பான் தன்னை நபி என்று கூறி எம்பெருமானுர் (ஸல்.) அவர்கட்கும் அது விஷயமாய் நிருபம் வறைந்தனுப்பினுன். பெருமானுர்(ஸல்.) அவர்கள், "அவன் சபிக்கப்பட்ட காபிராய் விட்டான்'' என்று அறிவித்து விட்டார்கள். அதுசமயம் அவர்கள் விண்ணுலகமெய்வதற்குள்ள கடாசி நேரமாகயிருந்ததால் அவன்மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள முடியாது போயிற்று. அதன் பின்னர் அபூபக்ர் ஸித்தீக் (ரலி.) அவர்கள் கலீபாவானவுடன் அவன்மீது படை எடுத்து அவனையும் அவனைச்சேர்ந்தவர்களையும் கொன்று விட்டார்கள். இச்சரித்திரங்களெல்லாம் இந்த மு........கா. களுக்கு எங்கிருந்து தெரியப்போகிறது. தெரிந்தால்லவோ காதியானிக் கொள்கையைப் பரத்தாமலிருப்பர்.

ஆகவே தா. இ. ஆசிரியர்கள் தாங்கள் நீண்ட நாளாகவே மறைத்து வைத்திருந்த கெட்ட கொள்கைகளைப் பரத்துவதற்காகவும், தாங்கள் சிலோன் செல்ல முயற்சித்த போது ஏற்பட்ட தடையை நீக்க அரும்பாடு பட்ட காதியானிகளிடம், அவர்களுக்கு ஆபத்து வருங்கால் உதவிபுரிவதாக வாக்களித்திருந்ததை நிறைவேற்று வதற்காகவும், சாத்தான் குளத்திலுள்ள தமது அபிமானிகளின் தயவை நாடியும் தான் சாத்தான் குளத்தில் நடைபெற்றவைகளை உண்மைக்கு மாற்ற மாய்த் திரித்துக் கூற முற்பட்டிருக்கின்றன ரென்பது நன்கு புலனுகின்றது.

"ஸன்னது" ரத்துச்செய்யப்பட்டது உண்மையே

(எம். வி. அப்துல்ஜப்பார் சாஹிப் வரைவது)

நேயன்மீர்!

தா. இ. ஆசிரியர் ஹாபிஸ் என்பார் உயர்தர கலாசாலையாம் வேலூர் மத்ரஸயெ பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் கல்வி பயின்றவரென்பது யாவருமறிந்ததே. அவர் தாருல் இஸ்லாம் ஆபீஸில் வேலைக்கமர்ந்த காலமுதற் கொண்டே முஸ்லிம்கள் அவருடைய விஷயத்தை கவனித்து வருகின்றனர். பா. தா. அஹ்மதிய சங்கத்தாரிடம் பற்பல சமயத்திலும் பலவகையிலும் ஊதியம் பெற்று அஹ்மதிய மிஷனரியாக யிருந்து அஹ்மதியர்களின் பைஅத் நாமாவில் கையொப்பமிட்டு தென்னுட்டிலும் அஹ்மதிய இயக்கத்தைப் பரப்புவதற்காக "தத்துவ இஸ்லாம்'' என்னும் பெயரால் ஒரு மாசிகையை ஆரம்பித்து இது சமயம் "தாருல் இஸ்லாம்'' என்னும் பெயரால் வாரப்பத்திரிகை ஒன்றை நடத்தி வருகின்றார். அப்பத்திரிகை மூலம் அஹ்மதிய கொள்கைகளையும் அவர்களின் அபவாதங்களையும் தென்னுட்டில் பரத்தி வருகின்றார். காதியானி முஹம்மத் அலியால் குர்ஆன் தர்ஜுமா வென்று எழுதப்பட்ட நூலை அதிலுள்ள மார்க்க முரண்களுடன் அப்படியே காப்பி அடித்து தன்னால் இயற்றப்பெற்ற தென்று ஜவாஹிருல் புர்கான் என்ற தமிழ்மொழி பெயர்ப்பை வெளியிட்டார். அதிலுள்ள குப்ர்யத்தான கொள்கைகளை எல்லாம் உலமாக்களும் முஸ்லிம்களும் பொது ஜனங்கள்பால் எடுத்துக் காட்டி அதனை மறுத்து வருகின்றனர்.

இந் நிலைமையில் ஹாபிஸ்...........என் பார் தா. இ. ஆபீஸில் வேலைக்கமர்ந்தார். உலமாக்களால் தவறெனத் தீர்மானிக்கப் பட்ட ஜவாஹிருல் புர்கானைப் போற்றிப் புகழ்ந்து சரி என்று மதிப்புரை எழுதினர். அதுபொழுது அவர் அவ்வாபீஸில் பொறுப் பற்ற மொழி பெயர்ப்பாளரா யிருந்தார். காலஞ் செல்லச் செல்ல தா. இ. யின் நோக் கத்திற் கிணங்க சிற்சில கட்டுரைகளும் பத் வாக்களும் அவர் பெயரால் வெளிவரலாயின. பா. தா. வுக்கு பலவாற்றாலும் எதிர்ப்புகள் அதிகப்படவே தம்மை அரபி, உர்து முத லிய பாஷா ஞானமற்ற தமிழ் பண்டித ரென்று யாவரும் மதிக்கின்றன ரென்பதை யுணர்ந்து ஹாபிஸை தம் பத்திரிகைக்கு முதன்மையான ஆசிரியராக ஆக்கி பாக்கி யாத்துஸ்ஸாலிஹாத் மத்ரஸாவில் உயர்தரக் கல்வி பயின்ற மௌலவீ பாஜில் தம் பத்திரி கைக்கு முதல் ஆசிரியராக அமைந்திருப்ப தைப் பெருமையாகக் கொண்டார். மேலும் தம்முடைய பிரசுரங்களையும் குர்ஆன் வியாக் கியானங்களையும் மௌலவீ பாஸில் பாக்கவீ கவனித்து வருகிறா ரென்று பறை சாற்றி னர். ஜவாஹிருல் புர்கான் நான்காவது வெளியீட்டை (வழி கேட்டை) ஆக்கியோர் களில் ஹாபிஸும் சேர்ந்து வெளியிட்டார். அவ்வெளியீட்டைக் கவனிக்கப் புகின் அது வும் பழைய காதியானி வியாக்கியானத்தின் காப்பி அடிப்பாகவே காணப்பட்டது.

இத்தியாதி காரணங்களால் ஹாபிஸ், பா. தா. வின் கொள்கைகளில் காலக்கிர மத்தில் சிக்குண்டு விட்டாரென்று சிலர் கரு தினர். இக்கொள்கைகள் முரணானதாக இருக்குமாயின் ஒரு பாஸில் பாக்கவீ சாஹிப் இதில் சேர்ந்து கொண்டிருப்பாராவென்று மற்றுஞ் சிலர் கருதினர். வேலூர் மத்ரஸா வில் கல்வி பயின்ற ஹாபிஸ் இவ்வாறு தப் பும் தவறுமாகக் கூறிக்கொண்டிருப்பா ராயின் அவருடைய ஆசிரியர்கள் அவரைக் கண்டிக்காமல் விடுவார்களாவென்று வேறு சிலர் கருதினர். இவ்வாறு இவரைக்கொண்டு பொது மக்கள் ஏமார்ந்து போகக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டதால் தேயத்தின் பற்பல பாகங்களிலுமிருந்து வேலூர் மத்ர ஸாவின் நாஜிர் அவர்களுக்கு ஹாபிஸின் தவ றான கொள்கைகள் எடுத்தறிவிக்கப்பட்ட டது. அதனால் மத்ரஸாவின் ஆசிரியர்கள் தா. இ. யின் பற்பல பிரதிகளையும் அவர் களால் வெளியிடப்பெற்றுள்ள பல நூற்களை யும் தருவித்துப் பார்வையிட்டனர். அதில் சன்மார்க்கத்திற்கு விரோதமான முரண் பாடான அநேக விஷயங்களைக் கண்டு கொண் டார்கள். அதனால் அவரை மத்ரஸாவிற்கு அழைத்து அவர் செய்திருக்கும் தவறைக் குறித்துக் கண்டிக்க வேண்டு மென்று சென்னையிலிருக்கும் ஆலா ஹஸ்ரத் கிப்லா அவர்களுக்குத் தெரிவித்தார்கள். அதன்படி கனம் நாஜிர் அவர்கள் ஹாபிஸை மத்ரஸா விற்கு வரும்படி உத்திரவிட்டார்கள். ஹாபிஸ் உடனே நாஜிர் அவர்களைக் கண்டு மத்ரஸாவில் பல தேய மாணவர்களிருக்கின் றார்கள்; என்னுடைய எழுத்துக்களில் ஏதா கிலும் தவறுகளிருக்குமாயின் மாணவர் கள் மூலம் பலதேயங்களுக்கும் பரவி விடும் ஆதலின் இவ்விடத்திலேயே தாங் கள் என் தவறுகளை எடுத்துக் காட்டினால் அதைத் திருத்தி ஒழுங்கு செய்துவிடுகின் றேன் எனக் கேட்டுக்கொண்டதற் கிணங்க, ஜனாப் நாஜிர் அவர்கள் மத்ரஸாவின் ஆசிரி யர்களை சென்னைக்கழைத்து ஹாபிஸையும் தருவித்து "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங் கத்தார் மூலம் தா. இ. வும் மற்றும் நூற் களிலுமுள்ள தவறுகளை எடுத்துக் காண்பிக் கும்படி செய்தார்கள். குறிப்பாய் ஹாபிஸ் சம்மந்தப்பட்டு எழுதிய ஜவாஹிருல்புர்கான் மூன்றாவது நான்காவது வெளியீடுகளிலுள்ள மாபெருந் தவறுகளை மத்ரஸா ஆசிரியர்கள் ஹாபிஸுக்குத் தக்க ஆதாரத்தோடு எடுத் துக்காட்டினார்கள். அதற்கு ஹாபிஸ் மறு மொழி சொல்லமுடியாது தவறென ஒப்புக் கொண்டு அவைகளைக் கூடியசீக்கிரம் திருத்தி ஒழுங்கு செய்துவிடுவதாக ஏற்றுக்கொண் டார். அதுசமயம் ஜவாஹிருல் புர்கானின் முந்திய இரண்டு வெளியீடுகளிலிருந்து அநேக தவறுகள் எடுத்துக் காண்பிக்கப்பட்ட பொ ழுது, "அவை தவறுகள்தான்; அவற்றிற்கு யான்ஜவாப்தாரியன்று. அவை தாவூது சாவால் எழுதப்பட்டவை" யெனக் கூறினர்.

அதில் இவ்வளவு தவறுகளிருக்கும்போது தாம் அதில் சேர்ந்துகொண்டு அவைகளைப் பற்றி ஒன்றுங்கூறாமல் இருப்பதைக்கொண்டு பொது ஜனங்கள் ஏமார்ந்து மோசம் போய்

விடுவார்களல்லவா? அதனால் மத்ரஸாவின் பெயருக்குக் குறைவு ஏற்படுமே, மத்ரஸா உமக்குச் செய்திருக்கும் நன்றிக்கு நீர் உபகாரம் செய்யாவிடினும் அபகாரம் செய்யாமலாவது இருக்கவேண்டாமா வென மத்ரஸா ஆசிரியர்கள் கூறினார்கள்.

அதற்கு ஹாபிஸ் "நானும் தாவூதுசா விஷயத்தில் அதிகப் பிரயாசை எடுத்துத்தான் வருகின்றேன்; அவரை எப்படியாவது நேர்வழிக்குக் கொண்டு வருவதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகிறேன்" எனத் தெரிவித்தார்.

"தாம் மார்க்கம் படித்த மௌலவியாக யிருப்பதால் அவ்வாறு செய்வது உம்மீது கடமையாகும்; இனி இவ்வாறெல்லாம் தாம் எழுதக்கூடாது; முன்னால் தவறாக எழுதியவைகளை எல்லாம் ஒரு மாதத்திற்குள் திருத்தி ஒழுங்கு செய்துவிட வேண்டு" மென்று மத்ரஸா ஆசிரியர்கள் தாக்கீது செய்தார்கள். அவ்வாறு திருத்தி ஒழுங்கு செய்வதாக ஒப்புக் கொண்டு இப்போது நடந்த விஷயத்தைப்பத்திரிகையில் எழுதாமலிருக்கும்படி நாஸிர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க நாஸிரவர்களும் இவ்விஷயத்தைப் பத்திரிகையில் எழுத வேண்டாமென சங்கத்தினருக்கு உத்தரவிட்டார்கள். அதற்குப்பின் மத்ரஸா ஆசிரியர்களிடம் வாக்களித்த பிரகாரம் ஹாபிஸ் நாளதுவரை திருத்தி ஒழுங்குப்படுத்தாது பழைய கொள்கை யிலேயே இருந்து வருகிறாரென்பது வெளிப்படை.

சாத்தான்குளத்தில் காதியானிகள், குலாம் அஹ்மதை நபீயென்று பஹிரங்கமாகக் கூறியும், முஸ்லிம்களைப் பின்பற்றித் தொழக் கூடாதெனக்கருதி தங்களுக்கென ஒரு தனி ஜமாஅத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களை முர்தத்துகளென்று கூறலாகாது; அவர்களும் முஸ்லிம்கள் தான் என்று பா. தா. வுடன் சேர்ந்துகொண்டு ஹாபிஸும் கூற முற்பட்டுவிட்டார். இவரால் நாளுக்குநாள் வழிகேடுகள் அதிகரித்துப்போவதை அறிந்து இவருக்கு மத்ரஸாவால் அளிக்கப்பட்டிருக்கும் ஸன்னதைக் கொண்டு மகாஜனங்கள் ஏமார்ந்து காதியானிக்கொள்கையில் சிக்குண்டு விடுவரென்பதைக் கருதி அவருக்களிக்கப்பட்டிருக்கும் ஸன்னதை ரத்து செய்துவிடும்படி பலபாகங்களிலிருந்து பொது ஜனங்களும் உலமாக்களும் மத்ரஸாவின் நாஜிர் அஃலா ஹஸ்ரத் கிப்லா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். கனம் ஆலா ஹஸ்ரத் அவர்கள் ஹாபிஸின் நடத்தையைப் பல சமயமும் கவனித்து வந்திருப்பதால் இவருடைய மார்க்க முரண்களையுணர்ந்து இவரது கூற்றுக்களுக்கும் மார்க்க முரண்களுக்கும் இவருக்கு மத்ரஸாவால் அளிக்கப்பட்ட ஸன்னதை ஆதாரமாகக் கருத வேண்டாமென்று பொது ஜனங்களுக்குத் தெரிவித்து விட்டார்கள்.

இவ்வாறே 'மிஸ்ரி'லுள்ள ஜாமிஉல் அஜ்ஹரிலும் கல்விபயின்று தேர்ச்சிப் பெற்று அதே மத்ரஸாவில் ஆசிரியராக அமர்ந்து கல்வி போதித்து வந்தவர் இடைகாலத்தில் அவரது கொள்கை மாறுபட்டு மார்க்கமுரணான விஷயங்களை மாணவர்களுக்கிடையே பரத்த ஆரம்பித்ததை முன்னிட்டு அல்அஜ்ஹர் கலாசாலை ஷெய்கு அவர்கள் அவருக்களித்திருந்த 'ஸன்னதை' ரத்துச் செய்ததோடு ஆசிரியர் பதவியை விட்டும் நீக்கிவிட்டாரென்ற விபரம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

விஷயம் இவ்வாறிருக்க, 3-6-32-ல் வெளியான தா. இ. ல் "உள்ளுணர்ந்தோன்." 'உண்மை முஸ்லிம்' என்னும் புனைப்பெயர்களுடன் இருகட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் உள்ளுணர்ந்தோன் என்பானுக்கோ, உண்மை முஸ்லிம் என்பானுக்கோ எவ்வித சம்மந்தமும் இல்லாத பல விஷயங்களையும், ஹாபிஸின் ஸன்னது ரத்துச் செய்யப்பட்ட விஷயத்திற்கு எவ்வித சம்பந்தமு மில்லாத பலவிஷயங்களையும் தாறுமாறாகக் கேட்டு விடுத்துள்ள விதண்டாவாதக் கட்டுரைக்கு அவ்வறிவிலிகளாம் வியாச கர்த்தாக்களைப் பொருட்படுத்தி மத்ரஸா நாஜிர் அவர்களோ ஆசிரியர்களோ பதில் கூற மாட்டார்களென்பது திண்ணம். சூரியனைப் பார்த்து சுணங்கன் குறைத்தால் யாருக்குக் கேடு என்பதை உலகம் நன்கறியும். ஆனதுபற்றி அவ்வறிவிலிகளுக்கு புத்தி புகட்டுவான் வேண்டி ஒரு சிலவிஷயத்தை மட்டும் கீழே குறிப்பிடுகின்றேன்:—

"உள்ளுணர்ந்தோன்" ஹாபிசுக்கு அளிக்கப்பட்டிருந்த ஸன்னதை வாங்கிப் பார்த்து

யாது. இறைவன் தன் கிருபா நோக்கத்தி ஞல் அதில் வதியும் ஜனங்களுக்கு முற்கூறப் பெற்றது போல் கண்ணியம், வியாபாரப் பிரியம் இவைகளை யீந்து அவைகளின் மூலம் அன்னரைக் காத்து வருகின்ருன். இன்றேல் அன்னர் தமது ஊண்வகைகளைத் தேடிக் கொள்ள முடியாமற்போம். எனவே, "அவர்களுக்குப் பசிக்குப்பின் உணவளித்தான்" என்றெடுத்தோதுகின்ருன்.

இறுதியில் "அவர்களைப் பயத்தைவிட்டும் காப்பாற்றினுன்" எனக் கூறுகின்ருன். அராபியர்கள் சண்டை சச்சரவுக்குப் பேர் சிறந்தவர்கள். எனினும் கஃபாவைச் சுற்றி ஹரம் உடைய எல்லேக்குள் சண்டையை நிறுத்திவிடுவர். இவ்விதம் அவ்வீட்டின் காரணமாய், இதனைச் சுற்றி வசிக்கும் குரைஷ்கள் சண்டையின் பயமற்றிருந்தனர். தவிர இதற்கு முன்னுள்ள அத்தியாயத்திற் கூறப் பெற்றிருக்கும் யானைச் சண்டையை விட்டும் இவர்களை இறைவன் காத்தருளினுன். இவர்கள் வியாபாரத்தி...ஞர். இந்த... செய்யுங்கால், 'கஃபாவி... ...கள் முதலிய இவர்களை வழிப்பறிக் கொள்ளைக் க... அணுகுவதில்லை. இத்தியாதி 'பயங்கரமான காரியங்க'ளைவிட்டும் காப்பாற்றிய இறைவன் என்பதே இதன் கருத்து. இப்ராஹீம் (அலை.) அவர்கள் "நாயகா! இப்பட்டினத்தை கார்மான முள்ளதாக்குவாயாக!" என துஆக் கேட்டிருப்பதே இதன் காரணமாம். சிலர் "குஷ்டம் என்னும் பயங்கரநோயை விட்டும் கார்மான மளித்தவன்" எனவும் இதற்குப் பொருள் கொள்வர். நீண்ட கால அனுபவமும் இதனை மெய்ப் படுத்துகின்றது. ஹரமில் வசிப்பவர்களை இந்நோய் அணுகுவதில்லை. இன்னும் சிலர் "அறியாமை என்னும் பசிக்குப்பின் இஸ்லாம் என்னும் உணவையளித்தவன். வழிகேடு என்னும் பயத்தைவிட்டும் நல்வழியைப் போதிப்பதனல் காத்தவன்" எனவும் பொருள் கொள்கின்றனர். வல்லாஹு அஃலம்.

நாயக வாக்கியம்.

"உமக்கு என்னைச் சேர்ந்திருப்பது பிரியமாயின், இகலோகத்தில் உமக்குப் பிரயாணியின் கட்சோதத் தளவே போதும். சீமான்களின் கூட்றேவை விட்மே் தவிர்ந்து கோள்ளும். ஒட்டுப்போடப் பெருதவரை ஒரு துணியை எடுத்து விடாதீர்"

இஸ்லாமின் துவக்கத்தில் நம் பெருமானர் (ஸல்.) உடைய ஜீவனம் மிகவும் எளிதாயிருந்தது. எனினும், பெருமானர் (ஸல்.) அவர்களுக்கு இகலோகத்தின் பிரியமே இருந்ததில்லை. இதனலேயே, இத்திருமொழியை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி.) அவர்களைப் பார்த்து அறைகின்ருர்கள். இதன் முதற் பகுதியின் கருத்து, உமக்கு என்னுடன் காலங்கழிக்கப் பிரியமிருக்குமாயின், இகலோக வார்ழ்க்கையில் பிரயாணியின் கட்டமுதின் அளவே நீர் எடுத்துக் கொள்ளலாம் என்பதே. இகலோக வஸ்துக்கள் மனிதனின் உள்ளத்தைத் தம் பக்கம் ஈர்த்து, தான் சிருட்டிக்கப் பட்டிருக்கும் நோக்கத்தை மனிதன் மறந்துபோமாறு செய்கின்றன. மனிதன் இவ்வுலகத்திலிருந்து பரலோகத்திற்குப் பிரயாணம் செய்ய வேண்டியோனயிருக்கின்ருனதலின், இங்ஙனம் இவ்வுலக வாழ்வில் மதிமயங்கிக் கிடப்பது கூடாக் காரியமே. நம் பெருமானர் (ஸல்.) அவர்களின் வாழ்க்கை நம் நேத்திரங்கள் முன் இன்றும் இலங்குகின்றது. இஸ்லாமின் துவக்கத்தில் பெருமானர் (ஸல்.) அவர்கள் மிகவும் கஷ்ட நிலையிலிருந்தார்கள். கடைசியில் அரசாங்கமே அவர்கள் கைவசமானது. அப்பொழுதும் அவர்கள், எளியோர்களுக்குக் கொடுத்தார்களே யொழிய, தாம் இவைகளைக்கொண்டு சுகமே காலங்கழித்தார்களல்லர். இதனல் தெரிய வருகின்றதென்னை? பெருமானர் (ஸல்.) அவர்கள் ஏழையாயிருந்ததால், இவ்விதம் இகலோகத்தை வெறுத்தார்களல்லர். மேலும் அவர்கள் அரசராயிருந்தபொழுதும்

... பரலோக யாத்தி... விளைப்பதா யிருப்பதினி... அவர்களுக்கு இகலோகம் வெறுப்பா யிருந்தது. எனவே, லித்தீகா (ரலி.) அவர்களை விளித்துக் கூறுகின்றார்கள்:— நீங்கள் பொருளைத் தேடுங்கள். எனினும் அதின் பிரியத்தில் மயங்கி விடாதீர்கள். நீங்கள் எத்தகைய சீமானை யிருப்பினும் ஒரு வழிப்போக்கனைப் போன்றே இருக்கக் கடவீர். இவ்வுலகத்தைத் தங்கியிருக்கும் சத்திர மென மதியுங்கள்.

இரண்டாவதாக, பெருமானார் (ஸல்.) சீமான்களுடன் கலந்திருப்பதைக் கண்டித்திருக்கின்றார்கள். அவர்களிடம் கலந்திருப்பதில் அவர்களைப் போன்று நாமும் இருத்தல் வேண்டும் என்னும் எண்ணமே உதிக்கும். அதன் மூலம் இறைவனை மறந்து இகத்தைச் சம்பாதிப்பதிலேயே கருத்து முழுமையும் திரும்பி விடவும் கூடும். மேலும், அவர்களில் அநேகர் தற்பெருமை, அகங்காரம், கர்வம் உடைத்தாயிருப்பது கண்கூடு. அவர்களுடன் கலந்திருப்போருக்கும் இத் தீய பழக்கங்கள் அதிசீக்கிரம் படிந்து விடுகின்றன.

இறுதியாக, பெருமானார் (ஸல்.) "ஒட்டுப் போடாதவரையில் ஒரு துணியை விலக்கி விடல் கூடாது" எனக் கூறி யிருக்கின்றார்கள். ஒட்டுப் போட்ட ஆடைகளை யணிதல் பணி வைத்தரும். கர்வத்தை யகற்றும். இவை ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமாய் வேண்டி யிருக்கும் சற்குணங்களாம். ஒட்டுப் போடப்பட்ட ஆடையை யணிவது தனது மதிப்புக்குப் பங்கம் விளைக்கும் என்னும் எண்ணத்துடன், ஜவுளிக்கடைகளில் கடன் பட்டுத் திரியும் அலங்காரப் படாடோபப் பேர்வழிகள் பெருமானார் (ஸல்.) அவர்களின் இத்திருப் போதனையைச் சற்றே கவனிப்பார்களாக! தமது மனைவி, மக்கள் ஆடையின்றித் தவிக்கும் நிலைமையில், தாம் மட்டும் அலங்கார ஆடையணிந்து, கடன் பட்டுத் திரியும் துர்ப்பாக்கியவான்களுக்கு இந்த அமுத மொழி அரிய அவிழ்தம் அன்றோ?

சுருங்கக் கூறுமிடத்து, ஒரு மனிதன் எத்தகைய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை இப்பொன் மொழி எடுத்தோதுகின்றது. இதன்படி யொழுகும் பாக்கியத்தை யாவருக்கும் இறைவன் அளிப்பானாக!

நபி பெருமானவர்களின் திருமொழிகள்.

கல்வி.

(1) (மார்க்க விஷயங்களை யறியாத) ஆயிரம் ஆபித்களை (வணக்கவாளிகளை) விட மார்க்க விஷயங்களை யறிந்த ஒருவன் ஷைத்தானுக்கு அதிகக்கடுமையானவனாயிருக்கின்றான்.

(2) பூரணச்சந்திரனுக்கு நக்ஷத்திரங்களின் மத்தியில் எவ்வளவு மகிமையுண்டோ, அவ்வளவு மகிமை ஆலிமுக்கு (கற்றவனுக்கு) கல்லாத ஆபிதுகளுக் கிடையில் உண்டு. நபிமார்களின் வாரிஸ்களாக ஆலிம்கள் இருக்கின்றார்கள். தீனாரையும், திர்ஹத்தையும் (இருவித அரபிய நாணயங்கள்) நபிமார்கள் விட்டுப் போக வில்லை; இல்மை(கல்வி யறிவை)த் தான் அவர்கள் விட்டுப் போனார்கள். அதை எவன் பெற்றுக் கொண்டானோ, அவன் பெரும் பாகத்தைப் பெற்றுக் கொண்டான்.

(3) இல்மைத் தேடுவதற்காக எவன் வெளியில் புறப்பட்டானோ, அவன் திரும்பி வரும் வரையில் ஆண்டவன் பாதையில் செல்கின்றவனாகின்றான்.

(4) அறிவான விஷயம் மூமினுடைய தவறிப்போன பொருளாயிருக்கும். (அது) எங்கு கிடைப்பினும், அவன் அதற்கு உரியனாவான்.

வணக்கம்.

(1) தொழுகையைச் சரியான நேரத்தில் நிறைவேற்றுவதும், அதன் பின் தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிவதும் ஆண்டவனுக்கு மிகவும் பிரியமான கருமங்கள்.

(2) உங்கள் குழந்தைகள் ஏழுவயதுப்பருவமடைந்தவுடன் தொழும்படி அவர்களுக்குக் கட்டளை யிடுங்கள். பத்தாவது வயதை யெய்தியபோது தொழும்படி அடியுங்கள்.

(3) நீங்கள் பள்ளிவாசலி லிருக்கும் போது தொழுகைக்காக பாங்கு சொல்லப்படுமானால் தொழுகையை நிறைவேற்றுவதற்கு முன் பள்ளிவாசலை விட்டும் வெளிப் போகாதீர்கள்.

(4) அல்லாஹ்வை நீ பார்ப்பது போல் வணங்குவதே நீ அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவ தாகும். நீ அவனைப் பார்க்கக் கூடாது போனாலும், அவன் உன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதில் சந்தேகமில்லை.

حفاظة الإسلام مدراس

நமது ஆண்டு நிறைவு.

நமது சங்கம் நிறுவப்பெற்று ஓராண்டுக் காலம் நிறைந்துவிட்டதோடு, இதன் முதலாண்டு நிறை விழாவும் சென்ற 9-11-30-ல் இனிது கொண்டாடப்பெற்றது. நிகழ்ச்சிகள் பிறிதோரிடத்திற் பிரசுரித்துள்ளமை காண்க. நமது சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும், இதனால் நம் சமூகத்திற்கும் பொதுஜனங்கட்கும் விளையக்கூடிய உயரிய நலன்களைப்பற்றியும் நாம் பன்முறையும் நம் பத்திரிகை வாயிலாகவும், மேடைகள் வாயிலாகவும் எடுத்துரைத்துள்ளோம்; இதனை நம்மவரும் நன்கறிவர்.

நிற்க; மேனாடுகளில் கிறிஸ்துவ மக்கள் கீணாடுகளைக் கரையேற்றிக் காப்பாற்றக் கிறிஸ்துவ மதமும், அதன் பிரசாரமும் முற்றிலும் வேண்டற்பாலது என்று பரவிய முறையில் பிரசாரம் புரிந்தும், சித்திரக் கட்டுரைகள் புனைந்து விடுத்தும், புத்தகங்கள் வரைந்தும், பணம் பறித்து, அவ்வாறு கிடைத்த பெருமிதமான பொருளாதாரத் திடத்தால், நம் இந்தியாவிலும் மற்றைப் பகுதிகளிலும் 'மிஷின்'களை இயற்றி, பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் முதலியவற்றை நிறுவி, மாதா கோயில்கள் புதுக்கி, தம் மதத்திற்கும் கொள்கைகட்கும் அரசியல் உரிமைகட்கும் ஆக்கமும் சனக்கட்டும் வளர்த்து வருகின்றனர். இந்திய... நாகரிகம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றை நவ நாகரிக மேனாட்டார் கண்டு மனமிரங்கும் முறையில் இக் கிறிஸ்துவ 'மிஷினரி'கள் எடுத்துக் காண்பித்து வருவதால், மேனாட்டுச் செல்வர்கள் பலர் உ... உய்த்துணராத லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் பொருளுதவி செய்து வருகின்றனர். நமது அரசாங்கமும் அம் மதத்தையே சார்ந்துள்ள வாற்றால், இவர்கட்கு எல்லா வசதிகளும் அளித்துவருகின்றது. எனவே, பரவிய பிரசாரத்தாலும், மிகுந்த பொருளாலும், வலிய அரசாங்க உதவியினாலும் இந்நாட்டில் கிறிஸ்துவர்கள் தங்கள் மதத்திற்கு நாளுக்கு நாள் வளப்பத்தைத் தேடிக் கொள்ளுகின்றார்கள். கிறிஸ்துவ மதம் ஒன்று மட்டும் அரசாங்க உதவியோடு இந்நாட்டில் தலையிடாதிருப்பின், இந்நாடு இற்றைக்கு முஸ்லிம் நாடாகவே இலங்கும் என்பதற்கு எட்டுணையும் ஐயமின்று. ஆதலின், பிற மதங்கட்கு பொருளும், வலிமையும், ஊக்கமும் மிகுந்த சனத்தொகையினர் வேண்டிய துணைகளைச் செய்ய, நம் உண்மைச் சன்மார்க்க மதத்திற்கு அத்துணை உதவியைக் காண்கிலேம். பிறமதத்தினர் திறன்மிக்க போட்டி ஒரு புறமிருக்க, நம் மதத்திற்குள்ளாகவே பல சுழன்மாயக்காரர்கள் விளைக்கும் இன்னல்கள் அளவிடற்பாலனவன்று. நம் மதத்தினர் என்னும் பெயர் ஏந்தி நின்று, ஈசா (அலை) இறந்தார்கள் என்பாரும், உருவப்படம் வேண்டும் என்பாரும், பிக்ஹு சட்டங்கள் உள்ளவாறே ஏற்றற்கு இசைந்தன வாகா என்பாரும், கோஷா முறை கொடிது என்பாரும், சுருங்கக் கூறுமிடத்து நம் மதத்திற்கு அடிப்படையான கொள்கைகளிலேயே ஆழம் பறிப்பாரும் மலிந்துவிட்டனர். நவ நாகரிகத்தை நிலைநாட்டவும், பழமை தங்கிய கொள்கைகளை

... றவுப பயிற்சியால் சீர்தூக்கிப் ...த்து அவைகளை இழித்துக் கூறவும் நம் மதத்தினராகக் கூறும் சிலரே தலைப்பட்டுவிட்டனராதலின், நம் தூய இஸ்லாமுக்கு பாது...ாவை வேண்டாம் என்று யாரே கூறத் துணிவ[illegible]ப்பு வேண்டுவது அவசியம் என்பதை [illegible]சமுகம் நன்கறியும். இதற்கோர் சங்கம் வரையறையான திட்டங்களோடுஇருத்தல் வேண்டும் என்பதையும் நன்கறியும். இத் திட்டங்களை ஈடேற்றப் பொருள் வசதிவேண்டும் என்பதை மட்டும் நம் சமுகம் நன்கு அறியவில்லை என்றே நாம் வருத்தத்தோடு கூற வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நம் சங்கம் தலையெடுத்து ஓராண்டுக் காலந்தான் ஆயது. எனினும், நம் சங்கம் இதுகாறும், இச் சொற்பக்காலத்தில், ஆற்றியுள்ள அரும்பெரும் சேவைகளை யாமே எடுத்தோதப் புகின் அத்துணைச் சிறப்புடையதாகாது. (இதனை இச்சங்க 'றிப்போர்ட்' டில் காண்க) நாம் இதுகாறும் ஆற்றிய சேவை நம் அளவு, ஆற்றல் இவைகட்குப் பெரிதே எனினும், இனி அடுத்த ஆண்டுகளில் செய்யக் கருதியிருக்கும் சேவைகளோடு ஒப்பு நோக்குமிடத்துச் சிறிதே என்று கூறலாம். இருப்பின் என்ன? கடந்த ஆண்டின்கண் சங்கச் சந்தா வசூல் வருவாய் சிலவிற்குப் போதிய அளவுடையதாயில்லை. எனவே மூலதனத்திலிருந்தும் சொற்பத்தொகையை நாம் கையாடநேர்ந்தமை நமக்கும் நம் சமுகத்திற்கும் வருத்தத்தை அளிக்கக் கூடியதாய் இருக்கின்றது. போதிய சந்தா வருவாய் இன்றி மூலநிதியினின்றே ஆண்டுதோறும் செலவிடும் நிலைமைக்கு நம் சமுகம் பொறுப்பேற்காது என்றே நாம் நம்புகின்றோம் எனினும், நம் சமுகத்திற்கு ஓர் இருப்புக் கவசம்போன்ற இச்சங்கத்தைப் பொருளுதவி இல்லாமல் துருப்பிடித்து போமாறு நம்மவர்கள் செய்யாது இனி முன்வருதல் வேண்டும். நம் மார்க்கத்தில் பக்தியுடைமைகொண்ட ஒவ்வொரு உண்மை மூமினும் இச்சங்கத்தைத் தன் சங்கமாகக் கொள்ளுதல் வேண்டும். பெரும்பான்மையான மக்களாதரவின்றி எச்சங்கமும், சில முக்கிய பணக்காரர்களைக் கொண்டு நீடித்து நடைபெறும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது; நடைபெறுமாயுனும் அதனால் பெருமையுமின்று. நம் சமுகத்தார் இம் மாகாணத்தில் சிறந்த வணிகர்களாகவும், பணக்காரர்களாகவும், சமீன்தாரர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நம் மார்க்கப் பாதுகாப்பு வேண்டும் என்னும் அவா நிறைந்து காணப்படாமலும் இல்லை. எனினும் இதற்குப் பொருள்வேண்டும் என்னும் சிந்தனையில் மட்டும் பெரும்பான்மையோர் இறங்கவில்லை யென்று நம் சந்தா, நன்கொடை முதலிய வசூல்களினின்றும் அறியக் கிடக்கின்றது.

மேலும், வியாபாரம் புரிவதிலும், வேளாண் தொழிலாற்றுவதிலும், உத்தியோகம் செய்வதிலும் பொதுவாய்ப் பணம் தேடுவதிலேயே நம் மக்கட் காலம் கடத்தி விடாது, நம் மார்க்கச் சேவையினையும் அவரவர்கள் ஆற்றலுக்கு இசைய ஏற்று நிற்றல் கடனாகின்றது. நம் இஸ்லாம் உலகம் என் செய்கின்றது? நம் மார்க்கத்தின் வளம் எவ்வாறு எம் மட்டில் இருக்கின்றது? நம் மார்க்கத்திற்கு யார் யார் எத்தகைய இடையூறுகள் செய்கின்றனர்? நம் மார்க்கத்தை இவ்விடையூறுகளினின்றும் எவ்வாறு காப்பது? நம் மார்க்கம் மென்மேலும் செழித்து, மென்மேலும் சீரும் சிறப்புடையாதல் எங்ஙனம்? நமது நபிகள் பெருமான் (ஸல்.) நம்பால் ஒப்புவித்த இவ்வரும்பெரும் பொக்கிஷத்தை நாம் போற்றுதல் எத்தகைமையில்? என்று ஒவ்வொரு முஸ்லிமும் சிந்தித்தல் வேண்டும். அதற்குரிய நூல்களையும், பத்திரிகைகளையும்

செய்ததில் சிலர், "பெருமானர் (ஸல்.) அவர்களி னருமை நிழல் மறைந்து சின்னட்களே யாயின. தற்போது இன்னர்களே விட்டு விடுவோம்" எனக் கூறினர். எனினும், சையிதுனு (ரலி.) அவர்களின் வீரம், பராக்கிரமம் இவ்வித மிருப்பதிற் பிரியங் கொள்ள வில்லை. எனவே, ஸஹாபாக்களே நோக்கி, "இஸ்லாமிற் பிரிவினையுண்டாக்குவது அடாத செயல். இன்று ஜக்காத்தின் விஷயத்திலேற்பட்ட இக்கெடுதல், நாளே வேறு கருமத்திலு மேற்படும். இங்ஙனமே நாளடைவில் ஒவ்வொரு அம்சமுந் தடைப்பட்டு, 'இஸ்லாம்' என்னும் பெயர் மட்டுமே எஞ்சி நிற்கும்படியும் நேரிடலாம். தொழுகை, ஜக்காத் இரண்டுக்கு மிடையிற் பிரிவினை யுண்டாக்குபவனைக் கட்டாயம் எதிர்த்தே தீருவேன். தாங்கள் இவ்விஷயத்தில் என்னுடன் ஒத்துழையா விடினும், யான் தன்னந்தனியே இவர்களே எதிர்ப்பேன்" எனக்கூறி, இக்குழாத்தினரை எதிர்க்கத் துவக்கினுர்கள். இவர்கள் தீரத்தைக் கண்ணுற்ற மற்ற ஸஹாபாக்களும் இவர்களுடன் ஒத்துழைக்கத் தலைப்பட்டார்கள். இறுதியில் அக்குழாத்தினரில் கொல்லப்பட்டோர் போக எஞ்சியோர் மீண்டும் இஸ்லாமைத் தழுவினர். சாந்தமே உருவெடுத்த சையிதுனு ஸித்தீக் அக்பர் (ரலி.) அவர்களே இவ்வாறு செய்தா[illegible]களெனின், இத்தகைய நயவஞ்சகம் எம்மட்டும் நம் பரிசுத்த இஸ்லாமில் கண்டிக்கப் பெற்றுள்ளது என்பதை நேயர்களே யுணர்ந்து கொள்வார்களாக!

இத்தகைய நயவஞ்சகக்காரரிலொரு பகுதியாயிருப்பதுபற்றி, தம் தொழுகையை மறந்த தொழுகையாளரை — தொழுகை விதிக்கப் பெற்றோரை—யும் இவ்வத்தியாயம் மிகவும் கண்டிக்கின்றது. 'தொழுகையை மறந்தோர்' என்பதற்கு 'தொழுகையை முற்றும் விட்டோர்' எனவும், 'நேரந்தவறித் தொழுவோர்' எனவும், 'அந்தரங்கத்தில்-வேற்று மனிதரில்லாத பொழுது-தொழாமலும், மனிதர்கள் [illegible]மெச்சும் பொருட்டுத் தொழுவோர்' எனவும் [illegible]ருள் கொள்வ ரறிஞர். இதனையே எங் [illegible]றையில் பிறிதோரிடத்தில் "[illegible] [illegible]கயின் பக்க[illegible] [illegible]

யை[illegible] சீழி[illegible] அன்றே அ[illegible] டும் பயனடை[illegible] பாக்கியம்! அத்[illegible] னின், கூடாது! கூ[illegible] மை இதனின்றும் காட[illegible]

இவண் சில மஸ்அலா[illegible] லும் முக்கியமே. நற்கருமங்[illegible] காகவேசெய்தலும், முகஸ்துதி[illegible] விட்டும் புறக்கணித்தலும் முக்கி[illegible] "பர்லான கருமங்களில் ரியாவென்ப[illegible] யாதெனவும், ரியா ஏற்படினும் செ[illegible] தீரல் வேண்டு"மெனவும் புகஹாக்கள்[illegible] கின்றனர். நபிலான கருமங்களே வெளிய[illegible] திருத்தலே நன்று. எனினும், "நம்மை[illegible] பார்த்து மற்றோரும் இப்புனித கரு[illegible]தைப் புரிதல் வேண்டும்" என்னும் நன்[illegible]க்கத்துடன் வெளிப்படையாய் நபிலான [illegible]ருமத்தைப் புரிதல் போற்றத் தக்கதே. தவிர, நம் முஸ்லிம்களிற் சிலர் பள்ளி[illegible]ளுக்குச் சென்று, இமாம் தொழ ஆரம்பித்ததும் தொழுகையிற் சேராமல் ருகூஉக்குச் செல்லுங்கால், ஓடோடியுஞ் சேருகின்றனர். இஃது தொழுகையில் கவனமின்மையையும், சோம்பலையும் குறிப்பதாலும், இவை முனபிக்குகளின் அடையாளமா யிருத்தலாலும் "இங்ஙனம் செய்தல் மக்ரூஹ் ஆகு[illegible]" புகஹாக்கள் குறிப்பிடுகின்றனர். [illegible] தொழுகைக்கென சகல கருமங்களே[illegible] பள்ளிவரை வந்தும், அற்பச் சோம்ப[illegible] ஒரு மக்ரூஹைச் சம்பாதித்தலும் நன்றோ[illegible] முதல் ரகஅத்திற் றன் இன்னர் இங்ஙன[illegible] செய்கின்றனர். அடுத்த ரகஅத்தில் யாது செய்வரோ வறிகிலேம். முஸ்லிம்காள்! விழிமின்! விழிமின்!! சோம்பலை விட்டொழிமின்!!!

இவ்வத்தியாயத்தின் இறுதியில் இறைவன் ஜக்காத்தைப் புறக்கணிப்பவர்களே[illegible] துள்ளான். "இங்கு[illegible] திருக்கும் "[illegible]

...றுவுப பயிற்சியால் சீர்தூக்கிப் ...ாத்து அவைகளை இழித்துக் கூறவும் நம் மதத்தினராகக் கூறும் சிலரே தலைப்பட்டுவிட்டனராதலின், நம் தூய இஸ்லாமுக்கு பாது...ாப்பு வேண்டாம் என்று யாரே கூறத் துணி...வ... ...ப்பு வேண்டுவது அவசியம் என்பதை ...சமூகம் நன்கறியும். இதற்கோர் சங்கம் வரையறையான திட்டங்களோடுஇருத்தல் வேண்டும் என்பதையும் நன்கறியும். இத் திட்டங்களை ஈடேற்றப் பொருள் வசதிவேண்டும் என்பதை மட்டும் நம் சமூகம் நன்கு அறியவில்லை என்றே நாம் வருத்தத்தோடு கூற வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நம் சங்கம் தலையெடுத்து ஓராண்டுக் காலந்தான் ஆயது. எனினும், நம் சங்கம் இதுகாறும், இச் சொற்பக்காலத்தில், ஆற்றியுள்ள அரும் பெரும் சேவைகளை யாமே எடுத்தோதப் புகின் அத்துணைச் சிறப்புடையதாகாது. (இதனை இச்சங்க 'றிப்போர்ட்' டில் காண்க) நாம் இதுகாறும் ஆற்றிய சேவை நம் அளவு, ஆற்றல் இவைகட்குப் பெரிதே எனினும், இனி அடுத்த ஆண்டுகளில் செய்யக் கருதியிருக்கும் சேவைகளோடு ஒப்பு நோக்குமிடத்துச் சிறிதே என்று கூறலாம். இருப்பின் என்ன? கடந்த ஆண்டின்கண் சங்கச் சந்தா வசூல் வருவாய் செலவிற்குப் போதிய அளவுடையதாயில்லை. எனவே மூலதனத்திலிருந்தும் சொற்பத்தொகையை நாம் கையாடநேர்ந்தமை நமக்கும் நம் சமூகத்திற்கும் வருத்தத்தை அளிக்கக் கூடியதாய் இருக்கின்றது. போதிய சந்தா வருவாய் இன்றி மூலநிதியினின்றே ஆண்டுதோறும் செலவிடும் நிலைமைக்கு நம் சமூகம் பொறுப்பேற்காது என்றே நாம் நம்புகின்றோம் எனினும், நம் சமூகத்திற்கு ஓர் இருப்புக் கவசம்போன்ற இச்சங்கத்தைப் பொருளுதவி இல்லாமல் துருப்பிடித்து போமாறு நம்மவர்கள் செய்யாது இனி முன்வருதல் வேண்டும். நம் மார்க்கத்தில் பக்தியுடைமைகொண்ட ஒவ்வொரு உண்மை மூமினும் இச்சங்கத்தைத் தன் சங்கமாகக் கொள்ளுதல் வேண்டும். பெரும்பான்மையான மக்களாதரவின்றி எச்சங்கமும், சில முக்கிய பணக்காரர்களைக் கொண்டு நீடித்து நடைபெறும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது; நடைபெறுமாயினும் அதனால் பெருமையுமின்று. நம் சமூகத்தார் இம் மாகாணத்தில் சிறந்த வணிகர்களாகவும், பணக்காரர்களாகவும், சமீன்தாரர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவர் மனத்திலும் நம் மார்க்கப் பாதுகாப்பு வேண்டும் என்னும் அவா நிறைந்து காணப்படாமலும் இல்லை. எனினும் இதற்குப் பொருள்வேண்டும் என்னும் சிந்தனையில் மட்டும் பெரும்பான்மையோர் இறங்கவில்லை யென்று நம் சந்தா, நன்கொடை முதலிய வசூல்களினின்றும் அறியக் கிடக்கின்றது.

மேலும், வியாபாரம் புரிவதிலும், வேளாண் தொழிலாற்றுவதிலும், உத்தியோகம் செய்வதிலும் பொதுவாய்ப் பணம் தேடுவதிலேயே நம் மக்கட் காலம் கடத்தி விடாது, நம் மார்க்கச் சேவையினையும் அவரவர்கள் ஆற்றலுக்கு இசைய ஏற்று நிற்றல் கடனாகின்றது. நம் இஸ்லாம் உலகம் என் செய்கின்றது? நம் மார்க்கத்தின் வளம் எவ்வாறு எம்மட்டில் இருக்கின்றது? நம் மார்க்கத்திற்கு யார் யார் எத்தகைய இடையூறுகள் செய்கின்றனர்? நம் மார்க்கத்தை இவ்விடையூறுகளினின்றும் எவ்வாறு காப்பது? நம் மார்க்கம் மென்மேலும் செழித்து, மென்மேலும் சீரும் சிறப்புடையாதல் எங்ஙனம்? நமது நபிகள் பெருமான் (ஸல்.) நம்பால் ஒப்புவித்த இவ்வரும்பெரும் பொக்கிஷத்தை நாம் போற்றுதல் எத்தகைமையில்? என்று ஒவ்வொரு முஸ்லிமும் சிந்தித்தல் வேண்டும். அதற்குரிய நூல்களையும், பத்திரிகைகளையும்

செய்ததில் சிலர், "பெருமானார் (ஸல்.)
அவர்களி னருமை நிழல் மறைந்து சின்னாட்
களே யாயின. தற்போது இன்னார்களை விட்டு
விடுவோம்" எனக் கூறினர். எனினும்,
சையிதுனா (ரலி.) அவர்களின் வீரம், பராக்
கிரமம் இவ்வித மிருப்பதிற் பிரியங் கொள்ள
வில்லை. எனவே, ஸஹாபாக்களை நோக்கி,
"இஸ்லாமிற் பிரிவினையுண்டாக்குவது அடாத
செயல். இன்று ஜக்காத்தின் விஷயத்திலேற்
பட்ட இக்கெடுதல், நாளை வேறு கருமத்திலு
மேற்படும். இங்ஙனமே நாளடைவில் ஒவ்
வொரு அம்சமுந் தடைப்பட்டு, 'இஸ்லாம்'
என்னும் பெயர் மட்டுமே எஞ்சி நிற்கும்படி
யும் நேரிடலாம். தொழுகை, ஜக்காத் இரண்
டுக்கு மிடையிற் பிரிவினை யுண்டாக்குபவனைக்
கட்டாயம் எதிர்த்தே தீருவேன். தாங்கள்
இவ்விஷயத்தில் என்னுடன் ஒத்துழையா
விடினும், யான் தன்னந்தனியே இவர்களை
எதிர்ப்பேன்" எனக்கூறி, இக்குழாத்தினரை
எதிர்க்கத் துவக்கினார்கள். இவர்கள் தீரத்
தைக் கண்ணுற்ற மற்ற ஸஹாபாக்களும்
இவர்களுடன் ஒத்துழைக்கத் தலைப்பட்டார்
கள். இறுதியில் அக்குழாத்தினரில் கொல்
லப்பட்டோர் போக எஞ்சியோர் மீண்டும்
இஸ்லாமைத் தழுவினர். சாந்தமே உரு
வெடுத்த சையிதுனா ஸித்தீக் அக்பர் (ரலி.)
அவர்களே இவ்வாறு செய்தா[illegible]களெனின்,
இத்தகைய நயவஞ்சகம் எம்மட்டும் நம் பரி
சுத்த இஸ்லாமில் கண்டிக்கப் பெற்றுள்ளது
என்பதை நேயர்களே யுணர்ந்து கொள்வார்
களாக!

இத்தகைய நயவஞ்சகக்காரரிலொரு பகுதி
யாயிருப்பதுபற்றி, தம் தொழுகையை மறந்த
தொழுகையாளரை — தொழுகை விதிக்கப்
பெற்றோரை—யும் இவ்வத்தியாயம் மிகவும்
கண்டிக்கின்றது. 'தொழுகையை மறந்தோர்'
என்பதற்கு 'தொழுகையை முற்றும் விட்
டோர்' எனவும், 'நேரந்தவறித் தொழுவோர்'
எனவும், 'அந்தரங்கத்தில்-வேற்று மனிதரில்
லாத பொழுது-தொழாமலும், மனிதர்கள்
[illegible]மெச்சும் பொருட்டுத் தொழுவோர்' எனவும்
[illegible]ாருள் கொள்வ ரறிஞர். இதனையே எங்
[illegible]றையில் பிறிதோரிடத்தில் [illegible]
[illegible]கயின் பக்க[illegible]
[illegible]

யை[illegible]
சீழிரு[illegible]
அன்றோ அ[illegible]
டும் பயனடைய[illegible]
பாக்கியம்! அத்[illegible]
ளின், கூடாது! கூ[illegible]
மை இதனின்றும் காட[illegible]

இவண் சில மஸ்அலா[illegible]
லும் முக்கியமே. நற்கருமங்[illegible]
காகவேசெய்தலும், முகஸ்துதி[illegible]
விட்டும் புறக்கணித்தலும் முக்கி[illegible]
"பர்லான கருமங்களில் ரியாவென்ப[illegible]
யாதெனவும், ரியா ஏற்படினும் செ[illegible]
தீரல் வேண்டு"மெனவும் புகஹாக்கள்[illegible]
கின்றனர். நபிலான கருமங்களை வெளிப[illegible]
திருத்தலே நன்று. எனினும், "நம்மை[illegible]
பார்த்து மற்றோரும் இப்புனித கரு[illegible]தைப்
புரிதல் வேண்டும்" என்னும் நன்[illegible]க்கத்
துடன் வெளிப்படையாய் நபிலான[illegible]ருமத்
தைப் புரிதல் போற்றத் தக்கதே[illegible] தவிர,
நம் முஸ்லிம்களிற் சிலர் பள்ளிகளுக்குச்
சென்று, இமாம் தொழ ஆரம்பித்ததும்
தொழுகையிற் சேராமல் 'ருகூஉக்குச் செல்
லுங்கால், ஓடோடியுஞ் சேருகின்றனர்.
இஃது தொழுகையில் கவனமின்மையையும்,
சோம்பலையும் குறிப்பதாலும், இவை முனா
பிக்குகளின் அடையாளமா யிருத்தலாலும்
"இங்ஙனம் செய்தல் மக்ரூஹ் ஆகு[illegible]
புகஹாக்கள் குறிப்பிடுகின்றனர். [illegible]
தொழுகைக்கென சகல கருமங்களை[illegible]
பள்ளிவரை வந்தும், அற்பச் சோம்ப[illegible]
ஒரு மக்ரூஹைச் சம்பாதித்தலும் நன்றோ[illegible]
முதல் ரகஅத்திற் றான் இன்னார் இங்ஙன[illegible]
செய்கின்றனர். அடுத்த ரகஅத்தில் யாது
செய்வரோ வறிகிலேம். முஸ்லிம்காள்! விழி
மின்! விழிமின்!! சோம்பலை விட்டொழி
மின்!!!

இவ்வத்தியாயத்தின் இறுதியில் இறைவன்
ஜக்காத்தைப் புறக்கணிப்பவர்களை[illegible]
துள்ளான். "இங்கு[illegible]
றிருக்கும் [illegible]

...து
...மென
...ர் "உப
...படுவது இழி
..., 'இல்லை' யென
கருதப்படுவதும்,
...மை கேட்கக் கூடியது
...ஊன்'' எனவும் கூறு
..., நூல், அறிவாள், கோடரி,
தோண்டி, உரல், உலக்கை,
...ளை எடுத்துக் கொள்க தண்
...பு, தீ இம்மூன்றும் இவைகளையே

சேர்ந்தவை. இரவலல்லாமல் இனமாகவும் இம் மூன்றையும் "இல்லை'' யென மறுத்தல் கூடாது. இவ் வஸ்துக்கள் சாதாரணமாய் ஒருவருக் கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளக் கூடியவை. இச்செயலால் பரஸ்பர நட்புண்டாவதும், ஒற்றுமை நிலவுவதும் இயல்பு. இதைமேற்கொண்டே "சமயத்தில் இரவல் தந்துதவுவதற்காய் அண்டை யயல் வீட்டார் தேவைப் படும் வஸ்துக்களைத் தம் வீட்டில் அதிகமாய் வைத்திருத்தல் முஸ்தஹப்'' என அறிஞர் கூறுகின்றனர். வல்லாஹு அஃலம்.

நாயக வாக்கியம்.

கிரி... ...கள் எண்ணங்களைப் பொறுத்தவாறே. ஒவ்வொரு மனிதனுக்கும் கிட்டும் பயன் அவன் கருத்திலுள்ளதே. எனவே, அல்லாஹ், ரசூல் இவர்களுக்காக ஹிஜ்ரத் செய்பவன் ஹிஜ்ரத் அல்லாஹ், ரசூலுக்காகவேயாம். இகத்தைச் சம்பாதிப்பதற்கோ, ஒரு பெண்ணை மணந்து கோள்வதற்கோ ஹிஜ்ரத் செய்வோனின் ஹிஜ்ரத் அவன் (கருத்தின் ...டி) எண்ணிய காரியத்திற்கே யாகும்.

...பொன்மொழி பிரபஞ்ச ரக்ஷகராம் ...மானர் நபிகள் நாயகம் (ஸல்.) அரு...ய்த அமுதவாக்கா யிருப்பதிலும், ...ம்பெருமானரின் முஃஜிஸாக்களி லொன்...ம் "(ஜவாமிஉல் கலிம்) அநேக கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட மொழிக''ளினின்று முளது. இப் பொன்னுரையே சகல நற்கருமங்களுக்கும் அடிப்படை போன்றது. ஒருவன் எத்துணை நற்கருமங்களைச்செய்தான் எனினும், அன்னவன் நற்கூலி பெறுதலும், பெருமற் போதலும் அவன் எண்ணத்தைப் ...டு உளது என்பதை இத்திரு... ...கின்றது. "இஸ் ... ...ம் சாந்தி

தல் அவசிய மாம். இக்காரணம் பற்றித்தான் "ஸிஹாஹெ சித்தா'' வெனக் கூறப்படும் ஹதீது கிரந்தங்கள் ஆறும் இந்த ஹதீதைக் கொண்டே துவக்கம் செய்யப்பட் டுள்ளன. இங்ஙனம் துவக்கம் செய்வதால் இவைகளின் ஆசிரியர்கள், "தம் கிரந்தங்களை வாசிப்பதும், அவைகளில் பொறிக்கப்பெற் றிருக்கும் அமுத வாக்கியங்களின்படி யொழுகுவதும் எல்லாம் நற்கருத்துடன், இறைவனுக்காகவே செய்யப்படல் முக்கிய'' மென்பதை யாவருக்கும் விளக்கிக் காண்பிக்கின்றனர். இப்னு மஹ்தி முதலியோர் "மாணவன் தன் கருத்தை யொழுங்கு படுத்திக் கொள்ளும்படி எச்சரிக்கைசெய்வதற்காய், இந்த ஹதீதைக்கொண்டு தம் நூலை யாரம்பிப்பது நூலாசிரியர் செய்யவேண்டுங் கருமம்'' எனக் கூறியிருப்பதும் நம் கருத்தையே சுட்டிக் காண்பிக்கின்றது.

நற்கிரியைகளைச் செய்வதில் எல்லோருடைய கருத்தும் ஒரே விதமா யமைவதரிது. சிலர், "இதனல் உலகம் தம்மை மெச்சட்டும்'' என்பதற்காகவும், சிலர் மண், பெண், பொன் முதலிய மூவாசைகளை ஈடேற் கொள்... ...கற்காகவும் புண்ணிய (?) ...வர். இறைவனு... ...ற்படு

ருக்கு மிடையே அதிக வித்தியாசம் உளது.
முன்னவர் நன்மை பெறுதற்காய் நற்கருமம்
செய்ய முன் வரினும், தம் கருத்தில் இறைவ
னல்லாத இதர வஸ்துக்களையும் ஒன்று
சேர்த்துக் கொள்ளுகின்றனர். எனவே,
இத்தகைய முகஸ்துதி இறைவனுக் கிணை
வைக்கும் ஷிர்க்கின் ஒரு பகுதியாயிருப்பது
முண்மையே. இணை வைக்கும் குப்பார்கள்
வெளிப்படையாய்த் தம் கண்முன் காணப்
படும் விக்கிரகங்களை வணங்குகின்றனர். இத்
தற்புகழ்ச்சிக்காரர்களோ வெனின், மறை
முகமாய், தம் அகத்துள்ளே அளாவிக் கிடக்
கும் இச்சையைப் பஜிக்கின்றனர்; அவ்விச்
சைக்கே சிரஞ் சாய்க்கின்றனர். அதன்
காரணமாகவே தம் புண்ணிய கருமங்களை
நிறைவேற்றுகின்றனர். இதனையே வேறு
ஹதீதுகளும் சுட்டிக் காண்பிக்கின்றன. அவை
யாவன:—ஷத்தாதிப்னு ஔஸ் (ரலி) கூறு
கின்றனர்:—"முகஸ்துதிக்காய்த் தொழுபவன்
உண்மையாகவே ஷிர்க் வைத்துவிட்டான்.
முகஸ்துதிக்காய் நோன்பு நோற்பவன் உண்
மையாகவே ஷிர்க் வைத்துவிட்டான். முகஸ்
துதிக்காய் தர்மம்செய்பவன் உண்மையாகவே
ஷிர்க் வைத்துவிட்டான்" என ரசூலுல்லாஹ்
(ஸல்.) மொழிவதைச் செவியுற் றுள்ளேன்"
ஒரு முறை ஷத்தாதிப்னு ஔஸ் (ரலி)
அழுதுகொண் டிருந்தனர். "தங்களை அழச்
செய்தது யாது?" எனக் கடாவப்பட்ட
பொழுது, "யான் ரசூலுல்லாஹ் (ஸல்.)
வினின்றும் ஒரு பொருளைச் செவியுற் றுள்
ளேன். அஃதை நினைந்தேன். அதுவே
என்னை யழச்செய்து விட்டது. நாயகம்
(ஸல்.) 'மறைந்த ஷிர்க்கையும், இச்சையை
யும் என் உம்மத்தின் விஷயத்தில் யான் மிக
வும் அஞ்சுகிறேன்" எனக் கூறக் கேட்டு,
"நாயகமே! தங்களுக்குப் பின் தங்கள் உம்
மத் ஷிர்க்கும் வைக்குமோ?" வெனக் கேட்
டேன். அதற்கு "ஆம் அவர்கள் சூரியன்,
சந்திரன், கல், விக்கிரகம் இவைகளை வணங்
கப் போவதில்லை என்பதுண்மையே யேனி
...ம், தங்கள் கிரியாம்சங்களில் முகஸ்துதியை
...ர். மறைந்த இச்சை என்பது, அன்னூரி
...ன் காலையில் நோன்பாளி...
...வன் இச்சைக...

ண...
என...

இத்தை...
மற்றொரு வித...
புரிதலை ஒக்கும்...
யின் மீதே முழுநாட்...
இப்புறமும், அப்புறமு...
குறியைத் தவற விடுவது ந...
போல் இன்னார் புண்ணிய கரு...
யினும், கவனத்தை—கருத்...
டதால் பலனையிழப்பது உண்...
தையே நாம் எடுத்துக்கொண்ட ஹ...
இறுதிப் பாகம் உரப்படுத்துகின்ற...
தவிரவும், இங்ஙனம் உள்ளொன்றும்,
மொன்றுமாய் ஒழுகுதல் முனபிக்குத்தன்...
யாயுமிருப்பது பற்றி இதனை விட்டொழித
தல் இன்றியமையாததாம். "உடல் மெச்சப்
பால் குடிப்பதா? ஊர் மெச்சப் பால் குடிப்
பதா?" என்பதற்கிணங்க, ஊர் மெச்ச உழை
ப்பதில் உண்மைப் பயன் ஒன்றுமில தாம்.
நற்கருத்துடன் புரியப்படும் கருமத்தை இறை
வன் மெச்சுகின்றான். 'ஒரு அடியான் பகி
ரங்கமாய்த் தொழும் பொழுதும் நல்ல வித
மாய்த் தொழுகின்றான். இரகசியமாய்—தனி
யாய்—தொழும் பொழுதும் நல்லவிதமாய்த்
தொழுகின்றான் (இவனைப் பார்த்து) இறை
வன் "இவன் என் உண்மை யடியா...
எனக் கூறுகிறான்" என்னும் ஹதீதே இ...
குச் சான்றாகும்.

தூய உளம்படைத்த மேதாவிகளா லாரம்
பிக்கப்பெற்ற கருமங்கள் துவக்கத்தில் சி...
யவையாய்த் தோன்றினும், நாளடைவில்
அபிவிருத்தி யடைந்து செழித்தோங்கி
பெரியனவாவதும், டாம்பீகக் காரர்களா
லாரம்பிக்கப்பெற்ற கருமங்கள் முதலில்
ஆடம்பரமாய்த் தோன்றினும், இறுதியில்
இல்லா தொழிவதும் நாம் கண்கூடாகக்
காண்பதன்றோ? இஃது நல்லெண்ண...
நற்பயனே யாம். எனவே...
புண்ணிய கரும...
களை...

حفاظة

மார்க்கக் கல்வி.

(நபியே!) சொல்வீராக!:—அறிஞர்களும், அறிவிலிகளும் சரியாவரோ? (அல் குர்ஆன், 39·9.)

கல்வியைத் தேடிக் கற்பது முஸ்லிமான ஒவ்வொருவர்மீதும் முக்கியகடமை.

(நாயகசம்பிரதாயம்.)

சீனாவிற் போயேனும் கல்வியைத் தேடிக் கற்றுக் கொள்ளுங்கள்.

(நாயக சம்பிரதாயம்.)

இம்மைக்கும், மறுமைக்கும் இன்றி யமையாத சகல சாதகங்களையும் எம் பரிசுத்த இஸ்லாம் எடுத்தோதி யிருப்பது கண்கூடு. இறுதி தினம்வரை நீடித்து நிற்கும் மதமாதலின், அந்நாள்வரை பிரபஞ்ச மக்கட்கு உரிய கருமங்களனைத்தும் இம்மதத்தில் நிறைந்துள்ளன. காலந்தோறும் அறிஞர்களால் மக்களின் முன்னேற்றத்திற் கத்தியாவசியமாய்க் கருதப்படும் சாதனங்கள் யாவையும், ... நூற்றாண்டுகளுக்கு முன்பேயே ... தோதி யிருக்கின் ...

யத்தைச் சுட்டிக்காண்பிக்க வில்லை என்பது ஆன்றோர் அபிப்பிராயம். துவக்கத்திற் குறிக்கப்பெற்ற ஆயத்தும், ஹதீதுகளுமே இதற்குத் தக்க சான்றாகும். இத்துணை ஆண்டுகளுக்குப் பின் முழு வுலகமே முன்னேற்ற மடைந்துகொண்டு செல்வதாய்க் கருதப்படும் இக்காலத்தில் புத்திமான்களால் அவசிய மெனக் கொள்ளப்பட்டு வரும் கட்டாயக் கல்வியும் அவைகளிலெடுத்தோதப் பெற்றமை காண்க!

எனவே, மார்க்கப் பக்தியில் தலைசிறந்து விளங்கிய நம் மூதாதைகள் கல்விக்காய்த் தம் உடல், பொருள், ஆவி மூன்றையுமே தத்தஞ் செய்தனர். தம் மனைவி மக்கள், சொத்து ஸ்வதந்திரங்களைத் துறந்தனர். பாலைவனங்களில் பல்காத தூரம், பட்டினிப் பசியுடன் நடந்து சென்றனர். இத்தியாதி கஷ்டங்களுக்குப் பின் ஒரு சாதாரண மஸ்அலாவை யவர்களறிந்து கொண்டாலே போதும்! தங்கள் கஷ்டங்களை எல்லாம் மறந்து, "அரசகுமாரர்களும் நமக்குச் சரியாவரோ?" வென ஆனந்தக் கூத்தாடுவர். அம் முதியோர்க ளிடையே கல்விமானே கண்ணிய முள்ளவனாய்க் காணப் பெற்றான். கல்வியே யன்னார் தத்தம் மக்களுக்குத் தேடிவைக்கும் செல்வமாயிருந்து வந்தது. மார்க்கக் கல்வியே யல்லாது நியாய சாஸ்திரம், கணிதம், தர்க்க சாஸ்திரம் இவைகளின் நிதிக்குவியலாயும், பிரகிருதி சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், பூகோளம் இவைகளின் பிறப்பிடமாயும் விளங்கினார்கள். முழுவுலகத்தினுக்கே கல்வியில் முன் மாதிரியாய் நின்றார்கள். ... ரீகம் படைத்த ஐரோப்பா—சகல துறை... ...ற்ற மடைந்து வி...

—அன்...

நாளடைவில் முஸ்லிம்களுக் கிடையே இம் முயற்சி குன்ற வாரம்பித்து விட்டது. இக லோக இச்சைகளைப் பூர்த்தி செய்வதிலேயே இராப்பகலைக் கழிக்கின்றனர். அல்லாஹ், (ஜல்.) ரசூல் (ஸல்.) உடைய போதனைகளை யறிய ஆசிப்போரைக் காணேம். உலமாக் களின் திருச்சமுகத்தி லிருந்து ஞானேப தேசம் பெறுவதை உவப்போரே இல்லை. இதனல் விளைந்த இன்னல்தானென்னை? மூலைக்கு மூலை "அறியாமை" என்னும் அந்த காரம் தாண்டவ மாடுகின்றது. வைதீகக் கல்விதான் இந்நிலைமையி லிருக்கின்றன தெனின், லௌகிகக் கலையிலும் முஸ்லிம் களின் நிலைமை இவ்வாறே காணப்படுகின்றது. மேனுட்டுக்கு-ஏன்? முழு வுலகத்திற்கே—கல் வியை யுயிர்ப்பிச்சை யளித்த முஸ்லிம்கள், "கல்வி யில்லா வர்க்கத்தினர்" என்னும் பெயருக்கு இலக்காய் விட்டனர். கல்வி கற்ப தென்பது இன்னருக்குக் குதிரைக் கொம் பாய் விட்டது. இஃதிம்மட்டோடு நின்று போகவில்லை. தாம் ஏதேதோ கற்றுக் கொண்டு விட்டதாய்ப் பிதற்றித்திரியும் ஒரு சில பட்டதாரிகள் தம்மை சீர் திருத்தக் காரர் (?)" எனவும், "மார்க்கத்திற்காய்ப் பாடுபடுவோர்" எனவும் கூறிக்கொண்டு, சாதாரண ஜனங்களை மயக்கி வழிகெடுக்க முன்வந்துளர். குருடர்கள் யானையைக் கண்ட கதை போலவே இன்னர் மார்க்கத்தை யறிந்திருக்கின்றனர். இக்குழாத்தினர் வாலி ழந்த நரியேபோல் ஏனைய மக்களையும் மார்க் கக் கல்வி கற்க வொட்டாமல் தடுக்கின்றனர். மேனுட்டு நாகரீகம்—மக்களின் நேரத்திரங் களில் மண்ணை யள்ளிப் போடும் நாகரீகம்— மக்களின் அறிவை மழுங்கச் செய்யும் நாக ரீகம்—இன்னரை "கண்டதே காட்சி கொண் டதே கோலம்" என்னும் கொள்கையில் ஆழ்த்தி இருக்கின்றது.

...ந்த 'இமிடேஷன்' முஸ்லிம்கள்—'முஸ் லிம்' என்னுந் திருநாமம் இன்னர்பால் சூட் டப்படுவது தகுதியல்லவாயினும், இன்னர் தம்மை யவ்விதமே கூறிக்கொள்வதால் யாமும் அப்படியே அறைவோம்.—"கல்வி" என்பதற்கு "தொப்பையை நிரப்புவதற் கான உபாயம்" எனவே பொருள் கொள் கின்றனர். இன்னரிடம் ஒரு கலையைக் கற் றுக்கொள்ளச் சொல்வோமாயின், "இதனல் மாதம் என்ன வருமானம் கிடைக்கும்?" எனவே கேட்பர். இதனலேயே, அறிவு விசா லப்படுவதுபோக, உள்ள அறிவையுங் குன்ற வைக்கும் ஸ்திதியிலேயே இன்னர் கல்வி காணப்படுகின்றது. "நாம் தேறுவதற் காகவே (Pass) படிக்கிறேம். நம் எண்ணம் போல் தேறிவிடுகின்றே மாயினும், நாம் கற் றுக்கொண்ட தொன்றுமில்லை" என ஒரு அறிஞர் கூறி யிருப்பதேபோல், இரண் டொரு பட்டங்களைப் பெற்றிருப்பினும், காப்பி யடிப்பதைத் தவிர மற்றென்றையும் இக் குழாத்தினர் அறிந்திலர். இஸ்லாமை யழிக்கக் கங்கணங் கட்டிநிற்கும் எதிர் மத வாதிகளைப் பார்க்கினும், இன்னரால் மதம் அடையும் இன்னல்களோ அனந்தம். இஸ்லா முக் குழைப்பதாய் இவர்கள் வாயளவில் கூறிக்கொண்ட போதினும், மேனுட்டு நாக ரீகத்தைப் பரப்புவதே இவர்கள் நோக்கமா யிருந்து வருகின்றது.

உலகமே வெறுத்துத் தள்ளும் இந் நவநாக ரீகக் கோஷ்டியில், "ஒன்றிரண்டு வாலிபர்கள் சிக்குண்டு போகின்றனர்" என்பதையும் விசனத்துடன் நாம் இங்கு குறிப்பிடவேண் டியே இருக்கின்றது. இவ்வாலிபர்கள் இளை மைப் பருவத்திலேயே லௌகிகக் கலாசாலை களுக் கனுப்பப் பெற்றேர். இவர்கள் தம் வாணுட்களை இத்தகைய கலாசாலைகளிலே கழித்துவிட்டதாலும், இக் கல்லூரிகளி... மார்க்கக் கல்வியின் வாடையே... கிடையாததாலும், இ...

காம்புகள் கூறுவதை உண்மை யெனவே நம்பி, இன்னோர்மாயவலையிற் சிக்குண்டு போகின்றனர். இவ்வாலிபர்கள் இலௌகிக் கலைகளில் தேர்ச்சி யடைந்திருப்பதேபோல் வைதீகக் கலைகளில் கிஞ்சிற்றேனுந் தெரிந்து கொண்டிருப்பரேல், இந் நவநாகரீகக் கோஷ்டியில் சேரமாட்டார்களென்பது திண்ணம். தவிரவும், "இளமையிற் கல்" என்னும் முதுமொழிக் கேற்ப, இன்னோற் தம் சிறுமைப் பருவத்திலேயே மார்க்கமின்னதெனத் தெரிந்து கொண்டிருப்பின், அஃது பசுமரத்தாணியே போல் இன்னோ ருள்ளங்களில் பதிந்துபோயிருக்கும். பின்னர், எத்தனை இமிடேஷன் கோஷ்டிகள் முயற்சி செய்யினும், இன்னோரை வழிகெடுக்க இயலாதுபோம் என்பதி லையமிலது.

எனவே, ஒவ்வொருவரும் தம் பிள்ளைகளுக்குமுதன்முதல் ஈமான், இஸ்லாம் இவைகளைப்பற்றிச் சுருக்கமாயும், தொழுகை நோன்பு, ஜக்காத், ஹஜ், ஏவல், விலக்கல் இவைகளின் முக்கிய மஸ்அலாக்களையும் கற்பித்த பின்பே இலௌகிகக் கல்லூரிகளுக் கனுப்பவேண்டும். இங்ஙனம் செய்யாது, துவக்கத்திலேயே இலௌகிகக் கல்விகற்க விடுவதில், அன்னோர் பெரும்பட்டதாரிகளாகியும் மதத்தைப் பற்றி ஒன்றுந் தெரியாதோ ராகவே இருக்கின்றனர். சிலரோ வெனின் நாகரீகமே உருவெடுத்து, இங்கிலாந்தி லிருந்து இப்பொழுதே வந்தவர் போல் நடை, உடை, பாவனை ஒவ்வொன்றிலும் மேனாட்டைப் பின்பற்றி விடுகின்றனர். இவர்கள் "நவ நாகரீகமே மதம், மேனாடே ஸ்வர்க்கம்" எனக் கொண்டுள்ள கொள்கைக் கேற்ப, நமது இமிடேஷன் முஸ்லிம்களும் இன்னோரைத் தட்டிக்கொடுத்து, "இதிலெல்லாம் மதம் போய்விடவில்லை" எனத் தம் பக்க மிழுத்துத் தம் மாயவலையின் சிக்கி மாண்டுபோகச் செய்கின்றனர். (இறைவன் ஏனைய முஸ்லிம்களையும் இதைவிட்டுங் காப்பானாக!) மேலும், ஆரம்பப் பள்ளிக்கூடங்க (Elementary School) களில் வேலைபார்த்து வரும் முன்ஷிகள் 'குடை பிடிக்கும் உத்தியோகஸ்தனே' போல், உர்து பாஷையைக் கற்றுக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல், ஈமான், இஸ்லாம் தொழுகை முதலிய முக்கிய விஷயங்களைப் பற்றிப் போதிப்பதும், தம்மாற் கூடியவரை பிள்ளைகள் சன்மார்க்க அனுஷ்டான முறைகளைக் கடைபிடிக்கும்படிச் செய்தலும் அவசியமாம். மார்க்கக் கலாசாலைகளில், இலௌகிகக் கல்வியையும் சேர்த்து போதிக்கப்படும் இற்றைய தினங்களில், இலௌகிகக் கலாசாலைகளில் மார்க்கக் கல்வியினையும் போதிக்க முயற்சிப்பது ஒவ்வொருவர் மீதும் முக்கிய கடமை என்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

---

(1) துன்மார்க்கம் அகற்றி சன்மார்க்கத்தைப் புகட்டும் ஹிபாஜத்துல் இஸ்லாமைக் கைவிடாதீர்கள்!

(2) இத்தமிழக முஸ்லிம்களின் மார்க்கத்திற்கு உண்மையாய் உழைக்கும் தேனினும் இனிய இச் செந்தமிழ்ப் பத்திரிகையில் எல்லோரும் சந்தாதாரராகச் சேருங்கள்!

(3) மார்க்க விரோதிகளின் அபாயத்தை நீக்குவது ஹிபாஜத்துல் இஸ்லாமே.

பரிசுத்த இஸ்லாமின் பரிசுத்தக் கட்டளைகள்.

(மௌலவி, அப்துல் அஹத் ஸாஹிப் (பாக்கவீ) வரைவது.)

நந்தினுல் இஸ்லாம் உண்மை மதம் என்பதற்குப் புறச்சான்றுகளைத் தேடிப்பிடிக்க வேண்டிய தில்லை. அதன் உன்னதக் கட்டளைகளே அதை யுண்மைப்படுத்தத் தக்க சான்றுகளாய்ப் பரிமளிக்கின்றன. இவைகளை யூன்றிப் பார்ப்போர் இதன் உண்மையைத் தெற்றென விளங்கிக் கொள்வர். இஸ்லாமின் திருக்கட்டளைகள் இயற்கைக்கு முற்றமுற்ற ஒத்திருப்பதோடு, மானிட வாழ்க்கையைச் சகல துறைகளிலும் முன்னுக்குக் கொண்டுவருவதற்கு முக்கிய சாதனங்களாயிருப்பது வெள்ளிடை மலை. மறுமையில் மட்டும் பயன் தருவதோடு அவைகள் நின்றுவிட வில்லை. இம்மையிலும் மனத் தூய்மை, தேகாரோக்கியம், திடகாத்திரம் இவைகளைப் பெறுவதற்கும் தக்க சாதனங்களாய் மிளிர்கின்றன. இவைகளை யனுஷ்டானத்திற் கொண்டுவருவோர் எல்லாத் துறைகளிலும் மேம்பட்டே காணப்படுவர். இதனாலன்றோ ஸஹாபாக்கள், தாபிஈன்கள் முதலிய ஆன்றோர் முன் ஆயுதங்களும் மழுங்கிக் கிடந்தன? பெரிய பெரிய பட்டாளங்களையும் மிகச் சொற்ப தொகையினர் ஜயித்து வெற்றிக்கொடி நாட்டினர். அவர்களுக்கு உலகமே நடுங்கிக் கொண் டிருந்தது. வீராதி வீரர்களும் அவர்கள் முன் தங்கள் தீரத்தையெல்லாம் இழந்து சரணடைந்தார்கள். "ஹிந்துக்கள் தாங்கள் கொண்டுள்ள அசூயையின் காரணமாக இஸ்லாமை ஏற்றுக் கொள்ளாவிடினும், அதன் கட்டளைகளை யாயினும் மேற்கொண்டொழுகி வருவார்களாயின், முன்னேற்ற மடைந்து விடுவார்க ளென்ப துண்மை" என ஒரு அறிஞர் கூறி யிருப்பதும் ஈண்டு குறிப்பிடத் தகுந்ததே. நம் பரிசுத்த மதத்தின் திருக் கட்டளைகளின் ஆழ்ந்த கருத்துக்களையும், அரிய நோக்கங்களையும் ஈண்டு விவரிக்கப் புகின், பெருகுமாதலின் தேகாரோக்கியத்தை மட்டும் இவண் பேசுவாம்.

இஸ்லாமின் திருக்கட்டளைகள், பிறப்பு முதல் இறப்பு வரை மனிதன் நோயற்று வாழ்வதற் கேற்றதாகவே அமைந்திருக்கின்றமை கண் கூடு. இத்துணை ஆண்டுகட்குப் பின் வைத்திய உலகம் "Prevention is better than cure—வியாதிக்குப் பின் சௌஸ்தப் படுத்துவதைப் பார்க்கினும், வியாதி வர வொட்டாது தடுத்து விடுவதே மேல்" என்னும் முடிவுக்கு வந்திருக்கின்றது. இறைவனின்னருளால் இன்றைக்குப் பதின் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பேயே எம் பரிசுத்த இஸ்லாம் ஆண்டி முதல் அரசன் வரை, காட்டு மிராண்டிகள் முதல் நாகரீகம் படைத்த வர்க்கத்தார் வரை யாவரும், எக்காலத்திலும், எத்தேசத்திலும், யாதொரு கஷ்டமு மன்றி சுகஜீவியாய் வாழத்தக்க தினசரி வாழ்க்கையை எடுத்துக் காட்டி யிருக்கின்றது. இவைகளிற் சிலவற்றை ஈண்டெடுத்து ஓதுவாம்:—

பல் துலக்கல்.

"நாயகம் (ஸல்.) பகலிலும் இரவிலும் தூங்கி எழுங்கால் ஒலுச் செய்வதற்கு முன், பல்துலக்காம லிருந்த தில்லை" என ஆயிஷா (ரலி.) கூறியிருக்கின்றார்கள். (நாயக சம்பிரதாயம்.)

"பல் துலக்கப் பட்டு புரியப்படும் தொழுகை, பல்துலக்கப் படாமல் புரியப்படும் தொழுகையை விட எழுபது மடங்கு சிறந்தது' என நாயகம் (ஸல்.) கூறி யிருக்கின்றார்கள்' என்று ஆயிஷா (ரலி.) கூறிப் போந்தார்கள். (நாயக சம்பிரதாயம்.)

தந்த சுத்தி எம்பெருமானார் (ஸல்.) அவர்களுக்கு மிகவும் பிரியமாயிருந்தது. பெருமானார் (ஸல்.) இவ்வுலகத்தை விட்டுப் பிரியும் கடைசிநேரத்திலும் பல் துலக்க விரும்புவதாய்த் தெரிவித்தார்கள். அதுசமயம் பற்குச்சியை பெருமானார் (ஸல்.) திருச் சமுகத்தில் சமர்ப்பிக்கப் பெற்றது. எம்பெருமானார் (ஸல்.) மிகப் பிரியமாய்ப் பல் தேய்த்

தார்கள். இதற்குப்பின் அன்னார் இவ்வுல கத்தில் என்ன செய்தார்கள்? வானத்தின் பால் பார்வையைச்செலுத்தி, "உயர்ந்த நண்பனுடன்" என மொழிந்தனர். இதன் பின் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்கள். ஸல்லல்லாஹு அலைஹி.

தற்கால வைத்திய முறை "வாய் நாற்றம்" (Pyorrhoea) என்னும் வியாதியை மிகவும் கண்டிக்கின்றது. இவ்வியாதி மனிதனுக்கு பெரிய சத்துரு எனவும், இரைப்பையில் கோளாறு ஏற்படுவதே இதன் துவக்கமென வும்,இரைப்பை பழுதடைந்து விடுவதே இதன் முடிவு எனவும், 'திக்' (க்ஷயம், காசம்) என் னும் வியாதியும் இதனால் வருகின்றதெனவும் கூறுகின்றது. இவ்வியாதி அணுகவொட்டா மல் தடுப்பதற்கு ஒவ்வொருவருக்கும் பல் தேய்த்தல் எவ்வளவு முக்கிய மென்பதை யாம் கூறவேண்டிய தில்லை. உகாக்(குன்றி, குன்னி எனவும் மொழிவர்.)குச்சி தந்தம், எயிறு இவைகளின் கெடுதியைப் போக்கு கின்றது. இக்குச்சியினால் பல் தேய்ப்ப தில் வாய் நாற்றம் போவதுடன், வாயில் ஒருவித மணமும் உண்டாகிறது. காற்றில் கலந்திருந்து, காற்றின் வழியாகவே பற்களி லும், வாயிலும் சேர்ந்துபோகும் விஷக் கிருமிகளைக் கொல்வதற்கு முக்கியமானதாயு மிருக்கின்றது. இக்குச்சியினால் பல் தேய்ப் பதில் நேத்திரங்களுக்கு பலம் ஏற்படுவ துடன், பார்வையும் கூர்மையாகின்றது. அளவுக்கு அதிகமாக உண்டு, இரைப்பைக்கு அதிகவேலை கொடுக்காம லிருப்(பதே ஹதீ துக்கு ஒத்து ஒழுகுவதாகும். இவ்வாறு நடப்)போனுக்கு இரைப்பை கெடுவதும், வாய்நாற்ற வியாதி விளைவதும் இல்லை. இத் துடன், நாள் ஒன்றுக்கு ஐந்துவேளை பல் தேய்ப்பதனால் பற்களைச் சுத்தமாயும் வைத் திருந்தால், வாயும் சுத்தமா யிருப்பதுடன், இவ்வியாதி பீடிக்கவே வழியில்லை. அங்ஙனம் பீடித்தாலும் அதிசீக்கிரம் நிலைத்தும் நிற் காது.

நேயர்காள், இன்றைக்குப் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இஸ்லாமினால் போடப்பட்ட திட்டத்தை யுற்று நோக்குங் கள்! இத்தகை பெரியவியாதியை யடியோ டொழிக்கும் விதத்தைக் கவனியுங்கள்! ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டிய தில்லை டாக்டரிடம்போய் அலையவேண்டியதில்லை. பல் பிடுங்கப்பட்டு, முகத்தை விகாரப்படுத் திக்கொள்ள வேண்டியதில்லை. சாதாரண மாய் ஒரு குச்சியினால் பல் துலக்கிக் கொள்வதனால் இத்தகைய பிரயோஜனம் கிடைக்கின்றது.

ஒலுச்செய்தல்.

ஜலம், வாயு இவைகள் மனிதவாழ்க்கைக்கு இன்றி யமையாதவையா யிருக்கின்றன. தினம் ஒன்றுக்கு ஐந்துவேளை செய்யப் பெறும் இந்த அர்த்த ஸ்நானத்தினால், வாழ்க் கைக்கு இன்றியமையாத வஸ்துவாம் ஜலம் சரீரத்திற்கு அத்தியாவசியமான அளவு உட் செல்லுகின்றது. தவிரவும், சரீரத்தின் திறந்த பாகங்களின்மீது படிந்துள்ள கெட்டவஸ் துக்களையு மகற்றுகின்றது. தற்கால தத் துவ சாஸ்திரீக முறைப்படி வாயுவில் பறக் கும் கோடிக்கணக்கான கிருமிகள் வாய், மூக்கு வழியாய் வயிற்றுட் செல்லுகின்றன. அவைகளில் சிலது வயற்றில் மரித்துவிடுகின் றன. சிலது உட்செல்லும் பாதைகளிலேயே நின்று விடுகின்றன. ஒலுவில் மூன்றுதரம் வாய்க்குள் நீர்செலுத்தியும், நாசித் துவாரத் துள் நீர் செலுத்தியும் சுத்தம் செய்து, வழி யில் நின்றுவிடும் கிருமிகளை விட்டும் துப் புறவு செய்யப்படுகின்றது. இத்தகைய சாதாரண வழியினால் வாய், நாசி சுத்தமா வதி னிமித்தம், உட்செல்லும் காற்று சுத்த மாய் இருக்கவும் ஹேதுவாகின்றது. நிற்க; தினம் ஐந்துவேளை ஒலுச் செய்யப்படுவதன் நந்நோக்கையும் கவனிக்க!

களைத்துப்போன உறுப்புகளுக்கு மீண்டும் உற்சாகத்தைத் தருவதற்காயும், பிரயோ ஜனமற்ற அணுக்கள் சரீரத்தை விட்டும் வெளிவருவதற்காயும் மனிதன் நித்திரை போகின்றான். நித்திரையில் இவன் சரீரத் தில் திறந்த பாகங்கள்மீது கணக்கற்ற கிருமி கள் சேர்ந்துபோயிருக்கின்றன. எனவே, நித்திரை விட்டெழுந்தவுடன், சூர்யோதயத் திற்கு முன்பே ஒலுச் செய்வதால், இக்கிருமி கள் உடலைவிட்டும் நீங்கிவிடுவதன்றி, சர்மத்தி லுள்ள சிறு துவாரங்கள் வழியாய் புதிய உண வாம் நீரும் உட்சென்று விடுகின்றது. பிறகு அரைப் பகல் கழிந்துபோனதும், சூர்யவெப் பத்தினாலும், உழைப்பினாலும் மனிதன் களைத்துப் போயிருக்கின்றான். அதுபோழ்து

ஒளுச் செய்வதனால், புதிய உற்சாகத்தைப் பெறுவதுடன், மேற்கூறியதேபோன்று சரீரத்தின் மீதுள்ள கிருமிகளையும் நீக்கிக் கொள்கின்றான். இதற்குப்பின் மிகவும் கஷ்டமான வேலைகளைச் செய்ய நேரிடுகின்றது. எனவே மிகவும் களைத்துப் போகின்றான். ஆகையால், மூன்று நான்கு மணிக்குப் பின் மீண்டும் ஒளுச் செய்து, மேற் கூறப்பட்ட பயன்களை யடைகின்றான். இதற்குப்பின் சூர்யாஸ்தமன நேரத்தில், பகல்முழுமையும் அடைந்த இன்னல்களை நீக்கிக் கொள்வதற்காய் ஒளுச் செய்து மேற் கூறிய பயன்களைப் பெறுகின்றான். இதற்குப்பின் இரவில் மூன்றிலொரு பாகம் கழிந்தபின், மீண்டும் நித்திரை போகவேண்டியோனா யிருக்கின்றான். நல்ல நித்திரைக்கு சுத்தம் அத்தியாவசியமாதலின், இப்பொழுதும் இந்த ஒளுவினால் சுத்தத்தை யடைந்து சுகநித்திரை போகின்றான். தினம் ஒன்றுக்கு ஐந்துவேளை செய்யப்படும் இந்த ஒளுவின் மகிமையைக் கவனியுங்கள்! அதிலும் எவ்வளவு எளிதான தென்பதையும் உற்று நோக்குங்கள். குளிர்ந்த, உஷ்ண தேசத்து ஜனங்கள் யாவரும் எளிதில் அனுஷ்டிக்கும் முறை யன்றோ இஃது? குளிப்பதைப்போன்ற கஷ்டங்கள் இதில் இல்லையல்லவா?

சாதாரணமாய் வாரத்திற் கொரு தடவை ஸ்நானம் செய்யும்படி நம் மதம் கட்டளையிடுகின்றது. சம்சாரி, சம்சர்க்கத்திற்குப் பின் கட்டாயம் குளிக்கக் கடமைப்பட் டிருக்கின்றான். சம்சர்க்கம் சரீரத்தின் கிருமிகளை சர்மத்தின் புறம் கொண்டுவந்து விடுகின்றது. அவ்வமயம் குளிப்பதால் கெட்ட கிருமிகள் வெளியே போய்விடுவதுடன், சம்சர்க்கத்தினால் சரீரத்தி னின்றும் வெளிப்பட்ட சத்துக்கு ஒருவகைப் பகரமும் தண்ணீர் மூலம் உட்சென்று விடுகின்றது. இதனாலேயே (இந்த) பர்லான ஸ்நானத்தில் ஒரு மயிரளவும் நனையாதிருத்தல் கூடாதெனக் கூறப்பட் டிருக்கின்றது. (தொடரும்)

அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தாவூத்சா இழைத்த தவறு.

நபிகள் நாயகத்தின் மாட்சி; ஊன்றிப் படியுங்கள்.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

வாசகர்களே! மானிட வர்க்கத்தவரின், ஹிருதய சம்பந்தமான சகல வியாதிகளையும், ஆத்மசம்பந்தமான சகலநோய்களையும், தீர்த்துக் குணப்படுத்துவதற்கு, உற்ற அவிழ்தம் திருக் குர்ஆனைச் சுமந்தவரும், அதன் தோழருமான (சாஹிபுல் குர்ஆன்) முஹம்மத் நபீ (ஸல்.) அவர்களுடைய பரிசுத்த ஜீவிய சரிதையைச் சிந்தனை செய்வதைவிட சிரேஷ்டமான மருந்து உலக மக்களுக்களுக்கு வேறொன்றுமில்லை.

இஸ்லாத்துக்கு சாஸ்வதமான அற்புதமாயும், சர்வ வல்லமையுள்ள ஆண்டவனின் பரிபூரண அத்தாட்சியாயு மிருந்து உலகத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பது, திருக் குர்ஆனுக்குப் பின்னர் ஒரு பொருள் உண்டென்றால், அது திருக் குர்ஆனின் நண்பருடைய வாழ்க்கைச் சரித்திரமே யொழிய பிறிதொன்று மில்லை.

உண்மையிலேயே திருக் குர்ஆனும், நுபுவ்வத்தின் ஜீவியமும் கருத்தில் ஒன்று தான். திருக்குர்ஆன் (மதன்) மூலம். றசூலின் வாழ்க்கை (ஷறஹ்) விருத்தியுரை. அப்படியே திருக் குர்ஆன் (இல்ம்) கல்வி. றசூலின் (ஸீரத்) சரிதை அந்தக் கல்வியைக் கற்று, அதன்படி நடக்கும் (அமல்) நடத்தை.

அந்த குர்ஆனாகிய கல்வி உலகத்துக்காக எழுத்தின் கிரமத்துக்கு வந்து, வரி வடிவமாகி (கிதாப்) புஸ்தக ரூபத்தில் சமைந்தது.

இந்த "கற்றபடி நடக்கும் அமல்" என்ற நடத்தையாகிய றசூலின் சரிதையோ, திருக்குர்ஆனுக்கு உதாரணம் போன்ற ஒரு ஸ்தூலமுள்ள ஆத்மாவாய்ச் சமைந்தது. இந்த அமல் என்ற பரிசுத்த ஆத்மாவானது திருமக்காவின் சமபூமியிலே நடந்து திரிந்து கொண்டிருந்ததாக உலகத்தின் பார்வைக்குத் தென்பட்டுக் கொண்டிருந்தது.

அப்படியேதான் றசூல் நாயகத்தின் அருமை பத்தினியராகிய, ஸித்தீகா(ரலி. அன்ஹா)வை, "உங்கள் பர்த்தாவின் ஒழுக்கம் எத்தகைத்து?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஸித்தீகா (ரலி.) அவர்கள் "என் பர்த்தாவின் ஒழுக்கம் திருக்குர்ஆன் ஒழுக்கமே" என்று விடை பகர்ந்தனர்.

பக்தர்களே! இவ்விதம் றசூல் அதிபருடைய வாழ்க்கைச் சரித்திரம் திருக்குர்ஆனோடு இணைந்து, பிணைந்து இருப்பதால் றசூல் நாயகத்தைப் பற்றின பிரத்தியேகமான ஜீவிய சரிதைகள் உலகில் வெளிவந்தாலும், வாராமல் போனாலும், வந்தன இருந்தாலும், அவை அழிந்தாலும் கிலேசம் ஒன்றுமில்லை. அழியாக் கிரந்தமாகிய திருக்குர்ஆனின், ஒவ்வொரு அதிகாரமும், பகுதியும், வசனங்களும், ஒவ்வோர் வசனத்தின் முடிவும் அந்தப் பரிசுத்த றசூல் அதிபரவர்களின் வாழ்க்கை இயல்பைத் தாங்கிக்கொண்டே இருக்கிறது.

இஸ்லாத்தின் சரித்திர சம்பந்தமான சகல நூல்களும் உலகத்திலிருந்து எடுபட்டு அழிந்து போனாலும் போகட்டும். ஆறுவது நூற்றாண்டிலே வெளிக்கிளம்பிய றசூலைப் பற்றி உலகம் கேள்விப் பட்டிருந்த யாவற்றையும் மறந்து போனாலும் போகட்டும்.

மகா கண்ணியந் தங்கிய திருக் குர்ஆன் ஒன்றே உலகில் நிலையாய் இருந்து வரும் போது, அந்த றசூல் நாதருடைய பரிசுத்த மானுஷீகத் தன்மையும், அவர்களுடைய வாழ்க்கைச் சரிதையின் அத்தாட்சிகளும், சாட்சியங்களும் ஒருக்காலும் அழிந்து போகா. திருக் குர்ஆன் ஒன்றே அந்த றசூல்நாயகம் அவர்கள் வாழ்க்கையைப்பற்றி உலகோர்க்கு எடுத்துக் காட்டப் போதுமானதாக இருக்கின்றது. அது என்றென்றும், உலகத்துக்கு முஹம்மத் றசூல் (ஸல்.) அவர்களைப் பற்றி பஹிரங்கப் படுத்திக்கொண்டேயிருக்கும். மேலும், அது (திருக் குர்ஆன்) தன்னைக் கொண்டு வந்தது யார்? எந்தக் காலத்தில் அவர்கள் வந்தார்கள்? எந்தத் தேசத்தில் பிறந்தவர்கள்? அவர்களுடைய பந்துமித்திரர் எப்படிப்பட்டவர்? அவர்களுடைய ஜாதியார், கூட்டத்தார் எப்படிப்பட்டவர்? அவர்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி நடத்தி வந்தார்கள்? உலகத்தோடு அவர்கள் நடந்து கொண்ட விதமென்ன? உலகம் அவர்களோடு எப்படி நடந்தது? அவர்களுடைய வெளி ஜீவியம் எப்படியிருந்தது? வீட்டு ஜீவனம் ஸம் எத்தகைத்து? அவர்களுடைய நாட்கள் எப்படி கழிந்தன? அவர்களுடைய இரவுகள் எக்காரியங்களில் கடந்துகொண் டிருந்தன? அவர்கள் எத்தனை வயதை அடைந்தார்கள்? என்னென்ன அத்தியாவசியமான விஷயங்களும், சம்பவங்களும் இயக்கங்களும் அவர்கள் முன் வந்தன? பின்னர், உலகத்திலிருந்து பிரிந்து செல்லும் சமயம் வந்தபோது உலகத்தையும், உலகத்தோரையும் எந்த ஸ்திதியில் விட்டுச் சென்றார்கள்? அவர்கள் முதன் முதலாய் உலகத்தை நோக்கும்போது உலகத்தின் ஸ்திதி எப்படி இருந்தது? பின்னர் அவர்கள், பயணக்கண் போட்ட பொழுது, உலகம் எந்த நிலையிலிருந்து எந்த நிலையை அடைந்திருந்தது? முதலிய றசூல் அதிபரவர்களைப்பற்றி, உலகம் என்னென்ன அத்தியாவசியமான விஷயங்களை விரும்புமோ, அவை யாவும், திருக்குர்ஆனின் அருட்பெரும் நாவினாலேயே உலகம் செவ்வையாயும், தெளிவாயும் கேட்டறிந்து கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகையால்தான் திருக்குர்ஆன் உலகத்தைநோக்கி, "பிரஜைகளே! உங்கள் நடத்தைக்கு முன்மாதிரியாக இதோ! உங்கள் றசூலை நீங்கள் கெட்டியாய்ப் பிடித்து, அவரைப் பின்பற்றி நடவுங்கள்" என்று ஏவி, அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைத் தன தகத்தில் வைத்துக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. அப்படியே அது, நபீ அவர்களுடைய ஜீவியத்தின் துவக்கம் எவ்வாறு ஆயிற்று? முடிவு எத்தகைத்து? அவர்கள்பால் என்னென்ன சம்பவங்கள் நிகழ்ந்தன? என்பதையும் அவர்கள் சொல்லிலும், செயலிலும் அவர்களோடு சம்பந்தப்பட்ட யாவும் உலகத்துக்கு ஒரு பிரதான

அத்தாட்சி என்றும், சத்தியசாட்சி என்றும், பஹிரங்கப் பறைசாற்றி நிற்கின்றன.

ஆகவே, றசூல் அதிபரவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் பிரத்தியேகமான தனித்த நூலாக எழுதி முடிக்கக் கையில் எழுதுகோல் எடுப்பவர் எவராயிருப்பினும் சரியே, அவர் தம்முன் திருக்குர்ஆனை வைத்தே நகல் செய்யவேண்டும். அவ்வாறு எழுதி முடியப்பெறும் நூல்களைத் திருக்குர்ஆனிய ஞானிகளான பக்தர்கள், மாற்றுப் பார்க்கும் உரைகல்லாகிய திருக் குர்ஆனில் தீட்டிப் பார்ப்பார்கள். மாற்றுக் குறையாத பத்தரைமாற்றுப் பசும்பொன்னைக் காணப் படுமானால், அவைகளை ஏற்றுக் கொள்வர். மாற்றில் ஒரு நூலிழைப் பரிமாணம் விட்டுத் தென்படுமானால், அவைகளைப் பசும்பொன் னல்ல என்று மதித்து, வீசித் தள்ளுவர். இவ் விதமாகவே, B. A. டிக்ரியினால் எழுதிப் பிரசுரஞ் செய்திருக்கும் பிரஸ்தாப 'அபூபக்கர் ஸித்தீக் (ரலி.)' என்ற நூலில், நபீ அவர்களுக்குத் திருக்குர்ஆன் மூலம் ஆண்டவனால் கிடைத்திருக்கும் வாக்குறுதிகள் மறக்கப்பட்டு, நிலை குலைக்கும் ஷைத்தானுடைய அபிப்பிராயம் அதில் சந்தேகமறப் பதிந்து கிடந்து, தலைவிரி கோலமாடுகின்றபடியால், "ஆ! எங்கள் ஆண்டவனே, சபிக்கப்பட்ட ஷைத்தானை விடுத்து உன்னிடம் அடைக்கலம் தேடுகிறேன்" என்று ஆண்டவனிடம் காவல் தேடி, "ஓ பாடசாலை மாணவர்களே! அந் நூலை உங்கள் மத்தியில் வரவிடாதபடி காத்துக் கொள்ளுங்கள்" என்று, ஞானமுள்ள உலகம் மாணவர்களுக்குப் புத்திமதி சொல்லுகின்றது. ஏனென்றால்,"நஞ்சு கலந்த பாலாயின் அதைச் சுத்தப்படுத்தியுங் குடியாதீர்கள். அப்படியே அதைக் கொட்டிவிடுங்கள்" என்று போதிக்கிறது. ஆனால், இப்பொழுது, பிரஸ்தாப B. A. பட்டதாரியால் நாளது (1929) நவம்பர் மாதம் முதல் தேதி வெளியான அவருடைய பத்திரிகையின் (பத்திராதிபரங்கம்) 14-வது பக்கம் 3-வது காலத்தின் இறுதியில், அவருடைய பிரஸ்தாப "அபூபக்கர் ஸித்தீக் (ரலி.)" என்ற நூலில் கண்ட "அவர்களிருவரும் அந்த ஹிஜ்ரத்தின்போது, எதிரிகளின் கையில் சிக்கிக் கொண்டிருப்பார்களாயின், நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்ற வாக்கியம் திருத்தியமைக்கப்படும்" என்று கூறும் அவர் கூற்றிலுள்ள இரகஸியத்தை உலகம் தெரிந்துகொள்ளுமாறு இதனடியில் அவர் வாக்கை அப்படியே குறிப்பிடுகிறேன். அதாவது:—

1. அந்த வாசகம் "சாமான்ய பொதுமக்களுக்கு மனோ விகாரத்தை யுண்டுபண்ணுகிறதென்று, எமது ஆருயிர் நண்டர்களிருவரும் வற்புறுத்திக் கூறியதன்மேல், அதுவும் அவர்களது மனோ விகாரத்துக்கு இடமில்லாமலே கூடிய விரைவில் திருத்தியமைக்கப்படும்;

2. இத்தனையும், நம் முஸ்லிம் சமூக சோதரருள் வீண் கிளர்ச்சியும், அதனால் விளையும் வீண் பிளவும் கூடாதென்றே செய்யக் கட்டுப்பட்டிருக்கின்றோம்;

ர, இதற்காகவும் எவரும் தமது மீசையை முறுக்கா திருப்பாராக" என்பதாம்.

1. இதனால், "அபூபக்கர் ஸித்தீக் (ரலி.)" என்னும், அவருடைய நூலில்கண்ட அந்த வாசகம், சாமான்ய பொதுமக்களுக்கு மனோ விகாரத்தை உண்டுபண்ணுகிறதாக, இந்த B. A டிக்ரியின் ஆருயிர் நண்பர்களான (எனது ஆத்மசகோதரர்கள்) இருவரும் தம்மை வற்புறுத்திக் கூறியதாகவும், அதுவும் அவர்களது (அவ்விருவரது) மனோவிகாரத்துக்கு இடமாகாவண்ணமும் அந்த வாசகம் திருத்தி யமைக்கப்படும் என்றும் முதலில் அவர் குறிப்பிடுகிறார்.

எனக்குத் தெரிந்தமட்டில் "அவர் கூறும் எனது ஆத்ம சகோதரர்கள், நூலில்கண்ட அந்த வாசகம் சாமான்ய பொதுமக்களுக்கு மனோ விகாரத்தை மாத்திரம் உண்டுபண்ணும் என்றாவது, அதனை மாத்திரம் திருத்தியமைக்க வேண்டுமென்றாவது, அப்படியமைக்க இந்த B A. டிக்ரியை அவர்கள் வற்புறுத்தச் செய்திருப்பார்கள் என்றாவது எவரும் நினைக்கவோ, நம்பவோ மாட்டார்கள்" என்று நான் உறுதியாய்ச்சொல்வேன். ஏனெனில் அவர்கள் மத ஞானத்திலும், பக்தியிலும் முதிர்ந்தவர்கள்; திருக்குர்ஆனை சதா தியானித்து, அதையே தங்கள் ஆருயிராகக் கொண்டவர்கள்; அதற்கு முற்றும் மாறாக வரும் பிரசுரங்களைக் காலால் உதைத்துக் குப்பைதொட்டியில் போடும் சித்தமுடையவர்களே யொழிய அவைகளைத் தங்கள் ஆருயிர்க்கு ஒருகாலும் எடுத்துக்

கொள்ளார்கள். எனெனில் திருக்குர்ஆன் அவர்கள் இதயத்தில் பிரகாதித்துக்கொண்டிருக்கிறது. றசூல் நாயகருக்கு ஆண்டவன் கொடுத்த வாக்குத் தத்தத்தைத் திருக்குர்ஆன் சதா அவர்களுக்கு ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறது. திருக் குர்ஆன் "உங்கள் றசூல் ஜனங்களுடைய கையினல் கொல்லப்பட மாட்டார். அவரைஆண்டவன் காப்பான்'' என்று அறிவுறுத்து கிறது. "அபூபக்கர் ஸித்திக் (ரலி.)'' என்ற பட்டதாரியின் நூலோ அவர்கள் "கொல்லப்பட்டுப் போவார்கள்'' என்று அபிப்பிராயங் கொடுந்து நிற்கின்றது. ஆகையால் எனது ஆத்ம சகோதரர்கள் நல்லெண்ணத்துடன் இந்த B. A. டிக்ரியைக் குணப்படுத்தச் சித்தங்கொண்டிருந் திருப்பார்களாயின், "ஆண்டவ னுடைய கட்டளை நூலாகிய திருக்குறுஆன் ஆணைக்கு முன்னே உன் சிரம் பணிந்துவிடு'' என்று மட்டும் சொல்லி இருப்பார்கள். ஏனெனில் அதுதான் இஸ்லாத்தின் தத்துவ போதனை என்பதை என் சகோதரர்கள் அறிவார்கள். உண்மையில், இஸ்லாமென்பது தேவ கற்பனைகளுக்குத் தாழ்மையுடன் சிரம் வணங்குவதும், அவனுடைய சித்தத்துக்குத் தன்னை ஒப்புவித்தலுமே யாம். ஆனல் இந்த B. A. டிக்ரி சொல்லுகிறபடி எனது ஆத்ம சகோதரர்கள் சாமான்ய போதுமக்களுக்கு மனோவிகாரத்தை உண்டுபண்ணு மென்று மாத்திரம் கூறியதாக சொல்லி யிருப்பதில், "சாமான்ய'' என்ற வார்த்தையை இந்த B. A. டிக்ரி, "அறிவிலியான பொதுமக்கள்'' என்ற கருத்தில் பிரயோகித் திருந்தால், அறிவற்ற ஜனங்களுக்காக இவருடைய அறிவை அடிமைத்தன மாக்கலாமா? அல்லது சாமான்யம் என்ற வார்த்தையை "விசேஷித்தவ ரல்லாத சாதாரண அறிவுடையோர்' என்ற கருத்தில் பிரயோகித் திருந்தால், அவர்களுக்கு மனோ விகாரம் உண்டாக்கக் காரணமென்ன? அவர்கள் சொந்த வியவகாரமல்லவே! அப்படி அவர்களுக்கு ஏற்படுவதானுலும் திருக் குர்ஆன் ஆணைக்கு விரோதமான வசனம் என்பதனல் தான் ஏற்படவேண்டும். ஆகையால், திருக் குர்ஆன் பிரமாணத்துக்கு முன்னே, உன்சிரம்பணிக என்றுதான் என் ஆத்ம சகோதரர்கள் சொல்லி யிருப்பார் களேயன்றி B. A. டிக்ரி சொல்லுகிறபடி யான கருத்துப்படி உபதேசிக்கப்போயிருக்க மாட்டார்கள் என்று நினைக்க இடமுண்டு.

அவர்கள் இருவரும் தம்மை வற்புறுத்தியதாக இந்தப் பட்டதாரி B. A. கூறுகிறார். ஒருவனை இஸ்லாத்தில் வற்புறுத்திச் சேரச் சொல்ல இக்காலம் இடந்தராதென்பதை அவர்கள் அறிவார்கள். கட்டாயத்துக்காக ஆண்டவனுக்குமுன் தலை குனியவேண்டிய தவசியமில்லை. அப்படித் தலைவணங்காது போனல் ஆண்டவனுக்கு எவ்வித நஷ்டமுமில்லை. இந்த வியவகாரமோ, ஆண்டவனுடைய கற்பனைக்கு முரண்பட்டுள்ள ஒரு நூலைப்பற்றியது. சாமான்யராகட்டும், விசேஷித்தவராகட்டும், நண்பராகட்டும் அந்நூலில் திருக்குர்ஆன் நபீ அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குத் தத்தத்துக்கு விரோதமான ஞானமற்ற வசனம் காணப்படுகிறபடியால், அதை(க் கட்டாயத்தினு லல்ல) மனப்பூர்வமாய் ஒப்புக்கொள் என்றுதான் விவேகிகள் சொல்வார்கள். ஆனல் இந்த B. A. டிக்ரியின் கூற்றைப்பார்த்தால் (நண்பர்கள்) வற்புறுத்திக் கூறியதின்மேல், அதுவும் அவர்கள் மனோவிகாரத்துக்கு இடமில்லாமலே திருத்தி யமைக்கப்படுமாம். இந்தவார்த்தையை அவருடைய ஆருயிர் நண்பரும், எனது ஆத்ம சகோதரரு மானவர்கள் எவ்விதம் மதிப்பர்? எவ்விதம் ஏற்றுக்கொள்வர்? மார்க்க விவகாரத்தில் ஆண்டவனுடைய கட்டளைக்குச் சிரம்பணிய வேண்டியதே யொழிய வேறெவருடைய நட்புக்காகவும், சகோதரத்துவத்துக்காகவும் தலை குனிய வேண்டியதில்லை. அப்படிப் பணியாதுபோனல் எவருக்கும் அதனல் எவ்வித வருத்தமும் நஷ்டமுமில்லை. பணியாதவன் எவனோ அவனுக்குத்தான் நஷ்டம்.

2. பின்னும் இந்த பி. ஏ. பட்டதாரி "இத்தனையும், நம் முஸ்லிம் சமூகத்தோருள் வீண் கிளர்ச்சியும், அதனல் விளையும் வீண் பிளவும் கூடாவென்றே செய்யக் கட்டுப் பட்டிருக்கிறோம்'' என்கிறார்.

பேருக்கு முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொள்ளும் முஸ்லிம்களானுலும் சரியே, எனையோரானுலும் சரியே இத்தகையோர் ஓர் அசத்தியத்தை உலகில் ஸ்தாபிக்க, அல்லது பரப்ப முன்வருவார்களானல், சத்தியத்துக்காக அதை எதிர்ப்போர் செய்யும் கிளர்ச்சி

வீண்கிளர்ச்சி யாகாது. உண்மை முஸ்லிம்களுக்குள் பிளவும் ஏற்படாது. சத்தியத்தை மீறிநடப்போர் உண்மை முஸ்லிம்களை விட்டும் பிளந்து போனால் விசாரம் ஒன்று மில்லை. ஆகையால் வீண் கிளர்ச்சிக்கும் வீண் பிளவுக்கும் தலை வணங்க வேண்டுவதில்லை. ஆண்டவனுடைய கட்டளைக்குத்தான் சிரம் பணிய வேண்டும். ஆகையால் பிரஸ்தாப விஷயம் ஆண்டவனுடைய கட்டளையைப் பொறுத்ததே. அதற்கே தலைவணங்கும்படி திருக் குர்ஆன் ஆணை யிடுகின்றது.

இனிநம்மவர் (a) "இதற்காக எவரும் தமது மீசையை முறுக்காதிருப்பாராக" என்று கூறுகிறார். இதனால் "நான் சாமான்யமான பேர்வழியல்ல. மேற்குறித்த காரணங்களினால் தான் 'திருத்தியமைக்க' முன் வந்திருக்கிறேன். நீங்கள் இதனால் மிஞ்சி மீசைமேல் கை போடாதீர்கள்" என்ற கருத்து வெளிப்படுகிறது. இங்கே, மேனாட்டுக்குப் போய் மிருகக் கலாசாலையில் பயின்றோ, அல்லது அங்கே போய் சனியனை விலைக்கு வாங்கிக் கொண்டோ, எவரும் வந்து இந்த B. A. டிக்ரியை எதிர்க்க முன் வரவில்லை. மகா கண்ணியந்தங்கிய திருக் குர்ஆன் கட்டளை தான் இவரை எதிர்த்து நிற்கிறது என்பதை அவர் அறிவாராக. அதன் கற்பனைகளுக்கு முன்னே சிரம்பணிந்து கிடப்போருக்கு மீசை யுண்டுதான். ஆனால் அவர்கள், (அவ்லியா வுஷ்ஷயாதீன்) ஷைதானின் தோழருக் கெதிரில் மீசையில் கைபோட்டு முறுக்கி, அவைகளோடு எதிர்ப்பர்; போராடுவர். அத்தகைய ஷைத்தான்களை நிர்மூலமாக்குவர். ஆனால் (அவ்லியா உல்லா) ஆண்டவனின் தோழருக்கு முன்னேயோ தங்கள் மீசையைப் பணியவிட்டு அவர்கள் பாதங்களைத் தொட்டு முத்தமிடுவர். (தொடரும்)

புதக்குடி மத்ரசாவின் பட்டமளிப்பு விழா.

தஞ்சை ஜில்லா, புதக்குடி மத்ரசா "அன்னூருல் முஹம்மதிய்யு" வின் பட்டமளிப்பு விழா சென்ற 28-9-30 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்குத் துவங்கி, 5 மணிக்கு அதி சிறப்பாக முடிவு பெற்றது. மகாநாட்டுக்கு விஜயஞ் செய்யும் கனவான்களுக்கு சாப்பாட்டு வசதிக்காகவும், இட வசதிக்காகவும், பந்தல்களும், கொட்டகைகளும் போடப்பட்டிருந்தன. மகாநாட்டுக்கென அமைக்கப்பெற்றிருந்த பந்தல் சுமார் 5000 ஜனங்கள் உட்கார ஹேதுவுள்ளதாய் அமைக்கப்பட்டிருந்தது. 27-ம் தேதி சனிக்கிழமை யன்றே சுமார் 5000 ஜனங்களுக் கதிகமாகவே குழுமிவிட்டனர். அன்று பிற்பகல் 3 மணிக்கு ஆசிரியர்கள் மகாநாடொன்று ஜனாப், ஸூபீ, மௌலவீ, அப்துல் காதிர் ஸாஹிப் அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. 17-5-25-ல் வேலூர் மத்ரசயே பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் கூடிய ஆசிரியர், நிர்வாகிகள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இந்த மகாநாட்டிலும் ஏக மனதாய் நிறைவேற்றப் பட்டன.

மறுநாள் காலை 7 மணிக்கு பட்டமளிப்பு விழாவின் தலைவர், அஃலா ஹஸ்ரத், கான் பஹதூர், மௌலானா, மௌலவீ, அல்-ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் ஸாஹிப் கிப்லா அவர்களும், சென்னை நகர ஷரீப், ஜனாப் சவுகார் அப்துல் ஹகீம் ஸாஹிப் அவர்களும், வேலூர் மத்ரசா பாக்கியாத் ஸாலிஹாத்தின் ஆசிரியர்களான ஜனாப், மௌலானா, மௌலவீ, அல்-ஹாஜ், அப்துல் ஜப்பார் ஹஜ்ரத்கிப்லா அவர்களும், மௌலானா, மௌலவீ, முப்தீ, ஷைக் ஆதம் ஸாஹிப், மௌலானா, மௌலவீ, அல்-ஹாஜ், அப்துர் ரஹீம் ஸாஹிப், மௌலானா, மௌலவீ, அப்துல் அலீ ஸாஹிப், மௌலானா, மௌலவீ, ஜியாவுத்தீன் அஹ்மத் ஸாஹிப் அமானீ, மௌலானா, மௌலவீ, ஹஸன் பாதுஷா ஸாஹிப், மௌலானா, மௌலவீ, ஹாஜீ, அப்துஸ் ஸமத் ஸாஹிப், மௌலானா, மௌலவீ,

வி. எம். கே. அப்துஸ் ஸமத் ஸாஹிப், மௌலானா, மௌலவீ, சையித் முஹம்மத் ஸஈத் ஸாஹிப் முதலியோர்களும், ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர், மௌலானா, மௌலவீ, அஹ்மத் சஈத் ஸாஹிப், மௌலானா, மௌலவீ, அல்-ஹாஜ், கமாலுத்தீன் ஹஜ்ரத், ஹிபாஜத்துல் இஸ்லாம் ஆசிரியரும், மானேஜருமாகிய மௌலானா, மௌலவீ, அப்துர் ரஹீம் ஸாஹிப், திருச்சி மௌலானா, மௌலவீ, சையித்முர்த்தஜாஸாஹிப் எம். எல். ஏ. முதலியோர்களும் தஞ்சை மார்க்கமாகக் கொரடாச்சேரி வந்திறங்கினார்கள். இவர்களை மௌலானா, மௌலவீ, எஸ். ஏ. முஹம்மத் அலீ ஸாஹிப் (ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியதரிசி) அவர்களும், வரவேற்புக் கமிட்டியின் முக்கியஸ்தர்களும், ஆயிரக் கணக்கான ஜனங்களும் வெகு குதூகலத்துடன் வரவேற்று, அவர்களுக்கென் றேற்படுத்தப்பட்டிருந்த ஜாகைக் கழைத்துச் சென்றார்கள்.

சபை சுமார் 3 மணிக்கு கிராஅத் ஓதப்பட்டு, ஆரம்பிக்கப் பட்டது. சுமார் 10,000 ஜனங்களுக் கதிகமாகவே குழுமி யிருந்தனர். அக்கிராசன ரவர்களுக்குப் பல உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பட்டன. பிறகு அக்கிராசனப் பிரசங்கம் படிக்கப்பட்டது. அதின் முக்கிய அம்ச மாவது:—

"கண்ணியவான்களே! இதுசமயம் இம் மத்ரஸாவின் வருஷாந்திர ரிப்போர்ட் ஒன்று என்னிட மிருக்கிறது. இதை வாசித்ததிலிருந்து, மௌலானா, மௌலவி, ஹாபிஜ், ஹாஜீ, அப்துல்கரீம் சாஹிப் அவர்களுக்கு நமது பாகியாத் ஸாலிஹாத்தோடு எவ்வளவு தூரம் நல்லெண்ணம் நிறைந்திருந்ததென்பது தெற்றென விளங்குகின்றது. பொதுவாக எல்லா சட்டதிட்டங்களும், பாகியாத் ஸாலிஹாத்தின் சட்டதிட்டங்களைப் பின்பற்றியதாக இருக்கின்றன. உத்தியோகஸ்தர்களின் பெயர்களும், டிரஸ்டிகளின் பெயர்களும், எண்ணிக்கையும் சற்றேறக்குறைய அதற் கொத்ததாகவே காணப்படுகின்றன. ஆனால் சில விஷயங்கள் விடப்பட்டு குறையாக நிற்கின்றன. வக்பு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரமில்லை. வரவு செலவு கணக்குகளையும் காண்பிக்கப் படவில்லை. இக்குறைகள் நிவர்த்திக்கப் படுமானால், வருங்காலத்தில் நிச்சயமாக நன்மை பயக்குமென்பது எனது நம்பிக்கை. அந்த ரிப்போர்ட்டில் காணப்படும் சட்ட திட்டங்களில் இன்னொரு விதியையும் சேர்க்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அதாவது:— "ஒருக்கால் டிரஸ்டிகள், டிரஸ்டி நடந்துக் கொள்ளவேண்டிய முறையையும், சட்டத்தையும் மீறி நடந்துகொள்வார்களானால் (அவ்வாறாகாமல் ஆண்டவன் காப்பானாக) கவர்ன்மெண்டாரின் உதவிகொண்டு அதை சீர்ப்படுத்திக்கொள்ள பொது முஸ்லிம்களுக்கு அதிகாரமுண்டு" என்பதேயாம்.

சங்கைபொருந்திய கனவான்களே! தங்களின் அருமையான நேரத்தை அதிகமாக எடுத்துக்கொண்டேன். ஆயினும், இம்மத்ரஸாவில் தேர்ச்சிப்பெற்று ஸன்னது பெறும் முஹஸ்ஸிலீன்களுக்கு அவர்களின் வருங்கால வேலைத் திட்டத்தைப்பற்றி சிறிது சொல்ல விரும்புகிறேன். கண்ணியம் பொருந்திய உலமாக்களே! "இரு வஸ்துக்களை உங்களிடை விட்டுப்போகிறேன்" (ஒன்று தங்களின் (ஸல்.) வம்சத்தார், இரண்டு குர்ஆன் ஷரீப்) என்றும், "உலமாக்கள் நபிமார்களின் அனந்தரவாரிஸுகள் என்றும் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள். இவ்விரு திருமொழிகளினால் நாம் தெரிந்துகொள்வதென்னவெனின், தங்களின் வம்சத்தினர்களாகிய ஸாதாத்துக்களை குல அனந்திரக்காரர்களாக ஏற்படுத்தி யிருக்கின்றார்கள். இஃது நம் பிரயாசையினால் தேடிக்கொள்ளப்படும் பதவியன்று. தீன்வழி உலமாக்களை தங்களின் கௌரவவாரிஸ்களாக ஏற்படுத்தியுள்ளார்கள். இன்னவர்களின் பொறுப்பிலேயே அல்லாஹ்வின் திருவேதத்தை உலகெங்கும் பரத்துவதற்கும், பிரசாரஞ் செய்வதற்கும் வேண்டிய திருப்பணியை ஒப்படைத் திருக்கிறார்கள். ஆகவே இஃது பிரயாசையுடன் தேடியடையவேண்டிய அந்தஸ்தாகும். "அல்லாஹ் (ஜல்.)வினிடம் அச்சப்பாடுடையவர்கள், அவனது அடியார்களில் உலமாக்களே" என்னும் அல்லாஹ்வின் திருவாக்கியத்தின்படி ஏனைய முஸ்லிம்களைப் பார்க்கினும் உலமாக்களாகிய தாங்களே அவ்வாண்டவன்பால் அச்சங்கொண்டவர்களாக விளங்கவேண்டுமன்றோ? நாம் நபிமார்களின் வாரிஸுகள் என்று வாயால்மட்டும் உச்சாடனம் பண்ணிக்கொண்டிருப்பதில் யாது பயன்? அவ்வாறு இருப்பின் உண்மை

வாரிஸுகளாவோமா? நம்மை வாரிஸாக்கி வைத்த ரசூல் (ஸல்.) அவர்களின் ஆணைப்படி அமுலில் கொண்டுவந்து உண்மையான வாரிஸ் பதவியை அடைய முயலவேண்டும்.

"ரசூலே! உம்முடைய ரப்பினிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டவைகளை பிரகடனப் படுத்துவீராக" என்று நமது நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அல்லாஹ் (ஜல்.) கட்டளையிட்டிருக்கிறான். ஆகவே நாம் முதன்முதலாக சிந்திக்கவேண்டியவை யென்னவெனில், நமது வள்ளல் ரஹ்மதுல்லில் ஆலமீன் (ஸல்.) அவர்கள் எக்காரணம்பற்றி நபியாக அனுப்பப்பட்டார்கள் என்பதும் அவர்களின் முக்கிய முதல்வேலை என்னவா யிருந்தது என்பது மாம். அந்தரங்க, பகிரங்க ஷிர்க்குகளையெல்லாம் அகிலத்திலிருந்து அடிவேருடன் கெல்லி ஒழிப்பதோடு, ஆண்டவனின் கட்டளைகளை அனுஷ்டிக்கச் செய்வதும், விலக்கப்பட்ட கருமங்களை தடைசெய்வதும் அவர்களின் (ஸல்.) வேலையாக விளங்கின. நாம் இத் திருப்பணிகளை ஆற்றவேண்டுமானால் முதன் முதலாக நாமே அவைகளின்படி அனுஷ்டித்துக்காட்டி, ஹஜ்ரத் (ஸல்.) அவர்களின் உண்மை நமூனாவாக ஆகவேண்டும். அப்படிக் கில்லாதவரையில் இக்காரியம் வெற்றி பெறுதென்பது திண்ணம். ஆண்டவன் குர்ஆன் ஷரீபில் "நீங்கள் செய்யாததை ஏன் சொல்லுகின்றீர்கள்? நீங்கள் செய்யாததை சொல்லுவது அல்லாஹ் (ஜல்.) இடத்தில் கெட்டகாரியமாகும்" என்று விளம்பியுள்ளதை இங்கு உங்களுக்கு ஞாபக மூட்டுகின்றேன். "அல்லாஹ் (ஜல்.) தன்னையும், தனது நபி (ஸல்.) அவர்களையும் பரிபூரணமாக பின்பற்றுவதற்கு வேண்டிய ஆற்றலை நமக்குத் தந்தருள்வானாக!" என்று துஆ கேட்கின்றேன். ஆமீன்!

உம்மியான நபி (ஸல்.) அவர்கள் 23 ஆண்டுகளுக்குள் அரப் நாடு முழுவதும் ஈமானென்னும் பேரொளியைக்கொண்டுப் பிரகாஸிக்கச் செய்துவிட்டார்கள். இஃது சரித்திரங் கண்ட சான்றாகும். பின் வந்த கலீபாக்கள் சில வருஷங்களுக்குள் ரூம், ஷாம், ஈரான், தூரான், மிஸ்ர், ஆப்ரிகா முதலிய நாடுகளிலெல்லாம் ஈமானொளியை விளங்கச் செய்துவிட்டனர். இத்தன்மையாகவே உத்தம உலமாக்கள் வாளை ஏந்தாமலும், யுத்தங்களொன்றும் புரியாமலும் இந்தியாவின் மேற்குக் கரைகளிலும், மலேயா, ஜாவா நாடு முழுவதிலும் இஸ்லாமைப் பரத்திவிட்டனர். இன்னவர்களின் நன்முயற்சியால் சுமாத்ரா, ஜாவா, மலேயா தீவுகளிலுள்ள பூர்வ ஜனங்கள் யாவரும் ஈமானென்னும் அரும்பாக்கியத்தை அடையப் பெற்றுவிட்டனர். ஆனால் நமது கர்னாடக தேசத்திலோ இன்றுவரையிலும் முஸ்லிம்களின் சங்கியை நூற்றுக்கு ஆறுக்குமேல் அதிகரிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், நாம் நமது இஸ்லாமிய பிரசாரக் கடமைகளை சரிவர நிறைவேற்றி வைக்காமையே யாகும். இன்று முதலேனும் இதற்காகக் கங்கணம் கட்டி முன் வருவீர்களானால் (இன்ஷா அல்லாஹ்) இதற்கு வேண்டிய வசதிகள் இல்லாமற் போய்விடவில்லை. "மதுரை ஜில்லாவிலுள்ள சில வகுப்பார் இஸ்லாம் மதத்தை ஏற்கத் தயாராக இருந்து வருகிறார்கள்" என்று எனது நண்பர்கள் சிலரால் அறிகின்றேன். தாங்கள் அங்கேயே முதல் முதலில் ஆண்டவன் பெயரால் ஆரம்பிக்கலாம். ஆண்டவன் வெற்றியளிப்பான். அடுத்தபடியாக இஸ்லாத்தை பாதுகாக்கவேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். முஸ்லிம் சகோதரர்கள் அனைவரையும் ஷரீஅத்தின்படி சரியாக நடத்திவைக்கவேண்டும். அனால்இக்காரியங்களை நிறைவேற்றப் புகுமுன் ஓர் விஷயத்தை மனதில் வேரூன்றச் செய்து கொள்ளவேண்டும். அஃதாவது:—"(நல்லடியார்கள்) பழிப்போரின் பழிச்சொல்லைக் கண்டு அஞ்சமாட்டார்கள்" என்று அல்லாஹு தஆலா தன்னுடைய நல்லடியார்களைப் புகழ்ந்து பேசும்போது சொல்லிக் காட்டுகின்றான். ஆகவே ஷிர்க், பித்அத் முதலிய ஆகாத கருமங்களை அகற்றி வைக்கும் போது, தங்களின் உயிர்களுக்கும், பொருள்களுக்கும், மானத்திற்கும் ஏற்படும் நஷ்டங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தக் கூடாது. முஸ்லிம்களின் முக்கிய மூலக்கொள்கைகளை முதலில் நேர்ப்படுத்துங்கள். பரல், வாஜிப், சுன்னத்து ஆகியவைகளை எடுத்து நடப்பவர்களாகவும், ஆகாத கருமங்களை விடுத்து நடப்பவர்களாகவும் நம் முஸ்லிம்களைத் தயார் செய்துவிடுங்கள். சின்னஞ்சிறு சில்லரை விஷயங்களில் பொது மக்களைப் புகுதவிட்டு, வம்பு வழக்கு நடத்துபவர்களாகவும், பிளவையும், வேற்றுமையையும் வளர்ப்பவர்க

ளாகவும் அவர்களை நீங்கள் தயார் செய்யா தீர்கள். ஒரு முஸ்தஹப்பான காரியத்தை செய்யப் புகுந்தால் அதனல் பலவிதமான பாபங்கள் நிகழக்கூடுமென்று எதிர்பார்க்கப் படும் பக்ஷத்தில், அந்த முஸ்தஹப்பான காரி யத்தை விட்டுவிடுவதில் தீங்கொன்றுமில்லை. கல்விமான்களாய உங்களுக்கு அதிகம் சொல் லத் தேவையில்லை "அறிவுடையோருக்கு சிறு ஜாடையே போதும்".

அல்லாஹ் (ஜல்.)வின் கிருபையால் நம் கர் னாடக தேசத்திலே ஷிர்க், பித்அத்தான காரியங்கள் வெகுவாக ஒழிந்துவிட்டன என் றாலும், இன்னும் சில பாமரர்களிடையே கொடியேற்றம், பஞ்சாவணக்கம், அவ்லியாக் களின் கப்ருகளில் கந்தூரி செய்யும் பாவனை காட்டி, மார்க்கத்திற்காகாத கூடு, கொடி யேற்றம் முதலிய வீண் வைபவங்களை செய் வது அவர்களுக்கு இயற்கைக் குணமாகவிருக் கிறது. இவ்வனுசாரங்களை வெகு விரைவில் வேருடன் பிடுங்கி எறிவது மிகமிக ஆவசிய மாகும். ஒவ்வொரு முஸ்லிமின் ஹிருதயத்தி லும் ஈமான் என்னும் ஒளியானது நிரம்பியே கிடக்கின்றது. ஆனல் அதன்பேரில் அறி யாமை,அஞ்ஞானங்களின் திரைகள் வீழ்ந்து கிடப்பதால் ஒளியான பிரகாஸம் வெளிக் கிளம்புவதில்லை. அத் திரைகளை நீக்குவான் வேண்டி பிரயத்தனப்பட்டால் அத்திரைகள் நீங்கி, அந்த ஈமானின் பேரொளி பிரகாசிக் கத் தொடங்கும்.

இப் பிராந்தியத்திலுள்ள முஸ்லிம்களில் பெரும்பாலோர்களை கவனிக்குமிடத்து, உல மாக்களின் உபதேசமொழிகளை அவர்கள் உல்லங்கனம் செய்வதில்லை. இவ்விஷயத்தில் இந்தியாவின் ஏனைய பாகங்களை ஒத்திட்டுப் பார்க்குமிடத்து, நம் நாட்டிற்குக் கிடைத்த ஆண்டவனின் அருட்பாக்கியமென்றேஇதைக் கூறவேண்டும். இந் நிலைமையில் நீங்கள் அதைரியம்கொண்டு, அல்லது சாமான்ய ஜனங்கள் கூறும் குற்றங் குறைகட்கு அஞ்சி உங்கள் கடமைகளை செய்யத் தவறுவீர்களே யானல் ஆண்டவனுக்கு நீங்கள் ஜவாப்தாரி யாவதோடு,இந்த ஜல்ஸாவில் உங்களுக் களிக் கப்படும் கண்ணியப்பதவிக்குத் தகுதியுள்ள வர்களென்று மதிக்கப்படாமலாய்விடுவீர்கள்.

அல்லாஹ் (ஜல்.) "உமது ரப்பின்பக் கம் தந்திரத்தைக் கொண்டும் நல்லுப தேசங்களைக் கொண்டும் அழைப்பீராக; மேலும் ஒழுங்கான முறையில் அவர்களோடு மல்லாடுவீராக" என்று குர்ஆனில் கூறியுள் ளான். உலமாக்களே! நீங்கள் கற்றிருக்கும் யுக்திசாஸ்திரமும், தர்க்கசாஸ்திரமும் இவ் வித சந்தர்ப்பங்களிலேயே உபயோகித்தல் வேண்டும். சரித்திர நூல்களிலே நீங்கள் படித் திருக்கலாம். நமது வள்ளல் ஹஜ்ரத் (ஸல்.) அவர்களுக்கு அவர்களின் குலத்தைச் சேர்ந் தவர்களே கஷ்டநிஷ்டூரங்களை விளைவிப்பதில் கொஞ்சமும் பின்வாங்கினர்களில்லை. ரஸூ லுல்லாஹ்(ஸல்.) அவர்களின்மீது பொல்லாத கூக்குரலைக் கிளப்பிவிட்டனர். பொய்யான அவதூறுகளை யெல்லாம் கட்டிவிட்டனர். கடைசியாக அவர்களின் உயிரையே மாய்த்து விட முன்வந்து விட்டனர். ஆனல் இவ்வாறான ஆபத்துக்களுக்கெல்லாம், கஷ்டநிஷ்டூரங்க ளுக்கெல்லாம் எதிரிடையாக ரஸூல் நாயகம் (ஸல்.) அவர்கள் என்ன செய்தார்கள்? "அல் லாஹ்வே! என்னுடைய கூட்டத்தாருக்கு ஸன்மார்க்கத்தைத் தந்தருள்! அன்னவர்கள் அறியாதவர்களா யிருக்கின்றனர்" என்ப தாகவே ஆண்டவனிடம் துஆ கேட்டார்கள். அஃதேபோல் நீங்களும் நடந்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ் (ஜல்.)வின் பாதையில் அளவற்ற கஷ்டநஷ்டங்கள் ஏற்படினும் பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண் டும். பழிவாங்கவேண்டும், பதிலுக்குப்பதில் செய்துகாட்டவேண்டுமென்ற எண்ணங்கூட உதயமாதல் கூடாது. இவ்விதமான வைராக் கியம் உங்களுடைய மனதிலே ஆழ அழுந்தி விடுமானல்,இன்ஷா அல்லாஹ் நிச்சயமாகவே நீங்கள் உங்களுடைய காரியங்களிலே ஜெயம் பெற்றுவிடுவீர்கள்.

"உலமாக்கள் பொதுஜனங்களிடமிருந்து காசு, பணம் பெறுகிறார்கள். அவர்கள்சுயமே பொருள் ஈட்டுவதில்லை" என்று ஒரு சிலர் தூஷித்து வருகின்றனர். இவ்வாறு தூஷிப்ப தானது அவர்களின் அறியாமையென்றே சொல்லுவேன். "அவ்வாறே அவர்கள் பொரு ளீட்டும் தொழிலில் இறங்கிவிடுவார்களா னல், முஸ்லிம்களுக்கு மார்க்க விதி விலக்கு களை போதிப்பதும், இஸ்லாமிய பிரசா ரம், இஸ்லாமின் பாதுகாப்பு ஆகிய கடமை களை ஆற்றிவைப்பதும் யாரோ?"வென அவர் களிடம் வினவுகின்றேன். பழையகாலத்தில் இருந்துவந்த முஸ்லிம் ஆட்சிகளிலே ராஜாங்க

பண்டிலிருந்து அக்காலத்து உலமாக்களுக்கு ஊதியம் கிடைத்துவந்தது. இது காலத்திலுள்ள அன்னியர் ஆக்ஷியில் அன்னவர்கட்கு ஊதிய மொன்றும் கிட்டுவதில்லை. ஆகவே அவர்களின் ஜீவனும்சத்திற்கென்று ஒரு மார்க்கத்தைத் தேடிவைப்பது பொது முஸ்லிம்களின் கடமையாகும். அப்படி செய்யப்பட்டால்தான் தங்களின் குடும்ப நிர்வாகக் கடமைகளை விட்டும் கவலையற்றவர்களாய் தங்களுக்கேற்பட்ட மார்க்க காரியங்களை செய்து முடிப்பார்கள். கவர்ன்மெண்ட் கல்வி இலாகா அதிகாரிகள் இன்னவர்களை கவனிக்காமற் போயினும், பொருள்தந்து உதவியவர்களின் உபகாரச் சுமை இவர்கள் மீது ஏறிவிடுகின்றதல்லவா? தங்களின் கடமைகளை நிறைவேற்றி வைப்பதுடன், அதற்காக வேண்டிய சன்மானம் ஆண்டவனிடம் கிடைக்குமென்ற ஆதரவும் அவர்களுக்கு இருந்து வருகிறது. உலமாக்கள் தங்களின் சுய நலத்தைக் கருதாமல் சொந்தத் தொழில்களை யெல்லாம் உதரிவிட்டு, தீனுக்கு தொண்டுசெய்ய முன் வந்திருப்பது பொது முஸ்லிம்களுக்கு அவர்கள் செய்யும் ஒருவகை உபகாரமன்றோ?

சபையில் வீற்றிருக்கும் அன்பர்களே! தங்களின் அருமையான நேரத்தை அதிகமாக எடுத்துக்கொண்டேன். கடைசியாக தற்கால அரசியல் நிலைமையைப்பற்றி சில விஷயங்களைச் சொல்லி என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன். இஸ்லாமில் தொன்று தொட்டு கையாளப்பட்டுவந்த குடியரசுக் கொள்கையானது காலக்கிரமத்தில் ஒழிந்து விட்டது. சில நூற்றாண்டுகளாக இம்மேலான கொள்கையை ஐரோப்பியர்கள் (இஸ்லாமிய இதர திட்டங்களைத் தழுவியதேபோன்று) கையாண்டு வருகின்றனர். நம்முடைய இந்திய தேசமானது ஹிந்து மன்னர்களின் ஆட்சியிலும், முஸ்லிம் ராஜ பஹதூர்கள் அரசாண்டகாலத்தும் இவ்வுயரிய திட்டமாம் குடியரசுக் கொள்கையை அடையப்பெற்றில்லை. அந்தோ இந்தியாவின் துர்பாக்கியம்! ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காரர்களுக்கு தங்களின் சுய நலத்தின்மீதே கண்ணாகவிருந்தது. ஆகவே அவர்களுக்கு இத்திட்டத்தின் பக்கம் எவ்வாறு கவனம் உண்டாயிருத்தல் சாலும்? நமது பிரிட்டிஷ் ஆக்ஷியின் முறையோவெனின், ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் முறையைவிட எத்தனையோ மடங்கு சிலாக்கியமாக இருந்தது என்றாலும், குடி ஜனங்களுக்கு எத்தகைய ஆட்சி முறை பலனை அளிக்கவல்லதாய் விளங்குகின்றதோ, அத்தகைய ஆட்சி குதிரைக் கொம்பாகவே இருக்கிறது. இருந்திருந்து இந்திய நாஷனல் காங்கிரஸின் கூக்குரலின் பலனாக, சில வருஷங்களுக்கு முன், முதலில் மின்டோமார்லீ திட்டம், அதன்பின் செம்ஸ்போர்டு மாண்டேகு திட்டங்கள், ஆகிய இவைகளின் மூலமாக சில சௌகரியங்களும், சீர் திருத்தங்களும் வழங்கப்பட்டன. இவ்விரண்டு திட்டங்களைப்பற்றி எவர் வாய் கொண்டமட்டும் புகழ்ந்து பேசிடினும், அவைகளால் உண்டான பலன்களை எண்ணிவிட எத்தனித்தாலும் "இவைகளால் எவ்விதமான பிரதான பலன்கள் உண்டாகவுமில்லை; உண்டாகப் போவதுமில்லை" யென்று துணிவாகக் கூறுவேன். இரண்டு கவுன்ஸிலர்கள், அவர்களின் செக்ரடெரிகள் ஆகியோர்களின் சம்பளங்களுக்குப் பதிலாக பல நிர்வாக மெம்பர்களின் சம்பளமும், மந்திரிமார்கள், அவர்களின் ஸடாப்கள் ஆகியோரின் சம்பளமும் பசியால் வருந்தும் ஏழை பிரஜைகளின் தலைமீதே சுமத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறே அவர்களின் பிரயாணச் செலவு நான்கத்தனை அதிகரிக்கப் பட்டு விட்டது. இச் சீர்திருத்தங்களுக்கு முன் மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் எங்காவது விஜயம் செய்தால், அங்குள்ளவர்களில் சிலர் கவர்னர் அவர்கட்கு கார்டன் பார்ட்டி (தோட்டக் கச்சேரி) முதலியவைகளை நடத்திவைப்பது வழக்கமாக விருந்தது. அதுபோழ்து எந்த கவுன்சிலருக்கேனும், சர்க்கார் ஆபீஸர்களுக்கேனும் பொதுஜனங்கள் சார்பில் எந்த விதமான கார்டன் பார்ட்டியும் நடத்திவைக்க முடியாது. இப்பொழுதோவெனில், நிர்வாக மெம்பர்கள், மந்திரிமார்கள் ஆகியோர்களுக்கு நடத்திவைக்கப்படும் தோட்டக் கச்சேரி, வரவேற்புக் கூட்டங்கள் முதலியவற்றின் சுமைகளினால் நடுத்தர வர்த்தக வகுப்பாரும் திணறுகின்றனர். போதாக் குறைக்கு ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும்தொழிலாளரின்(Agitation) கிளர்ச்சி முறையை பின் பற்றிக்கொண்டதுதான் விந்தையினும் விந்தையாக விருக்கிறது. உயர்தர உத்தியோகஸ்தர் முதல், கேவலம் கீழ்தர குமாஸ்தாக்கள் வரையிலு

முள்ள ஒவ்வொரு இலாகாவைச் சேர்ந்தவர்களும், தங்களுக்கென்று சொந்தமான சங்கங்களையும், சபைகளையும் அமைத்துக்கொண்டு விட்டார்கள். அவைகளின் மூலமாக தங்களின் சம்பளங்களை உயர்த்தும்படி கவர்ன்மெண்டாரை வற்புறுத்துகின்றனர். இம்முயற்சியால் அவர்களுக்கு வெற்றி கிடைத்து வருகின்றது. சட்டசபை (Legislative Council) அஸம்பளி, ராஜாங்க சபை (Council of state) ஆகிய சபைகளின் மெம்பர்களின் பிரயாணச் செலவு, படிச்செலவு பல்வகையான கமிஷன்களின் செலவுகள் ஆகிய இவையெல்லாம் யார் தலையில் விடிகிறதென்று நினைக்கின்றீர்கள்? படிப்பில்லாத ஏழை குடிகளின் மீதல்லவா? ஏராளமான தொகைகளை இந்த வகைகளில் அள்ளி இறைப்பதற்கு பிரதிபலனாக, ஏழை மக்களுக்கு என்ன அநுகூலங்கள் ஏற்படுகின்றன வென்று சற்றே சிந்தித்துப் பார்ப்பீர்களாக. ஒன்றும் அநுகூலமில்லையென்றும், இனி உண்டாகுமென்று எதிர்பார்க்கப் படவில்லையென்றுமே கண்டு கொள்வீர்கள். ஸர்க்காரும், இந்த சட்டசபைகளும் படிப்பில்லாத ஏழைக்குடிகளின் செலவினங்களை விருத்தி செய்கின்றன வென்று கூறுவது மிகையாகாது. சில இடங்களில் நிலவரியை உயர்த்தி விடுகின்றனர். சில இடங்களில் ரூபாய்க்கு நாலு பைசாவாகவிருக்கும் வருமான வரியை நாலணாவாக உயர்த்தி விடுகின்றனர். ஒரு சமயம் தபாற்கூலியை இரட்டிக்கப்படுகிறதென்றால், மறு சமயம் ஸ்டாம்பு கட்டணத்தையும், கோர்ட்டு பீஸையும் ஒன்று, ஒன்றரை மடங்கு அதிகமாக உயர்த்தப்படுகின்றது.

சுருங்கக்கூறுமிடத்து, படிப்பில்லாத ஏழை குடிமக்கள் மேலுக்கு மேல் தாங்கமுடியாத வரிப்பளுவை ஏற்றிவைக்கப்பட்டு தலையைத் தூக்கவொட்டாமல் அழுத்திவைக்கப்படுகின்றனர். உத்தியோகஸ்தர்களின் (அதிகாரிகளின்) பயத்தினாலோ, அல்லது அவர்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தினாலோ அவ்வேழை மக்கள் வாய்திறவாமல் வாளாவிருக்கின்றனர். கவுன்ஸிலர்களில் சிலர் தங்களின் பாக்கெட் (பை) நிரம்பிவிட்டால் போதுமென்ற ஒரே நோக்கத்தையுடையவர்களானதால், இதைப்பற்றிப் பேசுவதற்கும் விரும்புவதில்லை.

இவ்வல்லல்களை அகற்றுவதற்கு குடிகள் தாங்களே சுயமாக பாடுபடவேண்டிய மார்க்கமொன்றுதான் மிச்சமாகக் காணப்படுகின்றது. இதுவுங்கூட பல காரணங்களை முன்னிட்டு மிகவும் சிரமமாகவே இருந்துவருகின்றது. முதலாவதாக ஆங்கிலங்கற்றவர்கள் நூற்றுக்கு ஒருவரைவிட அதிகமாகக்காணோம். அவர்களிலும் சுயநலப் புலிகளான உத்தியோகஸ்தர்களை நீக்கிவிட்டோமானால், நூற்றுக்கு பாதி, அல்லது காலாகவே மிஞ்சும். இவ்வெண்ணிக்கையில் தொழில்செய்யும் ஆங்கிலங் கற்றவர்கள், வக்கீல்கள், பாரிஸ்டர்கள், டாக்டர்கள் முதலியவர்களும் அடங்கினவராவர். அன்னவர்களோ சுகவாழ்விலும், தங்களின் தொழிலிலுமே ஆழ்ந்துகிடக்கின்றனர். ஏழைமக்களின் கவலை அவர்களுக்கு எற்றுக்கு? இதற்காகத்தான் இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டுப்பதவி (டொமினியன் ஸ்டேட்டஸ்) அளிக்கப்பட்டு, ராஜாங்க நடவடிக்கைகள் தேசபாஷைகளில் ஆக்கப்படாதவரையில் இந்தியமக்கள் உருப்படுவது முடியாது. அரிதினும் அரிதே. ஆகவே அவ்வித குடியேற்ற நாட்டந்தஸ்தை அடைய வேண்டியது இந்தியர்களாகிய நமக்கு மிக மிக ஆவசியமாகும். ஆனால், தற்போது தேசத்தலைவர்கள் சிலரால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பகிஷ்கார இயக்கத்தை அநுசரிக்க வேண்டிய அவசியம் கொஞ்சமுமில்லை. சட்டநேர்மை (Constitutional) முறையே தற்கால நிலைக்கு மிகவும் ஒத்ததாகும். ஒவ்வொன்றையும் பகிஷ்கரிப்பதினால் நம் இந்திய மக்களுக்கு நிவர்த்திக்க முடியாத நஷ்டங்களே மென்மேலும் உண்டாகிக்கொண்டிருக்கின்றன.

இங்கிலாந்துக்குச் சென்று, வட்டமேஜை மகாநாட்டில் கலந்து இந்திய குடிகளின் உண்மை நிலைமைகளை ஒழுங்கானமுறையில் எடுத்துக் காட்டுங்கள். பலவிதமான ஆதாரங்களினால் ஆங்கிலேயர்களின் மனதை வசப்படுத்துங்கள். இக்காரியத்திற்காக ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலுமுள்ள ஹிந்துக்களைவிட நம்நாட்டு ஹிந்துக்களே சிறந்தவர்களாவார்கள். ஏனெனில், ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலுமுள்ள ஹிந்துக்கள் சமூகப் பிடிவாதமுள்ளவர்களாவர். முஸ்லிம்கள் அவர்களின்மீது நம்பிக்கை வைக்கமுடியாது. முஸ்லிம்களைப்

பற்றியென்றுலோ இவர்களில் வடநாட்டாரும், தென்னுட்டாரும் தகுதியுள்ளவர்களே. பரந்த நோக்கமும், பெருந்தன்மையும் இவர்களிடம் இருக்கின்றன. அன்றியும் அன்னியர்களை சந்தோஷிக்கச்செய்யும் சந்தர்ப்பங்களில் தங்களுக்கு உண்டாகும் எவ்வித நஷ்டத்தையும் முஸ்லிம்கள் பொருட்படுத்தமாட்டார்கள். நம்நாட்டு ஹிந்து சகோதரர்கள் சமூகப்பிடிவாதத்தில் மிக குறைந்த அளவிலேயே காணப்படுவர்.

கனவான்களே! இப்புண்ணிய மகா சபையை நடத்திவைக்கும் கமிட்டியார் அவர்கட்கும், என் பிரசங்கத்தை பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த இம்மஹாசபையோர்களுக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு எனது பிரசங்கத்தை முடிக்கிறேன்.

துஆ

ரப்னு ஆத்தினு பித்துன்யா ஹஸனதன் வபில் ஆகிரத்தி ஹஸனதன் வகினு அதாபன்னூர். ஆகிர்தஃவானு அனில்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்'' என்பதே.

பிறகு, கற்றுத் தேர்ந்த 81 மௌலவீகளுக்கு தற்கால நாஜிரும், தலைமை ஆசிரியருமான மௌலானு, மௌலவீ அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களால் கைச்சாத் திடப்பட்ட சன்னதுகளை அக்கிராசன ரவர்கள் வழங்கினுர்கள். பிறகு சபையோர்களுக்கு வந்தன மளிக்கப்பட்டு, சபை இனிது முடிந்தது.

மறுநாள் காலை 7 மணிக்கு மௌலவீ, எஸ். ஏ. முஹம்மத் அலி ஸாஹிப் முதலிய கூத்தாநல்லூர் வாசிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, அஃலா ஹஸ்ரத், வேலூர் மத்ரசா பாக்கியாத் ஸாலிஹாத்தின் ஆசிரியர்கள், மற்றும் மௌலானுக்கள் யாவரும் கூத்தாநல்லூர் விஜயஞ் செய்தார்கள். பிற்பகல் 3 மணிக்கு அவ்வூர் சின்னப் பள்ளியில் ஒரு மகாசபை கூடியது. மௌலானுக்கள் பைத்து முழக்கத்துடன் அங்கு சென்று தம் ஆசனத் தமர்ந்தார்கள். கூத்தாநல்லூர் வாசிகளின் சார்பாக ஜனுப், மௌலவி எஸ். ஏ. முஹம்மத் அலி ஸாஹிப் அவர்களால் அஃலா ஹஸ்ரத் கிப்லா அவர்களுக்கொரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப் பட்டது. அத்துடன் அஃலா ஹஸ்ரத் அவர்கள், வேலூர் மத்ரசா பாக்கியாத் ஸாலிஹாத்தின் ஸ்தாபகர் குத்திசசிர்ருஹூ அவர்கள் ஞாபகச் சின்னக் கட்டடத்தின் மேல் மாடி கட்டுவதற்காகப் பணவுதவி புரிய வேண்டுமெனப் பத்திரிகைகள் வாயிலாய் வெளியிட்டிருந்த அறிக்கையை முன்னிட்டு, அவ்வூர் மார்க்க பக்தியிற் சிறந்த கனவான்கள் அப்பண்டுக்கு வாக்களித்த ஆயிரம் ரூபாய் புள்ளிகளடங்கிய ஜாபிதாவொன்று ஹஸ்ரத் அவர்கள் முன் சமர்ப்பிக்கப் பட்டது. பிறகு அக்கூட்டத்தில் அஃலா ஹஸ்ரத் கிப்லா, மௌலானு, மௌலவி, அல்-ஹாஜ் அப்துல் ஜப்பார் ஹஸ்ரத், மௌலவி, ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர், மௌலவி ஸையித் முர்த்தஜா ஸாஹிப் முதலியோர் அழகிய சொற்பொழி வாற்றினுர்கள். அஸர் தொழுகைக்குப் பின், பெரியப் பள்ளி கத்தீப், நாட்டாண்மைக்காரர்கள் கோரிக்கையின் நிமித்தம் மௌலானுக்கள் பெரியப் பள்ளிக்கு விஜயஞ் செய்தார்கள். அங்கு மக்ரிபுக்குப் பின் நடைபெற்ற மகாபையில் அஃலா ஹஸ்ரத் கிப்லா, மௌலானு, மௌலவீ, அல்-ஹாஜ், அப்துல் ஜப்பார் ஹஸ்ரத், மௌலானு, மௌலவீ, அல்-ஹாஜ், அப்துர் ரஹீம் ஸாஹிப், மௌலானு, மௌலவீ, ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் இவர்கள் அழகிய சொற்பொழி வாற்றினுர்கள்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை பூதமங்கலம் ஹாஜீ, சுல்தான் ராவுத்தர், மற்றும் பெரிய தனக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மௌலானுக்கள் பூதமங்கலம் விஜயம் செய்தார்கள். ஐயம்பேட்டை மௌலானு, மௌலவீ, நூ. அப்துல் வஹ்ஹாப் ஸாஹிப் அவர்களும், மற்றவர்களும் பெருந் திரளாக மௌலானுக்களை வரவேற்றனர். பகல் 10 மணிக்கு பள்ளிவாசலில் ஒரு மகாசபை கூடிற்று. அதில் அஃலா ஹஸ்ரத் அவர்களுக்கு ஊர் ஜமாஅத்துகளால் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டது. அவ்வூரில் கூடு, கொடியேற்றம் நடைபெறுவதாய் மௌலானுக்களுக்கு ஒருசிலரால் அறிவிக்கப் பட்டது. இதை மறுத்து அஃலா ஹஸ்ரத் அவர்கள் ஒரு அழகிய பிரசங்கம் புரிந்தார்கள். பிறகு, மௌலானு, மௌலவீ, கமாலுத்தீன் ஹஸ்ரத், மௌலவீ, ஸையித் முர்த்தஜா ஸாஹிப், மௌலவீ, ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர் முதலியோர் பல அரிய பிரசங்கங்களைப் புரிந்தனர். இறுதியாக, மௌலவீ ஸையித் முர்த்தஜா ஸாஹிபவர்கள் வேண்டுகோளுக் கிண

ங்க, அவ்வூர் நாட்டாண்மைக்காரர்கள் அஃலா ஹஜ்ரத் அவர்கள் திருக் கரத்தைப் பற்றி "கூடு, கொடியேற்றம் முதலிய ஷிர்க் பித்அத்தான வைபவங்களைச் செய்வதில்லை மேளதாள மடிப்பதில்லை" என பைஅத் செய்தார்கள். அங்கிருந்து சுமார் 3 மணிக்கு புதக்குடிக்கு மௌலானுக்கள் சென்றூர்கள்.

பூதமங்கலத்தி லிருந்து மௌலானுக்கள் புதக்குடிக்குத் திரும்புவதை எதிர்நோக்கிக் கொண் டிருந்த கூத்தானல்லூர் முஸ்லிம் லீக் சபையின் வாலண்டியர்களும், மற்றும் வாலண்டியர்களும் மௌலானுக்களை வரவேற்று, மகாநாட்டுப் பந்தலுக்கழைத்துச் சென்று, "மகாநாட்டில் ஏற்பட்ட சில அசந்தர்ப்பங்களால் மௌலானுக்களின் பிரசங்கத்தைக் கேட்க முடியாமற் போனதி னிமித்தம் இப்பொழுது பிரசங்கம் புரிய வேண்டு" மெனக் கேட்டுக் கொண்டார்கள். அஃலா ஹஸ்ரத் அவர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு, தம் அக்கிராசனப் பிரசங்கத்தைப் படிக்கும் படிக் கூறினுர்கள். மௌலவீ, அ. ர. அப்துர் ரஹீம் ஸாஹிப் அதைப் படித்தார். பிறகு, ஸைபுல் இஸ்லாம் மௌலவீ அவர்களும், மௌலானு, மௌலவீ, அல்-ஹாஜ், கமாலுத்தீன் ஹஸ்ரத் அவர்களும் அறிய சொற்பொழி வாற்றினுர்கள். மௌலவீ, ஸையித் முர்த்தஜா ஸாஹிப் அவர்கள் பூதமங்கலம் வாசிகள் செய்துக் கொடுத்த பைஅத்தை எடுத்துக் கூறி, "நீங்களும் அவ்விதம் செய்து தரவேண்டு" மெனக் கூறினுர்கள். மானேஜர் சி. அ. முஹம்மத் ஷரீப் அவர்கள் "சரி" என ஆமோதிக்க, சபையோர்களும் வாய் மொழியாகவும், கரங்களை யுயர்த்தியும் பைஅத் செய்தார்கள். 5 மணிக்கு சபை முடிவு பெற்றது. பிறகு, மௌலானுக்கள் கொரடாச்சேரிக்குச்சென்று இரயிலில் பிரயாணமானுர்கள்.

சங்கடம் யாருக்கு ?

ஜனுப் M. A. மலிக் சாஹிப் வரைவது.

(சென்றமாதத் தொடர்ச்சி)

சன்மார்க்க நெறிவிலகி சத்வழி
தெரியா சத்த மிடும் ஒருவனுக்கு
சங்கடம், சங்கடமே!

உருவப்படங்களைக் கையாடலா மென்று "தாவூதியா பாகவி" தமது பத்திரிகையில், பிரசுரித்துள்ள வியாசத்தின் அம்சம், மேற்கண்ட எட்டு பாராக்களில் கண்ட விளக்கங்களேயாகும். இனி அவைகளைக்குறித்து சவிஸ்தாரமாய் நாம் சொல்லப்போகும் நியாயங்களை, அபிமானிகள் தயவு கூர்ந்து ஊன்றிப் படிப்பார்களாக !

நமது பணிவான உத்தரம்.

அறிஞர்களே !

திரிகால ஞானமுள்ள, பிரபஞ்சாதிபதியான சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் (அல்லாஹு தஆலா), சர்வ லோகத்தின் பால் கருணை வைத்து, சர்வலோகத்துக்கும், எக்காலத்துக்கும், தகுதியும், ஏற்றதும், சர்வ சம்மதத்திற்கும், சாஸ்வத நிலைக்கு முரிய அவனது திருவுளமுமாகிய, மஹா கண்ணியந் தங்கிய "திருக் குர்ஆனை" சமஸ்தலோக தயாபரர் இறுதி நபீ, றஸூல் அதிபரவர்கள் மூலமாய் உலகத்திற்குக் கடாக்ஷித்து அருளினன்.

எக்காலத்துக்கும் பொருத்தமான இத்தகைய அருள் வேதமாகிய திருக் குர்ஆனை ஆராய்ந்தறிய முற்பட்டிருப்போரை, வேத சாஸ்திரக்கலைகளில் மஹா நிபுணத்துவம் பெற்ற பழைய மேதாவிகள் "இருவகை" கோஷ்டியினராகப் பிரித்திருப்பது, விவேகிகளின் சம்மதத்துக்கு ஏற்ற நியாயமேயாகும்.

இதன்பால், திருக் குர்ஆனை ஆராயும் வழி,இரண்டாய்ப்பிரிந்து போயிருக்கின்றனதெனக்கருத வேண்டிய திருக்கின்றது.

அவைகளில் "(தரீகத்துல் குர்ஆனி) குர் ஆனியவழி" என்ற விளக்கத்துடன் கூடிய வழி ஒன்று;

மற்றொன்று "(கய்ர் குர்ஆனி), குர்ஆனல் லாத புறவழி" என்ற விளக்கத்துடன் கூடிய இன்னொரு வழியேயாகும்.

இறைவனிடத்தில் முழுபக்தி செலுத்தி, தீமைக்கஞ்சி, றஸூலிடத்தில் பூரணவிசுவா சம்வைத்து, அவர்களுடைய போதனைக்கும், ஞானத்துக்குமுரிய பக்த, தர்ம கலைகளில் பண்பட்டு, அறிவைச்சம்பாதித்து அதன்படி நடந்து, குர்ஆன் எவ்வழி நடத்திச் செல்லு கின்றதோ, அவ்வழிவிலகாது சென்று "குர் ஆனை" ஆராய்ந்தறிவதற்கே (தரீகத்துல்குர் ஆனி) "குர்ஆனிய வழி" அல்லது (தப்பீ) "குர்ஆனின் இயற்கை வழி" என்று சொல் லப்படும்.

றஸூல் அதிபரவர்களின் சிரேஷ்டபக்த சிஷ்யர்களான "குலபா - யே - ராஷ்தீன்" களும், ஏனைய சிஷ்யகோடிகளும், அவர்களைப் பின்பற்றின பக்தசிரோன்மணிகளும், இந்த வழியைத்தான் கடைப்பிடித்து, திருக்குர் ஆனை ஆராய்ந்து, ஞானசிகாமணிகளாய், பக் த ரஸ கிரந்தங்களின் வாயிலாய் சரித்திர லோகத்தில் பிரகாசித்துத் துலங்குகின்றனர். மேலும், சொல்லிலும், செயலிலும் இத்தகை யோர் ஒழுகி நடந்த இவ்வழி சென்று கடை தேறத்தான், திருக் குர்ஆன் தனது "ஆரம்ப" அத்தியாயத்தில் சதா ஆண்ட வனைக் கையெடுத்து வேண்டிக்கொள்ள, ஒரு நிலையான பிரார்த்தனையையும் மனுமக்களுக் குக் கற்பித்துக் கொடுத்திருக்கின்றது. இதனை லேயே, உலக முஸ்லிம்கள் தொழுகையில் ஒருநாளைக்குஐந்துநேரம்கட்டாயம்பதினேழு தடவைகளில் "நீ உன் அருள்பெற்றோர் ஒழுகிநடக்கும் நேரான பாதையிலேயே எங் களை வழிநடத்துவாயாக" என்றுபிரார்த்தி த்துக் கெஞ்சுகின்றனர்.

இவ்வழிசென்று முக்தியடைந்த பாக்ய சாலிகளையே திருக்குர்ஆன், தனது பாஷை யில் "சித்தீகீன்" "ஷுஹதா" "சாலி ஹீன்" என்ற லட்சணப்பெயர்களால் வரு ணித்திருக்கின்றது. நபிகளுள்பட இவர்களே உத்தம பக்தர்கள்! இவர்களே தேவஅருள் பெற்றவர்கள்! இவர்களே தெய்வத்தோழர் கள்.

இத்தகைய தேவதோழர்களுக்கு இம்மை யிலாகட்டும் மறுமையிலாகட்டும், "எத்தகைய அச்சமும், சஞ்சலமு மில்லவேயில்லை!" என திருக்குர்ஆன் தீர்ப்பளித்து நிற்கின்றது. இத்தகையோர் சென்றொழுகிய திருக்குர் ஆன் வழியிலேயே சென்று, திருக்குர்ஆனை ஆராய்வோருக்கு இக்காலையாகட்டும், அக் காலையாகட்டும், எக்காலையாகட்டும் எத் தகைய சங்கடமும் நிகழப்போகிறதே யில்லை.

இனி, ஆண்டவனிடத்தில் முதிர்ந்த பக்தி யன்றி நன்மைதீமையில் அசட்டைக்காட்டி, றஸூலை ஏற்று அவர்களுடைய போதனைக் கும், ஞானத்துக்கு முரிய பக்த தர்ம சாஸ்தி ரக்கலைகளில் சரியாய் பண்படாமல், அங்கங்கே பரிபாலித்துள்ள தங்கள் தங்கள் தேசத்தின் பற்பல சாஸ்திரக்கலைகளில் நுழைந்து, அவை களில் முதிர்ந்த சம்மதங்கண்டு, பலவழிகளி லும் அறிவைச் சிதறச்செய்து எத்தகைய நிதானமும், நிக்ஷ்பபுத்தியுமின்றி, தம் கருத் துக்கிசைந்தவாறு தாம் சம்மதங்கொண்ட "அறிவுகளின் பலனுக்கோக்க வேதமிருக்க வேணு" மென்ற கொள்கையைத் தமக்குள் சிருஷ்டித்து, அக்கொள்கையினுள்ள அறி வைக் கடைப்பிடித்து, திருக் குர்ஆனை ஆரா யப்புகுவதற்கே (கய்ர்குர்ஆனி) "குர்ஆனல் லாதபுறவழி", அல்லது (வலயீ தரீகா) அதா வது "கல்பனாவழி", அல்லது "செயற்கை வழி" என்று சொல்லப்படும்.

இவ்வழியைக் கடைப்பிடிப்போர், தாம் குர் ஆன் செல்லும் வழியாலேசென்று, திருக்குர் ஆனை ஆராயப்புகாமல், "தம்வழிக்குத் திருக் குர்ஆனைத் திருப்பப் பிரயாசைப்படுவோர்" ஆவர். எனவே, சச்சரவும், கலகமும் இவர் களாலேயே ஏற்படுகின்றன. மேலும், துக்க மும், சங்கடமும் இவர்களுக்கேதான். இவ்வழி செல்வோரின் இந்த வழியைத்தான், திருக் குர்ஆன் "நெறிபிறழ்ந்தார் செல்லும்வழி" என்று சபித்து, இவ்வழி செல்லா வண்ணம் விண்ணப்பம் செய்யும்படி பாடங் கற்பிக் கின்றது.

இவை இங்ஙனமிருக்க, நவீன நாகரீகஉலகம் என்று துத்தியம்பாடத்தக்க இக்காலத்தில், "திருக் குர்ஆனை" ஆராய்வதற்குரிய மற் றொரு, "மூன்றாவதானவழி" தோன்றி இருப் பதுதான், விவேகிகளுக்கிடையே ஒருபக்கலில் சிரிப்பையும், மற்றொருசார்பில் வருத்தத்தை

யும், அனுதாபத்தையும் கொடுத்துகிற்கின்றது.

சுருங்கக் கூறுமிடத்து, இவ்வழியை "(தரீகத்துல்ஜஹ்லீ) மடைமை, அறியாமை, அஞ்ஞான மென்னும் வழி" என்றே கருத வேண்டிய திருக்கின்றது.

இத்தகையோர், (திருக் குர்ஆன்) வேதமானது, ஆதிபூர்வமாய் "எந்த பாஷையில்" ஒலிவடிவாகி, உலகத்துக்கு வெளிவந்திருக்கின்றதோ, மேலும் அதன் உட்பொருள், வெளிப்பொருள் சம்பந்தமான விளக்கம், தெளிவுரை, விரித்தியுரை, கருத்துரை கொண்ட உபநூல்களுக்கு "எந்த பாஷையானது" உறைவிடமாயும், ஊன்றுகோலாயும், ஆதிபீடிகையாயும், அடிப்படையாயுமிருக்கின்றதோ அந்தப்பாஷையில் ஒரு அட்சரமேனும் தெரியா நிரக்ஷரக்குச்சிகளாயிருந்துக் கொண்டும், அன்றியும், வேதத்துக்கு பக்கபலமான ஏனைய வேத சாஸ்திரக் கலைகள் அடங்கிய கிரந்தங்களை கை தீண்டக் கூட அருகதை யற்றவராயிருந்துக் கொண்டும் "கல்பனுவழியின்" சார்பிலே குர்ஆனிய பாஷையில்லாத, தாங்கள் அறியத்தக்க பாஷையில் பதவுரை, பொழிப்புரையுடன் வெளி வந்துலாவும் தர்ஜுமயே குர்ஆனை மாத்திரம் கையில் வைத்துக் கொண்டு, அத்தகைய தர்ஜுமா பாஷையைக் கூட கசடறக்கற்று, பூரணபாஷாஞான மற்ற ஸ்திதியிலிருந்துக் கொண்டும், தர்ஜுமா நூலின் பொருளையும், கருத்தையும், முன், பின் சம்பந்தங்களையும் விளங்கிக் கொள்ளுந் திறனற்று, அந்தபாஷையின் பதங்களுக்கு தர்ஜுமா கண்டு பிடிக்கத் தக்க, தங்கள் தங்கள் பாஷையின் பல அகராதிகளைக் கையாடி, "இதற்கு அதுதான் பொருள்," "அதற்கு இதுதான் பொருள்" என்று இடம், பொருள், ஏவல் உணரா அருத்தத்தைமனதில் சிருஷ்டித்துக் கொண்டும், மதம் இன்னது, வேதம் இன்னது, நபீ என்றால் என்ன? றசூல் என்பவர் யார்? அவர்களுடைய வேலை என்ன? அவர்கள் நோக்கமென்ன? அவர்கள் பிரசார மென்ன? உலகத்துக்கும் அவர்களுக்கு முள்ள சம்பந்த மென்ன? என்பவைகளை ஒரு சிறிதும் உணராமல், தெய்வ பக்தி யன்றி மார்க்கத்துக்கும், அதன் தர்ம சட்டத்திற்கும் புறம்பே இருந்துக்கொண்டும், குர்ஆனாகிய வேதமானது "சீர் திருத்தத்திற்குரிய ஒரு சட்டமட்டுமேதான்" என்றும் உலகின்கண் பல சீர்திருத்தக்காரர்கள் வந்து மறைந்தது போலவே, றசூலதிபரான நபீ அவர்களும் உலகத்துக்கு வந்த ஒரு சீர் திருத்தக்காரர் மாத்திரமே தான் என்று நிர்ணயித்துக் கொண்டும், "உலகத்தின் வெளிப் பகட்டான ஆடம்பரத்துக்கும், டாம்பீகத்துக்கும், சுயேச்சைக்கும், தக்கதாய்த்தான், வேதமிருந்தாக வேணு" மென்ற சாஸ்திரத்திலும் அத்தகைய சாஸ்திரவாதிகளின் சாவகாசத்திலும் பண்பட்டு, அதே பலனை மனதில் ஸ்திரமாய்ப் பதித்துக் கொண்டும், தாங்கள் கொண்ட இந்தவழிக்கு குர்ஆனைத் திருப்பப் பிரயாசைப்பட்டு, அவ்வழிபற்றி திருகுர்ஆனை ஆராய முற்பட்டிருப்போரையே, இந்த மூன்றாவதான வழி சாராராக எடுத்துக் கொள்ளவேண்டியதாயிருக்கின்றது. இவ்வழிபற்றி, திருக்குர் ஆனை ஆராய்வோரையே அறிவிலிகள், பேதைகள், முழுமூடர்கள் எனலாம். மூடர்கள் ஒழுகி நடக்கும் இவ்வழியில் சங்கடமட்டுமா ஏற்படும்? கலகமும், பழியும், அவமானமும் ஏற்படாதா?

எல்லா வியாதிகளை விடவும், மடைமை என்னும் வியாதியானது மனுஷனை மிருகத்தனத்திலாழ்த்தி, ஒரு முழு உலகத்தையே நாசமாக்கி விடுமாகையால், இவ்வழி தொலைய, அல்லது பாழாகக் கங்கணங் கட்டவேண்டியது, பொறுப்புவாய்ந்த கல்விமான்கள் பேரில் ஏற்பட்ட முக்கிய கடமையாயிருக்கின்றது.

விவேகிகளே!

வேதமாகிய "திருக் குர்ஆனும்", அதற்கு சத்திய சாக்ஷிகளாய்த் துலங்கி நிற்கும் ஆகமப்பிரமாணங்களாகிய "அஹாதீஸ்" என்னும் நபீ திருவாக்குக் கிரந்தங்களும், மனிதர் சங்கடப்படுவதற்கின்றி, அவர்கள் சமாதானமும், அமைதியுமடைந்து ஞானமடைவதற்கென்றே ஏற்பட்டிருப்பவை.

சங்கடமெனக் கருதுவோர், அல்லது சங்கடப்படுவோர் தாங்கள் அவைகளை எடுத்தாளும் முறையையும், சுபாவத்தையும் திறமையையுந் தான் பொறுத்திருக்கின்றதென்று, மேற்கூறிய பொதுவான விளக்கங்

களிலிருந்து மிகத்தெளிவாய்த் தெரிந்துக் கொண்டிருப்பீர்கள்.

திருக்குர்ஆன் நடக்கும் நேர்வழியில் கிரமமாய்ச் சென்று, வேதத்தை ஆராயாத பாரபட்சமான பாழும் மனச் சாட்சியானது, பழுதுபட்ட கைக்கடியாரம் போலிருக்கின்றது. காமாலைக் கண்ணுக்கு வெள்ளையானது மஞ்சளாய்த்தோன்றுவதுபோலவும், காய்ச்சலடித்தவனுடைய வாய்க்கு, சுவையுள்ள பதார்த்தம் கசப்பாய் இருப்பது போலவும், மடைமையால் விகாரப்பட்டு, அந்தகாரம் சூழ்ந்து இருளடைந்த ஹிருதயங்களுக்கு தீமை நன்மையாகவும், நன்மை தீமையாகவும் தோன்றி, தாங்கள் சங்கடப்படுவதுடன், எல்லாம் சங்கடம் சங்கடமென்று கத்தி, உலகத்தையும் சங்கடத்துக் குள்ளாக முற்படுகின்றனர்.

பரிசுத்த வேதமாகிய திருக்குர்ஆன், "கரும்புபோல அடிமுதல் நுனிவரைக்கும் மதுரமுள்ளதாயிருக்கின்றது.' கரும்பு கசப்பதெல்லாம் வாய்குற்றமேயொழிய கரும்பின் குற்றமல்ல.

புவியிலுள்ள பொன் முதலான லோகங்களும், மாணிக்க முதலான ரத்தினங்களும் நாளாவட்டத்தில் கண்ணுக்குத் தென்பட்டு பயன்படுகிறது போல, வேதத்திலுள்ள பொருட்களும் நாளாவட்டத்தில் மனதிற்குத்தென்பட்டு, யாவருக்கும் விளங்கிவருகின்றது.

யதார்த்தமான இத்தகைய அனுபவ அத்தாட்சிகளைத் தெரிந்துக்கொள்ளாமல், மனக்கண் குருடுகொண்டு, தாமும் சங்கடப்பட்டு, சங்கடம் சங்கடமென்று கத்தி மற்றவர்களையும் சங்கடத்துக்குட்படுத்துவதைவிட, அவர் சாவதும், அவர் வழிதொலைவதும்தான் உலக விமோசனமாகும்.

இனி, "இக்காலத்துள்ள சில சங்கடங்கள்" என்ற மகுடத்தின்கீழ் தாவூதியபாகவி எழுதிய வியாசத்தைக் கிரமமாய்ப் பரிசோதனை செய்து, அவர்போகும் வழிஎன்ன? அவருடைய ஓலம் எவ்வழிபற்றினது? அதனால் ஏற்படும் பலன் என்ன? என்பனபற்றி சற்று விரிவான ஆராய்ச்சிக்குக் கொண்டுவருவோம்.

அவைகளிலிருந்தும், மேற்கண்ட நமது பீடிகை விளக்கத்திலிருந்தும் "தாவூதியபாகவி" எவ்வழிப்பட்டு நடப்பவர்? அதனால் என்னபலன் விளையும்? என்பதை வாசகர்கள் நன்கு தெரிந்துகொள்வர். அப்படியே பட்டதார தாவூதுக்கும், அவர் குழிபாய்ந்த பாலன்பாகவிக்கும் அவர்கள் நினைக்கிறபடி, விஷயம் "பைசலுக்காகாத வீண்பேச்சாய்" முடியாமல், நல்ல பைசலைத் தரக்கூடிய உண்மையும், "ஆணித்திறமுமான தீர்ப்பாய் ஏற்படு"மென்று நம்புகிறோம்.

(தொடரும்.)

தாருல் இஸ்லாமும், ஜுமுஆப் பிரசங்கமும்.

(ஜனாப், M. சுல்தான் ஸாஹிப் எழுதியது.)

யான் துவங்கிய கட்டுரையை யாரம்பிக்கு முன், வாசகர்களுக் கொருவிஷயத்தை ஞாபகமூட்டுகின்றேன். தாருல் இஸ்லாம் ஆசிரியர்கள் தாமே இப்பிரபஞ்சத்தில் நிகழும் அனுசாரங்களைக் கண்டிப்பதாயும், ஏனைய மார்க்க பக்தர்கள் யாவரும் அங்ஙனம் கண்டிப்பதில்லை என்பதாயும், திருக்குர்ஆனின் படியும், ஹதீதின் படியும், அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையின் படியுமே தாம் ஒழுகியும், போதித்தும் வருவதாயும் வாயளவில் பறைசாற்றி வருகின்றனர். இதனாலேயே பிரபஞ்சத்தில் நிகழும் அனுசார வர்த்தமானங்களைத் தம் பத்திரிகையில் பிரசுரிக்குங்கால், அதன்கீழ் "இதுதான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தோ? இதை வேண்டாமென்றால், எம்மை காதியானி, அகமதி என்றழைப்பர்" எனத் தவராமல் குறிப்பிடுவர். இதனால், இன்னார் ஏதேதோ அனுசா

ரங்களைக் கண்டித்ததாயும், இவ்விதம் கண்டிப்பதனாலேயே ஏனையோர் இன்னாரைக் காதியானி, அகமதி என்றழைப்பதாயும் பொதுமக்களுக் கெடுத்துக்காட்டி, அன்னாரை ஏமாற்ற முன்வருகின்றனர். அனாசாரங்களைக் கண்டித்ததால் எவரும் இன்னாரை அகமதியில் சேர்த்துவிடவில்லை. இன்னாரை "அகமதி" என்பதற்கு அனேக அத்தாட்சிகளை உலமாக்கள் எடுத்துக்காட்டியே வருகின்றனர். நாம் மேலே கூறப்புகும் விஷயமும் இதற்குத் தகுந்த அத்தாட்சியேயாகும். இங்ஙனம் இன்னார் கூறுவ துண்மையாயின், "எந்தவிடத்தில், எந்தத் தெய்தியில், எந்த அனாசாரத்தைக் கண்டித்தார்கள்; அதனால் இவர்களுக்கு அகமதிப்பட்டம் அளிக்கப்பட்டது?" என்பதைச் சற்றே தயைகூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன். உண்மையைக் கூறுமிடத்து, "இன்னாருக்கு எத்தகைய அனாசாரத்தைக் கண்டிக்கும் வழக்கமுமில்லை. ஆற்றலுமில்லை. பிரியமுமில்லை. சக்தியுமில்லை" என்பதே எமது துணிபு. வியபசாரத்தைக் கண்டிப்பதென வைத்துக்கொண்டால், இன்னார் தாசியின் அழகையும், சாகஸத்தையும்,....... யும்,..........யும் மிகமிக வருணித்து, சமயம் வாய்ந்தால் அவளைப் போட்டோவும் பிடித்து வியபசாரத்திற் கொரு பெரிய விளம்பரம் செய்துவிட்டு, (இதில் வரும்படியும் கிட்டுமல்லவா?) எங்கோவொரு மூலையில் "வியபசாரம் வேண்டாம்" என ஒரு வரி வரைந்துவிடுவர். "இஃது வியபசாரத்தைக் கண்டித்ததாகுமா? அதற்குத் தூண்டியதாகுமா?" வென்பதே எமது கடா. இஸ்லாமுக்குப் பாடுபடுவதாய்க் கூறிக்கொள்ளும் இவர்கள் "எவ்வகையில் இஸ்லாமுக் குழைத்தனர்? இன்னாரால் எத்துணை மார்க்கக் கலாசாலைகள் நிறுவப்பெற்றன? எத்துணை பள்ளிவாசல்கள் கட்டப்பெற்றன? இன்னாரால் சன்மார்க்க பக்தர்களாய்த் திகழும் நபர்கள், ஊர்கள் எத்தனை? எத்தனை சன்மார்க்க சங்கங்கள் நிறுவப்பட்டு, மார்க்கத்துக்காய் உழைத்து வருகின்றன? எத்துணை ஊர்களில் கூடு, கொடியேற்றம் தடைப்பட்டன?" வென்பதையும் சற்றே தெரிவிக்கவேண்டுகிறேன். இவ்வளவு மில்லாவிடின், இன்னார் அனாசாரத்தைக் கண்டிக்கும் விதத்தையும், வழியையும், இஸ்லாமுக்கு எவ்வகையில் உழைக்கின்றனர் என்பதையும் தெரிவிப்பார்களாக!

சென்ற 26-9-30-ல் வெளிவந்த தாருல் இஸ்லாமில் "ஜும்ஆப் பிரசங்கம்" என்னும் மகுடமிட்டு ஒரு கட்டுரை வெளிவந்துளது. அஃது எவரோவொரு தலைமை யாசிரியர், சையித் என்பவரால் எழுதப்பட்டதாய்ப் பிரசுரிக்கப்பட்டுளது. அஃது இமாம்கள் முதல், உலமாக்கள் வரை—அதிகம் போவானேன்? நாயகம் (ஸல்.) அவர்கள் உட்பட—யாவரையும் கண்டிக்கும் வாசகமாகவே காணப்படுகின்றது. இவர்கள் (தா. இ ஆசிரியர்கள்) மார்க்கத்திற்குப் பாடுபடுவ துண்மையானால், இவர்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்திருப்ப துண்மையானால் இத்தகைய—மார்க்க விரோதமான—வாசகங்களைப் பிரசுரிக்கா திருப்பதே மேல். அங்ஙனம் பிரசுரித்தாலும், அவைகளைக் கண்டித்துக் குறிப்பெழுதுவதும் முறைமை. ஒரு கொள்கையைப் பிரசுரிக்கும் பத்திரிகாசிரியர் அதனைப்பற்றி யாதொன்றும் கூறாது விட்டுவிடின், அதனை யன்னார் கொள்கை யெனவே உலகம் மதிக்குமன்றோ? அன்றியும், இன்னாரை "மார்க்க விரோதிகள்" என உலகம் கூறி வரும் இற்றைய நாட்களில், மார்க்கத்திற்கு முரணான விஷயங்களைப் பிரசுரிக்க நேர்ந்து விடின், அதனைக் கண்டித் தெழுதுவது அவசியத்தினும் அவசியம் என்பதையும், இன்றேல் உலகம் "இஃது அன்னார் கொள்கை" எனவே மதிக்கும் என்பதையும் எவரே மறுக்க வல்லவர்? எத்தனையோ தடவை இன்னார் அவ்விதங் கண்டித்துக் குறிப்பெழுதி யிருப்பதையே யாம் இதற்கு மேற்கோளாகக் கொள்ளலாம். எனவே, "பிரஸ்தாப வாசகத்தை இன்னார் அப்படியே ஆதரிக்கின்றார்" எனவே கொள்வோம். அவ்வாசகத்தின் முக்கிய அம்ஸமாவது:—

"பிரதி வெள்ளிக்கிழமையிலும் செய்யும் பிரசங்கமானது ஒவ்வொருவராலும் நன்கு கூர்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாகும். பெரும் பெரும் இராஜீயவாதிகள், ராஜதந்திரிகள், தேசீய வாதிகள், இதர கலாவல்லுநர்க ளெல்லோருங் கூட ஜும்ஆத் தொழுகையை நடத்திவைக்கும் ஓரிமாமைப் போன்ற ஏராளமான அமைதியுடன் கூடிய பின்டற்றுபவர்களைப் பெற்றிருத்தல் முடியாது. வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் தொழுகைக்குக் கிழவனும், குமரனும், கல்வியாள

னும், கல்வியற்றவனும், எளியோனும், வலியோனும், வண்கணாளனும், வறியோனும் இதர எல்லாவித மனிதர்களும் விஜயம் செய்கின்றனர். வெள்ளிக்கிழமைக் காலையில் நகரங்களுக்குச் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமங்களிலிருந்து கிராமவாசிகள் தங்களது உண்மையான தன்னலமற்ற பிரார்த்தனைகளை நிறைவேற்ற வந்துகொண்டே இருக்கின்றனர்......................அக்காட்சி சிதறியோடும் எறும்புகளை நிகர்த்து நிற்கின்றதென்னலாம்.

இங்ஙனமாக வெள்ளிக்கிழமைகளில் மஸ்ஜிதுகளில் பற்பலவிதமான மனிதர்கள் நிறைந்துவிடுகின்றனர். அவர்களுள் கிராமவாசிகளும் எளிதில் உணர்ந்து கொள்ளும் சக்தியற்றவர்களும், கல்வியறிவு பெற்றில்லாதவர்களுமே பெரும்பான்மையினராக உள்ளனர்.......................பின்னர் மிம்பர்மீது ஒரு மனிதர் நீண்ட தாடியுடனும் சுத்தமாகக் கட்டப்பட்டிருக்கும் தஸ்தாரெபஜீலத்துடனும், பாதம்வரை தொங்கிக்கொண்டிருக்கும் நீண்ட ஒரங்கியுடனும் நின்றுகொண்டு முதலில் சில அரபி வாக்கியங்கள்கொண்ட பிரார்த்தனைகளை நிகழ்த்திவிட்டு, பின்னர்த்தம் தாய்மொழியில் பிரசங்கம்செய்ய ஆரம்பிக்கிறார். ஜனக்கூட்டம் அவர் கூறுவதை மிகுந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அவருடைய பிரசங்கத்தில் இடையிடையே சிறிது ஹதீஸ், குர்ஆன் வாக்கியங்கள் கலந்து காணப்படுகின்றன. பேசுபவர் சாமர்த்தியத்திற்கேற்ப ஜனக்கூட்டமும் ஏராளமாகப் பெருகுகிறது. அந்த இமாம் தம்முடைய அளவு கடந்த அறிவையும், தம்முடைய அழகிய குரலையும் எடுத்துக் காட்டுவதற்கெனச் சில அருமையான வரிகளை (ஹதீது குர்ஆன்) பாட்டாக எடுத்துக் கூறுவார். அவரால் எடுத்துக்கூறப்படும் ஹதீது, குர்ஆன் வாக்கியங்களனைத்தும் (நமாஜ்) தொழுகை, (ரோஜா) உபவாசம், (ஜகாத்) தர்மம் செய்தல், (அதாபே கப்ர்) புதைகுழியின் வேதனை, (அதாபே தோஜக்) நரகவேதனை, (ரோஜே மஹ்ஷர்) இறுதித் தீர்ப்புநாள், (தக்லீபே நஜா) மரணவேதனை, (மௌத்) மரணம் ஆகியவைகளைப் பற்றியனவாகவே யிருக்கும். இத்தகைய பெருங்கூட்டத்தில் செய்யத் தகுந்த உபதேசமாகுமா இது? அன்று; அன்று!

ஒன்றுமறியாக் கிராமவாசிகள் இவ்வாறு தங்களுக்கு வேண்டாத விஷயங்கள் கூறப்பெற்றுத் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் செல்லுகின்றனர். ஏனெனின், மதாபிமானத்தை மட்டிலுங்கொண்ட இந்த உபதேசங்கள் செய்கையிலும் எண்ணத்திலும் பிரிவுகளை உண்டுபண்ணி விடுகின்றன. இங்கு நடைபெறும் பிரசங்கங்களினால் விஷமூட்டப்பட்ட மனத்தினர்களாகிவிடும் சிலர் பொதுவிடங்களுக்குச் சென்று தங்கள் இமாம் மூலம் செவியுற்ற மஸ்அலாக்களைக் குறித்து விவாதிக்கத் தொடங்குகின்றனர். அவர்களின் அறிவுக் குறைவினால் இந்த விவாதம் அபக்குவ நிலையடைந்து, எண்ணங்கள் விகற்பமடைந்து, ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட வேண்டி வந்துவிடுகின்றது................... இந்தப் பிரசங்கங்களை உதாரகுணத்தோரும், முன்னேற்றமுள்ள நோக்குடையோரும் சற்றும் விரும்புகின்றனரில்லை. இந்த வார ஜமாஅத்துகள் இவ்விதப் பரிதாபகரமான முடிவை யெய்துவதனால் சமூக முன்னேற்றத்திற்குப் பெரும் பங்குமுண்டாகிறது.

இதைவிடுத்து இத்தகைய பெருங்கூட்டங்களில் எதைத்தான் பிரசங்கம் செய்வது? எந்தவிதமான பிரசங்கங்கள் செய்யவேண்டுமென்பது திருக் குர்ஆனை நுணுகி ஆராய்ந்தவர்களுக்குப் புலப்படாமற் போகாது. திருக் குர்ஆனானது தற்போதைய வாழ்வினையும், எதிர்கால வாழ்வினையும் பற்றிய விஷயங்கள் பொதிந்த அறிவுப் பொக்கிஷமாகும். ஆனால், நம்முடைய வாழ்வில் ஒரு நாளைய வேலையிலும் சிறிதளவும் சம்பந்தமில்லாத விஷயங்களையே திருப்பித் திருப்பிப் பிரசங்கித்து வருகின்றார்கள். இந்த நம் வாழ்க்கை சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் திருக் குர்ஆனிலிருந்து அறிந்துகொள்ளக்கூடும் என்று நான் உறுதியாய்க் கூறுகிறேன். நமக்கு மிக அவசியமான வர்த்தகம், கைத்தொழில் சம்பந்தப்பட்ட பல அரிய விஷயங்கள் திருக்குர்ஆனில் இல்லாமற் போகவில்லை. திருக்குர்ஆன் கல்வியை வலியுறுத்துகின்றது. விவசாயம், புஷ்பச்செடிகளைப் பயிராக்கல் போன்றவைகளைத் திருக் குர்ஆன் பலமாக ஆதரித்து, அந்தத் தொழில்களைப் பின்பற்றுமாறு போதிக்கின்றது...............இனிவரும் மேல் உலக வாழ்க்கையை மட்டும் அது குறிக்கிறதா? அப்படியில்லாமல் மேலே நானெடுத்துக்காட்டிய எல்லா விஷயங்களையும் திருக் குர்ஆன் நன்கெடுத்து விளக்குகை

யில், நமது இமாம்கள், நம் ஆன்மிக வழி காட்டிகள் தங்களது முழுச் சாமர்த்தியத்தையும், சக்தியையும் நாம் ஜீவிக்கும் இந்த உலக விஷயங்களல்லாத இதர விஷயங்களைப் பிரசங்கிப்பதில் ஏன் உபயோகப் படுத்துகின்றனர்? என்பதை என்னால் அறிந்தகொள்ள முடியவில்லை. துருக்கியில் இந்த ஜும்ஆப் பிரசங்கம் மிக்க சீர்திருத்தஞ் செய்யப்பட்டு விட்டது. அந்தத் தேசத்தில் போது ஜனங்களின் மனத்தில் வீண் பயத்தை உண்டு பண்ணுவது சமீபத்தில் வேருடன் கல்லி யெறியப்பட்டாகி விட்டது............

நமக்கு எத்தகைய இமாம் தேவைப்படு படுகிறார்? திருக் குர்ஆனுக்கு முரணில்லாத படி கடந்துபோன விஷயங்களைத் தவறில்லாமல் எடுத்துக் கூறக் கூடிய நல்ல சரித்திர முணர்ந்த இமாம் இருக்கவேண்டும். அத்தகையவர் தாம் நல்ல விதமாக உண்மைச் சரித்திரங்களை எடுத்தியம்பக்கூடும். இமாமாக இருப்பவர் நல்ல பூகற்ப சாஸ்திரியா யிருந்தால்தான் வியாபார சம்பந்தமான பல விஷயங்களையும் பூகற்ப சாஸ்திரத்துக் கொப்ப மக்களுக்கு எடுத்துக் கூறி விளக்க வியலும். அவர் தகுந்த இராஜிய வாதியாயிருந்தால் தான் அப்போதைக் கப்போது மக்களுக்குத் தகுந்த அரசியல் ஞானங்களைப் புகட்டக் கூடும். மக்களை நடத்திச்செல்ல இமாம் வியாபாரியாகவும் பொருளாதர விஷயங்களிலும் சிக்கனத்திலும் நல்லனுபவம் வாய்ந்தவராகவும் இருக்கவேண்டும். சமூகத்துடன் நன்கு பழகினவராயும் தாம் இயங்கும் அச் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்யும் வல்லமை வாய்ந்தவராயும் இருக்கவேண்டும். பல பாஷைகள் கற்றவராயும், தாம் நோக்கும் காட்சிகளிலிருந்து கூர்ந்த விஷயங்களைக் கிரஹித்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தவ ராயும் இருக்கவேண்டும். அவருடைய கொள்கை சீர்திருத்துதல் என்பதாகவும், அவருடைய தொண்டு ஜனங்களுக்கு அறிவுக்குப் பொருத்தமான ஆலோசனைகளளிப்பதாகவும், அவருடைய அவா சமூகப் பணிசெய்வதாகவுமே இருக்கவேண்டும்...........

இவ்வளவையும் ஓரளவு அறிவு பெற்றுள்ள ஒரு மனிதனிடமிருந்து எதிர்பார்க்க முடியுமா? ஆயின், இமாம் பதவிக்குத் தேர்தல் டேற லாயிக்கு யாருக்குளது? மூடத்தனமான காரியங்களில் மூழ்கிக் கிடப்பவர்களும்,........ அகங்காரத்திலும் ஆத்மாபிமானத்திலும் ஆழ்ந்து கிடப்பவர்களும், சமூகத்தைப்பற்றிய விஷயங்களில் ஓரளவு அறிவு படைத்தவர்களும் கௌரவமாகத் தங்களது இமாம் பதவிகளை அந்தப்பதவிக்குத் தகுந்தவர்கள் பெறுவதற்கென்று காலி செய்துவிடல் வேண்டும்.... ....இந்த இமாம் பதவிக்கு லாயிக்கானவர் சர்வ கலாசாலையில் பயின்று ஒரு பீ. ஏ. பட்டதாரியாகவே யிருக்கவேண்டும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆட்சி புரிந்துவருமிக் காலத்தில் அரசாங்க உத்தியோகங்களை வேட்டையாடுவதில் தம் காலத்தை வீணாக்கும் பீ. ஏ. பட்டதாரிகள் இந்த நற்காரியத்தைக் கைக்கொள்ள முன்வரல் வேண்டும்.....

எனவே, மார்க்க விஷயங்களில் சிறிது ஈடு பட்டுக் கீர்த்தி பெற்றிருக்கும் பீ. ஏ. பட்டதாரிகளான இளைஞர்கள் முன்னுக்குவந்து இமாம்களாகத் தேர்தலடைந்து ஆடையிலேயே யன்றி நடத்தையிலும் உண்மை முஸ்லிம்களாக விருந்து முஸ்லிம் போதுமக்களின் நல்லபிப்பிராயத்தைப் பெற்று விளங்குமாறு நாம் அவர்களைக் கூவியழைக்கின்றோம்...... .... இளைஞர்களான நாம்தாம் இஸ்லாமிய உலகத்தின் விதிகளை நிர்மாணிக்க வேண்டியவர்களா யிருக்கிறபடியால், பழைய பேர்வழிகளின் இடங்களை நாம் கைக்கொண்டே யாக வேண்டும்'' (தா. இ. 26-9 30, பக்கம் 12, 13.) என்பதே.

இத்தகைய வாசகம் "ஒரு முஸ்லிம் உடைய எழுதுகோலினால் எழுதப் பட்டிருக்கும்?'' எனக் கூற யாரும் முன் வரமாட்டார்கள். ஒரு கொள்கையும், மதமும் அற்று "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்'' என ஓலமிடும் நாஸ்திகனே இத்தகைய வாசகத்தை வரைவன். இதை யொரு சையித் எழுதினாராம்! அதை இரு—இஸ்லாமுக் குழைக்கும்—ஆசிரியர்கள் மொழிபெயர்த்தார்களாம்! தமது—மார்க்கத்துக் குழைக்கும்—பத்திரிகையில் பிரசுரமும் செய்தார்களாம்! இவர்களும் இஸ்லாமுக்கு உழைப்பவர்கள்!

"ககனப்பூ வந்திமகன் கொய்தானும் —அதைக்
கண்டு, குருடன் அம்பால் எய்தானும்.
ஜெகமிசை ஊமையனும் வைதானும் —அதைச்
செவிடன் கேட்டு, நகை செய்தானும்.''

என்றது போலல்லவா இருக்கிறது இவர்கள் இஸ்லாமுக்கு உழைப்பது?

வாசகர்கள்! "மனிதனைத் தவிர்த்து இதர ஜீவவர்க்கம், தாவர வர்க்கம், தாதுவர்க்கம் மூன்றும் மன்பதையின் உபயோகத்திற்கே சிருட்டிக்கப் பட்டுள்ளன" வென்பது ஆன்றோர் அபிப்பிராயம். இவைகளில்லாது போமாயின், மனிதன் ஒரு நாளைக்கேனும் உயிர்வாழச் சக்தி பெறுன். மனிதனே வெனின், இவைகளில் எதன் உபயோகத்திற்கும் படைக்கப்படாமல், இம் மூவகை வர்க்கத்தினுல் இயலாத பெரும் பணியைச் செய்வதற்கே படைக்கப் பட்டுள்ளான். அதுவே "இறை வணக்கம்" ஆகும். இதனையே திருக் குர்ஆன் "மனிதர்கள், ஜின்கள் இவர்களை, என்னை வழிபடுவதற்கே யல்லாது சிருஷ்டித்தேனில்லை" (அல்—குர்ஆன் ; 51-56.) "மனிதன், தான் வீணே விடப் படுவோனென்றெண்ணுகின்றனே?" (அல்—குர்ஆன்: 75-36) "(மனிதர்காள்!) யாம் நுங்களைச் சிருஷ்டித்தது வீணெனக் கருதிக் கொண்டீர்களோ?" (அல்-குர்ஆன் : 23-115) என்னும் ஆயத்துக்களில் சுட்டிக் காண்பிக்கின்றது. "படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தது தன்னை வணங்க" வென முதியோரும் கூறுநிற்பர். எனவே, இப்பிரபஞ்சம் சிருட்டிக்கப்பட் டிருக்கும் உயர்ந்த நோக்கம் இறைவணக்கமே யாம். இந்நோக்கத்தைப் பிரபஞ்சத்தவருக்கு எடுத்தோதி, ஜனங்களை யன்னுர் படைக்கப்பட் டிருக்கும் நோக்கமாய இறைவணக்கத்தின் பக்கம் அழைப்பதற்கே அவ்வக்காலங்களில் நபிமார்கள் (அலை.) அவதரித்தார்கள். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" எனக் கொண்டிருந்த முண்டர்களையும், தம் மனம் போனவாறெல்லாம் சொல்லியும், செய்தும், எழுதியும் வந்த முரடர்களையும் இறைவணக்கத்தின் பக்க மழைத்தார்கள். அவர்கள் நோக்கமெல்லாம் இறைவணக்கத்தின் பக்க மழைப்பதே தவிர, பூஞ்செடி வைக்கவும், வேறென்னென்னவோ செய்யவும் போதிப்பதாயில்லை. பொருளீட்டுவதற்கென ஒரூர் செல்லுவோமாயின், அவண் நம் நோக்கமாம் பொருளீட்டலிலேயே கண்ணுங் கருத்துமாயிருத்தல் வேண்டும். அங்ஙனமல்லாது இதர விஷயங்களில் மனதைச் சிதற விடல் அறிவுடைமை யாகாது. இவ்வண்ணமே, இறைவணக்கத்திற்கெனச் சிருஷ்டிக்கப்பட் டிருக்கும் மன்பதைகள் தமது கருத்துக்களைப் பல விஷயங்களில் பறக்க விடல் மடமையும், நெறியற்ற முறைமையுமேயாம். "யான் பொருளைச் சேகரிக்கவும், வியாபாரிகளி லொருவனுய்விடவும் எனக்கு வஹீ அறிவிக்கப்படவில்லை. மேலும், "உமது நாயகனைப் புகழ்ந்து ஸ்தோத்தரியும்! தொழுகையாளரில் ஒருவனுய்விடும். உமக்கு மரணம் வரும்வரை உமது நாயகனை வணங்கும்!" எனவே வஹீ அறிவிக்கப்பட் டிருக்கிறது" என்னும் ஹதீதே இதற்குச் சான்ருகும்.

முற்காலத்தில்—எம்பெருமானுர் (ஸல்.) அவர்களுக்கு முற்காலத்தில்—இத்தகைய மடமை மிகுந்து காணப்படும்போழ்து, ஒரு நபீ (அலை.) அவதரித்து, சத்வழியை ஜனங்களுக்குப் போதிப்பார்கள். இங்ஙனமே, எம்பெருமானுர் (ஸல்.) அவர்களும் அவதரித்தார்கள். எனினும், இவர்கள் தம் கடமையைப் பூர்த்திசெய்த மாதிரியால், இவர்களுக்குப் பின்பொரு நபியின் அவசியமின்றியே, இவர்களின் சிஷ்யகோடிகளாம் ஸஹாபாக்கள், இமாம்கள், உலமாக்கள் (ரலி) இவர்களினுலேயே என்றென்றும் உலகம் அறியாமையை அகற்றி, நன்னெறியாம் இறைவணக்கத்தை எடுத்து நடக்கும் ஸ்திதிக்கு வந்துவிட்டது. இதையே "இன்று நுங்களுக்கு நுங்கள் மதத்தைப் பூரணமாக்கித் தந்தேன்; நுங்கள்மீது என் கருணையைப் பூர்த்திசெய்தேன்; இஸ்லாமை நுங்களுக்கு மார்க்கமேனப் பொறுத்தமடைந்தேன். (அல்—குர்ஆன் : 5—3.) என்னும் ஆயத்தும் சுட்டிக் காண்பிக்கின்றது இவ்வண்ணம், எம்பெருமானுர் (ஸல்.) அவர்களுக்குப்பின் ஒரு நபி (அலை.)யின் அவசியமில்லாது போயினும், இறைவணக்கத்தின் பக்கம் அழைக்கும் சாரார் அவசியம் இருந்தே யாகவேண்டியிருக்கின்றது. இன்றேல், ஜனங்கள் தம்மைச் சிருஷ்டிக்கப்பட் டிருப்பதின் உயரிய நோக்கமாம் இறைவணக்கத்தைப் புறக்கணித்தே விடுவார்களன்றே? எனவே, எம்பெருமானுர் (ஸல்.) அவர்கள் "அறிஞர் (உலமாக்)கள் நபிமார்களின் வாரிஸ்களாவர்" என, உலமாக்களையே தம் பிரதிநிதிகளாய் நியமித்துப் போனுர்கள். அல்லாஹு தஆலாவும் "நன்மைகளை ஏவவும்,

தீமைகளை விலக்கவும் நுங்களிலோரு சாரார் இருக்க் கடவர் '' (அல்—குர்ஆன் : 3—103). எனக் கூறுகின்ருன். நாம் இதுவரை கூறிவந்தவையால் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதே இறைவனை வணங்குவதற்கெனத் தெற்றென விளங்கும்.

எனவே, இவ்வணக்கமே மனிதன் நோக்கமா யிருத்தல் வேண்டும். இஃதே இவனது கண்ணுங் கருத்தமாயிருத்தல் வேண்டும். இதைத்தவிர வேறெதும் இவன் நோக்கத்தைப் பாதித்தல் கூடாது. இவனது வாழ்நாளும், சொத்து ஸ்வதந்திரமும், இவனது உடலும், ஆவியும் இதற்கே தத்தம் செய்யப்பட வேண்டும். பிரபஞ்சத்தின் ஏனைய வஸ்துக்களைப் பார்க்கினும் இதனுடனேயே இவன் சம்பந்தம் அதிகமாயிருத்தல் வேண்டும். இதுவே நபிமார்களின் பிரதிநிதிகளாய உலமாக்கள் செய்யவேண்டிய போதனையாகும். இதுவே குர்ஆன், ஹதீது இவைகளின் திருப்போதனையுமாகும் :—

'' சொல்வீராக :—நுங்கள் பெற்றோர்களும், நுங்கள் பிள்ளைகளும், நுங்கள் சகோதரர்களும், நுங்கள் மனவிகளும், நுங்கள் சுற்றத்தினரும், நீங்கள் தேடிய சொத்துக்களும், நீங்கள் நஷ்டத்தைப் பயப்படும் வியாபாரமும், நீங்கள் விரும்பும் ஜாகைகளும் அல்லாஹ், ரசூல், அவன் பாதையில் போர் புரிவது இவைகளைவிட நுங்களுக்குப் பிரியமா(ய்த் தோன்றி)னல், அல்லாஹ் தன் கருமத்தைக் கொண்டு வருவதை வழிபார்த்திருங்கள் ! (அல்-குர்ஆன் : 9-24.)

'' (நன்மாராயம் பெற்றோர்,) அன்னருக்கு ஒரு கஷ்டம் வந்துற்ற காலத்து, '' உண்மையாகவே யாம் அல்லாஹ்வுக்காகவே உள்ளோம். இன்னும் உண்மையாகவே அவன் பக்கம் திரும்பிச் செல்வோராயு மிருக்கிறோம் '' எனக் கூறுவர். (அல்-குர்ஆன் : 2-156.)

உண்மையாகவே அல்லாஹ் கூறுவதாவது:— '' ஆதம் உடைய மகனே ! என் வணக்கத்திற்காகவே (யாவையும் விட்டு) ஒழிந்திரு. உன் நெஞ்சத்தை செல்வத்தினல் நிரப்பி, உன் ஏழ்மையைத் தடுக்கின்றேன். நீ (அங்ஙனம்) செய்யாது போனல், உன் கையைப் பல அலுவல்களால் நிரப்பி, உன் ஏழ்மையை நீக்கவும் மாட்டேன் '' என்பதே (நாயக சம்பிரதாயம்.)

தவிரவும், மனிதன் இறைவனை மறந்திருப்பதற்கெல்லாம் மூலக்காரணம் '' இறைவன் பக்கம் ஒரு நாளைக்குச் செல்வோம் ' என்னும் ஞாபகமின்மையே. எனவே, இத்தகைய ஞாபகத்தை யூட்டும் மரணத்தையும், அதற்குப் பின்னுள்ள மாபெரும் நிகழ்ச்சிகளையும் சதா நினைத்தலும் முக்கியமே. இதனல் '' என்றைக்காகினும் நாம் மரணித்தே தீருவோம். அதன் பின் இறுதி தினத்தில் இறைவனுக்கு யாது பதில் கூறப்போகின்றோம்? '' என்னும் எண்ணம் பிறந்து, பாவச் செய்கைகளைப் புரியாது தடுக்கின்றது. இதற்காகத்தான் எம்பெருமானர் (ஸல்.) '' இன்பங்களை மறக்கச் செய்யும் மரணத்தின் ஞாபகத்தை யதிகப்படுத்துங்கள் ! '' எனக் கூறிப் போந்தார்கள்.

யாம் இதுவரை எடுத்துக் காண்பித்த திருக் குர்ஆனின் அமுத வாக்கியங்களினுலும், எம்பெருமானர் (ஸல்.) அவர்களின் நன்மொழிகளாலும் இறை வணக்கமாய தொழுகை, நோன்பு, ஜகாத், முதலியவைகள் மீதே மனிதன் சதா கண்ணுங் கருத்துமாயிருத்தலும், மரணம், அதற்குப் பின் நிகழும் கப்ரின் வேதனை, நரக வேதனை, இறுதி நாள் இவைகளை சதா நினைத்தலும் முக்கியமென நன்கு விளங்கக் கிடக்கின்றது. ஜும்ஆப் பிரசங்கம் மனிதனை நன்னெறியிற் கொணர்வதற்காய் ஏற்பட்டதாதலால், அதில் இவைகளை எடுத்தோதுவதும் முக்கியமே. இத்தியாதி ஆயத்துகளுக்கும், ஹதீதுகளுக்கும் முற்றிலும் மாற்றமாய் இவ்விஷயங்களை '' வேண்டா விஷயங்கள் '', '' நம்முடைய வாழ்வில் ஒரு நாளைய வேலையிலும் சிறிதளவும் சம்பந்தமில்லாத விஷயங்கள் '' என்றும், இவ்விஷயங்களைப் போதிக்கும் பிரங்கம் '' பெருங்கூட்டத்தில் செய்யத் தகுந்த உபதேசமன்று '', '' இந்தப் பிரசங்கங்களை உதாரகுணத்தோரும், முன்னேற்றமுள்ள நோக்குடையோரும் சற்றும் விரும்புகின்றனரில்லை '' என்றும் தமது பத்திரிகையில் பிரசுரிக்கும் ஆசிரியர்களை யாம் என்னென்றழைப்போம் ! முஸ்லிம்களென்று ? இஸ்லாமுக்கு விரோதியான மார்க்கத் துரோகிகள் என்று ? மேற்கூறப்பட்ட நன்னோக்கங்கள் நிறைந்த பிரசங்கங்களை விரும்பாதவர்கள் குர்ஆன், ஹதீதை விரும்பாத அறிவிலிகள் என்பதில் யாது ஐயம் ஜனித்தல்கூடும்? இத்தகையோர் நோக்கம் முன்னேற்றமா ? முகங்குப்புற வீழ்ந்து பல்லை யுடைத்துக்கொள்ளும் பல்ட்டியா ? இறை வணக்கத்திற்கும், தமக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை யெனக் கூறத்

துணியும் ஒருவன் முஸ்லிமாயிருக்க முடியுமா? வாசகர்காள்! இவர்கள் ஆசாரங்களைக் கண்டிப்பதும் இஸ்லாமுக்குப் பாடுபடுவதும் விளங்கிவிட்டதல்லவா? மேற்கூறப்பட்ட இத்துணை ஆயத்துகளும், ஹதீதுகளும் இறை வணக்கத்தின்மீதும், மரணம் அதற்குப் பின்னுள்ள நிகழ்ச்சிகள் இவைகள்மீதும் கண்ணுங் கருத்துமாயிருக்கும்படிக் கூறுகின்றன. தா. இ. ஆசிரியர்களின் பிரசுரமோ இதற்கெல்லாம் மாற்றமாய் இவைகளை "வேண்டா விஷயங்கள்" எனக் கூறுகின்றது! அந்தோ! பொதுமக்களை ஏமாற்றிவரும் பொய்ப்பிரசாரமே! இன்னும் மேலே செல்வோம்.

மேன்மை தங்கிய நமது இமாம்கள் ஜும்ஆப் பிரசங்கம் (குத்பா) நிறைவேறுவதற்குச் சில ஷர்த்துக்களைக் கூறியுள்ளனர். அவை "(1) அல்லாஹ்வின் புகழ், (2) பெருமானார் (ஸல்.) பேரில் ஸலவாத் தோதல், (3) அல்லாஹ்வின் பயத்தைப் போதித்தல்,—இதன் வார்த்தையும், அளவும் குறிப்பில்லை. மேலும் "அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள்" என்பது போன்ற இறை வணக்கத்திற்கும், பாவத்தைப் புறக்கணிப்பதற்கும் தூண்டும் வார்த்தையே போதும். குத்பாவின் நோக்கமே இது தான்—(4) இரு குத்பாக்களி லொன்றில் குர்ஆன் ஆயத்தொன்றை யோதல், (5 மறுமையைப் பற்றிய பிரார்த்தனை இவைகளேயாம்" (பத்ஹுல் முஈன்) இவ்வைந்து ஷர்த்துக்களு மில்லாவிடின், ஷாபிஈ இமாம் (ரஹ்.) அவர்களிடம் குத்பாவே நிறைவேறாது. மேலும், இவ்வாசகத்தின் இடையில் காணப்படும் குறிப்பில் "இறைவணக்கத்தின் பக்கமழைப்பதும், பாவத்தை விலக்குவதுமே குத்பாவின் நோக்கம்" எனவுங் கண்டிருக்கின்றது. நமது தா. இ. ஆசிரியர்களோ இவைகளை "வேண்டா விஷயங்கள்" எனக் கூறுகின்றனர். இமாமைப் பற்றிக் கூறப்புகின் பெருமானார் (ஸல்.) அவர்கள் "ஒரு கூட்டத்திற்கு, அவர்களில் திருக்குர்ஆனை நன்றாய் ஓதுபவர் (அதன் பொருளை நன்றா யறிந்தவர்) இமாமத் செய்யவும். இதில் யாவரும் சரியா யிருந்துவிடின், ஹதீதை மிக அறிந்தவர்; ஹதீதிலும் யாவரும் சரியாயிருந்துவிடின், ஹிஜ்ரத்தில் முந்தியவர்; ஹிஜ்ரத்திலும் யாவரும் சரியா யிருந்துவிடின் வயதில் முதிர்ந்தோர் இமாமத் செய்யவும்............"

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். இதனையே இமாம்களும் "மனிதர்களுக்கு இமாமத் செய்யத் தகுதியானவர் மார்க்கக் கல்வியில் அதிக மறிந்தவர், பின்பு குர்ஆனை நல்லவிதம் ஓதுபவர், பின்பு மார்க்க பக்தியிற் சிறந்தவர், பின்பு ஹிஜ்ரத்தில் முந்தியவர், பின்பு வயதில் முதிர்ந்தவர்" (உம்தா) எனக் கூறிப் போயிருக்கின்றனர். இஸ்லாமுக்குப் பாடுபடுவதாய் வாயளவில் வெட்கமின்றிக் கூறிக்கொள்ளும் நமது பட்டதாரியும், பாக்கவியுமான தா. இ. ஆசிரியர்களோ வெனின், இவைகளுக்கெல்லாம் மாற்றமாய் இமாமுக்கு வேறு ஷர்த்துகளை ஏற்படுத்துகின்றனர். அத்துணை ஷர்த்துகளும் மிருகக் கலாசாலையில் பயின்ற பி. ஏ. பட்டதாரியிடம் தான் இருக்குமாம்! அவர்கள் தாம் இமாமாய்த் "தேர்தல் பெறத்" தகுந்தவர்களாம்! நமது பட்டதார ஆசிரியர் இப்பிரசுரத்திலேயே தமது வேலையில்லாத் திண்டாட்டத்தை விட்டு வயிற்றுக்கு "வயணம்" தேடவந்து விட்டார்! "இஸ்லாமுக்கு உழைக்கிறேன்" எனக்கூறி, பொதுமக்களை இனியும் ஏமாற்ற முடியாதென்று நிச்சயமாய்க் கண்டுகொண்டு, இவ்வழியாலாகினும் கொஞ்ச நாட்களைக் கடத்தலாம் எனப் பார்க்கிறார் போலும்! சாதாரண பி. ஏ. பட்டம் பெற்றவர் மட்டும் போதாதாம்! மார்க்க விஷயத்தில் சிறிது ஈடுபட்டுக் கீர்த்தி பெற்றிருக்கவும் வேண்டுமாம்! இன்னும் விசேஷந்தான்! நமது பட்டதாரி இமாம் வேலைக்கு "தேர்தல்" பெற "வோட்" வாங்கித் திரியவேண்டாம். போட்டி யன்னியிலேயே தேர்ந்தெடுக்கப் பெற்றுவிடுவார். நந் தென்னாட்டில் இவரைத் தவிர வேறு பட்டதாரிகள் இத்தகைய கீர்த்தியடையவில்லை யன்றோ? ஆமாம்! நந் தென்னாட்டுக்கு இவர் ஒருவர்தான் உள்ளார். வேறு ஒன்றிரண்டுபேர் நமக்குத் தெரியாமலிருப்பினு மிருக்கலாம். இவர்களை எத்துணைப் பள்ளிக்குப் பங்கிடுவதோ? எமக்கொன்றும் விளங்கவில்லை! நிற்க;

நாம் மேலே குறிப்பிட்டுவந்த ஆயத், ஹதீதுகளினால் நம் பரிசுத்த இஸ்லாம் இறுதி தினம்வரை நிலைத்து நிற்கும் பூரண மதம் என்பதும், அதில் ஒரு அணுப் பரிமாணத்தைக் கூட்டவோ, குறைக்கவோ அவசிய மேற்படப்போவதில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

இதுவே ஏனைய முஸ்லிம்களின் கொள்கையுமாகும். இதற்கு மாற்றமாய் எத்தனையோ புரட்டர்கள் நம் மதத்தில் சீர்திருத்தம் செய்வதாய்க்கூறி, தம்மை நபீ என வாதாடி முகத்தில் கரி பூசப்பெற்றுப் போய்விட்டனர். அத்தகைய வழிகேடர்களி லொருவரான மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியும் இவ்வண்ணமே பொது முஸ்லிம்களால் புறக்கணிக்கப்பட்டு, பூவுலகைவிட்டும் மறைந்தார். அவர் சிஷ்யர்கள், அவர் கூறிய கூற்றுக்களுக்குத் தாளம்போட்டுத் திரிவதாய்மட்டும் கேள்விப்பட் டிருக்கின்றோமேயல்லாது, தம்மையும் சீர்திருத்த புருஷர்களாய்க் கூறிக்கொள்வதாய்க் கேள்விப்படவில்லை. ஆனால் நமது பட்டதாரியோ தம் பிரஸ்தாபப் பிரசுரத்தில் "இளைஞர்களான நாம்தாம் இஸ்லாமிய உலகத்தின் விதிகளை நிர்மாணிக்க வேண்டியவர்களாயிருக்கின்றபடியால்" எனக் கூறுகின்றார். மிர்ஸாயீகளும் இவ்வளவு மோசமாய்க் கூறத் துணியவில்லை. இஸ்லாமின் விதிகளை — சட்டதிட்டங்களை — இளைஞர்கள் தாம் நிர்மாணிக்க வேண்டுமாம். குர்ஆன், ஹதீது இவைகளெல்லாம் எதைக்கூறி நிற்கின்றனவோ? தன் மனதில் கிஞ்சிற்றேனும் ஈமானின் பிரகாசத்தையடையப்பெற்றோன், இவ்வண்ணம் கூறத் துணிவானோ? சரிதான். "நாம் அகமதியல்லேம்" என நம் தா. இ. ஆசிரியர்கள் கூறுவதன் அருத்தம் இப்பொழுதுதான் விளங்குகின்றது அஃதென்ன? "நாம் அகமதியல்லோம். அவர்களினுங்கெட்ட பழுத்த மார்க்கத் துரோகிகளே" என்பதே. இன்றேல், குர்ஆன், ஹதீது இவைகளுக்கு முற்றும் மாற்றமாய், நம் பரிசுத்த இஸ்லாம் பூரண மதம் என்பதை மறுக்கும் தோரணையில் "இளைஞர்கள்தாம் இஸ்லாமிய உலகத்தின் விதிகளை நிர்ணயித்தல் வேண்டும்" எனக் கூறுவோரை வேறெவ்விதந்தான் அழைப்பது? குர்ஆன், ஹதீது இவைகள் மேற்படி விதிகளை நிர்ணயிக்கவில்லையா? அந்தோ! பட்டம் (டிக்ரி) பட்டமா(காற்றாடியா கப் பறந்தவாறுதானென்னே! இறுதியாக, இஸ்லாமுக்குப் பாடுபடுவதாய்க் கூறிக்கொள்ளும் தா. இ ஆசிரியர்களைச் சில கேள்விகள் கேட்காமலுமிருக்க முடியவில்லை. நாம் விடுக்கும் வினாக்களுக்கு மௌனம் சாதிக்காமல், விடையளிக்க வேண்டுகிறோம்:-

(1) திருக் குர்ஆனும், ஹதீதுகளும் வற்புறுத்திக் கூறும் விஷயங்களை "அனாவசிய, வேண்டா விஷயங்கள்" எனக் கூறலாமா? (2) அவ்வாறு கூறுபவனை "முஸ்லிம்" என்றழைக்கலாமா? (3) குர்ஆனின் எந்த ஆயத்தில் புஷ்பச் செடியைப் பயிராக்கப் போதிக்கப்பட்டுளது? (4) இமாமாக ஆவதற்கு எத்தனை ஷர்த்துகள்? (5) பிரஸ்தாப பிரசுரத்தில் கண்ட (a) சரித்திர முணர்ந்திருத்தல், (b) பூகற்ப சாஸ்திரயாயிருத்தல் (c) இராஜீயவாதியாயிருத்தல், (d) வியாபாரியாகவும், பொருளாதார விஷயங்களிலும், சிக்கனத்திலும் நல்லனுபவம் வாய்ந்திருத்தல், (e) சமூகத்துடன் நன்கு பழகினவராயும், தாம் இயங்கும் சமூகத்தை சீர்திருத்தம் செய்யும் வல்லமை வாய்ந்தவராயுமிருத்தல், (f) பல பாஷைகள் கற்றவராயும், தாம் நோக்கும் காட்சிகளிலிருந்து கூர்ந்த விஷயங்களைக் கிரஹித்துக்கொள்ளும்சக்திவாய்ந்தவராயுமிருத்தல் (g) அவருடைய கொள்கை சீர்திருத்துவதாயும், அவர்தொண்டு ஜனங்களுக்கு அறிவுக்குப் பொருத்தமான ஆலோசனைகளளிப்பதாகவும், அவருடைய அவா சமூகப்பணி செய்வதாகவுமே இருத்தல் முதலிய ஏழு ஷர்த்துகள் எங்கிருந்து எடுக்கப்பட்டன? குர்ஆனிலா? ஹதீதிலா? பிக்ஹ் கிரந்தங்களிலா? (6) இஸ்லாமிய உலகத்தின் விதிகளைப் புதிதாய்த் தாமே நிர்ணயிப்பதாய்க் கூறும் ஒருவன் முஸ்லிமாயிருக்க முடியுமா? (7) பிரஸ்தாபப் பிரசுரத்திற் கண்ட விஷயங்களுக்கு ஒத்த குத்பா நாயகம் (ஸல்.) அவர்களால் ஓதப்பட் டிருக்கின்றதா? இந்த ஏழு வினாக்களுக்கும்தயைகூர்ந்து விடைபகர்ந்து, அன்னார் இஸ்லாமுக்குப் பாடுபடுவதை நிரூபிக்கக் கோருகிறோம். அகமதீகளுக்கு வழக்கமான ஆண்களின் கோஷா முறையை யனுஷ்டித்து, மூலையைக் கெட்டியாய்ப் பிடித்திருக்காமல் சற்றே வெளியே வந்து, "மதத்திற்குப் பாடுபடுகிறோம்" எனப் பொதுமக்களை ஏமாற்றி வருங்காலம் மலையேறிவிட்டதையும், சத்தியமே இறுதியில் ஜயம்பெற்றுவிட்டதையும் தம் நேத்திரங்களால் கண்காணிப்பார்களாக!

இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்களின் திருமுகம்.

"ஹஸ்ரத் அவர்களின் திருநாமத்தைச் செவியுறாத முஸ்லிம்கள் இல்லை" யெனவே கூறலாம். ஹஸ்ரத் அவர்கள் மகா அறிஞர்களாய இமாமாக விருந்தார்கள். அவர்கள் தம் சிஷ்யர்களில் ஒருவருக்கு உபதேச லிகிதம் விடுத்துள்ளார்கள். அதைக் கீழே குறிப்பிடுகிறோம். அச்சிஷ்யர் "இறைவன் பாதையில் நடக்கும் பக்தன் செய்யவேண்டுவ தென்ன?" வெனக் கேட்டதற்கு இமாமவர்கள் பதில் வரைகின்றார்கள் :—

"முதன்முதல், பரிசுத்தமான விசுவாசம். இரண்டாவதாக, பாவத்தின் புறம் திரும்பியும் பாராதபடிக் குள்ள தௌபா. மூன்றாவதாக, நண்பனாயினும், விரோதியாயினும் யாவரிடத்திலும் ஒழுகும் முறைமையில், அவன் பாத்தியதை எதுவுந் தன்மீ தில்லாமற் போகும் முறைமையில் ஒழுகுவது. நான்காவதாக, விதி, விலக்குகளைத் தெரிந்துகொள்ளு மளவுக்கு மார்க்கக்கல்வியும், மற்றக் கல்வியில் தனக்கு ஈடேற்றங் கிடைக்கு மளவுக்கும் கற்பது. உதாஹரணமாக, ஷைக் ஷிப்லீ (ரஹ்.) கூறுவதாவது, "நான் நானூறு ஆசிரியர்களின் திருச்சமுகத்தி லிருந்து நாலாயிரம் ஹதீதுகளைக் கற்றிருக்கின்றேன். அவைகளிலிருந்து ஒரேயொரு ஹதீதை என் அனுஷ்டான முறைக்குத் தெரிந்தெடுத்துக் கொண்டேன். அதுவே எனக்கு ஈடேற்றமளிக்கப் போதுமானதாக விருக்கின்றது. சகல கல்விகளும் அதிலேயே அடங்கிப்போயிருக்கின்றன. அந்த ஹதீது வருமாறு :— "நீ இம்மையில் இருக்கப்போகும் அளவுக்கே அதற்காகக் கஷ்டப்படு. மறுமையில் நிலைக்கப்போகும் அளவுக்கு அதற்காகப் பாடுபடு. இறைவன்பக்கம் நீ தேவைப்படும் அளவுக்கு அவனுக்குத் தொண்டுசெய். நரக உலகத்தில் நீ பொறுத்துக்கொள்ள வியலும் அளவுக்கு அதற்காக வேலை செய்" என்பதே. இந்த ஹதீதினால் "ஒவ்வொருவரும் பெரிய கல்விமானாகவேண்டிய அவசியமில்லை" என்பதைத் தெரிந்துகொண் டிருப்பீர்கள். கீழே குறிப்பிடும் ஹிக்காயத் (சம்பவத்)தையும் கவனித்தீர்களானால் நான் சொல்வதன் உண்மையை விளங்கிக் கொள்வீர்கள் :—

ஒருதினம் ஷகீகெ பல்கீ (ரஹ்.) தம் சீடர் ஹாத்திமெ அஸம் (ரஹ்.) அவர்களை "நீங்கள் எவ்வளவு காலமாக என்னிடம் இருக்கின்றீர்கள்?" எனக் கேட்டார்கள். அதற்கவர்கள் "முப்பத்து மூன்று வருடங்களாக விருக்கிறேன்" என்றார்கள். ஷகீக் (ரஹ்.) "இவ்வளவு காலமாக எவ்வளவு கலைகளைக் கற்றிருக்கின்றீர்கள்? எத்துணைப் பலன்களைப் பெற்றிருக்கிறீர்கள்?" எனக் கடாவியதற்கு, ஹாத்திம் (ரஹ்.) "எட்டு நலன்களை மட்டும் அடைந்திருக்கிறேன்" என விடையளித்தார்கள். அதற்கு ஷகீக் (ரஹ்.) "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். நான் உங்களுக்காக என்வயதையேசெலவிட்டிருக்கிறேன். நீங்கள் இவ்வளவுதான் அடைந்திருக்கின்றீர்களா?" வென, ஹாத்திம் (ரஹ்.) "ஆமாம். நான் கூறிய அளவுதான் நான் அடைந்த பயன். இதுவே உண்மை. இதை விட அதிகமாய்க் கற்றுக்கொள்ள எனக்கு ஆவலுமில்லை. இதுவே எனக்குப் போதுமெனவும், இதைவிட அதிகமாய்ப் படிக்க வேண்டுவதில்லையெனவும் நான் நம்புகிறேன்" எனக் கூறினார்கள். அதற்கு ஷகீக் (ரஹ்.) "அந்த எட்டு நலன்களையேனும் கூறுங்கள் பார்க்கலாம்!" எனலும், ஹாத்திம் (ரஹ்.) கூறுவார்கள் :—"முதலாவதாக, உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு வஸ்து பிரியமானதாக விருக்கின்றதைக் கண்டேன். அவைகளிற் சில அவன் மரிக்கும் வரையும், சில கப்ர் வரையிலும் நிலைத்திருக்கின்றன. எனவே, நான் என்கப்ரிலும் என்னுடனிருக்கும் வஸ்துவிலேயே பிரியம்வைத்தேன். அதுவே நற்கிரியையாம்" (இதைச் செவியுற்று ஷகீக் (ரஹ்.) "நல்லவேலை செய்தீர்" எனக் கூறினார்கள்).

"இரண்டாவதாக, உலகத்தில் யாவரும் தன் இச்சைக்கு வசப்பட்டு விடுவதைக் கண்டேன். அவ்வமயம் "எவன் தன் நாயன் முன் நிற்கப்போவதைப் பயந்து, தன் ஆன்

மாவை இச்சைக்கு வசப்படுவதை விட்டும் விலக்கினனே, உண்மையாகவே ஸ்வர்க்கம் அவன் தங்குமிட மாகும்'' என்னும் ஆயத் என் கவனத்திற்கு வந்தது. நான் "குர்ஆன் கூறுவதே உண்மை''யென உறுதிகொண்டு, என் ஆன்மாவை இறைவனுக்கு வழிப்படும் படியும், இச்சைகளுக்கு வயப்படாம லிருக் கும்படியும் செய்துகொண்டேன்'' (இதைச் செவியுற்று ஷகீக் (ரஹ்) "அல்லாஹ் உமக்கு நற்கூலி தருவானுக!'' என மொழிந்தார்கள்).

"மூன்றாவதாக, மனிதர்கள் விதம் வித மான கஷ்டங்களால் இவ்வுலக சாமான் களைக் கொஞ்சம் சம்பாதித்து விடுவதில், ஏதோ பெரிய வஸ்துவைச் சம்பாதித்து விட்டதாய்ச் சந்தோஷிப்பதைக் கண்டேன். அவ்வமயம் "உங்களிடமிருப்பது முடிந்து போகும். அல்லாஹ்விடம் இருப்பது எப் போழுது மிருக்கும்'' என்னும் ஆயத்தைக் கவனித்தேன். எனவே, யான் சம்பாதித் தவைகளை அல்லாஹ்வின் பாதையில் செல விட்டு, அவனிடமே அமானத்தாய் வைத்து விட்டேன். "அவனிடம் அவை ஸ்திரமாக விருந்து, மறுமைப் பிரயாணத்தில் எனக்கு வழிகாட்டியாக விருக்கும்'' என நம்பிக்கை கொண்டுள்ளேன்'' (இதைச் செயுற்று ஷகீக் (ரஹ்.) "நல்ல வேலை செய்தீர்'' எனக் கூறி னார்கள்).

"நான்காவதாக, ஒவ்வொருவனும் ஒவ் வொரு விஷயத்தில் பெருமை கொள்ளு கிறான். எனக்கும் உற்றார், உறவினர் மிகு தியா யிருக்கின்றனர். ஒருவன் தன்னிடம் சொத்து சுதந்திரம் அதிகமாயிருப்பதாய் பெருமை கொள்ளுகிறான். ஒருவன் தான் மிக்க பலசாலியாக விருப்பதாய் பெருமை கொள்ளுகிறான். அதுபோழ்து "உண்மை யாகவே உங்களில் மேன்மைக் குரியோர், உங்களில் அல்லாஹ்வுக்கு அதிகம் பயந் தோரே'' என்னும் ஆயத்தைக் கவனித் தேன். உடனே, அல்லாஹ் (ஜல்.) கூறு வதே உண்மையெனவும், மனிதர்கள் எண் ணம் தவறு எனவும் நம்பி, அல்லாஹ்வுக்குப் பயந்திருப்பதைத் தெரிந்து கொண்டேன். "அல்லாஹ்வின் திருச்சமுகத்தில் எனக்கு மரி யாதை கிடைக்கு''மென நம்புகிறேன்'' இதைக்கேட்டு ஷகீக் (ரஹ்.) "நல்ல வேலை (சய்தீர்'' எனக் கூறினார்கள்).

"ஐந்தாவதாக, உலகத்தில் பொறாமையின் காரணமாக ஒருவரை யொருவர் குறைகூறக் கண்டேன். ஒருவன் மற்றவன் செல்வவந் தனு யிருப்பதில் பொறாமை கொள்கிறான். "நாம் அவர்களுக்கிடையில் அவர்கள் இம் மையின் வாழ்க்கையைப் பங்கிட்டு விட் டோம்'' என்னும் ஆயத்தை நான் வாசித்த போழ்து, ஒவ்வொருவன் வாழ்க்கைச் சம்பத் தும் ஆதியிலே பங்கிடப் பெற்றுவிட்ட தாயும், அதில் இவனுக் கெவ்வித உரிமை யுமில்லை என்பதாயும் உறுதிகொண்டேன். இதற்குப்பின் ஒருவர்பேரிலும் எனக்குப் பொறாமை கிடையாது'' (இதைச் செவி யுற்று ஷகீக் (ரஹ்.) "நல்ல காரியம் செய்தீர்'' எனச் சொன்னார்கள்).

"ஆறாவதாக, ஏதோ வொரு காரணமாய் ஒருவருக் கொருவர் பகைவராய் விடுவதைக் கண்டேன். "உண்மையாகவே ஷைத்தான் உங்கள் பகைவனு யிருக்கிறான். அவனைப் பகைவனுகவே கோள்ளுங்கள்'' என்னும் ஆயத்தை நான் ஒதியபோழ்து, அவனை என் பகைவனுகப் பாவித்து விட்டேன். அதற் குப் பின் அவனுக்கு ஒவ்வொரு விஷயத்தி லும் மாறு செய்யவும், அல்லாஹ்வுக்கு வழிப் படவும் தொடுத்தேன். "இதுவே உண்மை வழி'' எனவும் நம்புகிறேன்'' (இதைக்கேட்டு ஷகீக் (ரஹ்.) "நல்ல காரியம் செய்தீர்'' எனச் செப்பினார்கள்).

"ஏழாவதாக, ஜனங்கள் ஊண் சம்பா திப்பதன் பொருட்டு அரிய முயற்சிகள் செய்கின்றதையும், இதன் காரணமாகவே விலக்கான விஷயங்களைச் செய்ய முற் பட்டு விடுவதையும் கண்டேன். அது போழ்து'' உலகத்தில் நகர்ந்து செல்லும் வஸ்துக்கள் (ஜீவன்கள்) யாவற்றின் ஊணும் அல்லாஹ்வின் பிணையிலிருக்கின்றது'' என் னும் ஆயத்தைக் கவனித்தேன். "அல்லாஹ் தான் ஊணளிப்பதாய்ப் பிணைப்பட்டு நிற் கும் ஜீவன்களிலேயே நானும் ஒருவன்'' என்ற நம்பிக்கை எனக் குண்டாய் விட்டது. எனவே, இக்கவலையை யொழித்து, அல் லாஹ்வின் வணக்கத்திலேயே கவனத்தைச் செலுத்தலானேன்'' (இதைக் கேட்டு ஷகீக் (ரஹ்.) "நல்ல வேலை செய்தீர்'' எனக் கூறினார்கள்).

"எட்டாவதாக, ஜனங்கள் ஏதோ வொரு வஸ்துவை நம்பி யிருப்பதைக் கண்டேன். "அல்லாஹ்வின் பேரில் நம்பிக்கை வைத்தவனுக்கு அவனே போதும்" என்னும் ஆயத்தைக் கவனித்த யான், எல்லாவற்றையும் விடுத்து அவன் மீதே சார்பு கொண்டேன்" இவைகளைக் கேட்டு ஷகீகெ பல்கீ (ரஹ்.) "ஹாத்திமே! இறைவன் உங்களுக்கு நற்கிருபை செய்வானாக! நான் தௌராத், இன்ஜீல், ஜபூர், குர்ஆன் இந்நான்கு திருவேதங்களின் உபதேசங்களும் இவ்வெட்டு காரியங்களிலேயே அடங்கி யிருப்பதாய்க் காண்கிறேன். இவைகளை யனுஷ்டானத்திற்குக் கொண்டு வருபவன், இந்நான்கு வேதங்களையும் எடுத்து நடந்தவன் போலாவான்" எனப் பகர்ந்தார்கள்.

இச் சம்பவத்தினால் நீங்கள் "அதிகமாகக் கல்வி கற்க வேண்டியதில்லை" என்பதைத் தெரிந்து கொண்டே யிருப்பீர்கள். நான் குறிப்பிடும் நான்கு வஸ்துக்களையும் கவனித்தில் வையுங்கள். முதலாவதாக, உங்கள் அடிமை உங்களுக்கு எவ்விதக் கருமங்களைச் செய்தால் நீங்கள் பிரியப் படுவீர்களோ, அவ்விதக் கருமங்களையே அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்யுங்கள். உங்கள் அடிமை உங்களுக்கு எவ்விதக் காரியங்களைச் செய்தால் நீங்கள் அவனைக் கோபிப்பீர்களோ, அவ்விதக் காரியங்களை அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்யாதீர்கள். உங்கள் அடிமை உண்மையில் உங்களுக்கு அடிமை யல்லன் என்பதும், நீங்கள் அல்லாஹ்வுக்கு உண்மையாகவே அடிமைதான் என்பதும் வெளிப்படை. எனவே, உங்கள் அடிமை உங்களுக்குச் செய்யக் கடமைப்பட் டிருக்கும் கருமங்களை விட ஆயிரம் மடங்கு அதிகமாகவே நீங்கள் அல்லாஹ்வுக்குச் செய்யக் கடமைப்பட் டிருக்கின்றீர்கள் என்பதையும் மறக்க வேண்டாம். இரண்டாவதாக, மற்ற மனிதர் உங்களுக்கு எவ்விதக் காரியங்களைச் செய்ய விரும்புகின்றீர்களோ, அவ்விதக் காரியங்களையே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள். இவ்வாறு ஒழுகும் மனிதனே "பூரண ஈமான் உள்ளவ"னென நாயகம் (ஸல்.) கூறி யிருக்கின்றார்கள். மூன்றாவதாக, கல்வியைக் கண்காணித்து வாருங்கள். "எந்தக் கல்வியை?" என்றாலோ, "உங்களுக்கு மரணம் அண்மித்து விட்ட"தெனவும், "இன்னும் ஒரு வாரமே இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கப்போகின்றீர்க" ளெனவும் கூறப்பட்டால், நீங்கள் எந்தக் கல்வியை யதிகமாகப் பார்த்துக் கொண்டிருக்க விரும்புவீர்கள்? மரணத்தின் போதும், அதற்குப் பின்பும் உங்களுக்கு உதவும் கல்வியையே விரும்புவீர்க ளன்றோ? அந்தக் கல்வியே அல்லாஹ்வுக்குப் பிரியமாயும், உங்களை சத்வழியிற் கொணர்வதாயு மிருக்கும். அவ்விதக் கல்வியையே எப்பொழுதும் பார்த்து வாருங்கள். நான்காவதாக, எப்பொழுதும் உங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை (துஆ) செய்துகொண்டே இருங்கள். அங்ஙன மில்லாமல் அசட்டையாயிருப்பது தவறு ஆகும். இந்த உபதேசங்களை யனுஷ்டித்து வாருங்கள். எனக்காகவும் நல்துஆ செய்யுங்கள்"

(ஹஸ்ரத் இமாம் கஸ்ஸாலி (ரஹ்.) அவர்களின் இந்த நிருபத்தைக் கண்ணுறும் தலைமை ஆசிரியர் சையத் சாஹிப் யாது கூறப்போகின்றார்? இவர்களும் "சமூக முன்னேற்றத்திற்குப் பெரும் பங்கத்தை யுண்டாக்கும் வேண்டா விஷயங்களைக் கூறும்" வீணர்கள் தாமோ? அந்தோ! இன்னார் புத்தியே புத்தி!! வரவரக் கண்டறி நெஞ்சே!!!)

சென்னை 'ஹிபாஜத்துல் இஸ்லாம்' சங்கத்தின்

முதல் ஆண்டு நிறைவிழா.

நாளது நவம்பர் மீ 9-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு

அஃலா ஹஜ்ரத், மௌலானா, மௌலவீ,

அல்—ஹாஜ், ஜியாவுத்தீன் முஹம்மத் ஸாஹிப் கிப்லா அவர்கள்

அக்கிராசனத்தின் கீழ்

கோகலே ஹாலில் நடைபெறும்.

உண்மை நாகரிகம்

''டாக்டர் அல்லாபக்ஷ் பி எஸ்.ஸி.''

இயற்கைச் சக்திகளைத் தற்காலத்தில் மனிதன் தன் சுகவாழ்க்கைக்குத் துணையாக வசப்படுத்திக் கொண்டுள்ள அளவு, எண்ணுந்தோறும் வியப்பளிக்கத் தக்கதாகும். இந்நிலையில் உள்ள இந்நாகரிகத்தைத் தான் தற்கால நாகரிகம் என்றோதுவர். எனவே, இயற்கைச் சக்திகளை ஆட்கொண்ட காரணமாய்த் தற்கால ஆராய்ச்சி வல்லுநர் சிலர், தற்கால நாகரிகத்தை வரம்புகடந்து வாயோயாது வாழ்த்திப் போற்றி பாராட்டுகின்றனர். இத்தகையர் காமாலைக்கண்ணரே யாவர். இக்காமாலைக் கண்ணர்கள் நுனிப்புல் மேய்பவர்களாய், இந் நவநாகரீகத்தில் உள்ள இழுக்குகளை அறியாராய்ப் பிதற்றுகின்றனர். பொறுமையற்றவர்களாய் இதில் உள்ள தீமைகளைச் செவியேற்கவும் பொறார்கள். இவர்கள் இந்நாகரிகத்தில் மோகமுற்றவர்களாவர். மதம், மதவொழுக்கம், நல்லொழுக்கம் இவை யனைத்தும் இத்தகையார்கட்கு பொருளற்ற விழற் சொற்களாகத் தோன்றுகின்றன. மதமும், நல்லொழுக்கங்களும் காலத்திற்குட்பட்டே போவன என்று இவர்கள் வெற்றவா படைத்திருக்கின்றனர். ''இறைவன் ஒருவனிருப்பதாகவே ஒப்புக்கொண்ட போழ்திலும், மனிதனை அவன் படைத்தமை மனிதன் தன் ஆற்றலையும், மனோபாவங்களையும் முற்றுப் பெற நிறைவேற்றிக் கொள்ளற்கேயாம். மனிதனின் ஆற்றல்கள் பரிபூரணம்பெறுவதற்கே தற்கால விஞ்ஞான உண்மைகள் உதவுகின்றன. இயற்கையின் சக்திகளை மனிதன் சிரமத்துடன் ஆண்டரசுசெய்து, ஆண்டவனுக்குப் பெருமையளிப்பானேன்? எனவே, தற்கால நாகரிகமே மனிதனைப் பரிபூரண நிலைக்குக் கொண்டுவரக்கூடிய வளமுடையதாயிருப்ப, மதம் எற்றுக்கு? மத ஒழுக்கம் எற்றுக்கு?'' இம்மூட நம்பிக்கைகள்தாம் எற்றுக்கு? என்று தர்க்கிக்கின்றனர் நவநாகரிகத்தார். இதனை நடுநிலைமையோடு ஆராய்வோம். உண்மை நாகரிகம் என்பதியாது? உண்மை நாகரிகம் இதுதான் என வரையறை கூறிய பின்னர், இவ்வரையறைக் கிசைபு கொண்டதாமோ இந் நவநாகரிகம்? இல்லையெனின், இந்நவநாகரிகத்தில் இழுக்கு யாண்டுளது?

இயற்கை எழுச்சிகள் இரண்டு.

வாழ்க்கையைப்பற்றியும், வாழ்க்கைப் பயனைப்பற்றியும் கூறத் தத்துவ ஆராய்ச்சிக் கடலில்நீந்துவதைவிடுத்து, சாதாரணமாக ''சீவர்களின் லட்சியம்யாது?'' என்று பார்க்கின், அது இயற்கை வேட்கைகளைத் திருப்திசெய்வதாகத்தான் இருக்கும் என்பது நமக்கு இனிது புலனாகின்றது. இவைகள் தலைமையாக, ஒன்று தற்காப்பும், இரண்டு சந்ததி விருத்தியும் இருக்கின்றன. மனிதனிலும் தாழ்ந்த பிராணிகள் இவைகளைக் கேவல நிலையிலேயே பூர்த்திசெய்துகொண்டு, திருப்தியடைகின்றன. இயற்கை வேட்கைக்கு உணவளிப்பதனாலேயே இப்பிராணிகள் தங்கள் வாழ்க்கை இலட்சியத்தை ஈடேற்றிக்கொண்டன எனில் பொருந்தும். இயற்கை வேட்கையைத் தணித்துக் கோடற்கு முட்டுப்பாடு நேருந்தோறும் இப்பிராணிகள் துன்புறுகின்றன என்பதும் கண்கூடாம். இதனையே 'துக்கம்' என்கின்றோம். மனிதனின் அமைப்பு ஏனைய பிராணிகளின் அமைப்பை ஒத்ததன்று; அது (மனித சரீர அமைப்பு) அகன்று, நுண்ணிய, பெரிய இயந்திரத்தை ஒத்ததாய் இருக்கின்றது. மிருகங்கட்குள்ள தற்காப்பு மனோபாவமும், சந்ததி விருத்தி மனோபாவமும் மனிதனிலும் இல்லாமல் ஒழிந்தனவன்று. எனினும், இவ்விரு இயற்கை வேட்கைகளும் மனிதனில் கேவல நிலையற்று, சன்னல் பின்னலாய்க் கிடக்கின்றன. தற்காப்பு என்பது அகங்கார உணர்ச்சியாயும், சந்ததி விருத்தி என்பது காதலாயும் வேற்றுருக் கொண்டு மனிதன்பால் தோன்றுகின்றன. இவ்விரு இயற்கை வேட்கைகளே

யன்றி, மனிதன் வேறு பல முக்கியமான இயற்கை வேட்கைகளையும் உடையவனாய் இருக்கின்றான்.

இயற்கை வேட்கைப் பூர்த்தி.

இயற்கை ஆராய்ச்சியிலிருந்து மனிதன் தன் இயற்கை வேட்கைகளைப் பூர்த்தி செய்வதனாற்றான் பரிபூரண நிலை அடைகின்றான் என்பது யுக்திக்குப் பொருத்தமாகப் புலப்படுகின்றது. இவ் வேட்கைகள் பலவும் மனிதர்களில் ஒருபடித்தாயில்லாமல் பலவாறு தோன்றுகின்றன. எவ்வெவ் வேட்கையினால் ஒரு மனிதன் பூரணம் பெறக் கூடுமோ, அவ்வவ் வேட்கைகளே அம்மனிதன்பால் வலிமையோடு கிளர்கின்றன வென்றும், எவ்வெவ் வேட்கைகளால் அவனுடைய பூரணத்துவத்திற்குப் பயனிலவோ, அவ்வவ் வேட்கைகள் அவனில் ஆழ்ந்து கிடக்கும் என்றும் நாமறிவோம். எனவே, மனிதர்கள் அவரவர்கள் வேறுபட்ட அமைப்பிற்கு ஏற்ப, ஒரே படித்தாயில்லாமல், தங்கள் தங்கள் மனோ இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவே முனைந்து நிற்பர். இவைகளைப் பூர்த்தி செய்து கொள்வார்களாயின், அவர்கள் பூரணநிலை யடைவர் என்பதில் ஐயமிலது. ஆதலால், மனிதன் தன் இயற்கை வேட்கைகளை அளவு கடந்து அடக்கியாள்வதால் அவன் மேலேறாமல் பின்னடைவான் என்பது உண்மையாகின்றது. அடக்குதல், அல்லது சகித்தல் என்பதால் தீமையும், நோயும் ஏற்படும் என்று மருத்துவ வல்லுநர் கூறுகின்றனர். எனவே, உண்மை நாகரிகம் என்பது மனிதனின் இயற்கை வேட்கைளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதிகளை அளிக்க வல்லதாய் இருத்தல் வேண்டும். நமது இயற்கை வேட்கைகள் அனைத்தும் ஒன்றிற் கொன்று மாறுபட்ட ஜோடிகளாய் இருப்பதால், ஒன்றை அடக்கின் மற்றொன்று ஆர்த்தெழும் என்றும், மற்றொன்றை வளர்க்கின் பிறிதொன்று ஆழ்ந்து போம் என்றும் நன்கறியக் கிடக்கின்றது. எனவே மனிதன் மிதமாக, பூரணமாக எல்லாத்துறைகளிலும் வளர்ச்சி பெறவேண்டுமேயல்லாமல், ஒன்றைக் குறைத்துக்கொண்டும், மற்றொன்றை நிறைத்துக் கொண்டும் போவனேல் அதனால் துன்பமே அடைவானன்றி இன்புறான். சித்திரம் ஒன்று எல்லா அமைப்புக்களும் ஒத்தனவாயிருப்பதனாற்றான் அழகுடைத்தாகின்றதே யன்றி, ஒன்றில் குறுகியும், ஒன்றில் நீண்டும் உள்ள அங்கங்களைப் பெறின் அது நலனளிப்பதாயில்லாமற் போகின்றது. ஆதலால் மனிதனில், அவனவனுக்குரிய வேட்கைகள் திருப்தியடையவேண்டுவது இன்றியமையாததாகின்றது. இதுவே ஈடேற்றம். இவ் வீடேற்றத்தை நல்குவதே நாகரிகம்.

இயற்கைமதம்.

இந் நாகரிகத்தை—இவ்வியற்கை நாகரிகத்தை—கொண்டது இயற்கைமதமாகிய இஸ்லாமே யாகும் மனிதன் எப்பாடு படினும் மனிதனாகவும், மனித குண அமைப்புக்களுடனும் இருப்பனே யன்றி மாறமாட்டான். எனவே, அவனது குண அமைப்புக்கட்கு இயைபு கொண்ட மதம் திருக் குர்ஆனிற்றான் உள்ளது. திருக் குர்ஆன்றான் உண்மை நாகரிகத்தில் மனித சமுகத்தை செழிக்கச் செய்யும்.

ஷரீஅத்தின்படி யொழுகுபவனே உண்மை முஸ்லிம்

(மௌலவீ எழுதுவது)

சொல்வீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களானால், என்னைப் பின்பற்றுங்கள்! உங்களை அல்லாஹ் நேசிப்பான். (திருக்குர் ஆன்.)

அரப் தேசக் குப்பார்கள் விக்கிரகங்களைப் பூஜித்துக்கொண் டிருந்தனர். என்றாலும் அன்னார் "இவைகளை நாம் இறைவனின் நட்புக்காகவே செய்கின்றோம். இதனால் இறைவன் எங்களைப் பிரியம் வைப்பான்" எனவே கூறுவர். இக்காலத்திலும் சிலர் கூறுவதே போல், அக்காலத்திய யூதர்களும் "எங்கள் மூதாதைகள் பெரியபெரிய நபிமார்கள். யாங்

கள் அவர்களின் புத்திரர்களா யிருப்பதனால்
இறைவன் எங்களை நேசிப்பான்'' எனக் கூறு
வர். மக்காவாசிகளோ வெனின், ''யாங்
கள் கஃபாவின் ஊழியம் புரிகிறோம்.
ஹாஜிகளுக்கு வசதிகளை யளிக்கிறோம்.
எனவே, இறைவன் எங்களை நேசிப்பான்''
எனக் கூறுவர். இவ்வித எண்ணங்களை யெல்
லாம் தடுப்பதற்கே இறைவன் மேற் கூறப்
பட்ட ஆயத்தை இறக்கினான். அதன்கருத்து
''நீங்கள் இறைவனை நேசிப்ப துண்மை
யானால், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைப்
பின்பற்றல் வேண்டும். அதுதான் இறை
வனை நேசிப்பதன் உண்மை யடையாள
மாகும் இன்றேல், உங்கள் வார்த்தைகள்
வீண் வார்த்தைகளே யாகும்'' என்பதே.

இற்றைய நாட்களில் நம் முஸ்லிம்களின்
நிலைமை இதற்கு முற்றும் மாற்றமாகவே
காணப்படுகின்றது. ''யாம் உண்மை முஸ்லிம்
கள். அல்லாஹ் (ஜல்.), ரசூல் (ஸல்.) உடைய
நட்பு எங்கள் உள்ளங்களில் புதைந்து கிடக்
கின்றது. அவனுக்காக எம்உடல், பொருள்,
ஆவி மூன்றையும் தத்தம் செய்யத் தயாராக
விருக்கின்றோம்'' என வாயளவில் கூறிக்
கொள்கின்றனர். என்றாலும், உண்மையில்
பெருமானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்று
கின்றார்களில்லை. நடை யுடை பாவனைகளில்,
விவாக வைபவங்களில், கூடு, கொடியேற்றம்
முதலியவைகளில் தம் மூதாதைகளைப் பின்
பற்றுகின்றனர். இன்னாரிடம் ''இவ் விலக்
கான கருமங்களை விட்டுவிடுங்கள்! ஷரீஅத்
தின்படி யொழுகுங்கள்' எனக் கூறுவோமா
யின், ''எம்மைப் போன்ற உலகவாசிகளுக்கு
ஷரீஅத்தின்படி யொழுகுதல் கஷ்டம்''
எனவே கூறிவிடுவர். அன்னாரின் இக்கூற்
றுக்கு நம் மதத்தில் இடம் உண்டா? அன்று;
அன்று. அல்லாஹுதஆலா திருக் குர்
ஆனில் ''அல்லாஹ்வும், அவன் ரஸூலும்
ஒரு கருமத்தை எற்படுத்தி விட்டால் முஸ்லி
மான ஆண் பெண் யாருக்கும் (அந்த) அன்னார்
கருமத்தில் எத்தகைய உரிமையு மிலது. அல்
லாஹ்வுக்கும் அவன் ரசூலுக்கும் மாறுசெய்ப
வன் உண்மையாகவே பகிரங்கமாக வழிகே
ட்டுவிட்டான் ''எனவும்,'' ரசூல் கொண்டுவந்த
(மார்க்கத்)தைக் கெட்டியாய்ப் பிடித்துக்
கொள்ளுங்கள். அவர் உங்களை விலக்கிய
வற்றைத் தவிர்ந்து கொள்ளுங்கள்'' எனவும்
அவரின் (ரசூலின்) ஆக்ஞைகளை மீறி நடப்
போர் தமக்கு பித்னா வருமென்பதையும், அல்
லது தம்மை கொடிய (நரகத்தின்) வேதனை
யணுகு மென்பதையும் அஞ்சக் கடவர்'' என
வுங் கூறிய பின்னும் அன்னார் பொய்க் கூற்று
களுக்கு இடமேது? பெருமானார் (ஸல்.) அவர்
களும் ''உங்களில் ஒருவன் இச்சை நான்
கொண்டுவந்த மார்க்கத்திற்கு அடங்கிய
தாய்ப் போகும் வரை, அவன் மூமினாக மாட்
டான்'' எனவும், ''ஈமான் வாக்குவாதத்தா
லும், வீண் பேச்சினாலும் உண்டாய் விடாது.
மேலும், அது உள்ளத்தில் அமைந்ததும்,
அதனைக் கிரியைகள் மெய்ப்படுத்தியதுமே
யாம்'' எனவும் திருவாய்மலர்ந் தருளி யிருக்
கின்றார்கள். இதனால் வாயளவில் 'நானும்
மூமின்' எனக் கூறிக்கொண்டு வருவதால்
உண்மையில் மூமினாய்ப் போவதில்லை என்
பதும், உள்ளத்திலிருக்கும் ஈமானை நற்கிரி
யைகளும் மெய்ப்பித்தல் வேண்டும் என்
பதுந் தெள்ளெனத் தெரிகின்றது. வாயள
வில் முனாபிக்குகளும் தம்மை முஸ்லிம்கள்—
மூமின்கள்—எனவே கூறித் திரிந்தனர்.
இது மட்டு மல்ல. இவ்வண்ணம் பொய்ச் சத்
தியஞ் செய்துந் திரிந்தனர். இன்னாரும்
முஸ்லிம்களாய் விடுவரோ?

முஸ்லிம்காள்! அல்லாஹுதஆலா பெரு
மானார் (ஸல்.) அவர்களைப் பின்பற்றுதலைத்
தன்னைப் பின்பற்றுதலாய்க் கூறி யுள்ளான்.
(''ரசூலைப் பின்பற்றியவன் உண்மையாகவே
அல்லாஹ்வைப் பின்பற்றிவிட்டான்'' என்னும்
ஆயத்தைக் கவனிக்க!) எனவே, பெருமானார்
(ஸல்.) அவர்களைப் பின்பற்றுதலும் அன்னார்
போதித்த ஷரீஅத்தின்படி யொழுகுதலும்
மிகவும் முக்கியமேயாம். மேலும், அவர்களைப்
பின்பற்றினால் தான் நம் அமல்கள் யாவும்
ஒப்புக்கொள்ளப்படும். அவர்களைப் பின்பற்
றாது எவ்வகைப் புண்ணிய கருமங்களைப் புரிந்
தாலும் நாம் ஈடேறப் போவதில்லை. இதை
யே பெருமானார்(ஸல்.) ''எவன் என் சுன்னத்
தை (விதிவிலக்கை) விட்டும் புறக்கணித்தா
னோ, அவன்என்னைச் சார்ந்திலன்'' என்னுந்
திருவாக்கில் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.
''குர்ஆனில் விலக்கப்பட்டவைகளை நன்
றெனக் கொண்டவன் (அதன்படி யொழுகா
தவன்) குர்ஆனைக்கொண்டு ஈமான் கொள்ள
வில்லை'' என்னும் ஹதீதும் இதனையே சுட்டிக்
காண்பிக்கின்றது.

பிற்போக்குள்ள சிலர் "லாஇலாஹ இல்லல் லாஹ்' எனச் சொன்னவன் ஸ்வர்க்கத்தில் புகுவான்' என்னும் ஹதீதைஎடுத்துக்காட்டி, "இந்த ஹதீதின் பிரகாரம் மேற்படி திருக் கலிமாவை மொழிவதனல்மட்டும் ஸ்வர்க்கத் திற்குச் சென்றுவிடலாம் எனவே தெரிகின் றது. அங்ஙனமிருக்க நற்கிரியைகள் புரிய வேண்டிய தவசியமென்ன?" வெனவுங்கடாவு கின்றனர். இந்த ஹதீதின் கருத்து, இன்னார் கருதியிருப்பதேபோல் வாயால்மட்டும் மேற் படிக் கலிமாவை யுச்சாடனம் செய்வதன்று. மேலும், அதை உச்சாடனம் செய்யும் முறை மையுடன் செய்தலே யாகும். அம்முறைமை யுடன் செய்வோன் ஸ்வர்க்கத்தில் புகுவான் என்பதிற் சந்தேகமிலது. அக்கலிமாவை யுச்சரிப்போன் அதன் பொருளை யுன்னிப் பார்த்தல் வேண்டும். அதன் அருத்தம் "அல் லாஹ்வைத் தவிர வேறெந்த இறைவனும் இல்லை" என்பதேயாம். இதை யுன்னிப் பார்ப்போன் ஒருக்காலும் பாபம்செய்ய முற்படப்போவதில்லை. "அல்லாஹ்ஒருவனே நம் இறைவன். அவனுக்கு மாறு செய்தால் நம்மை யவன் கோபாக்கினியை விட்டும் மீட் பவன் வேறெந்த இறைவனுமில்லை" என்னும் கருத்து, சதா அவன் உள்ளத்தில் சென்று கொண்டே யிருக்கும். இவ்விதக்கருத்து கொண்டவன் பாபம்செய்ய முற்பட மாட் டான் அன்றோ? இம்மாதிரி, அதன் பொருளை யுணர்ந்து அக் கலிமாவை யுச்சரியாதவன், அதை உச்சரிக்காதவனே போலாவான். இதனையே பின்வரும் ஹதீதும் உறுதிப் படுத்துகின்றது:—"ஒருதடவை பெருமா னார் (ஸல்.) "இக்லாஸுடன் 'லாஇலாஹ இல் லல்லாஹ்' எனச் சொன்னவன் ஸ்வர்க்கத் தில் புகுவான்" எனக் கூறினார்கள். அவ் வமயம் "இக்லாஸ்" என்பது யாதோ?' வென வினவப் பட்டது. அற்குப் பெருமா னார் (ஸல்.) "அல்லாஹ்வுக்கு மாறு செய் வதை விட்டுந் தவிர்ந்து கொள்வதே" எனப் பகர்ந்தார்கள். இந்த ஹதீதினாலும் நம் கருத்து ஊர்ஜிதப் படுகின்றது.

முஸ்லிம்காள்! பெருமானார் (ஸல்.) அவர் கள் "தன் நப்ஸைக் கேள்விகேட்டுக் கொண்டு, மரணத்திற்குப் பின்புள்ள நிகழ் ச்சிகளுக்காக நற் கருமங்களைப் புரிபவனே புத்திமான். தன் நப்ஸைத் தன் இச்சைக்கு வழிப்படும்படி விட்டுவிட்டு, அல்லாஹ்வின் மீது நன்னம்பிக்கை கொள்பவன் மடை யனே" எனத் திருவாய்மலர்ந் தருளியிருக் கின்றார்கள். நம் காலத்திலும் சில அறிவிலி கள் "இறைவன் ரக்ஷகன். நம்மை ரக்ஷிப் பான்" எனக் கூறுவதை நாம் கேட்கிறோம். இத்தகையோர்களை பெருமானார் (ஸல்.) மடையர்கள் கூட்டத்திற் சேர்த்திருக்கின்றார் கள். உண்மையைக் கூறுமிடத்து, ஒரு உண்மை முஸ்லிம் உடைய கடமை அல் லாஹ் (ஜல்.), ரசூல் (ஸல்.) உடைய ஆக்ஞை களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுவதும், அவை களுக்கு மாறு செய்ய அஞ்சுவதும், இதற்குப் பின் அல்லாஹ்வின் கிருபையை நம்பி நிற் பதுமே யாம். இதையே பெருமானார் (ஸல்.) அவர்கள் "அச்சம், நம்பிக்கை இவ்விரண் டுக்கு மிடையே ஈமான் இருக்கின்றது" எனச் சுட்டிக் காண்பித்துப் போயிருக்கின்றார்கள். இங்ஙனமில்லாது, வாயளவில் முஸ்லிமெனத் தம்மைக் கூறிக்கொள்வதாலும், ஒரு முஸ் லிம் வீட்டில் ஜனித்து விடுவதாலும் முஸ்லி மாய்ப் போய்விட முடியாது. ஒவ்வொரு காரியத்திலும் ஷரீஅத்தைப் பின்பற்றி யொழுகுபவனே உண்மை முஸ்லிமாவன். இறைவன் யாவருக்கும் உண்மை முஸ்லிமாக விருக்கும் நற்பாக்கியத்தைத் தந்தருள் வானாக! ஆமீன்!

நமது பத்திரிகைக்கு சந்தா சேர்க்கும் ஏஜெண்டாக திருநெல்வேலி பேட்டை சே. கா. ஷாஹுல்ஹமீது அவர்களை நியமித்திருப்பதால், அவ ரிடம் தங்கள் ஆடர்களை பதிவு செய்யும்படி கோருகிறோம்.

மானேஜர்,

ஹி. இ.

விஞ்ஞான விகசிதங்கள்.

தேற்ப்பயிற்சிக்கு மிருகங்கள் உதவி!

குரங்குகள், குதிரைகள், நாய்கள்போன்ற மிருகங்க ளிடமிருந்து தேகப்பயிற்சி முறையை அறிந்துகொள்ளுதலே சிறந்த முறையென்று அண்மையில் ஒரு ஜெர்மன் தேகப் பயிற்சி ஆசிரியர் அபிப்பிராயப்பட்டு, அம்முறையைச் செயலிலும் மேற்கொண்டுள்ளார். அவர் தமது பாடசாலையில் பல மிருகங்களை வைத்து இருக்கின்றார். அவரது மாணவர்கள், ''அம் மிருகங்கள் எவ்வாறு ஓடுகின்றன; எவ்வாறு குதிக்கின்றன; நீந்துகின்றன; ஏறுகின்றன?'' வென்பதை நுட்பமாகக் கவனித்து அதுபோலவே தாங்களும் ஓடவும், குதிக்கவும், நீந்தவும், ஏறவும் முயன்று வருகின்றனராம்!

85 வயதுடைய மணப்பெண்.

85 வயதுடைய ஓர் ஐரோப்பிய மாது 87 வயதுடைய ஒருவரை விவாகஞ் செய்து கொண்டாள். அவ்விருவரும் 65 வருடங்களாக நெருங்கிய காதலர்களாக இருந்துவந்தனராம்!

உயர வளரும் மாது.

சமீபத்தில் 30 வயதுடைய ஓர் மாதின் உயரம் 2 அங்குலம் அதிகப்பட்டதாகத் தெரிகிறது. அம்மாது மஞ்சட்காமாலை என்னும் நோயால் $1\frac{1}{2}$ மாதம் வருந்திக்கொண் டிருந்தாள். குணமடைந்ததும் அவளது கணவன் அவளது உயரம் அதிகரித்திருப்பதைக் கண்டு, அளந்துபார்க்க உயரம் $1\frac{1}{2}$ அங்குலம் அதிகரித்திருப்பது தெரிந்தது. 15 நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவளது உயரம் $\frac{1}{2}$ அங்குலம் உயர்ந்திருந்தது. இன்னும் அவளது உயரம் சிறுகச்சிறுக அதிகரித்து வருகிறது. வைத்தியர்கள் இச்சம்பவத்தைக் கண்டு ஆச்சரியமடைகின்றனராம்.

கைதிகளுக்குப் போதனை.

இங்கிலாந்து தேசத்திலுள்ள சிறைச்சாலைக் கைதிகளுக்கு இதுபோது சுகாதாரத்தைப் பற்றி பெரிய வைத்தியர்கள் பிரசங்கங்கள் செய்து வருகின்றனர். பல பிரசங்கங்கள் முடிந்த ஒவ்வொருதடவையும் ஏராளமான கைதிகள் பரீட்சைக்குப் போகின்றனர். பரீட்சையில் தேறுவோருக்குப் பரிசுகள் அளித்து வருகின்றனர். இதனால் கைதிகளுக்குள் சுகாதாரத்தைப்பற்றிய அறிவு அபிவிருத்தி அடைவதோடு, அவர்களது பிற்கால வாழ்க்கைக்கும் சாதனம் ஏற்படுகின்றது. அக் கைதிகள் மிகவும் அறிவான கேள்விகளையும் கேட்கின்றனரென்றும் தெரிகின்றது.

அணுவைப்பற்றிய ஆராய்ச்சி.

உலகத்தின் பல பாகங்களில் உள்ள ஓர் ஆயிரம் விஞ்ஞான சாஸ்திரிகள் அணுவின் பாகங்களைப்பற்றிய உண்மை தெரிய ஆராய்ச்சி செய்து வருகின்றனர்களாம்.

குரங்குகள் வளர்த்தபெண்.

சில விந்தையான சம்பவங்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தில் குரங்குகள் மனிதர்களின் குழந்தைகளை தூக்கிக்கொண்டு போய் வளப்பது சர்வ சாதாரணமாய் இருக்கிறது. இதையொட்டிய சில சம்பவங்களும், ஊக்கத்தை விளைவிக்கத்தக்க விஷயங்களும் அடியிற்காணலாம்.

ஆப்பிரிக்காநாட்டில் ஒருதாய் தனது கைக்குழந்தையை வயலில் தூங்கவைத்துப் பின்னர் வேலை செய்துகொண்டிருந்தாள். சில குரங்குகள் அக்குழந்தையைக் கண்டு, தூக்கிக்கொண்டுபோயின. பதினறு வருஷங்கள் கழிந்தன. ஒரு குடியானவன், அக்குழந்தை ஒரு சிறுவனாக வானரக்கூட்டத்தில் இருப்பதைக்கண்டு மீட்டானாம்.

அந்நாட்டுச்சிறுவன் ஒருவனுக்கு குரங்குகளுக்குள்ள தன்மைகள் யாவும் பொருந்தியிருந்தன வென்றும், அவன் பதம் செய்யாத உணவை உட்கொள்ளும் இயல்பு உடையவனாக இருக்கின்றானென்றும் ஒரு பத்திரிக்கையின் நிருபர் கூறியுள்ளார்.

குரங்குகளிடமிருந்து மீட்ட ஒரு சிறுவன் இன்று நன்நம்பிக்கை முனையில் வேலை செய்துவருகிறான். அவனது பெயர் ஜான். குழந்தையாயிருக்கும்போது அவனைக் குரங்குகள் தூக்கிக்கொண்டு போயின. பதினைந்து வருடங்கள் அச்சிறுவன் குரங்குகளோடு வாசம் செய்தான். அவனுக்கு மனிதசுபாவமே அற்றதென்பதற்குச் சான்றாக அவன் இன்னும்—இருபது வருடங்கள் கழிந்தும்—நான்கு கால்களில் நடந்தும், கீச்சிட்டும், உறுமியும், மரங்களை திறமையாகத் தாவியும் வருகின்றான். இதுபோது அவனுக்கு ஞாபகச் சக்தி யேற்பட்டிருக்கின்றது. குரங்கினங்களை சிலசமயங்களில் சிறுத்தைகள் பயமுறுத்து மென்றும், குரங்குகளுக்கும் சிறுத்தைகளுக்கும் சண்டை யேற்படுமென்றும், பிறகு குரங்குகள்பாது காப்பான கூடு கட்டுமென்றும் அச்சிறுவன் சொல்லியிருக்கிறான்.

சென்ற வருஷம் ஒரு வேடன் வாலில்லாப் பெண்குரங்கென்று நினைத்து ஒரு சிறுமியைச் சுட்டான். அருகில் வேடன் வந்துபார்க்க, அவள் ஒரு வெள்ளைப் பெண் என்பதைக் கண்டான். ஆனால் அவள் சாகும்போது கீச்சிட்டது அவனுக்கு மிக்க சந்தேகத்தை உண்டு பண்ணியது. அவள் குரங்கினங்களினிடை அகப்பட்ட மானிடப் பெண் என அபிப்பிராயம் படுகிறார்களாம்! கோபன் ஏகன் தேசத்தைச் சேர்ந்த ஒருவரும், அவரது மனைவியும் காட்டுக்குச் சென்று திரும்பவில்லை யென்றும், வேடனால் சுடப்பட்ட பெண் அவருடைய மனைவியாக இருக்கலாமென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றார்களென்றும் தெரிகிறது.

வெள்ளையர் குழந்தைகளின் மீது வாலில்லாக்குரங்குகளுக்குப் பிரியம்அதிகமென்றும், குழந்தையைப் பறிகொடுத்த வாலில்லாப் பெண் குரங்குகள் மனிதரின் குழந்தைகளைக் கொண்டு, அவைகளால் மன ஆறுதல் கொள்ளுமென்றும் கூறுகின்றனர்.

சவக்காட்சி சாலை.

உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பல பொருட்காட்சி சாலைகள் இருந்து வருகின்றன. ருஷ்யாவின் விஞ்ஞான சாஸ்திரிகள் ஒரு நூதன காட்சிசாலையை ஏற்படுத்த யோசித்து வருகின்றனர். இச்சாலையில் ஜீவப் பிராணிகளின் சவங்களை வைக்கப் படுமாம். இக்காட்சிசாலை சைப்ரியாவில் பனிக்கட்டிகள் நிரம்பியுள்ள பிரதேசங்களில் வைக்கப்படுமாம். பனிக்கட்டியில் சவங்களை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு வைத்திருக்கலாமாம். சில ஜீவப்பிராணிகளின் மாமிசம் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும் கெட்டுப்போகாதாம். அத்தகைய பிராணிகளின் சவங்களும் கிடைத்திருக்கின்றனவாம். இதில் ஒவ்வொருவகை மனிதர்களுடையவும், மற்ற பிராணிகளுடையவும் சவங்கள் வைக்கப்படுமாம். இதனால் உலகத்துக்கு நலனும் உண்டாகலாமாம்.

ஆகாயத்திலும் சூதாட்டம்.

இதுவரை பூமியின்மீது சூதாட்டம் நடைபெற்றுவந்தது. போலீஸின் பயத்தினால் இப்பொழுது மேனாட்டில் ஆகாயத்தில் சூதாட்டக் கச்சேரிகள் ஏற்படுகின்றனவாம். ஆகாய விமானங்களில் ஏறி, அவைகள் மிக உயரப் பறந்தபின் அவைகளில் சூதாட்டக் கச்சேரிகள் நடைபெறுமாம். போலீஸ் உடைய பயமில்லாமலே இதில் சூதாடலாமல்லவா? இதனால் மேனாட்டுப் போலீஸ் அதிகாரிகள் மிக்க கல்வர மடைந்திருப்பதாய்த் தெரிகின்றது. இவர்களைப் பிடிப்பதற்கு எந்தக்கருவிகள் வரப்போகின்றதோ பார்க்கலாம்!

திருடர்களைப் பிடிப்பதற்குச் சூரணம்.

திருடர்களைப் பிடிப்பதற்குப் பல முறைகள் தற்போழ்து கையாளப்பட்டு வருகின்றன. லண்டனில் போலீஸ் அதிகாரி யொருவர் ஒரு சூரணம் தயாரித் திருக்கின்றாராம். அதனால் திருடர்களைச் சுலபத்தில் கண்டு பிடித்து விடலாமாம். இதைக் கரன்ஸி நோட்டுகள்போன்ற விலையுயர்ந்த வஸ்துக்கள்மீது தெளித்துவிட்டால், இது தெளிக்கப்பட்டிருப்பதுந் தெரியாதாம். திருடர்களின் கரங்கள் இதன்மேல் பட்டவுடன் இச்சூரணம் நீலநிறமாய் மாறி, கைகளில் ஒட்டிக்கொள்ளுமாம். இந்த நிறத்தைப் போக்குவதற்கு ஒருவகை மருந்தினால்தான் முடியுமாம். தவிரவும், இதனால் திருடர்களின் கைரேகையும், விரல்களின் அடையாளங்களும் அவ்வஸ்துக்களின்மீது படிந்துவிடுகின்றனவாம். இத

ஞல் போலீஸ் அதிகாரிகள் திருடர்களைச் சுலபத்தில் கண்டுபிடித்துவிடலாம்.

அதிசய ஹோட்டல்.

பாரிஸில் புதிய ஹோட்டல் ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. அந்த ஹோட்டலுக்குச் செல்வோருக்கு அன்னர் விரும்பும் போஜனம் பரிமாறப்படுவதில்லையாம். அவரவருக்கு தேகவலுவைத் தரும் போஜனந் தான் பரிமாறப் படுமாம்.

தங்க மழை.

பர்மா, ஹந்தாவாடி ஜில்லாவைச்சேர்ந்த சிறு கிராமங்களில் அக்டோபர் மாதம் 12-ந் தேதி அதிகாலையில் தங்கமழை பெய்ததாம். காலை 7-மணிக்கு புற்பூண்டு, கல்கள்மீது ஒரே பிரகாசமாய்த் தெரிந்ததாம். அவைகளை எடுத்துப் பார்க்கும்போது தங்கத்தூசு களாயிருந்தனவாம். பலர் தங்கத்தூசு படிந்திருந்தவற்றை எடுத்து பத்திரமாக வைத்திருக்கின்றனராம்.

குழந்தைகளின் பராமரிப்பு

(ஜனப், மௌலவீ, ஷபீஉத்தீன் ஸாஹிப் எழுதுவது.)

ஒருதடவை பெருமானர் (ஸல்.) இடம் ஒரு மனிதன் வந்தான். அவன் துர்ப்பழக்கங்களுக்கே உறைவிடமா யிருந்தான். பொய் பேசுவான். திருடுவான். கட்குடிப்பான். சூதாடுவான். இத்தகையோன்பெருமானர் (ஸல்.) இடம் "எனக்கு நல்லுபதேசம் செய்யுங்கள்! நான் ஈடேறும் வழிகளைக் காட்டுங்கள்" என விண்ணப்பித்துக் கொள்ளவும் பெருமானர் (ஸல்.) "நீர் பொய்பேசாதீர்" எனக் கூறினர்கள். அவன் இதைக்கேட்டு "பெருமானர்(ஸல்.) கட்குடியை விலக்கவில்லை. சூதாட்டத்தை, திருட்டை விலக்கவில்லை. இவைகளை விலக்கியிருந்தால் மிக்க கஷ்டமா யிருந்திருக்கும்" எனச் சந்தோஷித்தவனய், "இனி பொய் பேசுவதில்லை" என உறுதி கொண்டுவிட்டான். என்றாலும், திருடச் செல்ல எத்தனித்தவுடன், "யான் திருடப் போனல், உண்மையைச் சொல்லித் தண்டனை யடையவேண்டுமே" என்னும் எண்ணம் கொள்ளுகின்றான். குடிக்கச் செல்வோம் எனக் கருதினல் "யான் எவ்விதம் பெருமானர் (ஸல்.)முன் "குடித்தேன்" எனக் கூறத்துணிவேன்" என நினைக்கின்ருன். இவ்விதமே "உண்மை யுரைத்தல்" என்னும் ஒரு நற்காரியத்தினல் எல்லாப் பாபங்களையும் விட்டுவிட்டான்.

மேற்கூறப்பட்ட சம்பவத்தினல் "பொய்" எல்லாப் பாவங்களுக்கும் தலைமை என்பதும், பொய்யை விட்டோன் சகல பாவங்களையும் விட்டுவிடுவான் என்பதும் நன்கு விளங்குகின்றது. தவிர, சிறு பிராயத்தில் படியும் பழக்க வழக்கங்கள் எப்பொழுதும் நீங்காமற் போவதும், நீக்க முயற்சிப்பதே வீண் காரிமாய் விடுவதும் அனுபவ விஷயம். எனவே, பெற்ருேர்கள் தம் குழவிகள் சிறு பிராயத்தில் 'பொய் பேசல்' என்னும் துர்ப்பழக்கத்திற்கு இலக்காகாமல் பார்த்துக் கொள்ளல் முக்கியத்திலும் முக்கியமாம்.

குழந்தைகளின் உள்ளங்கள் பரிசுத்தமானவை. அவர்களைச் சுற்றியிருக்கும் பொருட்களின் பிரதிபிம்பம் அவைகளில் நன்கு படிந்துபோகின்றன. குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ளோர் பாஷையையே பேசுகின்றனர். சுற்றியுள்ளோர் ஆடையாபரணங்களே அவர்களுக்குப்பிரியமானவைகளாய்த்தோன்றுகின்றன. இவ்விதமே, குழந்தைகள் காட்டுமிருகாண்டிகளிடமிருந்துவளர்ச்சிபெற்ருல், காட்டுமிருகாண்டிகளின் பழக்கவழக்கங்களையும், நாகரிகமடைந்த ஜாதியாரிடம் வளர்ச்சி பெற்ருல், இன்னரின் பழக்கவழக்கங்களையுமே மேற்கொள்வர். இதனல் "குழந்தைகளைச் சுற்றியிருக்கும் வஸ்துக்களின் பிரதிபிம்பம் அவர்களில் சீக்கிரம் படிந்து விடுகின்றன" வென்பது தெற்றென விளங்கும்.

இவ்விதமே பொய்பேசும் வழக்கமும் குழந்தைகளுக்கு இயற்கையில் ஏற்படாமல், சுற்றியிருப்பவர்களாலேயே ஏற்படுகின்றன. சுற்றியிருக்கும் ஜனங்கள் பொய்பேசுவதைக் கேட்கும் பிள்ளைகள், தாமும் அவ்விதமேபேச ஆரம்பித்துவிடுகின்றனர். அங்ஙன மில்லாமல் சுற்றி யுள்ளோர் மெய்யே பேசுவார்களானல், குழந்தைகளுக்கு பொய் பேசும் வழக்கம் ஏற்படப் போவதில்லை. உதாஹரணமாக, தமது பெற்ருேர், சகோதரர் சகோதரிகள் தம்மை மிரட்டுங்கால் "வாய் பொத்து! பூச்சாண்டி வருகின்ருன். பிடித்துக்கொண்டு போய்விடுவான்" எனக் கூறுவதைக் குழந்தைகள்கேட்கின்றனர். இன்னர் பூச்சாண்டியைப் பார்க்கவில்லை. என்ருலும், பிறகு தமக்கும் சிறிய குழந்தைகளை மிரட்டுவதற்குத் தாம் முந்தி சற்றுவைத்திருக்கும் பொய்ப்பூசாண்டி வார்த்தைகளையே உபயோகிக்க ஆரம்பித்து விடுகின்றனர். இதுவும் குழந்தைகள் பொய் பேசப்பழகும் விதங்களி லொன்ருகும்.

இரண்டாவதாக, குழந்தைகள் பொய் பேச ஆரம்பிப்பதற்குக் காரணம் தண்டனையின் பயம். உதாஹரணமாக,ஒரு குழந்தை ஒரு குற்றம் செய்துவிட்டு, அக் குற்றத்தைத் தான் செய்ததாகவும் ஒத்துக்கொண்டதென வைத்துக்கொள்வோம். அவ்வமயம் பெற்ருேர் அக்குற்றத்திற்காக அக்குழந்தைக்குத் தண்டனை கொடுக்கின்றனர். இத்தண்டனையின் கொடுமையைக் கண்ட குழந்தைகள், மறு தடவைகளில் தம் குற்றத்தை யொப்புக் கொள்ளாமல், நிராகரிக்க வாரம்பித்து விடுகின்றனர். இவ்விதமே பொய்பேசும் வழக்கம் இன்னருக்கு சர்வ சாதாரணமாய் விடுகின்றது. எனவே, இவ்விரண்டு காரணங்களை யொழித்தலே, குழந்தைகளைப் பொய் பேசல் என்னும் கொடிய பழக்கத்தினின்றும் காப்பதற்கு அரிய மருந்தாம்.

முதற்காரணத்தை யொழிப்பதென்ருல், குழந்தைகளைச் சுற்றியிருக்கும் தாய்தந்தை முதலியோர் குழந்தைகள் முன் பொய் பேசலை யொழித்தல்வேண்டும். தம்மால் முடியாத வெகுமதிகளை யளிப்பதாய்ப் பிள்ளைகளுக்கு வாக்குதத்தம் கொடுப்பதும், தாம் அளிக்கப்போகாத் தண்டனைகளை யவர்களுக்களிப்பதாய்ப் பயமுறுத்துவதும் கூடாது. சுருங்கக் கூறுமிடத்து, 'பொய்' என ஒன்றிருக்கின்றதெனவும் பிள்ளைகள் அறிந்து கொள்ளக் கூடாத முறையில் அவர்களிடம் ஒழுகல் வேண்டும். இவ்விதம் யாவரும் அன்னர்முன் நடந்துகொண்டால், அவர்கள் எவ்விதந்தான் பொய்பேசக் கற்றுக்கொள்ள வியலும்?

இரண்டாவதாக, குழந்தைகள் ஒரு குற்றத்தைச் செய்துவிட்டாலும், தாம் அதைச் செய்ததாய் ஒப்புக் கொள்ளுங்கால் அன்னரைத் தண்டிக்காமல், அன்னர் உண்மையைக் கூறிவிட்டதற்காகப் புகழலும் வேண்டும். ஜார்ஜ் வாஷிங்டனின் குழந்தைப் பருவத்தில் அவருக்கு அவர் தகப்பனர் ஒரு கத்தியைக் கொடுத்திருந்தார். இவர் தோட்டத்திற்குச் சென்று, தன் தகப்பனருக்கு மிகப் பிரியமான செடிகளை யெல்லாம்வெட்டி விட்டார். தகப்பனர் மிகக் கோபமாய்க் கேட்டபொழுது, தானே செய்ததாய் ஒப்புக் கொண்டார். இவர் தகப்பனர் இவரைக் கோபித்துக் கொள்ளாமல், உண்மை சொன்னதற்காய் மிகவும் சந்தோஷப் பட்டார். இவர் நமக்கு முன்மாதிரியாக இருக்கின்ருர்.

பிள்ளைகளுக்கு உண்மைபேசும் வழக்கத்தை யுண்டாக்குவதற்கும், பொய்பேசலைத் தொலைப்பதற்கும் ஏற்றவழிகள் இவைகளல்லாது, உண்மையின் நன்மைகளையும் பொய்யின் தீமைகளையும் போதிக்கும் செய்யுள்களையும், நீதிக்கதைகளையும் படித்துக் கொடுப்பதுமாகும். குழந்தைப் பருவத்திலேயே மனதில் படியும் பொருட்கள் அநேக சமயங்களில் உதவுகின்றன. பெற்ருேர் முதலியவர்கள் பிள்ளைகளைத் தம்மிடம் இறைவனல் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கும் 'அமானத்' எனவேகொண்டு, அவர்களின் நல்லொழுக்கத்தில்அதிக கவனம் செலுத்தியும், அவர்கள் சற்குண சீலர்களாய் மிளிர்வதைக் கண்டானந்திப்பது பெரும்பாக்கியம் என மதித்தும் வரல் முக்கியம்.

செய்தித் திரட்டு

ஹரம் ஷரீபை விட்டும் காதியானிகள் வெளியேற்றப் பட்டனர்.

மக்கா ஷரீபில் காதியானிகளைச் சேர்ந்த இருவர்கள் தங்கள் தீய பிரசாரத்தைச்செய்ய ஆரம்பித்தார்கள். சுல்தான் இப்னுஸுஊத் அவர்களின் உத்தரவுப்படி இன்னர் அங்கிருந்து வெளியேற்றப் பட்டு ஜாவாவுக்கு அனுப்பப் பட்டார்கள்.

ஜாவாவில் டச் அரசாங்க அக்கிரமம்:

ஜாவாவில் டச் அரசாங்கம், இஸ்லாமிய மத்ரசாக்களில் அரபிக்கலைகளைக் கற்றுக் கொள்ளக்கூடாதெனத் தடையுத்திரவு செய்திருக்கின்றதாம். இச்செய்தி அத்தேச முஸ்லிம்களுக்கு மிகுந்த ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கின்றது.

இஸ்லாமைத் தழுவினர்கள்.

அம்பாலா தப்லீகுல் இஸ்லாம் சங்கத்தினர் பல பிரசாரர்களை ஏற்படுத்தி, முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகின்றனர். அவர்கள் நன்முயற்சியால் 1086 பேர் இஸ்லாமைத் தழுவினர். இச்சங்கத்தின் ஆதரவில் 41 மத்ரசாக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளில் 1100 பேர் வரை கல்வி பயின்று வருகின்றனர்.

"ஆர் 101" ஆகாய விமானம்.

இப்பெயர் கொண்ட விமானம் அக்டோபர் 4—ம் தேதி இங்கிலாந்தை விட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டது. இதில் ஆகாயப் படை உத்தியோகஸ்தர்களும், லார்டு இர்வின் பிரபு அவர்களுக்குப் பின் இந்தியாவுக்கு அரசப்பிரதிநிதியாய் வரலாமென் றெதிர்பார்க்கப்பட்ட லார்டு தாம்ஸனும் இருந்தனர். இரவு 2½ மணிக்கு இவ்விமானம் திடீரென்று குன்றில் மோதுண்டு, தீப்பற்றிக் கொண்டது. இக்கோர சம்பவத்தால் 47 பிரயாணிகள் தீப்பற்றி எறிந்தனர். 7 பேர் மட்டும் உயிர்தப்பினர். இவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். லார்டு தாம்ஸனும் இறந்துவிட்டார்.

ஹாஜிகளுக்கு நற்செய்தி.

ரமலானை ஹிஜாஸில் கழிப்பதற்காக முன்னமேயே புறப்பட்டுச் செல்லும் ஹாஜிகளுக்காக டர்னர் மாரிஸன் கம்பெனியார் புதிய கப்பலை வைத்திருக்கின்றனர். இக்கப்பல் டிசம்பர் 10-ந் தேதி பம்பாயைவிட்டும் புறப்படும். இவைகளிலுள்ள ஹோட்டல்களில் நல்ல உணவு கிடைக்கும்படி மௌலானா முஹம்மத் இர்பானும், இதர கிலாபத்கமிட்டியினரும் ஏற்பாடு செய்வார்கள்.

காஷ்மீர் சமஸ்தானத்தில் இஸ்லாமுக்குத் தீங்கு.

காஷ்மீர் சமஸ்தானத்தில் இஸ்லாமிய ஆசாரங்களுக்குத் தடையுத்தரவு போடப் பட்டிருக்கின்றது. பசு குர்பானி செய்யக் கூடாதென்றுத் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டிருப்பதன்னியில், அவ்விதம் பசு குர்பானி செய்த நிரபராதிகளான முஸ்லிம்களுக்கு ஏழு வருஷம் சிறைவாசத் தண்டனையும்விதிக்கப்பட்டுவருகின்றது. இதுவரை எண்ணுயிரம்முஸ்லிம்கள்இதனல்சிறையில்வைக்கப் பட்டிருக்கின்றனர். ஒருகிராமம் தீக்கிரையாக்கப்பட்டது. ஒரு அன்னிய மதஸ்தர் சத்திய தீனுல் இஸ்லாமின் திருப்போதனைகளின் உண்மையை யுணர்ந்து இஸ்லாமைத் தழுவினல், அதற்காக அவர் பிதுர்ராஜித சொத்துகளுக்குபாத்திய மற்றவராக்கப் பட்டு விடுகின்ருர். அவர் சுயமே சம்பாதித்த சொத்துக்களும் பறிமுதல் செய்யப் பட்டுவிடுகின்றன. இஸ்லாமிய பிரசாரம், மதப்போதனை, வஅல், நஸீஹத்துகள் செய்யக் கூடாதெனத் தடுக்கப் படுகின்றது. இதற்கு மாற்றமாய் ஆரியர்களின் பிரசாரத்திற்கு மிகவும் இடமேற்பட் டிருக்கின்றது. அன்னர் இஸ்லாமையும், முஸ்லிம்களையும் மிகவும் இழித்துப் பிரசங்கங்கள் புரிகின்றனர்.

ஒரு பரிதாப மரணம்.

அக்டோபர் 22-ந்தேதி சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டில் ஹாபிஸ் ஹுஸைன் என்

பவர் மீது, ஜனுப் யூசுப் சேட் கொடுத்திருந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஹுஸைன் என்பவர் சேட் ஸாஹிபின் நிலத்தில் குடியிருந்து வந்தாராம். அவர் கோர்ட்டில் அதை "இல்லை" யென மறுத்து, குர் ஆன் ஷரீப் மீது பொய்ச் சத்தியம் செய்தாராம். உடனே தனக்கு மயக்கம் வருகின்றதெனக் கூறினதில், அவரை வெளியே கொண்டு வந்தார்கள். இப்பால் வந்து, ரத்த வாந்திசெய்து, கீழேவிழுந்து மூர்ச்சையானுர். சில நிமிஷங்களுக்கெல்லாம் உயிர் போய் விட்டது.

ஹஸ்ரத் புலைல் ரலியல்லாஹு அன்ஹுவின் அரிய உபதேசம்

(ஸூபி எழுதுவது)

ஒருசமயம் கலீபா ஹாரூன் தமது மந்திரி பஜ்லிப்னு ரபீஆவுடன் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார். ஹஜ்ஜுச் செய்து முடிந்தபின் மார்க்கத் தலைவர்களிடம் தம்மை யழைத்துச் செல்லவேண்டுமென்றும், தாம் அன்னுரைக் கண்டுகளிக்க வேண்டுமென்றும் கலீபா அவர்கள் மந்திரியை நோக்கிக்கூறலும், அவர் முதன்முதலாக 'அப்துர் ரஜ்ஜாக் இஸ்பஹானீ'(ரஹ்.) என்னும் பெரியாரிடம் அழைத்துச் சென்றுர். இன்னுரிடம் வெகுநேரம் சம்பாஷித்துவிட்டு, கலீபா மந்திரியைப் பார்த்து "இப்பெரியாருக்குக் கடன் ஏதும் இருக்கின்றதா? கேட்டுச் சொல்லுங்கள்" எனக் கூறினுர் .. மந்திரி அவ்வாறு வினவவே பெரியாரும் தம் கடனைத் தெரிவித்தார்கள். கலீபா அதைத் தீர்க்குமளவு தொகையைக் கொடுத்துவிட்டு, இருவரும் விடைபெற்றுத் திரும்பிவிட்டார்கள்.

பின்பு கலீபா மந்திரியைநோக்கி, "என் ஹிருதயத்தாகம் இன்னும்தீரவில்லை எனவே, வேறொரு பெரியாரிடம் என்னை யழைத்துச் செல்லும்!" எனக் கூறவும், மந்திரி கலீபாவை 'சுப்யானிப்னு ஜனிய்யா' (ரஹ்.) என்னும் பெரியாரிடம் அழைத்துச் சென்றுர். கலீபா அவர்களிடமும் நீண்டநேரம் சம்பாஷித்துக்கொண் டிருந்துவிட்டு, அவர்களை நோக்கி "தங்களுக்கு ஏதேனும் கடனிருப்பின், யான் அதைத் தீர்த்துவிடுகிறேன்" எனக்கூறினுர். அவர்களும் தம் கடனைத் தெரிவித்தார்கள். எனவே, அக் கடனையும் கொடுத்துவிட்டு, இருவரும் திரும்பியபோழ்து கலீபா மந்திரியைநோக்கி, "இன்னும் என் நோக்கம் பூர்த்தியடையவில்லை. ஆதலின், இன்னுமொரு பெரியாரிடம் என்னையழைத்துச்செல்லும்" எனக் கூறினுர். இச்சமயம் மந்திரிக்கு ஹஸ்ரத் புலைலிப்னு இயால்(ரலி) அவர்களின் ஞாபகம்வந்தது. அவ்வமயம் ஹஸ்ரத் மக்காவில் வசித்துவந்தார்கள். எனவே, இருவரும் ஹஸ்ரத் அவர்களிடம் சென்றுர்கள்.

ஹஸ்ரத் அவர்கள் அவ்வமயம் குர்ஆன் ஷரீபை யோதிக்கொண்டிருந்தார்கள். ஓதி முடிந்தபின் மந்திரி கதவைத்தட்டினுர். உள்ளிருந்து "யார்?" என்ற சப்தம் வந்தது. அமீருல் மூமினீன் வந்திருப்பதாய்த் தெரிவிக்கப்பட்டதும், ஹஸ்ரத் அவர்கள் "அமீருல் முமினீனுக்கு என்னிடத்தில் என்ன வேலை?" எனக் கடாவினுர்கள். இவ்விதமே ஹஸ்ரத் அவர்களுக்கும், மந்திரிக்குமிடையில் கொஞ்சநேரம் சம்பாஷணை நடைபெற்றபின், இறுதியாய் ஹஸ்ரத் அவர்கள் கதவைத் திறந்துவிட்டு, தீபத்தை யணைத்துவிட்டு ஒரு மூலையில் ஒளிந்துக்கொண்டார்கள். கலீபா இருளில் மறைந்து நின்ற ஹஸ்ரத் அவர்களைக் கண்டுபிடிக்கவும், ஹஸ்ரத் அவர்கள் கலீபாவின் கரத்தைப் பற்றி "இம்மாதிரி மிருதுவான கரத்தை என் ஆயுள் முழுமையும் நான் கண்டதில்லை. அல்லாஹ் (ஜல்.) வின் தண்டனையை விட்டுந் தப்பிக்கொள்ளுமாயின், இஃது அதிர்ஷ்டம் படைத்ததுதான்" எனக் கூறினுர்கள். இதைக் கேட்ட கலீபா ஹாரூன் ரஷீதுக்கு அடக்க

முடியாத அழுகைபொங்கி, பிரக்ஞையற்றுப் போகும்வரையில் அழுதார். பிறகு ஹஸ்ரத் அவர்களைநோக்கி "எனக்கு உபதேசம் புரியுங்கள்" எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் அவர்கள் கூறுவார்கள்:—"நாயகம் (ஸல்.) அவர்களின் சிறிய தந்தையாராகிய அப்பாஸ் (ரலி.)நாயகம் (ஸல்.) அவர்களிடம் "என்னைப் பொது ஜனங்களுக்குத் தலைவராக்கி விடுங்கள்" எனக் கேட்டுக்கொண்ட போழ்து, நாயகம் (ஸல்.) அவர்கள் "சிறிய தந்தையே! உங்கள் ஒவ்வொரு மூச்சையும் உங்கள் தேகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் அமீராகவே அல்லாஹ் (ஜல்.) படைத்திருக்கின்றான். ஆகவே, அல்லாஹ் (ஜல்.)வை வணங்குவதிற் செலவிடும் ஒரு மூச்சு, ஜனங்கள் உங்களைக் கொண்டாடும் ஆயிரம் வருடங்களைக் காட்டினும் மேன்மையானதாகும். 'தலைமைப் பதவியை விரும்புவது கியாமத் நாளில் வருந்தும்படிச் செய்யத்தக்கது' என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறினார்கள்"

இதைச் செவியுற்ற கலீபா "இன்னும் உபதேசியுங்கள்" எனக் கேட்டுக்கொள்ளவும் ஹஸ்ரத் அவர்கள் கூறுகின்றார்கள்:—"உமரிப்னு அப்துல் அஜீஜ் (ரஹ்.) உடைய புத்திரர் கிலாபத் பதவியை ஏற்றுக்கொண்டபொழுது ஸாலிமிப்னு அப்துல்லாஹ், ரஜாயிப்னு ஹயாத், முஹம்மதிப்னு கஃப் முதலியவர்களை யழைத்து "யான் ஒரு சங்கடத்திற் சிக்குண்டு விட்டேன். யான் பெரிய செல்வத்தை யடைந்துவிட்டதாக ஜனங்கள் கருதுகின்றனர். யான் இதை யொரு தொல்லையாகவே கருதுகின்றேன். எனக்கொரு யோசனை கூறுங்கள்" எனக் கேட்கவும் அழைக்கப்பட்டிருந்த பெரியார்களிலொருவர் "அல்லாஹ்(ஜல்.)வின் தண்டனையைவிட்டும் நீர் தப்பிக்கொள்ள வேண்டுமாயின், முஸ்லிம் பெரியார்களை உம் தந்தையைப்போன்றும், வாலிபர்களை உம் சகோதரரைப் போன்றும், குழந்தைகளை உம் பிள்ளைகளைப் போன்றும் கருதுவீராக! உம் தந்தை, சகோதரர், குழந்தைகள் ஆகியவர்களிடம் நடந்துகொள்வதைப் போலவே அவர்களிடமும் நடந்து கொள்வீராக! முஸ்லிம் நாடு முழுவதையும் உமது வீட்டைப் போலவும், அந் நாட்டிலுள்ளோரை உமது வீட்டிலுள்ளோரைப்போலவும் கருதுவீராக உமது தந்தையைத்தரிசியும்! உமது சகோதரரைக் கண்ணியப் படுத்தும்! உமது மக்களிடம் அன்புகாட்டும்!" எனக் கூறியதை யான் உமக்கு ஞாபகப் படுத்துகிறேன். மேலும், அமீருல் மூமினீனே! இந்த உமது அழகிய முகம் நரகத்தில் விழுந்துவிடுமோவென அஞ்சுகிறேன். அல்லாஹ்(ஜல்.)வுக்குப் பயந்து கொள்ளும்! அவனை ஒழுங்காய் வணங்கும்!"

கலீபா மீண்டும் ஹஸ்ரத் அவர்களை நோக்கி தாங்கள் யாருக்காகினும் கடன் கொடுக்க வேண்டியிருக்கின்றதா?" எனக் கேட்க ஹஸ்ரத் அவர்கள் "அல்லாஹ்(ஜல்.)வின் கடன் என்பேரில் இருக்கின்றது. அவனுக்குச் செய்யவேண்டிய வணக்கங்கள் பாக்கியிருக்கின்றன. இவைகளை யொட்டி அவன் என்னைப் பிடிப்பானாயின் கஷ்டமே" எனக் கூறினார்கள். இதற்கு கலீபா "தாங்கள் மனிதருக்குக் கொடுக்க வேண்டிய கடன் இருக்கின்றதா" வெனக் கேட்க ஹஸ்ரத் அவர்கள் "அல்லாஹ்(ஜல்.)வுக்கு நன்றி செலுத்துகிறேன். என்னை அவன் செல்வந்தனாகவே வைத்திருக்கின்றான்" எனக் கூறினார்கள். பிறகு கலீபா ஆயிரம் தீனாரைக் கொண்ட பையை ஹஸ்ரத் முன் சமர்ப்பித்து "இதைத் தங்கள் செலவுக்காக வைத்துக் கொள்ளுங்கள்" எனக் கேட்டுக் கொண்டதற்கு, "கலீபாவே! என் உபதேசம் உமக்குப் பயனளிக்க வில்லை. எனவே, அநியாயம் செய்ய ஆரம்பித்து விட்டீர்" என ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள். கலீபா "நான் செய்த அநியாயம் என்ன?" எனக் கேட்க, ஹஸ்ரத் அவர்கள் "நான் உம்மை விடுதலையின் பக்கம் அழைக்கிறேன். நீர் என்னைச் சங்கடத்தில் தள்ளப் பார்க்கின்றீர். இது அநியாய மல்லவாயின், வேறுதா னென்ன?" என்றார்கள்.

பிறகு கலீபாவும், அவர் மந்திரியும் கண்ணீர் சொரிந்தவர்களாய்த் திரும்பினர். மேலும், கலீபா "ஹஸ்ரத் புலைல் (ரலி.) உண்மையாகவே அப்பெயருக்குத் தகுதியானவர்களாகவே இருக்கின்றார்கள்" என மொழிந்தார். (புலைல்—மேன்மை வாய்ந்தவர்.)

ஆசிரியர் குறிப்புகள்.

அப்துல்லா பில்பி.

இஸ்லாம் மதநூல்களைப் பயின்று, இஸ்லாம் மதத்தினையே தூற்றுமாறு தலைப்பட்ட வெள்ளையர்களிற் பெரும்பாலார் இறுதியில் இஸ்லாம் மதத்தையே தழுவினார்கள் என்பதில் வியப்பொன்றுமில்லை. இகபர மிரண்டிற்கும் ஈடில்லா நலன்களைப் புகட்டவல்ல இவ்வுண்மை மதத்தின் இனிமையில் மயங்கி, இதனுட்புகுந்து துருவி ஆராய்ந்த மேனாட்டு ஆசிரியர்கள், தத்துவ விற்பனர்களனைவரும் அங்ஙனமே முஸ்லிம்களாயினரேயன்றி, துவக்கத்தில் தூற்றப்புகுந்த முயற்சியில் வெற்றியடைந்தார்களல்லர். சில ஆண்டுகளுக்குள்ளாகவே டாக்டர் லீட்னர் என்ன, பம்பாய் கிரானிகல் பத்திராசிரியர் மார்மடியூக் பிக்டால் என்ன, இவர்கள்போன்ற இன்னும் எத்துணையோ மேதாவிகள் இஸ்லாமியர்களாய் நம் மதத்திற்கு மேனாட்டில் ஆக்கம் அளித்து வருகின்றனர். இத்தகையார்களில் மிஸ்டர் அப்துல்லா பில்பி என்பவரும் ஒருவர்.

அராபியர்களை பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்குட்படுத்த வேண்டுமென்ற முயற்சியோடும் பல ஆங்கிலேயர்கள் அதற்கென்று சர்க்கார் உதவியின்பேரிலும், சுயமாகவும் அரப்நாட்டில் காலம்கழித்து வருகின்றனர் என்பதை நேயர்கள் அறிவர். அண்மையில் நிகழ்ந்த பெரும்போர்க்கண்ணும், அதன் பின்னரும், கர்னல் லாரன்ஸ் என்பார் முஸ்லிம் நாடுகள் தோறும் சென்று, ஆங்காங்கு பிரிட்டிஷாருக்கு அநுகூலமான கிளர்ச்சிகளைச்செய்து கொண்டுவந்தனர் என்பதும் அரசியல் உலகம் நன்கறிந்ததே. கர்னல் லாரன்ஸின் அட்டஹாஸங்கள் நவீனகதா நூல்கட்கு இலக்கான அத்துணை வியப்புடையனவாம். இக்கர்னல் லாரன்ஸைப் பின்பற்றியே, மிஸ்டர் பில்பி என்பாரும் அரசியல் நோக்கத்தோடு அரப் நாட்டின்கண் வாழ்ந்துவரலானார். மிஸ்டர் பில்பியின் நோக்கம் பிரிட்டிஷ் ஆட்சியின் சார்பான அரசியல் கிளர்ச்சியும், சூழ்ச்சியுமேயாயினும், நாட்கள் செல்லச்செல்ல மிஸ்டர் பில்பி இஸ்லாம் மதத்தின் வனப்பில் தன்வசமிழந்தார். அரசியல்சூழ்ச்சி ஒழிந்து, உண்மை மதத்தின் ஒளி அவர் அகத்தில் பிரகாசிக்கலாயிற்று. இஸ்லாம் கலைகளைக் கற்கத் துவங்கினார்; இஸ்லாமியப்பெரியார்களைக் கண்ணுற்றார்; அவர்களோடு ஆன்மவிசாரணை நிகழ்த்தினார்; இறுதியில் இஸ்லாத்தின் உயர்வையும், தான் முன்னிருந்த தாழ்ந்த நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்து மிஸ்டர் பில்பி, மிஸ்டர் "அப்துல்லா பில்பி" என்னும் நற்பெயரோடு மக்காநகரம் நோக்கி ஹஜ்ஜுச் செய்யலானார்.

இவரது சரிதை கேட்கவும், படிக்கவும் ஓர் கதையின்கண் உள்ளதே போன்றதெனினும், இது நிகழ்ச்சிபெற்று திங்கள் ஒன்றும் கடந்திலது என்பதை நம் அன்பர்கள் அறிந்து வியப்பெய்துதல் கூடும்.

நிற்க, மிஸ்டர் அப்துல்லா பில்பி சுல்தான் இப்னுஸஊத்அவர்கட்கு இஸ்லாம் மதத்தைப் பற்றிய தன் மனோபாவத்தைக் குறித்து விடுத்துள்ளகடிதம் ஈண்டு குறிப்பிடத் தக்கதாம்:

"நான் மற்றெல்லா மதங்களின் பழக்க வழக்கங்கள் முதலியவற்றை விடுத்து, இதன் வாயிலாய் "இஸ்லாம் மதத்தையே என் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டேன்" என்பதைத் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். உண்மையை நான் உறுதியோடும், அகமகிழ்வோடும் என் உளம் நாடிச்செல்ல எல்லாம் வல்ல இறைவன் எனக்குக் கருணை புரிந்திருக்கின்றான். எனவே இறைவனே ஏத்துதற்குரியான் என்றும், அவ் விறைவனின் திருத்தொண்டரும், தீர்க்கதரிசியும் முகம்மதுர் ரசூல் (ஸல்.) அவர்களே என்றும் நான் வலியுறுத்திச் செப்புகின்றேன். திருக் குர்ஆனின்கண் உள்ள எல்லா உண்மைகளையும் நான் ஏற்பதோடு, நாயக சம்பிரதாயங்களையும் ஏற்கின்றேன். பண்டைமுஸ்லிம் பெரியார்களால் வரையப்பெற்ற நூல்களின் உண்மைகளையும் நான் ஒப்புக் கொள்ளுகின்றேன்; இவர்களின் சித்தாந்தங்களை நான் உவப்போடு ஆதரிக்கின்றேன். அன்றியும் இவர்கட்கு முழுமனதோடும் நான் என் கீழ்ப்

படிதலை சமர்ப்பிக்கின்றேன். இவர்கட்கும், எல்லா முஸ்லிம்கட்கும் இறைவனின் இன்னருள் விளைவதாக! உள் நம்பிக்கையிலும், விவேகத்திலும், மெய்காட்டிலும், நல்லெண்ணத்திலும் எழுந்த இவ்வுறுதி உடம்பாட்டுத் திருமுகத்தை தாங்கள் ஏற்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். உண்மைக்கு இறைவனே வழிகாட்டியாவான்''

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) பில்பி.

குறிப்பு :—இவ்விறுதித் திருமுகம் கிடைத்த பின்னரே, மிஸ்டர் அப்துல்லா பில்பி ஹஜ்ஜுச் செய்தார். இவர், தான் இஸ்லாமைத் தழுவியதற்குள்ள காரணங்களைப் பற்றி விரிந்த ஓர் நூலை அண்மையில் வெளியிடப் போவதாகவும் தெரிகின்றது.

தமிழ்ப்பண்டிதர் செய்ததவறு.

பினாங்கு தண்ணீர்மலை ஆறுமுகக் கடவுள் பேரில் அருணகிரி நாதரால் எழுதப்பட்ட ''முருகவேள் பஞ்சரத்தினப் பாமாலை'' என்னும் நூலுக்கு, இராமநாதபுரம் ஜில்லா, பனைக்குளம் தமிழ்ப் பண்டிதர் திரு. அப்துல் மஜீது என்பார் சாற்றுக்கவி கொடுத்திருக்கின்றார். சிங்கப்பூர் வாசி யொருவர் நமக்கு அந்நூலை யனுப்பி, ''இத்தகைய கவி இயற்றலாமா?'' வென வினவுகின்றார். அக்கவியில் மேற்படி பண்டிதர் தண்ணீர்மலைக் கடவுள் மீது ஹிந்துக்கள் கூறும் ஆபாச வருணனைகளை யடுக்கிக்கொண்டே போகின்றார். ஒரு முஸ்லிமெனத் தன்னைக் கூறிக்கொண்டும், இத்தகைய புராண ஆபாசங்களை யாதரிக்கத் துணிந்தது விந்தையினும் விந்தையாவே இருக்கின்றது. இவ்விதம் ஒன்றிரண்டு பேர் செய்துவிடுவதனால் முஸ்லிம் சமூகத்திற்கே பெரும் பங்க முண்டாகின்றது. இதற்கெல்லாம் மூலக்காரணம், மார்க்கக்கல்வி யின்மை எனவே யாம் கூறுவோம். மார்க்கக் கல்வியைக் கற்காது மற்றெந்தக் கல்வியில் பட்டம் பெற்றாலும், தங்கமெடல் அடைந்தாலும் ஈமான், குப்ர் இரண்டுக்கு மிடையேயுள்ள வித்தியாசமு முணராமல், தன் ஈமானையும் பறிகொடுத்து நிற்கவேண்டி வருமென்பதுண்மை. எனவே, மேற்படிப் பண்டிதர் தௌபாச் செய்து, இனியும் இவ்விதம் சுவாமிகளை வருணிப்பதை விட்டு, இந்தச் சாற்றுக்கவியையும் வாபீஸ் பெற்றுக்கொள்ளுவாரென நம்புகிறோம்.

முதல் ஆண்டு நிறைவிழா.

இறைவ னின்னருளால் நமது சங்கம் தோன்றி ஓராண்டு பூர்த்தி யடைந்து விட்டது. இச்சொற்ப காலத்தில் இது நம் மதத்திற்கும், சமூகத்திற்கும் பல அரிய சேவைகளைப் புரிந்திருப்பதை யறியாதாரெவர்? நமது சஞ்சிகை, ஸைபுல் இஸ்லாம் இவைகளைப் பார்த்து வருபவருக்கு நம் சங்கத்தின் அரிய சேவைகளை எடுத்தியம்ப வேண்டிய அவசியமுமில்லை. நம் சங்கத்தின் முதல் ஆண்டு நிறைவிழா நாளது நவம்பர்மீ 9-தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கோகலே ஹாலில் நடைபெறும். அக்கூட்டத்திற்கு ஜனாப், கான்பஹதூர், அல்லாமா ஹஸ்ரத், மௌலானா, மௌலவீ, அல்ஹாஜ், ஜியாவுத்தீன் முஹம்மத் ஸாஹிப் கிப்லா அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். பல அறிஞர்களும், மேதாவிகளும் விஜயஞ் செய்து சொற்பொழி வாற்றுவார்கள். அன்பர்கள் விஜயஞ் செய்து கூட்டத்தைச் சிறப்பிக்கும் படிக் கோருகின்றோம்.

இது முஸ்லிம்களின் கோள்கையா ?

சென்ற 26—9—30-ல் வெளிவந்த தாருல் இஸ்லாமில் ''இஸ்லாத்தின் எழுச்சி'' என்னும் மகுடமிட்டு வ. மீ. ஷம்சுத்தீன் என்பார் ஒரு கட்டுரை வரைந் திருக்கின்றார். அதில் ''இயேசு கிருஸ்துவை யூதர்கள் கழுவிலேற்றிச் சித்திரவதை செய்தார்கள்'' என வரைந்திருக்கின்றார். திருக் குர்ஆன் ''அவரை (ஈசா அலை அவர்களை) அன்னார் கோல்லவு மில்லை. கழுவி லேற்றவு மில்லை'' என அறைந்து நிற்கின்றது. இதற்கு முற்றிலும் மாற்றமாய் மேற்படி வியாசகர்த்தா வரைவதிலிருந்து, இன்னார் திருக்குர்ஆனை நிராகரிக்கின்றார் எனவே கொள்ளவேண்டி யிருக்கின்றது. இத்தகைய கட்டுரைகளைப் பிரசுரம் செய்து,இவைகளைப்பற்றி ஒன்றும் வரையாது விடும் பத்திரிகைகளும் இஸ்லாமுக்குப் பாடுபடுகின்றனவாம்! ஆச்சரியம்!! ஆச்சரியம்!!! இக்குழாத்தினர் முதன் முதல் சுன்னத் வல்ஜமா அத்தைப் புறக்கணித்து, இறுதியாக இஸ்லாமையும் புறக்கணிக்கப் புகுந்துவிட்டதை நோக்க யார்தான் விசனிக்காம லிருக்க வியலும்?

ஒரு வேண்டுகோள்

வேலூர் மத்ரஸா பாக்கியாத்—ஸாலிஹாத்தில் தற்பொழுது மார்க்கக்கல்வி கற்றுவரும் நபிமார்களின் அனந்தரகாரர்களாகிய (மக்தபில் பயிலும் பிள்ளைகளைத் தவிர) உயர்தர கல்வி கற்கும் மாணவர்கள், 175 பேர்கள் வரை மத்ரஸாவில் போஷிக்கப்பட்டு வருகின்றனர். அவர்கள் இருப்பதற்கு இப்பொழுதுள்ள கட்டிட அறைகள் போதியனவன்று; வசதியுடையனவுமன்று. ஆதலால் என் தந்தை ஆலாஹஜ்ரத் கிப்லா மர்ஹூம் அவர்களின் ஞாபகார்த்தமாக மத்ரஸாவின் தென்புறமாய்க் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மேன்மாடியில் மாணவர்கள் வசிப்பதற்கு வசதியான அறைகளும், புத்தகசாலைக்காக விசாலம் பொருந்திய ஒரு மஹாலும் கட்டுவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இக் கட்டிடத்திற்கு ரூ. 30,000 சிலவாகுமென மதிப்பிடப் (Estimate) பட்டிருக்கின்றது. இதன் ஒரு பகுதித் தொகையான ரூ. 15,000-க்கு ஏற்பாடாயிருக்கின்றது. மறு பகுதி 15,000 ரூபாய்களை மத்ரஸா பண்டி (Fund) லிருந்து எடுத்துச் செலவு செய்வதெனின் பண்டி (Fund)ன் நிலைமை அதற்கு இசைந்ததாகயில்லை. எனவே, மார்க்க பக்தியும், கல்விப் பயிற்சிப் பற்றும் உடைய கனவான்களிடமிருந்து நன்கொடை திரட்டியே மேற்கூறிய கட்டிடங்களைக் கட்டுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. "ஹஸனத்துல் ஜாரியா" சதா காலமும் நீடித்திருக்கும் இந்நற்காரியத்திற்கு மாதாபிமானமுள்ளவர்களும் அறச்சிந்தனை யுடையவர்களுமான புண்ணியவான்கள் தங்களால் இயன்ற உதவி செய்யுமாறு கோரப்படுகின்றனர்.

பணம் அனுப்பும் கனவான்கள் தயவுசெய்து கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்புவார்களாக.

இங்ஙனம்,

(மௌலானா மௌலவி அல்ஹாஜ்) ஜியாவுத்தீன் முஹம்மத் (சாஹிப்)

நாஜிர் மத்ரஸயெபாக்கியாத்-ஸாலிஹாத், வேலூர்.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லாஹ் சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

ஜனுப் **K. V.** முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகிர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ **K. O.** முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனுப் **V. M.** அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. **A. P. N.** அப்துல் ஜப்பார் **&** பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

கொழும்பு

ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் **A. M. K.** ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் **M. A.** காதர் பாவா **&** பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் ஹாஜி **M. M.** காதர்பகீர்ருவுத்தர் & கம்பெனி,
21, சைனுபஜார் ரோடு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R Abdur Rahim Sa
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.